கிட்கிந்தா காண்டம்

முன்னுரை

ஆரணிய காண்ட முன்னுரையிற் கூறியவாறு திருப்பனந்தாள் மடத்துத் தலைவரவர்கள் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சாமிநாத தம்பிரான் சுவாமிகள் அருளிய பொருளுதவி கொண்டு இந்தக் காண்டம் அச்சிடப்பெற்றது; சுந்தர காண்டம் அச்சாகிவருகின்றது. யுத்த காண்டம் செந்தமிழ்ப் பத்திரிகையில் வெளியாகி வருகின்றது.

வெள்ளகால் போஸ்டு,
திருநெல்வேலி ஜில்லா.

வெ. ப. சுப்பிரமணிய முதலியார்.

கம்பராமாயண சாரம்

கிட்கிந்தா காண்டம்

கம்பராமாயண சாரம்

கிட்கிந்தா காண்டம்

[கிட்கிந்தை யென்னும் வானர ராசதானிநகர் சம்பந்தமான வரலாற்றைக் கூறுவது]

1. பம்பைப் படலம்

[பம்பை என்னும் போய்கையைப்* பற்றிக் கூறுவது]

கடவுள் வாழ்த்து

1. மூன்றுரு வெனக்குண மும்மை யாமுதல்
தோன்றுரு வெவையுமம் முதலைச் சொல்லுதற்
கேன்றுரு வமைந்தவு மிடையி னின்றவன்
சான்றுரு வுணர்வினுக் குணர்வ தாயினான்

கொண்டுகூட்டு† : *மூன்று உரு (- நிறம்) என, குணம் மும்மை ஆக, முதல் தோன்று உரு (- தத்துவம்) எவையும், அம் முதலைச் சொல்லு தற்கு ஏன்றவையாய், உரு (- வடிவு) அமைந்த (யா)வும் (தன்) இடையில் நின்றவனும் சான்றும் ஆனவன், உரு [- உடம்பு(ள் உயிரின்)] உணர்வுக்கு உணர்வு ஆயினான்.*

பொருள் : *(முறையே வெண்மை, செம்மை, கருமை யென்னும் நிறங்களுடைய சாத்துவிகம், ராசதம், தாமதம் என்ற முக் குணங்களையுடைய மூலப்பிரகிருதியும், அந்த) மூன்று நிறங்கள் உடையன என்று சொல்லும்படி, அந்த முக்குண அமிசங்களாக மூலப்பிரகிருதியினின்று தோன்றிய தத்துவங்கள் யாவும், அந்த மூலப்பிரகிருதியை (விவரிக்குமுகமாக, அதுவும் அதனினின்று தோன்றிய மற்றைத் தத்துவங்களும் இவ்வாறு பரிணமித்திருக் கின்றன வென்று) எடுத்துச் சொல்லுதற்குப் பொருத்தமானவை யாய், (புடைபெயர்வனவும் நிற்பனவுமான சராசரங்க ளென்றும்*

---

* போய்கை - ஒருவராலும் உண்டுபண்ணப்படாமல் இயற்கையாக உண்டான ஏரி.
† அந்நுவயம் - உரைமுறை - வசன நடை (Prose order).

உணர்வுடையனவும் இல்லனவுமான சேதனாசேதனங்க ளென்றும்) வடிவம் அமைந்தன(வான பிரபஞ்சங்கள் யா)வும், தன் (விராட்புருட மேனியின்) இடத்தே நிற்கப்பெற்றவனும், (சர்வாந்தரியாமியாய் உயிர்கள் செய்யும் கருமங்க ளெல்லாவற்றையும் தவறாது காண்கின்ற) சாட்சியும் ஆன இறைவன், உடம்பின்(கண் உள்ள உயிரின்) உணர்வுக்கு உணர்வானவன்.

மூன்று உரு - மூன்று நிறம். மும்மை - மூன்று*. 'முதல் என்னும் பண்புப்பெயர் ஆகுபெயராய் முதன்மையான மூலப்பிரகிருதியை யுணர்த்திற்று.'—வை. மு. கோ.

மூலப்பிரகிருதி, முதல் தத்துவமா யிருத்தல்பற்றி இந்தக் கவியில் 'முதல்' எனப்பட்டது போலத், தத்துவப்பிரகாச மென்ற நூலில் 'பூதங்க டனிற்றோன்றும்' என்ற கவியில் 'மூலம்' எனச் சுருக்கிக் கூறப்பட்டிருத்தல் காண்க.

இடை - இடம். சான்று - சாட்சி; வாலிவதைப்படலம் கசஎ-ம் பாட்டில் 'யார்க்கும் சான்றென நின்ற வீரன்' என வருதல் காண்க. உணர்வது என்பதில் 'அது' பகுதிப்பொருள் விகுதி.

முதலாம் உரு நிறங்களையும், இரண்டாம் உரு அந்நிறங்கள் மூன்றுடைய முக்குணமிசங்களான தத்துவங்களையும், மூன்றாம் உரு அத் தத்துவங்களா லமைந்த பிரபஞ்சங்களையும், நான்காம் உரு அப் பிரபஞ்சங்களில் உள்ள உடம்புகளையும் உணர்த்திநிற்றல் காண்க.

நான்காம் உருவை 'உணர்வினுக்கு' என்பதோடு சேர்க்காமல் 'சான்று' என்பதனோடு இயல்பாகச் சேர்ந்து நிற்கிறபடியே கொண்டு 'சான்றுரு' என்பதற்குச் 'சாக்ஷிரூபம்' என்று பொருள்கொள்ளலு மாம்.

'இடையில் நின்றவன்' என்றதனால் இறைவன் சர்வப் பிரபஞ்சங்களுக்கும் தங்கும் இடமானவனாய், அவை அனைத்துக்கும் ஆதாரமானவ னென்பது குறிக்கப்பட்டது.

'முதற் றோன்றுரு எவையும் அம் முதலைச் சொல்லுதற் கேன்றுரு அமைந்தவும் இடையில் நின்றவன், மூன்றுரு என ஆயினான்; குணம் மும்மையா ஆயினான்; சான்று ஆயினான்; உணர்வுக்கு உணர்வது ஆயினான்' எனக் கொண்டுகூட்டித் தத்துவங்களும் பிரபஞ்சங்களும் (ஆதேய†மாய்த் தன்னை ஆதாரமாகக்‡ கொண்டு) தன்னிடத்தே நிற்கும் இறைவன்

* குறள் உகூ உரை. † ஆதேயம் - தாங்கப்படுவது. ‡ ஆதாரம் - தாங்குவது.

(நிறம், வெண்மை செம்மை கருமை யென) மூன்று நிறமாகவும், (குணம், சாத்துவிதம் ராசதம் தாமதமென) மூன்று குணமாகவும், (எனவே, அந் நிறங்களும் அக்குணங்களுமுடைய திரிமூர்த்திகளாகவும்) சாட்சியாகவும், உணர்வுக் குணர்வாகவும் ஆனவன் என்றும் பொருள் கூறலாம்.

' இடையினின்றவும் சான்றுரு ' என்ற பாடங்கொண்டு அதற்கு ' அப் பிரபஞ்சத்தி னிடையே புகுந்து நின்ற ஜீவன்களும் (தனக்குச்) சிறந்த சரீர மாகக்கொண்ட பரப்பிரஹ்மமாம்' என்பது முந்திய உரை.—வை. மு. கோ.*

'சான்றுரு உணர்வினுக் குணர்வ தாயினன்' என்ற ஈற்றடியில் சான்று என்பதற்கு 'உணர்வ தாயினன்' என்பதில் உள்ள தாயினன் என்பது மோனையாகக் கொள்ளப்பட்டிருத்தல் காண்க. அப்படிக் கொள்ளுங்கால் ' உணர்வதாயினன் ' என்பதைச் சந்தி பிரித்து 'உணர்வது ஆயினன்' என்னு மல் சந்திபிரியாமல் ' உணர்வதாயினன் ' என உச்சரிக்கப்படுதல் கவனிக்கத் தக்கது. இது போலி மோனை. ' சான்றுரு உணர்வினுக்குலகம் தாயினன் ' என்ற பாடத்தில் உள்ள 'தாயினன்' உண்மை மோனை.

கட்புலனாகாத சாத்துவிக முதலிய குணங்கள் நிறமுடையன வென்றது, கட்புலனாகாத புகழை வெண்மை யென்பதும் கோபத்தைச் செம்மை யென்பதும் போலும்.

அயோத்தியா காண்டக் கடவுள் வாழ்த்தில் ' ஊனும் உயிரும் உணர் வும்' என்றவற்றில் 'ஊன்' என்ற உடம்பு இங்கே 'உரு' என்பதனால் உணர்த் தப்பட்டது. செய்யுளில் 'உருஉணர்வு' என்றதனால், உரையில் மேற்கூறிய ' ஊனும் உயிரும் உணர்வும் ' என்ற மூன்றனுள் இடையில் நின்ற ' உயிர் ' உபலக்கணத்தால் வருவிக்கப்பட்டுப் பொருள் கூறப்பட்டிருத்தல் காண்க.

உடம்புக்கு உயிர்போலவும், உயிர்க்கு உணர்வுபோலவும், உணர்வுக்கு இறைவன் உளனென்பது 'உணர்வினுக்குணர்வதாயினன்' என்பதன் கருத்து.

' மூன்றுரு எனக் குண மும்மையா முதற் றோன்றுரு எவையும்' என்றது தத்துவங்களை. அவை வருமாறு :—

தன்னுள் அடங்கியிருந்த சாத்துவிதம் ராசதம் தாமதம் என்ற மூல குணங்கள் மூன்றும் வெளிப்பட்டுத் தோன்றித் தம்மிற் சமமாய் நின்ற அவதரத்தில் உள்ள 'மூலப்பிரகிருதி' என்னும்†

---

* இந்நூலில் இடம் விளக்காத மேற்கோள்கள் பெரும்பாலும் ஸ்ரீ. வை. மு. கோ. அவர்களுடைய உரையிலுள்ளவை.

† முக்குணங்களடங்கிய மூலப்பிரகிருதி, எழுநிறங்களடங்கிய ஒளிபோலும். முக்குணங்கள் வெளிப்பட்டுத் தோன்றும் மூலப்பிரகிருதி, [முக்கோணக் கண்ணாடி (Prism)யினுட் புகுந்து] எழு நிறங்கள் வெளிப்படத் தோன்றும் ஒளிபோலும். (எழு நிறங்கள், வானவில்லிற் காணப்படும் நிறங்கள்.)

<u>குணம்</u> 1

அதனினின்று தோன்றிச் சாத்துவிதகுணம் மிகுந்து விளங்கும் 'மான்' என்னும்

<u>புத்தி</u> 1

அதனினின்று தோன்றி ராசதம் மிகுந்து விளங்கும்

<u>அகங்காரம்</u> 1

சாத்துவித குணமிசமான தைசத அகங்காரத்தினின்று தோன்றும் மனம் 1

சுரோத்திரம் துவக்கு சட்சு சிங்ஙுவை ஆக்கிராணம் என்னும் ஞானேந்திரியங்கள் 5

ராசதகுணமிசமான வைகாரி அகங்காரத்தினின்று தோன்றும் வாக்கு பாதம் பாணி பாயுரு உபத்தம் என்னும் கன்மேந்திரியங்கள் 5

தாமதகுணமிசமான பூதாதி அகங்காரத்தினின்று தோன்றும்

சத்தம் பரிசம் ரூபம் ரசம் கந்தம் என்னும் தன்மாத்திரைகள் 5

ஆகாயம் வாயு தேயு அப்பு பிருதிவி என்னும் பூதங்கள் ... 5

ஆகத் தத்துவங்கள் ... 24

இந்த இருபத்துநான்கு தத்துவங்களும் ஆன்ம தத்துவமெனப்படும்.

தத்துவங்கள் சூக்குமமாய்த் தேகத்தின் அகத்தேயுள்ளன. தன் மாத்திரையான சத்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம் என்பவை வேறு: சாதாரணமாகச் சத்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம் என்று கூறுபவை வேறு. முந்திய சத்தம், தேகத்தின் அகத்தேயுள்ளதாய்ப் புறத்தேயுள்ளதும் பூதகுணமானதுமான சத்தத்தை அறியுங் கருவி. பிந்திய சத்தம், வெளியேயுள்ள கேட்கப்படுகின்ற ஓசை. முந்திய சத்தத்தினின்று ஆகாயமாகிய பூதம் தோன்றும். பிந்திய சத்தம் அவ் ஆகாய பூதத்தின் குணம். எஞ்சிய பரிச முதலியவைகளும் இப்படி இருவகைப்பட்டனவே. சுரோத்திர முதலிய ஞானேந்திரியங்களைந்தும், வாக்கு முதலிய கன்மேந்திரியங்களைந்தும், பிருதிவி முதலிய பூதங்களைந்தும், தன் மாத்திரையான சத்தாதிகள் போலத் தேகத்தின் அகத்தேயுள்ளன. தத்துவங்களனைத்தும், தேகத்தின் அகத்தே யுண்மையால், அகக்கருவிகளெனப்படுதல் காண்க.

தத்துவங்களின் திறத்திற் பல மதத்தினர்களின் கொள்கைகளும் ஒன்றுக்கொன்று பேதமுடையன. அப் பேதங்கள் அவ்வம் மதநூல் கொண்டு தெரிதற்பாலன.

மேலே விரித்து விவரித்துக் கூறிய அசித்தான * இருபத்துநான்கு தத்துவங்களோடு, சித்தான† ஆன்மாக்களின் தொகுதியைப் புருட தத்துவம் என்று பெயரிட்டுச் சேர்த்துத் தத்துவங்கள் இருபத்தைந் தென்று சாங்கிய நூல் கூறும்.

ஆன்மதத்துவம் இருபத்துநான்குடன் அவற்றுக்கு மேலாக மாயை, காலம், நியதி, கலை, வித்தை, அராகம், புருடன் என்ற வித்தியா தத்துவம் ஏழும், அவற்றுக்கு மேலாக நாதம், விந்து, சாதாக்கியம், ஈச்சுரம், சுத்த வித்தை என்னும் சிவ தத்துவங்கள் ஐந்தும் கூட்டித் தத்துவங்கள் முப்பத்தா றென்றும், வித்தியா தத்துவங்களில் உள்ள கலையினின்று மூலப்பிரகிருதி தோன்றுமென்றும், புருட தத்துவம் சித்தைச் சார்ந்து சித்தின் வண்ணமா யும் அசித்தைச் சார்ந்து அசித்தின் வண்ணமாயும் நிற்குந்தன்மைய தாதலால் சித்தசித்து அல்லது சிதசித்து எனப்படு மென்றும், தத்துவம் முப்பத்தாறும் பாசம் என்பதனு ளடங்குமென்றும், சாங்கிய புருட தத்துவத்தி லடங்கிய ஆன்மாக்களைப் பசு என்றும், ஆன்மாக்களுக்கு வேறாக ஈசுரனில்லை யென்ற சாங்கியமதத்தை மறுத்து உண்டு என நிறுத்தி ஈசுரனாகிய பதியும் மேற் கூறிய பசு பாசங்களுமாகிய (உயிர் கடவுள் உலகம் என்னும்) பசு பதி பாசம் என்ற முப்பொருள்கள் உண்டு என்றும், அவை மூன்றும் அநாதி நித்தப் பொருள்களென்றும் சைவசமய நூல்கள் கூறும். பசு பதி பாசம் என்ற இம் முப்பொருள்களே முறையே ஜீவேச்வரஜகத் என வைணவமதக் கிரந்தங்கள் வழங்கும்.

உடம்பின்(கண் உள்ள உயிரின்) உணர்வு எனப் பொருள்படும் 'உருஉணர்வு' என்றதனால் ஜீவனும், 'இடையில் நின்றவன்' 'சான்று' 'உணர்வதாயினான்' என்றதனால் ஈச்வரனும், 'மூன்றுரு எனக்குண மும் மையாமுதல் தோன்றுரு எவையும் அம்முதலைச் சொல்லுதற் கேன்றுரு அமைந்தவும்' என்றதனால் ஜகத்தும் ஆகிய ஜீவேச்வரஜகத் என்ற முப் பொருள்களும் இந்தக் கடவுள்வாழ்த்துக் கவியில் அமையக் கூறியிருத்தல் கவனிக்கத்தக்கது.

பாட பேதம்: உவந்த தாயினான்: இடையி னின்றவும், சான்றுரு: ஏன்றுரு வமைந்தவ ரிடையி னின்றவர்: இம்முதல்: சான்றவ ருணர் வினுக்கு: ஊன்றுரு வுணர்வினுக்கு: சான்றுரு வுலகினுக் குலகந் தாயி னான்: உணர்வினுக் குணர்வ தாயினார். (க)

---

* அசித்து - சடம் - அறிவில் பொருள். † சித்து - அறிவுடைப் பொருள்.

பம்பைப் பொய்கை வருணனை

[இராம லக்குமணர் வந்தடைந்த பம்பைப் பொய்கை, மலர்கள் மலர்ந்து விளங்கும் மாட்சியினால் மின்னல்கள் வெளிப்பட்ட மேகமோ, நட்சத்திரங்கள் பிரகாசிக்கும் ஆகாயமோ எனவும், யானைகள் களித்துக் குளிக்கும் காட்சியினால் மீன்கள் பிறழ்ந்து விளங்கும் கடலோ எனவுந் தோன்றியது.

தூல தேகத்தோடு மேலுலகத்தை அடைய விரும்பி வசிட்டமுனி சாபத்தாற் சண்டாளனாகித் தன்னைச் சரணடைந்த திரிசங்குராசனைத் தனது தவ மகிமையினால் தேவலோகத்துக்கனுப்பத், தேவர்கள் சண்டாளனென்று தள்ளிவிடத், தலைகீழாக வீழ்வானைத் தடுத்து, மத்தியந்தரத்தே நிறுத்தித் தான் அனுப்பியவனைத் தள்ளிய வானவரும் வானுலகும் உள்படப் 'பிரமசிருட்டிக்குப் பிரதிசிருட்டி செய்வே' னென்று, விசுவாமித்திர முனி வெகுண்டு வேறுலகு விதிக்கப் புகுந்தபோது, மலரவன் படைத்த கடலுக்கு மாறாகப் படைத்த கடலோ என்னும்படி அளவற்ற அகலமும் ஆழமும் உடையதாய் அந்தத் தடாகம் விளங்கியது.

அத் தடத்தில் அலர்ந்த செந்தாமரை மலர்களிலிருந்த அன்னங்கள், 'சீதை சென்றிருக்கு மிடத்தைத் தெரிவிக்கமாட்டாதயாம், இராமன் முகத்தை எப்படிப் பார்ப்பேம்! பாராமல் இறந்துவிடுவேம்!' என்று எரிபுகுவன போன்றன.

இராமனைக் கண்டு நீர்க்குள் ஒளிக்கும் மீன்கள், 'இவன் நம்மைக் கண்டால், சீதையின் கண்களை நினைந்து கவல்வா' னென்று மறைவன போன்றன.]

இராமன் சீதையை எண்ணி வருந்தல்

[தையலர் கூந்தல்போலும் சைவலம்*, காதுபோலும் வள்ளை, கண்போலும் நீலோற்பலம், கன்னம்போலும் நீர்நிலை, வாய்போலும் செவ்வாம்பல், வதனம்போலும் தாமரை, கண்டம்போலும் சங்கு, கொங்கைபோலும் குமிழி, வயிற்று மடிப்புப்போலும் அலை, உந்திச்சுழிபோலும் நீர்ச்சுழி, விரல்போலும் கெளிறு†, இடைபோலும் பாம்பு, முழந்தாள்போலும் நண்டு,

* சைவலம் - பாசி. † கெளிறு - கெளிற்றுமீன்.

கணைக்கால்போலும் வரால், புறங்கால்போலும் ஆமை ஆகிய இவைகளை இராமன் கண்டு, சீதையின் அவயவங்களை நினைந்து வருந்தித் தாமரையை நோக்கிச், 'சீதை உன்னிடத்திருந்து வந்து என்னிடத்திருந்தாள். இப்போது என்னிடத்தில் இல்லை. அவளுக்கு உன்னையும் என்னையுமன்றி ஓரிடமும் இல்லையாதலால், அவளை நீ ஒளித்துவைத்துக்கொண்டு "காட்டமாட்டேன்" னென்கின்றாய். ஒளித்ததன்றி உரையாடாத உன்னோடு உறவாடுவ தெவ்வாறு?' என்றும், மயிலை நோக்கி, 'என்னுடனிருந்த சீதையின் சாயலுக்குத் தோற்று முன்பு ஒளித்தோடிய நீ இப்போது களித்தாடுகின்றாய். உனக்கு ஆயிரங் கண்கள் இருக்கின்றனவே. அப்படியுள்ள நீ காணாமல் அவள் எப்படிப் போய்விடுவாள்? எங்கே ஏகினாளென்று இயம்பாயோ?' என்றும் புலம்பினான்.

ஓர் ஆண் யானை துதிக்கையால் தண்ணீரை முகந்து தன் பெண் யானை வாயுட் பெய்யக் கண்டு, 'இவை பிரியாதிருத்தல் போலச் சீதையைப் பிரியாதிருக்கப் பெற்றேனில்லையே!' யென்று வருந்தினான்.]

இராமன் அந்திவந்தனை முடித்தல்

[இவ்வாறு பலவாறு கருதி நொந்து பொழுதுபோனது தெரியாதிருந்த இராமன், தம்பி சந்தியாவந்தன சமயம் சமீபித்ததெனத், தடாகத்துள் இறங்கி நீராடினான். விரக வெப்பத்தினால் மிகுந்து வெதும்பியிருந்த அவன் மேனி தோய்ந்த தடாக சலம், காய்ந்த இரும்பு தோய்ந்த நீர்போல வெப்பமுற்றது. அவன், அந்தி வந்தனை முடித்தபின், அங்குள்ள ஒரு சோலையில் தங்கி அன்றை யிரவைக் கழிப்பானாயினான்.]

இராத்திரி வருணனை

2. பூவோடுங் கினவிரவு புள்ளோடுங் கினபொழில்கள்
மாவோடுங் கினமரனு மிலையோடுங் கினகிளிகள்
நாவோடுங் கினமயில்க ணடமோடுங் கினகுயில்கள்
கூவோடுங் கினபிளிறு குரலோடுங் கினகளிறு

கொண்டுகூட்டு: பூ ஒடுங்கின; விரவு புள் ஒடுங்கின; பொழில்கள் மா ஒடுங்கின; மரனும் இலை ஒடுங்கின; கிளிகள் நா ஒடுங்கின; மயில்கள் நடம் ஒடுங்கின, குயில்கள் கூ ஒடுங்கின; களிறு பிளிறு குரல் ஒடுங்கின.

பொருள் : (அந்த இரவில், இராமன் நீராடிய பம்பைத் தடாகத்திலும் அதன் பக்கத்துள்ள அவன் தங்கிய சோலையிலும்) மலர்கள் குவிந்து உறங்குவனபோல ஒடுங்கின; (அந்தத் தடாகத்திலும் சோலையிலும் உள்ள) பறவைகள் உறங்கி ஒடுங்கின; (அந்தச் சோலையில் அலைந்து திரிந்த) மிருகங்கள் படுக்குமிடங்களிற் படுத்து உறங்கி ஒடுங்கின; (பறவைகள் மிருகங்கள் போல, ஒடுங்குந் தன்மையில்லாத) மரங்களும் தாம் ஒடுங்கவில்லையாயினும், தம் இலைகள் சுருங்கி உறங்குவனபோல ஒடுங்கின; கிளிகள் பேசாமல் நாக்கு அடங்கி உறங்கி ஒடுங்கின; மயில்கள் ஆடுதல் தவிர்ந்து விரித்த சிறகுகள் மடங்கி உறங்கி ஒடுங்கின; குயில்கள் கூவுதல் செய்யாமல் உறங்கி ஒடுங்கின; களிறுகள் பிளிறும் குரல் அடங்கி உறங்கி ஒடுங்கின.

புள் - பறவை. பொழில் - சோலை. மா - மிருகம். மரன், மரம் என்பதன் போலி. கூ, முதனிலைத் தொழிற்பெயராய்க் கூவுதல் என்று பொருள் பட நின்றது. 'விரவு' என்பதற்குப் (பல இனங்கள்) கலந்த என்று பொருள் கொள்ளலாம். விரவுபுள் - கலப்பான பலசாதிப் பட்சிகள். 'இரவு எனப் பிரித்து அவ் விராத்திரியில் இவை இவை ஒடுங்கின என்றும் உரைக்கலாம். "பொழிற்கண்" எனத் திரியாது, சந்த இன்பம் நோக்கி, பொழில்கள் எனப் பிரிந்தது. "மரனும்" என்ற இழிவுசிறப்பும்மை, அதனுடைய ஓரறிவுடைமையைக் கருதிற்று.'— வை. மு. கோ. பிளிறல் - ஒலித்தல். களிறு - ஆண்யானை; 'இங்கு யானைப் பொது.'

'புள்' என்ற பறவைப்பொது கிளி மயில் குயில்களை யுள்ளிட்டதாயினும் இவைகளைப் பிரித்து மீட்டுங் கூறியது இவைகள் மற்றைப் பறவைகளினும் சிறப்புடைமைபற்றி யென்க. அவ்வாறே 'மா' என்று கூறியதற்குப்பின் களிற்றைக் கூறியதும் என்க. பேசுதல் ஆடுதல் பாடுதல், முறையே, கிளி மயில் குயில்களின் சிறப்பு. பெருங் காத்திரம் யானையின் சிறப்பு.

பாட பேதம் : பொருவில் மாவுறங்கின. (உ)

[அந்தப் பம்பைத் தடாகத்திலும் பக்கத்துள்ள சோலையிலும் போலப், பூமியில் மலை கடல் முதலிய எல்லா இடங்களிலும் உள்ள எல்லா உயிர்களும் உறங்கின. உறங்காத பேய்களும் உறங்கின. ஆயினும் பாற்கடலிற் பள்ளிகொண்டு சதாகாலமும் துயில்வோன்* தூங்காதிருந்தான்.]

* விட்டுணுவின் அவதாரமான இராமன்.

சூரியோதயமாக, இராம லக்குமணர் சீதையைத் தேடிச் செல்லல்

[இரவின் இருளும் இராமன் விரகமும் நீங்க இரவி உதய மானான். இராம லக்குமணர் சீதையைத் தேடிப் பல காடுகளும் மலைகளும் கடந்து விரைந்து சென்றார்கள்.]

2. அனுமப் படலம்

[இராமன் அனுமானைச் சந்தித்துச் சல்லாபித்ததைக் கூறுவது]

இராம லக்குமணரைக் கண்ட சுக்கிரீவாதியர் அஞ்சி ஓடுதல்

[இராம லக்குமணர், ருசியமுகபருவதத்தை அடைந்து அதன் மேல் ஏறலுற்றனர். ஏறுதல் அருமையான அந்த மலையை அவர்கள் எளிதாகவும் விரைவாகவும் ஏறுதலையும், அவர்கள்பால் விளங்கிய வீரத் தோற்றத்தையுங் கண்டு, அம் மலைவாசிகளான சுக்கிரீவாதியர், 'இவர்களை எதிர்த்தலைப்பற்றிப் பின்பு ஆலோசிப்போம்; இப்பொழுது தப்பிப் பிழைத்தலே தக்க உபாய' மென்று ஒரு குகைக்குள் ஓடி ஒளித்தார்கள். சுக்கிரீவன், தன் அமைச்சனான அனுமானை நோக்கி, 'இவர்கள் என்னைக் கொல்ல வாலி ஏவ வந்தவர்கள்போலும்!' என, அவன் ஏனைய வானரரோடு தானும் ஓடி வந்தபோது, இராம லக்குமணரைக் கவனத்தோடு நோக்கி, அவர்களது உண்மைத் தன்மையை ஊகித் துணர்ந்தவனாதலால், அச்சமற்றவனாய், 'அஞ்சுதற்குக் காரணமில்லை. இங்கே நீவிரெல்லீரும் அஞ்சாதிருங்கள். யான் சென்று யாவும் தெரிந்து வருவேன்' என்று செப்பிவிட்டுச் சென்றான்.]

இராமனை அனுமான் சந்தித்தல்

[சென்றவன், ஒரு பிராமணப் பிரமசாரி வடிவங்கொண்டு, இராம லக்குமணரை அடுக்கப் போய், அவர்கள் அறியாமல் மறைவாக நின்று நோக்கி, 'இவர்கள் தவவேடந் தாங்கிய மெய்யினராயினும், அந்த வேடத்துக்கு விரோதமான வில்லேந்திய கையினராய் இருக்கின்றார்கள். திரிமூர்த்திகள் இருமூர்த்திகளானார் போல்கின்றார். இவர்கள்பாற் கவலைக்குறி காணப்படுகின்றது.

ஆயின், இவர்கள், எளிதிலே கவலைக் கிடங்கொடுக்கும் இயல்பின ரல்லர். இவர்கள் மனத்துள் முக்கியமாகக்கொண்ட ஏதோ ஒரு பொருளை இழந்து தேடுகின்றனர். சுக்கிரீவாதியர் அஞ்சுதற்குரிய சினத்தோற்றம் சிறிது மிலர். சாந்தமூர்த்திகள்; தயாசொரூபிகள்; தருமமே தமது தனமாகக் கருதுவோர்' என்று எண்ணி, நெடுங் காலம் பழகியிருந்து பிரிந்துபோய்த் திரும்பிவந்த அன்பரைக் கண்டான்போன்று, 'ஆ! ஆ! ஆச்சரியம்! இவர்களைக் கண்ட மிகக் கொடிய வேங்கை முதலிய மிருகங்கள், தங்கள் குட்டிகளைக் கண்டாற்போல, அன்பொடு பின்தொடர்கின்றன! பறவைகள், இவர்கள்மேல் வெயில் படாமல், சிறகு விரித்து நிழல்செய்து பறந்து செல்கின்றன! இவர்கள் வெயில் வெப்பமுறாமல், மேகங் கள் சீதளமான சிறிய திவலைகளைச் சிந்துகின்றன! இவர்கள் நடக் கும் வழியிற் கிடக்கும் வெம்மையும் வன்மையுமான சரள்கள்* தண்மையும் மென்மையுமான மலர்கள் போலக் குளிர்ந்து குழை கின்றன! இவர்கள் போமிடமெல்லாம் மரியாதையாக வழிவிலகி வணங்குவன போலத் தாவரங்கள் சாய்ந் தொதுங்கித் தலைதாழ் கின்றன! என்னே! இவர்கள், இருவினைக் கட்டறுத்துப் பிறவித் துன்பொழித்து முத்தி யின்பளிக்கும் முதற்றேவர்தாமோ! இவர்கள் திறத்தில் எனக்கு என்பு நெக்குருக அன்பு மிக்கு வளர் கின்றது!' என்று பரவசப்பட்டு எண்ணி, இராம லக்குமணர் எதிரேசென்று, 'உங்கள் வரவு நல்வரவாகுக' என்றான். இராமன், 'நீ ஆர்? எங்கிருந்து வந்தாய்?' என, 'வாயுதேவனுக்கு அஞ்சனை தேவி வயிற்றில் வந்தேன். அனுமப் பெயரினேன். இந்த மலை யில் வாழும் சுக்கிரீவ ராசனுக்குத் தொண்டனேன். அவன் உங்கள் வருகையைக் கண்டு "யாவரென அறிந்து வா!" என இட்ட கட்ட ளையை இயற்றவந்தேன்' என்றான்.

அப்போது, இராமன், 'இவனினும் நல்லார் எங்கும் இல் லார். இவன்பால் ஆற்றலும் அடக்கமும் அறிவும் கல்வியும் ஆகியவைகள் ஒன்றினொன்று மிகுதல் குறைதலால் ஏற்படும் வேற்றுமையில்லாமல் ஒற்றுமைப்பட்டு விளங்குகின்றன' என்று, சிந்தையுள்ளே தெளிந்து, இலக்குமணனை நோக்கி, 'கலைகளும் மறைகளும் இவன் கல்லாதன இல்லாதன வெனும்படி எல்லாங் கற்றுச் சகலகலாபண்டிதனாகவும் சதுர்வேதபாரங்கதனாகவும்

---

* சரள் - சரளை, பரல், பருக்கைக் கற்கள்.

சால்புற்றிருக்குந் தன்மை, இவனது சொற்றிறமையினால் தெற்றெனப் புலப்படுகின்றது. தேவர்களுள்ளேயும் முனிவர்களுள்ளேயும் இவன்போலும் வாக்குவல்லமையுடையார் எவரும் இலர். மும்மூர்த்திகளே இவன் மொழிக்கு எதிர்மொழி இயம்பவல்ல சொல்வன்மையுடையாரலர்' என்று கூறி, அனுமானை நோக்கிச், 'சுக்கிரீவன் இருக்குமிடந்தேடி அவனைக் காணும் ஆசையால் யாங்கள் இங்கே வந்தேம். அவனைக் காட்டுவாயாக' என்றான். அனுமான், 'போர்வீரருள்ளே உங்களைப்போலும் புனிதர் யாரே யிருக்கின்றார்! எங்கள் அரசன் உங்களைத் தேடிவரற்பாலனாக விருக்க, நீங்களே அவனைத் தேடிவந்தீர்க ளென்றால், அவன் செய்துள்ள தவப்பயன் மிகப்பெரிது. சூரிய குமாரனை சுக்கிரீவனை இந்திர புத்திரனான இரக்கமில்லாத வாலி சீறி வருத்தத் தெருமந்து நொந்து, உலகத்துள்ள துன்பம் எல்லாவற்றுக்கும் தான் ஒருவனே உறைவிடமாய், இந்த மலையில் என்னோடு இருக்கின்றவனை நல்ல பாக்கியமே நாடிவந்தாற்போல வழி வினவிக்கொண்டு வந்து சேர்ந்தீர்கள். அடியேங்கள் உங்கள் அடைக்கலம். தம்மைக் கொல்லப்புகுந்தார்க்கு அஞ்சிச் சரண் புகுந்தார்க்கு அபயமளிப்பதினும் அதிகமான தரும மில்லை. உலக முழுதும் காக்கும் உங்களுக்கு எங்களைக் காத்தல் எளிது. சுக்கிரீவனிடம் உங்களை யாரென்று சொல்வேன்* சொல்லுங்கள்!' என்றான்.

இலக்குமணன், 'இந்த ஆண்டகை, தசரத சக்கரவர்த்தியின் தலைமகன். இவன் நாமம் இராமனென்பது. தாய் கட்டளையைத் தலைமேல் தாங்கித் தம்பிக்குத் தன் அரசைத் தந்து தவமேற்கொண்டு வனவாசஞ் செய்கின்றான். யான் இவனுக்கு ஏவல் செய்யும் இளையேன்.' என்று கூறி, இராமன் அவதார முதலாக இராவணன் அதிக்கிரமம் இறுதியாக நிகழ்ந்த செய்திக ளெல்லாவற்றையும் ஒன்றும் விடாமல் உரைத்தான். உடனே, அனுமான் இராம லக்குமணர் பாதங்களில் விழுந்து பணிந்தான். பணியவே, இராமன், 'பிராமணா! ஏன் செய்யத்தகாத செயலைச் செய்தாய்? சத்திரியனை அந்தணன் வணங்குதல் தருமமன்று' என, அனுமான், 'அடியேன் வானரரில் ஒருவன்' என்று தன் சுவரூபம் தோன்ற நின்றான்.]

* 'நீங்கள் யார்?' என்னாமல் இவ்வாறு கூறிய நாகரிக விநயம் கவனிக்கத்தக்கது.

அனுமானது வடிவப் பெருமை

3. கண்டில னுலக மூன்றுங் காலினாற் கடந்து கொண்ட
புண்டரி கக்க ணாழிப் புரவலன் பொலங்கொள் சோதிக்
குண்டல வதன மென்றாற் கூறலாந் தகைமைத் தொன்றோ
பண்டைநூல் கதிரோன் சொல்லப் படித்தனன் படிவ மம்மா

கொண்டுகூட்டு: *மூன்று உலகையும் காலினால் கடந்துகொண்ட புண்டரிகக் கண் ஆழிப் புரவலன் (ஆன இராமன், அனுமானது) பொலங் கொள் சோதிக் குண்டல வதனத்தைக் கண்டிலன் என்றால், பண்டை நூல் கதிரோன் சொல்லப் படித்தனன் (ஆன அவனது) படிவம் கூறலாம் தகைமைத்து ஒன்றோ?*

பொருள்: *(திருமால் அறக்குறிய வாமனனாகி மாவலிபாற் சென்று மூன்றடி மண் வேண்ட, அவன் 'அளித்தேன், அளந்து கொள்' என, மிக நெடிய திரிவிக்கிரமனாகிச் சுவர்க்க மத்திய பாதல மென்னும்) மூன்று உலகங்களையும் இரண்டு அடியளவாலே கடந்து தனக்கு உரிமையாக்கிக் கொண்ட திருமாலின் அவதார மான இராமன் (அனுமானது வடிவத்தைக் கழுத்துக்குமேற் காணமுடியாமல்) முகத்தைக் கண்டானில்லை யென்றால் அப்படிப் பட்ட அனுமான் வடிவம் இத்தகையதென்று சொல்லக்கூடிய தொன்றோமோ?*

புண்டரீகம் கண் ஆழி புரவலன் - செந்தாமரை மலர்போலும் கண் களும் சக்கராயுதமுமுடைய காவற் கடவுளான திருமாலின் அவதாரமான இராமன். பொலம் கொள் சோதிக் குண்டல வதனம் - பொன்னினாற்செய்த பிரகாசமுடைய குண்டலங்களை(க் காதுகளில்) அணிந்து விளங்கும் முகம். பண்டை நூல் கதிரோன் சொல்லப் படித்தனன் படிவம் - பழமையான (வியாகரண முதலிய) சாஸ்திரங்களைச் சூரியன் கற்பிக்கக் கற்ற அனுமானது வடிவம். அம்மா, வியப்பிடைச்சொல்.

இக்கவி, கம்பரது அதிசய கவித்துவ சாதுரிய விசேடத்துக்குக் காட்டாகக் காட்டத்தக்க அதி அற்புதக் கவிகளி லொன்று.*

மானிடனான இராமன் வாயுதேவ குமாரனான மகிமையுடைய அனுமா னது பிரமாண்டமான விசுவரூபத்தை முழுதுங் காணமுடியாத இயல்பைக் கூறுமுகமாக, அவ் இராமன் முன்பு திரிவிக்கிரமனாய்த் திரிலோகங்களையும்

---

* *காட்டு - உதாரணம்.*

இரண்டடிச்சுவட்டுள் அடக்கிய திருமாலாதலால், அவனால் முகங்காண முடியாத வடிவத்தின் பெருமை மனத்தினாற் பாவிக்கற்பாலதேயன்றி வாயினாற் பகரற்பால தொன்றன்று என்று அதிசயம் விளையக் கூறிய கவி சமற்காரம் கழிபேரின்பம் பயப்பதாயிருத்தல் காண்க. இது, கோசலை, 'உலகியாவையும் — மன்வயிற்றின் அடக்கிய மாயனைத் — தன் வயிற்றின் அடக்கும் தவத்தினாள்' என, மந்திரப்படலத்தில் வந்திருக்கிற கவிப் பகுதியை நினைவுறுத்துகிறது.

பாட பேதம்: தகைமைத் தன்றால். (௩)

இராமன் அனுமான் வடிவத்தை அதிசயித்துக் கூறல்

4. தாட்படாக் கமல மன்ன தடங்கணான் றம்பிக் கம்மா
கீட்படா நின்ற நீக்கிக் கிளர்படா தாகி யென்றும்
நாட்படா மறைக ளாலு நவைபடா ஞானத் தாலும்
கோட்படாப் பதமே யைய குரக்குருக் கொண்ட தென்றான்

கொண்டுகூட்டு: தாள் படாக் கமலம் அன்ன தடங்கணான் (ஆன இராமன்,) தம்பிக்கு, 'ஐய, என்றும் நாள்படா மறைகளாலும் நவைபடா ஞானத்தாலும் கோள்படாப் பதம் (- பரம்பொருள்) கீழ்ப்படா நின்ற (- தாழ்ந்தவை) நீக்கி, கிளர் (- உயர்ந்தவை) படாதது ஆகி, குரங்கு உருக் கொண்டது அம்மா!' என்றான்.

பொருள்: தண்டொடு பொருந்தாத தாமரைப்பூ (உளதேல், அந்தப் பூ)வைப் போன்ற விசால நேத்திரமுடைய இராமன், இலக்குமணனை நோக்கித், 'தம்பி! என்றும் புதுமையாயுள்ள வேதங்களாலும் குற்றமற்ற தத்துவ ஞானத்தாலும் அறிந்து கொள்ளப்படாத பரம்பொருள் (தன்னு ளடங்கிய) தாழ்வானவைகளை நீக்கி, உயர்வானவைகள் நீங்காததாய், அனுமானாக வானர வடிவங் கொண்டது. இது ஆச்சரியம்!' என்று கூறினான்.

தாள், தாமரைப்பூவினது தாளாகிய நாளம் என்னும் தாமரைத் தண்டை உணர்த்தியது. தடம் - விசாலம். அம்மா, அதிசயக் குறிப்புச் சொல். 'கீழ்ப்படாநின்றன' என்பது, அன்சாரியை பெறுமல் 'கீழ்ப்படா நின்ற' என வந்தது. இதனைக் (1) கீழ்ப்படா - கீழ்ப்பட்டு, நின்ற - நின்றன - நின்றவை என்றேனும், (2) கீழ்ப்படாநின்ற - கீழ்ப்படுகின்ற - கீழ்ப்படு கின்றன - கீழ்ப்படுகின்றவை என்றேனுங் கொள்ளலாம். (1) கீழ்ப்பட்டு நின்றவை என்று கொண்டால், 'கீழ்ப்படா' என்பது செய்யா என்னும்

வாய்பாட்டு உடன்பாட்டு இறந்தகால வினையெச்சமாம். (2) கீழ்ப்படு கின்றவை என்று கொண்டால், 'கீழ்ப்படாநின்ற' என்பது, கீழ்ப்படு (பகுதி), ஆநின்று (நிகழ்கால இடைநிலை), அ (அஃறிணைப் பன்மைப் படர்க்கை விகுதி) ஆகியவைகள் சேர்ந்தாய பலவின்பாற் படர்க்கை நிகழ்கால வினைமுற்றுப் பெயர். கிளர்தல் (- உயர்தல்) என்னும் பொருளுடைய முதனிலைத் தொழிற்பெயராகிய 'கிளர்' என்பது, ஆகுபெயராய், உயர்வானவை யென்ற பொருள்குறித்து நின்றது. படாது - படாதது - நீங்காதது; மணிமேகலை யிற் சிறைசெய் காதையில், 'வான்றரு கற்பின் மனையறம் பட்டேன்' என்ப தில் 'படுதல்' என்பது நீங்குதற் பொருளில் வருதல் காண்க.

நாள்படா - நாட்படாத - நாட்செல்லாத - நாளாகாத - புதுமையான. நாள் - காலம்.(—ந. அ.) எனக் கொண்டு, 'நாட்படா' என்பதற்குக் காலத் தின்கட்படாத (- காலங்கடந்த - காலாதீதமான) என்று பொருள்கொள்ள லும் பொருந்தும். மறை - வேதம். நவை - குற்றம். கோள்படா - கோட் படாத - (அறிந்து)கொள்ளப்படாத.

பதம் - பொருள். 'தற்பதமாய்ப் பரபதமாய்' (— **கோயிற்புராணம்** பாயிரம் ந) என்றும், பரபதம் - மேலாகிய பொருள் என்றும், பரம்பொருள் - மேலான வஸ்து ('எங்குமாம் பரம்பொருளை யாமும் வணங்குதுமே.' —**மகாவாக்கியம்**, பாயிரம் க.) என்றும் தமிழ்ச் சொல்லகராதியில் வருதல் காண்க. இதனால், பரபதமும் பரம்பொருளும் ஒருபொருள் குறித்தவை யாய்ப் பரியாயச் சொற்றொடர்களா யிருத்தல் தெளிவு.

மேற்கூறிய உதாரணக் கவியில் **பதம்** 'பர' என்ற அடையினால் **பரம் பொருளை** உணர்த்தியவாறே, இந்தக் கவியிலும் **பதம்** 'என்றும் நாட் படா மறைகளாலும் நவைபடா ஞானத்தாலும் - கோட்படா' என்ற விசேடணத்தால் **பரம்பொருளை** உணர்த்தியது தெளிவாம்.

தாழ்வானவை என்ற பொருளுடைய 'கீழ்ப்படா நின்ற' என்பதும் உயர்வானவை என்ற பொருளுடைய 'கிளர்' என்பதும் ஒன்றுக்கொன்று எதிர்மறை. 'நீக்கி' என்பதற்கு 'நீங்காதாகி' என்ற பொருள் குறித்த 'படாதாகி' என்பது எதிர்மறை.

'கீழ் என்பதன் ஈற்று ழகரம், வருமொழி முதலில் வல்லினம் வந்து புணர்ந்தபோது டகரமாகத் திரிந்தது; "ஐம்மூன்ற தாமுடல் வன்மைபின் வந்திடி லாறெடைந்தாம்" என்னும் வீரசோழிய விதியைக் காண்க. இனி, ஈற்று ழகரத்துக்கு எதுகை நோக்கி ளகரம் போலியாய், அது டகரமாகத் திரிந்ததெனினும் அமையும். இராமபிரான் தம்பியை "ஐய" என்றது அன்பு பற்றிய மரபுவழுவமைதி. ஐய - அழகிய என்றுமாம். தம்பிக்கு என்றுன்

என இயையும். குரங்கு + உரு = குரக்குரு : வேற்றுமையில் மென்றொடர் வன்றொடராயிற்று.' — வை. மு. கோ.

காரணத்தில் இல்லாதது காரியத்திற் காணப்படா தாதலாலும், பரம்பொருளின் கூறுகளான திரிமூர்த்திகளுள் காத்தற் கடவுளும் அழித்தற் கடவுளு முண்மையாலும், காத்தற் குணமும் அழித்தற் குணமும் ஆகிய எதிரிடைப் பொருள்கள் பரம்பொருளினிடத்து உள்ளனவாதல் பெறப்படுதல் போல, நல்லவை தீயவை, உயர்ந்தவை தாழ்ந்தவை முதலிய (நீரும் நெருப்பும் போல ஒன்றுக் கொன்று மாறுன) எல்லா எதிரிடை யிரட்டைகளும் பரம்பொருளினிடத்து அடங்கினவாயிருத்தல் பெறப்படும். இக் கருத்துக்கொண்டு கம்பர்,

'மேலொருபொருளுமில்லா மெய்ப்பொருள் வில்லுந் தாங்கிக்
கால்தரை தோய நின்று கட்புலக்குற்ற தம்மா!' *

என்று வாலி இராமனைப் பிரத்தியட்சமான பரம்பொருளாகக்கொண்டு, 'பாவம் நீ, தருமம் நீ, பகையும் நீ, உறவும் நீ' † என்று னென்றார். இக் கருத்துப் பற்றியே, அவர், இராமன்,

'கீட்படா நின்ற நீக்கிக் கிளர்படா தாகி என்றும்
நாட்படா மறைக ளாலும் நவைபடா ஞானத் தாலும்
கோட்படாப் பதமே, ஐய, குரக்குருக் கொண்ட' தென்றான்

என்றார். இவ்வாறு கூறினமை மேற்கூறிய கருத்துப்பற்றி யன்றெனில், பரம்பொருளினிடத்திற் கீழ்மையானவை யுண்டோ என்னும் ஆசங்கை நிகழும்.

இவ்வாறு இக்கவியில், வெறுத்தற்குரிய கீழ்மைக் குணங்களை நீக்கி விரும்புதற்குரிய மேன்மைக் குணங்கள் நீங்காததாய்ப் பரம்பொருள் அனுமானாக வடிவெடுத்து வந்ததென்று இராமன் கூறினு னென்றதற் கியைய, அடுத்த கவியில், அவன், வெறுக்கும் கீழ்மை இல்லாததாய் விரும்பும் மேன்மை உள்ளதாய்ப் பரம்பொருள் வடிவங்கொண்டதென்ற அனுமானைத் தம்பியும் தானும் துணையாகப் பெற்றமையால், தங்களுக்கு வெறுப்பான துன்பம் இல்லையானது, விருப்பான இன்பம் உள்ளதானது என்று கருதி, 'நம்பியைப் பெற்றேம். நம்பால் — இல்லையே துன்பம் ஆன தின்பமும் எய்திற்று' என்று னென்றார்.

மேற்கூறியவாறு விசேடித்துக் 'கீட்படா நின்ற நீக்கிக் கிளர்படா தாகிப்' பரம்பொருள் 'குரக்குருக்கொண்டது' என்றது, விசேடியாது பரம்பொருள் 'குரக்குருக்கொண்டது' என்பதனினும் அதிகமாக அனுமானை உயர்த்துக் கூறியதாம். இது, எதுபோலுமெனில், ஒரு மாநின்

* வாலி வதைப் படலம் கசஅ. † வாலிவதைப் படலம் கஉக.

வதனத்தைக் களங்கம் தேய்தல் முதலிய தாழ்குணங்க ளெல்லாம் நீக்கி ஒளி குளிர்ச்சி முதலிய உயர்குணங்க ளொன்றும் நீங்காததாயுள்ள மதிபோலு மென்பது அவள் வதனத்தை மதிபோலு மென்பதனினும் சிறப்பிப்பதா யிருப்பதுபோலும் என்க.

'மறைகளாலும் ஞானத்தாலும் கோட்படாப் பதம்' என்றது, வேத விற்பன்னரும் தத்துவஞானிகளும் முறையே வேதங்களையும் தத்துவ ஞானத்தையும் கருவியாகக்கொண்டு ஆராய்தலால் அறியப்படாத பதத்தை.

அனுமான் வடிவம், மூவுலகையும் ஈரடியாக அளந்த நெடியோனை திருமாலாலும் கண்டமட்டும் காணமுடிந்ததே யன்றிக் கடைபோக (முகத்தை)க் காண முடியாததா யிருந்ததென்று இதற்கு முந்திய பாட்டிற் கவிக்கூற்றாகக் கூறிய கம்பர், இந்தப் பாட்டில் கதாநாயகன் கூற்றாகத் திருமால் அனுமான் முடிகாண முடியாமைக்குரிய காரணத்தைத் திரு மாலைக்கொண்டே தெரிவிப்பாராய்த் திருமாலுக்கு மூலமாய் முதற்பொரு ளான 'பரம்பொருளே அனுமானாக வடிவமெடுத்து வந்தது' என்று (திருமாலான) இராமன் கூறினா னென்றார்.

'கீழ்மைப்பட்டு நின்ற (ராஜச தாமச) குணங்களைப் போக்கி (சுத்த சாத்விக குணமயமானதாய்) ஒளி அழியாததாய் எப்பொழுதும் நாட் செல்லாத வேதங்களாலும் குற்றம் (ஐயந்திரிபுகள்) இல்லாத தத்துவ ஞானத்தாலும் அறியப்படாத மோக்ஷலோகமே வானரவடிவத்தை எடுத்து வந்ததாம்.'— வை. மு. கோ. (௫)

அனுமான் சுக்கிரீவனை அழைத்துவரப் போதல்

[இராமன் இலக்குமணனை நோக்கி, 'நாம், இத்துணைப் பேராற்றலும் பேரறிவுமுடைய பெரியோனைப் பெற்றோ மாதலால், துன்பமற்றோம்; இன்பமுற்றோம். இவனைத் தொண்டு கொண்ட சுக்கிரீவனது உயர்வு சொல்லுந் தரத்ததோ!' என்று சொன்னான். அவர்கள் இருவரும் அவனை இனிது நோக்கி அக மகிழ்ந்து முகமலர்ந்த வண்ணமாய் நிற்க, அவன், அவர்களை நோக்கிச், 'சிறிதுபோது இங்கே யிருங்கள். நான் சுக்கிரீவனைத் துரிதமாக அழைத்து வருவேன்' என்று சொல்லி விடைபெற்று விரைந்து சென்றான்.]

3. நட்புக்கோட் படலம்

[இராமன் சுக்கிரீவனோடு சிநேகஞ் செய்ததைக் கூறுவது.]

சுக்கிரீவன் இராம லக்குமணரை அடைதல்

[*இராம லக்குமணரிடம் சுக்கிரீவனைக் கொணர்வதாகக் கூறிச் சென்ற அனுமான், அவனிடம் அணுகியபோது, 'எல்லாரும் ஈடேறினோம்! வாலிக்குக் காலன் வந்தான்! நாமும் நம் குலமும் ஞாலமும் உய்ந்தோம்! உய்ந்தோம்! வாலியைக் கொன்று உனக்கு அரசளிப்பவன் வந்தான்!' என்று கூறி உவகைக் கூத்தாடினான். பின்பு இராம லக்குமணர் வரலாறு முழுதும் மொழிந்து, 'அவர்கள் சீதையைத் தேடுதற்கு உனது உதவியை நாடி உன்னுடன் சிநே கஞ்செய்ய வந்திருக்கின்றார்கள். அவர்களைக் காண வா!' என, அவன், 'உன்னையுடைய எனக்கு என்னது அரிது?' என்று முகமன் மொழிந்து, அவனுடன் சென்று இராம லக்குமணரை அடைந்தான்.*

அடைந்தவன், ஒரு மரகத மலை, சிகரத்தில் மேகம் வீற்றிருக்க, அதன்கீழ்ச் சந்திரன் தயங்க, அதன்கீழ்த் தாமரை மலர்கள் பூத்துப் பொலியக் கண்டாற்போலச், சிகையும் முகமும் கைகால்களும் உந்தியும் காண்பவர் கண்ணுக்கும் கருத்துக்கும் களிப்பும் குளிர்ப்பும் அளிக்கும் பசிய மேனியுமுடையனை இராமனையும் பச்சைமலைப் பக்கத்தே பசும் பொன்மலைபோல நின்ற இலக்கு மணனையும் பார்த்தான்.*]

சுக்கிரீவன் அவர்களைக் கண்டு அதிசயபரவசனாதல்

5. நோக்கினா னெடிது நின்றா னொடிவருங் கமலத் தண்ணல்
ஆக்கிய வுலக மெல்லா மன்றுதொட் டின்று காறும்
பாக்கியம் புரிந்த வெல்லாங் குவிந்திரு படிவ மாகி
மேக்குயர் தடந்தோள் பெற்று வீரராய் விளைந்த வென்பான்

கொண்டுகூட்டு: (*சுக்கிரீவன் அவர்களை) நோக்கினான், நெடிது நின்றான், 'நொடிவு அருங் கமலத்து அண்ணல் ஆக்கிய உலகம் எல்லாம்,*

---

* *உந்தி - கொப்பூழ்*

அன்றுதொட்டு இன்றுகாறும், புரிந்த பாக்கியம் எல்லாம் குவிந்து இ
படிவம் ஆகி, மேக்கு உயர் தடந்தோள் பெற்று, வீரராய் விளைந்த!' என்பா

பொருள்: சுக்கிரீவன், இராம லக்குமணரைப் பார்த்து அவர்கள் அழகில் ஈடுபட்டு, நெடுநேரம் அதிசய பரவசனு நின்று, 'பிரமன் படைத்த உலகத்தா ரெல்லாரும், படைப்பு தொடங்கிய அந்நாள் தொட்டு இந்நாள்மட்டும், செய்த புண் யங்க ளெல்லாம் திரண்டு இரண்டு வடிவமாகி, மேலாக வளர்ந் தோள்கள் பெற்று, வீரராகிப் பலப்பட்டன!' என்று எண்ணுவ றுன்.

நெடிது - நெடுநேரம். நொடித்தல் - சொல்லுதல். அண்ணல் - பெரு மையிற் சிறந்தோன். நொடிவு அருங் கமலத்து அண்ணல் - சொல்லுத கரிய (மகிமையுடைய திருமாலின் உந்தித்) தாமரையில் உதித்த பெருமை யுடையோனை பிரமன். ஆக்குதல் - சிருஷ்டித்தல். காறு - அளவு பாக்கியம் - புண்ணியம். படிவம் - வடிவம். மேக்கு - மேல். புரிந்த பாக்கி யம் என மாற்றுக. 'ஆய்', ஆக என்னும் எச்சத்தின் திரிபு. 'விளைந்தன' என்பது அன் சாரியை பெறுமல் 'விளைந்த' என நின்றது.

'உலகமெல்லாம் புரிந்த பாக்கியமெல்லாம் குவிந்து மேக்கு உயர் தடந் தோள் பெற்று இருவீரர் படிவமாக ஆகி விளைந்தன' என இயைத்தும் பொருள் கூறலாம்.

'**நின்றன்**' என்பது, அதன் சாதாரண அருத்தமான நிற்றலைச் செய்தா னென்ற பொருளுடையதாக வன்றிக், கண்ட பொருளின் அதிசயமான அழகில் கருத்து ஆழ்ந்து அழுந்த அவசமாகி, அந்த அழகை நோக்கிய கண் இமையாமல் நோக்கி நுகரும் இன்ப நுகர்ச்சியிற் பொழுது போவது தெரி யாமல், தாழ்த்து நின்ற னென்னும் விசேடமான பொருளுடையதாகப் பிர யோகிக்கப்பட்டிருப்பது கவனிக்கத்தக்கது. சூர்ப்பநகை சீதையைக் கண்ட போது 'நெடிது நோக்கி........அழகுக் கெல்லை யில்லையா மென்ன **நின் றள்**' என்பதையும், அவள் சீதாராமர் இருவரையும் ஒருசேரப் பார்த்த போது 'பொருதிறத்தானை நோக்கிப் பூவையை நோக்கி **நின்றள்**' என்ப தையும்*, அயோமுகி இலக்குமணனைக் கண்டு '**நின்றனள்** ஆசையின் நீர்கனுழும் கண் - குன்றி நிகர்ப்ப குளிர்ப்ப விழிப்பாள்' என்பதையும்† இராம லக்குமணரைக் கண்ட அனுமான் 'இருவரை எய்தநோக்கி........... **நின்றன்**' என்பதையும்‡ காண்க.

---

* க. ரா. சா. ஆரணிய காண்டம், பாட்டு 20, 21, † அயோமுகிப் படலம், கூ.
‡ அனுமப் படலம். கக.

சுக்கிரீவன், இராம லக்குமண ரிருவருடைய அவயவங்க ளனைத்தையும் நோக்கி அகம் மிக மகிழ்ந்தவன், 'மேக்குயர் தடந்தோள் பெற்று' எனத் தோள்களை மட்டும் சொல்வானேனெனில், அவன் அவர்கள் தோள்களை நோக்கினபோது அவை அசாதாரண அற்புத பலமுடையவை யென்றும், அந்தப் பலம் வாலி தோள்வலிக்கு அதிகமானதாய் அவனைக் கொல்ல வல்லதென்றும் கருதியதனு லென்னலாம். அவ்வாறு கருதியது காரணமாகவே, அவர்களது அழகு, அருள், அறிவு, ஆற்றல் ஆகியவைகளுள் ஆற்றலைச் சிறப்பாகக்கொண்டு, அவர்களை அழகினர், அருளினர், அறிவினரென்னுமல் 'வீரர்' என்ருன் போலும்.

'உலகமெல்லாம் புரிந்த பாக்கியமெல்லாம் வீரராய்' உற்றன, அல்லது வந்தன, அல்லது தோன்றின, அல்லது வெளிப்பட்டன என்னுமல் **'விளைந்தன'** *என்றது, உலகத்தோருடைய புண்ணியங்கள், ஒன்றும் குன்றுதலின்றி, எல்லாம் சேர்ந்து இருவீரராக உருவான மாத்திரையாயில்லாமல், அப் புண்ணியங்க ளனைத்தும் விதைகள் போல ஒன்று பலவாக* **விளைந்து** *ஒருங்கு திரண்டு இரண்டு வீரராயின வென்று குறித்தற்குப் போலும்.*

பாட பேதம் : *புரிந்த தெல்லாம் : பெற்ற : விளைந்த தென்பான்.*

(ரு)

6\. தேறின னமரர்க் கெல்லாந் தேவராந் தேவ ரன்றே
மாறியிப் பிறப்பில் வந்தார் மானுட ராகி மன்னே
ஆறுகோள் சடிலத் தானு மயனுமென் றிவர்க ளாதி
வேறுள குழுவை யெல்லா மானுடம் வென்ற தென்றே

கொண்டுகூட்டு : *'அமரர்க்கு எல்லாம் தேவராம் தேவர் இப் பிறப்பில் மாறி மானுடர் ஆகி வந்தார். ஆறுகொள் சடிலத்தானும் அயனும் என்று இவர்கள் ஆதி வேறுள குழுவை எல்லாம் மானுடம் வென்றது!' என்றே தேறினன்.*

பொருள் : *'முற்பிறப்பில் தேவர்களெல்லாருக்கும் முதன்மையுடைய தேவர்களாகிய மும்மூர்த்திக ளென்னும் தேவர்களாயிருந்தவர்கள், இப்பிறப்பில் (மூவராந் தன்மையும் தேவராந் தன்மையும்) மாறி, மனிதராய் வந்தார் (ஆவர், இவ்விருவரும் : ஆகவே,) சிவனும் பிரமனும் என்ற இவர்கள் முதலிய வெவ்வேறுகவுள்ள தேவ கணங்க ளெல்லாவற்றையும் மானுடகணம் செயித்தது!' என்று நிச்சயித்தான் சுக்கிரீவன்.*

அமரர் - தேவர். சடிலம் - சடை. அயன் - பிரமன். குழு - கணம் - கூட்டம். மானுடம் - மனித இனம் - மனுஷ ஜாதி. அன்றே, மன்னோ, அசைகள். பாட்டின் முடிவில் நின்ற ஏ, தேற்றப் பொருளில் வந்த இடைச்சொல். அன்றே என்பதை அல்லவா என்னும் பொருளுடையதாக வுங் கொள்ளலாம். 'என்றே தேறினன்' என(க் கடைதலைவிற்பூட்டு ஆக) இயைக்க.

கவியில் மனிதப் பிறப்பை 'இப்பிறப்' பென்றதனால், உரையில் தேவப் பிறப்பு முற்பிறப் பெனப்பட்டது காண்க.

முற்பிறப்பில் மூவராய்த் தேவராயிருந்தவர்கள் இப்பிறப்பில் இருவ ராய் மனிதராய் மாறி வந்தார்க ளென்பது முன் னிரண்டடிக் கருத்து. முன்பு, தேவ சாதி, மனித சாதியினும் சிறந்ததா யிருந்தது: இப்போது, அத் தேவருள் முதல்வரான முத்தேவர் இரு மனிதரா யிருப்பதனால், தேவ சாதியி னும் மனித சாதி சிறந்ததாய்விட்ட தென்பது பின் னிரண்டடிக் கருத்து. முத்தேவர் இரு மனிதரானா ரென்ற கருத்து, இதன் முன் (அனுமப் படலம் எ-ம் கவியில்) அனுமான் 'தேவருக் கொருதலைவராம் முதற் றேவரெனின், மூவர்மற் றிவர்இருவர்' என இராம லக்குமணரைக் குறித்துக் கருதியதை அநுவதித்துப் பூரிப்பதாயிருத்தல் காண்க.

'அமரர்க் கெல்லாம் தேவர்தந் தேவர்' என்ற பாடங்கொண்டால், அதற்குத் தேவர்க ளெல்லாருக்கும் (மேலான) தேவர் (ஆன மூவர்)களுடைய தேவர் (ஆன முழுத்தனி முதற் கடவுள்) என்று பொருள் கொள்க.

'அமரர்க் கெல்லாம் தேவராந் தேவர்' என்பதன் பொருள் 'எல்லாத் தேவர்கட்கும் கடவுளாகிய முதற் கடவுளே (ஸ்ரீ மஹாவிஷ்ணுதாமே)' என்பது முந்திய உரை.

பாட பேதம்: தேவர்தந் தேவரென்றே: வந்த மானுயர் யாக்கை: வென்றதன்றே. (௬)

இராம சுக்கிரீவர் சினேகம்

[இராமன், இருக்குமிடத்தைக் கைந்நீட்டிக் காட்டி 'இங்கே யிருக்க' எனச் சுக்கிரீவன் இருந்தான். இராமச் சந்திரனும் சூரிய புத்திரனும் சந்தித்த காட்சி, அமாவாசையன்று சந்திர சூரியர் சந்தித்த தோற்றம் போன்றது. அவர்கள் இருவரும் இணங்கி இணைந்திருத்தல், இராக்கதர் கூட்டமான பாவ இருள் நீங்க, அவ் விருளால் அடங்கி ஒடுங்கியிருந்த தேவர் கூட்டமான புண்ணிய ஒளி ஓங்க நன்னாளும் நல்லோரையும்* ஒன்றாகூடுதல் ஒத்தது.]

* ஓரை - இராசி.

7. கூட்டமுற் றிருந்த வீரர் குறித்ததோர் பொருட்கு முன்னாள்
ஈட்டிய தவமும் பின்னர் முயற்சியு மியைந்த தொத்தார்
மீட்டும்வா ளரக்க ரென்னுந் தீவினை வேரின் வாங்கக்
கேட்டுணர் கல்வி யோடு ஞானமுங் கிடைத்த தொத்தார்

கொண்டுகூட்டு: *கூட்டம் உற்று இருந்த வீரர், குறித்தது ஓர் பொருட்கு, முன் நாள் ஈட்டிய தவமும் பின்னர் (செய்த) முயற்சியும் இயைந்தது ஒத்தார்: மீட்டும், வாள் அரக்கர் என்னும் தீவினையை வேரின் வாங்கக் கேட்டு உணர் கல்வியோடு ஞானமும் கிடைத்தது ஒத்தார்.*

பொருள்: *சிநேகராய்ச் சேர்க்கையுற்றிருந்த இராம சுக்கிரீவர், ஒருவர் உத்தேசித்த ஒரு காரிய நிறைவேற்றத்துக்கு, அவர் முற்காலத்தில் (முந்திய சென்மத்தில்,) நோற்றுச் சம்பாதித்த புண்ணியமும், இக்காலத்தில்(இந்தச் சென்மத்தில்,) செய்த முயற்சியும், ஒன்றுகூடிய தொத்தார்கள்: பின்னும் எதனை யொத்தார்களென்றால், கொடிய இராக்கத ரென்னும் பாவ (விருக்கத்தின் மேற்பாக)த்தை (அறுத்துத் தள்ளி, அடிப்பாகத்தை வெட்டி ஒழித்து) வேரோடழிக்க (விரும்பினார்க்கு)க் கல்வியும் ஞானமும் (ஆகிய இரம்பமும் கோடரியும்) கிடைத்ததையும் ஒத்தார்கள் (என்க).*

பரசுராமப் படலம் ௨௦-ம் கவியில் 'எண்ணிய பொருளெலாம் இனிது முற்றுக' என்பதிற்போல, இந்தக் கவியிலும் 'பொருள்' 'காரியம்' என்ற பொருள்பட நின்றது. ஈட்டல் - சம்பாதித்தல். வாளரக்கர் என்பதில் வாள் - கொடுமை; வாளரா என்பதிற் போல.

'கல்வியும் ஞானமும் கூடிய வழியே தீவினை யொழிதல் போலவும், ஊழ்வினையும் முயற்சியும் கூடிய வழியே ஒரு காரியம் முற்றுதல் போலவும், இவ்விருவரும் நண்பினராய்க் கூடியதனாலேயே ராக்ஷஸ ஸம்ஹாரம் நிறை வேறு மென்பதாம். உவமையணி'.—வை. மு. கோ. (எ)

சுக்கிரீவன் இராமனைச் சரணடைதல்.

[*அப்போது, சுக்கிரீவன், இராமனை நோக்கி, 'உன்னை அடையப்பெற்ற என்னினும் புண்ணியர் எவருமிலர். எனது நல்வினைப் பயன் சருவலோக நாயகனாகிய உன்னை அடையும்படி எனக்கு உதவியது. விதியே உதவும்போது, பெறுவதற் கரியது எது*

விருக்கிறது!' என்று, இதயமாரப் புகழ்ந்துரைத்தான். இராமன், 'நீ இந்த மலையி லிருக்கின்றாயென்று சவரியென்னுந் தவமுதியாள் சாற்றத் தெரிந்து, எங்கள் கவலை உன்னால் நீங்குமென்று இங்ஙனே வந்தோம்' என்றான். சுக்கிரீவன், 'என் தமையன் வாலி, என்னைக் கொல்லுதற்கு ஓங்கிய கையினனாய், யான் உலகெங்கும் ஓடியும் விடாது தொடரத் தப்பிப் பிழைத்து, இந்த மலையில் வந்து சேர்ந்தேன். அவன் இங்கு வந்தால் நாசமடைவானென்ற சாப முளதாதலால், இதுகாறும் உயிரோடிருக்கிறேன். உன்னைச் சரணடைந்தேன். என்னைக் காப்பாயாக' என்றான்.]

8. என்றவக் குரக்கு வேந்தை யிராமனு மிரங்கி நோக்கி
உன்றனக் குரிய வின்ப துன்பங்க ளுள்ள முன்னாள்
சென்றன போக மேல்வந் துறுவன தீர்ப்ப லன்ன
நின்றன வெனக்கு நிற்கு நேரென மொழியு நேரா

9. மற்றினி யுரைப்ப தென்னே வானிடை மண்ணி லுன்னைச்
செற்றவ ரென்னைச் செற்றார் தீயரே யெனினு முன்னோ
டுற்றவ ரெனக்கு முற்றா ருன்கிளை யெனதென் காதல்
சுற்றமுன் சுற்ற நீயென் னின்னுயிர்த் துணைவ னென்றான்

கொண்டுகூட்டு: ('என்னைக் கா') என்ற அக் குரங்கு வேந்தை இராமன் இரங்கி நோக்கி,'உனக்குரிய இன்ப துன்பங்களுள்ளவை க(ளுள்ளே) முன் நாள் சென்றன போக; மேல் வந்து உறுவன தீர்ப்பல்; அன்ன நின்றன எனக்கும் நிற்கும் நேர்.' என மொழிநேரா,

'இனி மற்று உரைப்பது என்? வானிடை மண்ணில் உன்னைச் செற்றவர் என்னைச் செற்றார்; உன்னோடு உற்றவர் தீயரே எனினும் எனக்கும் உற்றார்: உன் கிளை எனது; என் காதல் சுற்றம் உன் சுற்றம்: நீ என் இன்உயிர்த் துணைவன்' என்றான்.

பொருள்: 'என்னைக் காப்பாயாக' என்று சொன்ன சுக்கிரீவனை இராமன், மனம் இரங்கிக் கருணையோடு நோக்கி, 'உனக்குரிய இன்ப துன்பங்களுள் இதற்கு முன் நீ அனுபவித்துக் கழிந்தவை போகுக; இனிமேல் வரும் துன்பங்களை நீக்குவேன்; அவைகள் (தம்முள், ஒருகால், எவைகளேனும் நீக்கப்படாமல் எஞ்சிநின்றால் அப்படி) நின்ற துன்பங்கள் எனக்கும் உனக்கும் சமம். (அவற்றை நான் உன்னோடு பாதிபாதியாகப் பகுந்தனுபவிப்பேன்)' என்று

வாக்குத்தத்தம் அளித்து, (அதனை வலியுறுத்துவானாய்,) 'இனி வேறு கூறுவானேன்? விண்ணிலாயினும் மண்ணிலாயினும் வேறெங்காயினும் உன்னை வருத்திநோர் என்னை வருத்திநோராவர்; உன்னோடு இட்டராகச் சேர்ந்தோர் துட்டரேயாயினும் எனக்கும் இட்டராவர்: உன் உறவினர் என் உறவினராவர்; என் பந்துக்கள் உன் பந்துக்களாவர்: நீ என் பிராண சிநேகிதனாவாய்' என்றான்.

குரங்கு வேந்து குரக்கு வேந்து என வலித்தல் செய்யுள்விகாரம். இராமனும் என்பதில் உள்ள உம்மை, பொருள் குறியாத இசைநிறை. போக - போகுக: வியங்கோள் வினைமுற்று: செய்ய என்னும் வாய்பாட்டு வினையெச்சமாகக் கொண்டு பொருள்கூறுவாரு முளர். நேரா - கொடுத்து. செறுதல் - வருத்துதல். 'செலினஞ்சிற் செறிற் சாம்பும்' (கலித். 78)—நூ. அ.

'நின்றன(வான துன்பங்கள்) எனக்கும் நிற்கும் நேர் (- சமம் - எனக்குப் பாதி உனக்குப் பாதி)' என்றது, 'துன்பம் அரையாம் துணைவரது கூட்டத்தால் - இன்பம் இரட்டியா மே' * என்ற கருத்துள்ள ஆங்கிலப் பழமொழியை நினைவுறுத்துகின்றது.

இராமன் செய்த சிநேக வாக்குத்தத்தத்தில் 'தீயரேயெனினும் உன்னோடுற்றவர் எனக்கும் உற்றார்' என்ற பகுதி, விவாதத்துக் கிடமானதாகத் தோன்றுகின்றது. 'உற்றவர்'க்கு முன் வரும் 'செற்றவ'ரையும் பின்வரும் 'கிளை'யையும் சுக்கிரீவனது செற்றவர் (- வருத்துபவர்) ஆகவும், கிளை (- சுற்றத்தார்) ஆகவும் விரும்பி ஆக்கிக்கொள்ளவில்லை. அவர்கள், அவன் விருப்பத்தாலல்லாமற் செற்றவரும் கிளையும் ஆனவர். அவ்வாறன்றி, 'உற்றவர்' (-சிநேகிதர்) அவன் விருப்பத்தால் உற்றவராக்கிக்கொள்ளப்பட்டு அவனுக்கு உற்றவராயுள்ளவர். இராமன் அவனை நண்பனாக ஆக்கியது போல ஆக்காதிருத்தலுமாமே யன்றி, ஆக்கியபின் 'நட்டபின் வீடில்லை † நட்பாள்பவர்க்கு' ‡ என்பதனால் விலக்குதல் அறமாகாது. அதே நியாயத்தால் சுக்கிரீவனும் அவனால் நண்பினராக்கப்பட்டாரை விலக்குதல் கூடாமை தெளிவாம். அவன் ஆராய்ந்து துணிந்து தக்காரையே நண்பராகக் கொண்டிருப்பான். அப்படிக் கொளப்பட்ட நண்பினர், ஒருகால், தீயராயிருந்தாலும், அதனைத் தெய்வத்தால் வந்த கேடுபோலக் கருதி, அவரைத் தான் விலக்காமை சிநேக தருமமென்பது குறிக்கத் 'தீயரே யெனினும் உன்னோ டுற்றவர் எனக்கும் உற்றார்' என்று னெனலாம். இந்த உலகத்தில் தீமை கலவாத சுத்த நன்மையுமில்லை, நன்மை கலவாத சுத்தத் தீமையுமில்லை யென்றும்,

---

* அகலிகை வெண்பா.   † வீடு - விடுதல்.   ‡ குறள் 791.

குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்

என்றவாறு நன்மைமிக்காரை நல்லவரென்றும் தீமைமிக்காரைத் தீயவரென்றும் கொள்வது அறிவுடைமை யென்றும், சுக்கிரீவனும் அவனைச் சேர்ந்தவர்களும் மொத்தத்தில் நல்லவரென்று கருதிச் சுக்கிரீவனுடன் சினேகஞ்செய்த இராமன், சுக்கிரீவனோடு சேர்ந்தவர்களுள் நல்லோர் பெரும்பான்மையராகவும் தீயோர் சிறுபான்மையராகவும் இருப்பரென்றும், அவர்களுள் நல்லோரை மட்டுங் கொள்ளலும் தீயோரைத் தள்ளலும் செய்யாமல் எல்லோரையும் கொள்ளல் தகுதி யென்றும், மனத்துட்கொண்டு, 'தீயரே யெனினும் உன்னோ டுற்றவர் எனக்கும் உற்றார்' என்றா னெனலுமாம். தன் மனைவி சீதையைப் பகையரசன் கவர்ந்து மறைத்து வைத்திருக்கு மிடத்தைக் கண்டுபிடித்து அவனை வென்று அவளை மீட்பதற்கு உதவியாக இராசதந்திர முறையிற் சுக்கிரீவனைச் சினேகிதனாகக்கொண்ட இராமன் அவ் விராசதந்திர முறைப்படியே, 'தீயரே யெனினும் உன்னோ டுற்றவர் எனக்கும் உற்றார்' என்றா னெனலுமாம்.

சுக்கிரீவன் 'மாற்றானெனத் தம்முனைக் கொல்லிய வந்து நின்றான் — வேற்றார்கள் திறத்திவன் தஞ்சம் என் வீர' * என்ற இலக்குமணன் வினாவுக்கு விடையாக, இராமன், 'பெற்றாருழைப் பெற்ற பயன்பெறும் பெற்றியல்லால் — அற்றார்நவை யென்றலுக் காருநர் ஆர்கொல்' என்றான் † என்பதனால் மேலே கூறிப்போந்தவை பொருத்தமானவை யென்பது போதரும்.

இராம சுக்கிரீவர் நட்பு, பரஸ்பர காரியோத்தேசமானதாய்ப் பயன் கருதியதாதலால், காமிய சினேகமாகவும், இராம குகர் நட்பு நிஷ்காமிய சினேகமாகவும் இருத்தல், இராமன் சுக்கிரீவனுக்குச் சொன்ன இந்த இரண்டு பாட்டுடன் அவன் குகனுக்குக் கூறிய,

'என்னுயி ரனையாய்நீ இளவல்உன் இளையான்இந்
நன்னுதல் அவள்நின்கேள் நளிர்கடல் நிலமெல்லாம்
உன்னுடை யதுநான்உன் தொழில்உரி மையினுள்ளேன்' ‡

என்ற பாட்டுப்பகுதியை ஒப்பிட்டுப் பார்ப்பதனால் அறியலாம். (அ, கூ.)

வாலி சுக்கிரீவர் பகைமை வரலாறு

[இராமன் சுக்கிரீவனுக்குச் சினேக வாக்களித்ததைத் தெரிந்து, இராமவாக்கு, ஏகவாக்கு, வேதவாக்கினும் மெய்ம்மை மிக்கது என்று வானரசேனை குதுகலித்து ஆரவாரஞ் செய்தது.

* வாலி வதைப் படலம் கக. † வாலி வதைப் படலம் கடு.
‡ க. ரா. சா. அயோத்தியா காண்டம், பாட்டு 96.

அனுமான், ஆனந்த பரவசனு யெழுந்து, அஞ்சலியத்தனாய் நின்று, 'வாழி! மன்னவர் மன்னவ! நீயும் நின் தோழனும் வாழி! நீங்கள் இருவீரும் உங்கள் மாளிகையில் இனிது வீற்றிருத்தலை யாங்க ளெல்லாரும் கண்டு களிக்கவேண்டும். திருவுள்ளம் யாதோ?' என, இராமன், நல்லதென்று இலக்குமணனோடும் சுக்கிரீவனோடும் சென்று, சந்தனம் அகில் முதலிய தருக்கள் நெருக்கமாக உற, இடையிடையே பளிங்குப் பாறைகள் விளங்கப்பெற்ற சோலை நடுவேயுள்ள சுக்கிரீவன் வாசஸ்தலத்திலே அவனோடு சல்லா பித்து அளவளாவி இனிது வீற்றிருந்தான்.

பின்பு, இராமன், விருந்தருந்த இருந்தபோது, துணைவியோ டன்றித் தனியே உபசரிக்கும் சுக்கிரீவனை நோக்கி, 'நீயும் மனைவி யைப் பிரிந்திருக்கின்றாயோ?' என வினவினான். அப்போது அனுமான், அவ்வினாவுக்கு அவன் விடை அளிப்பது அனுசித மென்பதுணர்ந்து எழுந்து, அஞ்சலியத்தனாய் நின்று கூறுவான்: 'உத்தமநீதியாய்! உனக்கு உரைப்பது ஒன்று உண்டு. உற்றுக் கேட்டருள். வாலி மகாபலசாலி. கயிலாயபதியின் கருணைத் துறையில் முழுகித் திளைப்பவன். தானவர் பெருங்கூட்டமும் வானவர் பெருங்கூட்டமும் தனித்தனியாகவும் ஒன்றுசேர்ந்தும் முயன்று பார்த்து முடியாதெனக் கைவிட்ட அமுதமதனத்தைத் தானொருவனே தனியாகச் செய்துமுடித்த திறமையுடையவன். தன்னை எதிர்த்தார் பலத்திற் சரிபாதி தன்னை அடையத் தைவிக* வரம் பெற்றவன். காற்றினும் கடுவேக முடையவன். அவன் மார்பில் அறுமுகன் வேல் செல்லாது. அவன் வால் செல்லாத இடத்தேதான் இராவணன் கோல் செல்லும். ஏனெனில், அவன் சிவபூசை செய்துகொண்டிருந்தபோது கரவாகப் பின்புறத்தே சென்று பற்ற முயன்ற இராவணனை எளிதாகப் பிடித்து வாலிற் கட்டி இலகுவாகத் தூக்கிக்கொண்டு எங்குஞ் சஞ்சரித்த காலத்தில், வாலி வால் செல்லாத இடமுமில்லை; இராவணன் இரத்தம் சிந் தாத இடமுமில்லை. ஆதிசேடன் கிடந்து தாங்கும் பூமியை அவன் நடந்து தாங்கும் ஆற்றலான்.

'அந்த வாலி எங்கள் அரசனாக, இந்தச் சுக்கிரீவன் இளவரசாக இருந்த காலத்தில், இவர்களுடைய குலப்பகைஞனான மாயாவி

---

* தைவிக - தெய்வீக.

யென்ற அசுரன் வந்து வாலியோடு போர்புரிந்து வாலி தாக்குத லுக்கு ஆற்றாது தோற்றோடிப் பாதாளத்துள்ளே புகுந்தான். அப்போது வாலி சுக்கிரீவனைப் பிலத்துவாரத்தில் நிறுத்தி, "அவ னைப் பிடித்துவருவேன். நீ சிறிதுபோது இங்கே காத்திரு" என்று சொல்லிவிட்டு உள்ளே போனான். போனவன் நெடுங் காலம் திரும்பாமையால், கலங்கிக் கண்ணீர் சொரிந்துகொண் டிருந்த இவனை நோக்கி, மந்திரிமார் முதலியோர், "உன் தமையன் இறந்தமையால் அரசுபுரிதல் உனது கடமை" என, "அது தவறு. யான் உள்ளே சென்று அவனைத் தேடிக் கண்டு கூட்டிவருவேன். அவன் கொல்லப்பட்டிருந்தால், கொன்றவனைக் கொன்று வரு வேன். கொல்ல முடியாவிட்டால், இறந்துவிடுவேன்" என, "எங்களை நீ காவாயாயின், யார் காப்பார்? நீ காக்கக் கடவை" என்று வற்புறுத்தி அரசாட்சியை இவனிடம் அவர்கள் கொடுத்த துண்டு. இவன் (மனசோடு) கொண்டதில்லை.

'இவன் காத்திருந்த பிலத்துவார வழியே மாயாவி வந்து விடாமல் தடுக்க மலைகளை அடுக்கி அடைத்துவிட்டு, இவனைக் கூட்டிவந்து, இறைமை வகிக்கச் செய்து எங்கள் மலையில் யாங்கள் இருக்கையில், வாலி மாயாவியை மடித்துப் பாதாள வாயிலை அடுத்துத் தம்பியை விளித்துப் பிரதியுத்தரம் பெறாமையால், "தம்பி காத்த தன்மை நன்றாயிருந்தது!" என்று எண்ணி, அடுக் கிய மலைகளை உதைக்க, அவைகள் நெடுந்தொலை பறந்தொழிந்தன. அவன் கோபத்தோடு எங்கள் மலைமேல் ஏறிவர, இவன் எதிர் கொண்டு சென்று அடி பணிந்து நின்று, "மந்திரிகள் முதலியோர் வற்புறுத்தலை மறுக்கமாட்டாது, உன் காவலை யான் புரிந்தேன். என் பிழை பொறுத்து உன் காவலை ஒப்புக்கொள்" என்றதை ஏற்றுக்கொள்ளாமல், சீற்றம் மிகுந்து, இவனைத் தாக்குவானாகிக் கடல் கடைந்த கரதலங்களாற் குடல் கலங்க உடல் கடைந்திட, இவன் உலைந்து, இனி நின்றிடில் உயிர் சென்றிடுமென்று உலக முடிவுவரையும் விரைந்தோடியும், அவன் தொடர்ந்தோடிப் பற்றி மாய்க்கப் புக்கபோது, அற்றம் வாய்க்கப்பெற்றுத் தப்பிப் பிழைத்து, அவன் வராமல் தடுக்கும் சாபக் காப்புடைய இந்த மலையில் வந்து தங்கி யிறவாதிருக்கின்றான்.
]

10. உரிமை யென்றிவற் குரிய தாரமாம்
அருமரு ருந்தையு மவன்வி ரும்பினான்
இருமை யுந்துறந் திவனி ருந்தனன்
கரும மிங்கிதே கடவு ளேன்றனன்

கொண்டுகூட்டு : 'கடவுள்! உரிமை என்று, இவற்கு உரிய தாரம் ஆகும் அருமருந்தையும் அவன் விரும்பினான். இருமையும் துறந்து, இவன் இருந்தனன். இங்கு கருமம் இதே' என்றனன்.

பொருள் : 'சுவாமீ! (வாலி, சுக்கிரீவனுடைய செல்வத்தைக் கவர்ந்ததோடமையாமல், பொதுவாக உடையவனுக்கும் அவன் உறவினர் முதலியோர்க்கும் உரிமையாம் செல்வம்போலன்றிச் சிறப்பாக உடையவனொருவனுக்கே உரிமையாதல்பற்றி) உரிமை யென்று பெயர் வழங்கப்பெற்று, இவனுக்கு உரிமையாயுள்ள மனையாளாகிய ஆரமுதம் போல்பவளையும் அவன் காதலித்துக் கவர்ந்தான். செல்வமும் மனைவியும் ஆகிய பொருள்கள் இரண்டையும் ஒருசேர இழந்து, இவன் துன்பம் மிகுந்தவனாய் இருக்கின்றான். இந் நாட்டில் இவன் விஷயமாக நடந்த செய்தி இதுவே'.

உரிமை - மனைவி. இவற்கு - இவனுக்கு. தாரம் - மனைவி. மருந்து - அமிர்தம். 'விரும்பினான் - காரியம் காரணமாக உபசரிக்கப்பட்டது.' இருமை - இரண்டு. * துறத்தல் - நீங்குதல். கருமம், காரியம், செய்தி, வரலாறு, சங்கதி என்பன ஒருபொருள் குறிப்பன. கடவுள், அண்மைவிளி; பெரியாரை மரியாதையாகச் 'சுவாமி' யென விளித்தலை உணர்த்தி நின்றது. உருமை யென்ற பாடங் கொண்டால் ருமை சுக்கிரீவன் மனைவியின் பெயர். 'ரோமம்' உரோமம் எனப்படல்போல, 'ருமை' உருமை யெனப்பட்டது.

கங்கைப் படலம் ரு அ-ம் கவியில், குகன் இலக்குமணனை நோக்கிச் 'சுவாமியே' என்ற மரியாதை விளிப் பொருள்படத் 'தேவா' என்றது போல, இங்கே அனுமான் இராமனை நோக்கிக் 'கடவுள்' என்றான்.

அருமருந்தையும் என்பதில் உள்ள உம்மை, ஒரு பொருளுங் குறியாது ஓசை நிரப்புவதாகக் கொண்டால், இசைநிறையாம்; மனைவியின் சிறப்பை யுணர்த்துவதாகக் கொண்டால், உயர்வு சிறப்பும்மையாம்; 'செல்வத்தைக் கவர்ந்ததல்லாமல்' என்பதை வருவித்தால், இறந்தது தழீஇய எச்சவும்மையாம்.

* குறள் உக உரை.

வாலிக்குச் சுக்கிரீவன் தம்பியாயினும் குடியென்பதனாலும், குடிகளின் உடைமைகள் அரசன் உடைமைக ளென்பதனாலும், இவன் செல்வத்தை அவன் கைப்பற்றினா னென்ற போலி நியாயம் ஒருபுற மிருக்க, அவன் பாதாளத்துள்ளிருந்த தன்னை வெளியே வரவொட்டாமற் கனத்த மலைகளாற் பிலத்துவாரத்தை அடைத்துத் தன் இராச்சியத்தை இவன் தீய கருத்துடன் கைக்கொண்டா னென்று எண்ணியது உண்மைக்கு மாறாயினும், அவ் வெண்ணங் காரணமாக அவன் இவன் செல்வத்தைப் பறித்துக்கொண்டத னால், அச் செய்கை அவன் மனமறியச் செய்த அநியாயமாகா தெனினும், அவன் இவன் மனைவியை வௌவியது அநியாய மாகாதுபோகா தென்பதனை வற்புறுத்த, அவன் இவன் பத்தினியை அபகரித்தா னென்று வெறுமனே * கூறாமல், 'உரிமை யென்றிவற் குரிய' என்ற விசேடணத்தோடு கூடிய தாரத்தைக் கவர்ந்தா னென்றான்.

அவ்விசேடண விளக்கம் வருமாறு :— ஓர் அரசனுடைய குடிகளின் பொருள்கள், அவனுடைய பொருள்களென, உண்மையாகவோ உபசார மாகவோ உரைப்பதுண்டு. ஆயினும், அப்பொருள்களுள்ளே, ஒரேஒரு பொருள்மட்டும், உபசாரமாகவும் அவனுடைய பொருளாகாமல், அவ் வொரு பொருளையுடையா னொருவனுக்கே உரிமையாம் ஒழிபு விதிபற்றி 'உரிமை'† யென்று கூறப்படுதல் மரபு. அவ் வொருபொருள் மனைவி யென்பது கூறா மலே விளங்கும். குறள் கஏக-ல் 'பிறன்மனை' 'பிறன்பொருள்' என்று கூறப்படுதல் காண்க.

'உருமை' என்ற பாடங்கொண்டாலும், 'உரியதாரம்' என்பதில் உள்ள உரிய என்பது மேலே விரித்துக் கூறிய விசேடவுரைக்கு இடந் தந்து நிற்றல் காண்க.

பாட பேதம் : உருமை. (கo)

[வாலி சுக்கிரீவர் வரலாறு கேட்டுக்கொண்டிருந்த இராமன், அவன் இவன் மனைவியைக் கவர்ந்தா னென்ற வார்த்தை காதில் வீழ்தலும் கடுஞ்சினங் கொண்டான்.]

வாலியின் செய்கைக்கு இராமன் சகியாமல் மனம் தபிந்தல்

11. ஈர நீங்கிய சிற்றவை சொற்றன ளென்ன
ஆரம் வீங்குதோட் டம்பிக்குத் தன்னர சுரிமைப்
பார மீந்தவன் பரிவில னொருவன்ற னிளையோன்
தாரம் வௌவின னென்றசொற் றரிக்குமா றுளதோ

* வெறுமனே - வாளா - சும்மா—பதிற்றுப்பத்து. † உரிமை - மனைவி.

கொண்டுகூட்டு : ஈரம் நீங்கிய சிற்றவை சொற்றனள் என்னத், தன் அரசு உரிமைப் பாரம், ஆரம் வீங்கு தோள் தம்பிக்கு ஈந்தவன், (தன்போலும் தமையன்) ஒருவன் பரிவிலன் (ஆகியும் அமையாமல்) தன் இளையோன் தாரம் வெளவினன் என்ற சொல் தரிக்குமாறு உளதோ !

பொருள் : ('உன் அரசை உன் தம்பிக்குக் கொடு' என்று தந்தை சொன்னானல்லாமல், தாய் சொன்னாளென்று மல்லாமல், சிறிய தாயருள்ளும் பாலைவனம் போல ஈரமில்லாத) அன்பற்ற சிறியதாய் சொன்னாளென்று, (சேட்டபுத்திர பரம்பரைப் பாத்தியமாய்த்) தனக்கே உரிமையான இராச்சியத்தைத் தன் தம்பி பரதனுக்கு மனங்களித்துக் கொடுத்த சகோதர வாஞ்சை மிக்க இராகவன், தன்போலும் தமையன் ஒருவன், அவன் தம்பிக்கு அன்பில்லா னைமையோ டமையாமல், கொடுமை செய்வானை வழியும், அறக்கொடிய செயலாக அவனுடைய தம்பி மனைவியை அபகரித்தா னென்ற வார்த்தையைக் கேட்டுச் சகித்திருக்குந் தன்மை அறவே இல்லையாகுமே யன்றி உள்ளதாகுமோ !

ஈரம் - அன்பு. சிற்றவை - சிறு அவ்வை - சிறிய தாய் (ஆன கைகேயி). ஆரம் - மாலை. வீங்குதல் - மிகுதல். ஆரம் வீங்குதோள் தம்பி - (பூமாலைகள் இரத்தின மாலைகள் ஆன) மாலைகள் மிகு(ந்தணி)ந்த தோளையுடைய தம்பியாகிய பரதன்). ஆரம், சந்தனக் குழம்புமாம். பரிவு - அன்பு.

மந்தரையின் துர்ப்போதனைக் குள்ளாகுமுன் அன்புடையாளா யிருந்த கைகேயி அப் போதனையால் அன்பு நீக்கினா ளென்பது குறிக்க 'ஈரம் இன்றிய சிற்றவை' யென்னாது, 'ஈரம் நீங்கிய சிற்றவை' யென்று ரென்னலாம். அவள் அன்பு நீங்குமுன் 'தம்பிக்கு அரசைக் கொடு' என்று சொல்லியிருந்தாலும் கொடுக்கக்கடவ தல்லாத அரசை அன்பு நீங்கியபின் 'கொடு' எனக் கொடுத்தது மிக்க பெருந்தகைமை யென்பது குறிப்பு.

பாட பேதம் : நீங்குதோ ளிளவற்கு மன்னரசு. (கக)

இராமன், 'வாலியைக் கொல்வேன்' என, சுக்கிரீவன் மகிழ்தல்

[இராமன், சுக்கிரீவனை நோக்கி, 'உலகத்து வீரரெல்லாரும் ஒருங்கு சேர்ந்து அவனுயிரைக் காப்பாராலும் அவர்களோடு அவனைக் கொன்று உன் மனைவியை இராச்சியத்தோடும் சேர்த்துத் தருவேன். அவனைக் கொல்ல அவன் இருக்குமிடத்தைக் காட்டு' என்று சொன்னான்.]

12. எழுந்து பேருவ கைக்கடற் பெருந்திரை யிரைப்ப
அழுந்து துன்பத்துக் கக்கரை கண்டன னனையான்
விழுந்த தேயினி வாலிதன் வலியேன விரும்பா
மொழிந்த வீரற்கியா மெண்ணுவ துண்டேன மொழிந்தான்

கொண்டுகூட்டு : *அனையான், பேர் உவகைக் கடல் பெருந்திரை எழுந்து இரைப்ப, அழுந்து துன்பத்துக்கு அக்கரை கண்டனன். 'இனி வாலி தன் வலி விழுந்ததே(யாம்)' என, விரும்பா மொழிந்த வீரற்கு 'யாம் எண்ணுவது (ஒன்று) உண்டு' என மொழிந்தான்.*

பொருள் : *சுக்கிரீவன், பேரானந்த சமுத்திரத்தின் பேரலைகள் எழுந்து ஒலிக்கா நிற்க, (அவ் வொலி காதில் விழக் கேட்டுக் களித்துக் கண்ணால் தான்) அழுந்திக் கிடந்த பெருந் துக்க சமுத்திரத்தின் கரையைக் கண்டான். கண்டு, இனி வாலியின் வலிமை அழிந்ததேயாம் என்றெண்ணி, 'வாலியைக் கொல்வே னென்று' வாக்களித்த இராமனை நோக்கி, 'யாங்கள் ஆலோசிக்க வேண்டுவது ஆகிய விஷயம் ஒன்று உளது' என்று சொன்னான்.*

இரைத்தல் - ஒலித்தல். 'அழுந்து' என முன்னும் 'அக்கரை' எனப் பின்னும் வரலால் 'துன்பம்' துன்பக்கடலை உணர்த்தியது. அனையான் - அவன் - சுக்கிரீவன். அக்கரை என்பதில் அகரம் தூரப்பொருளைச் சுட்டும் இடைச்சொல். விரும்பா - அன்புகூர்ந்து. வீரற்கியாம் என்பதில் இகரம் குற்றியலிகரம்.

சுக்கிரீவன் தன்னுடைய நாட்டையும் நாயகியையும் நீங்குமுன் இருந்த நிலை துக்கசாகரத்தின் இக்கரையாக, துன்புற்றிருந்த நிலை துக்க சாகரத்தில் அழுந்திய நிலையாக, இராமனால் துன்பம் நீங்கி இன்பம் எய்து மென்று தெரிந்த நிலை ஆனந்த சமுத்திர ஆரவாரம் காதில் வீழத் துக்க சாகரத்தின் அக்கரையைக் கண்ணாற் கண்ட நிலையாகத், துன்பக் கடலின் அக்கரையும் இன்பக் கடலின் இக்கரையும் ஒரே கரை அல்லது ஒன்றுக் கொன்று நெருங்கியவை யென்று கொள்ள, வெறுமனே 'கரை கண்டனன்' என்னாது 'அக்கரை கண்டனன்' என்றா ரென்னலாம்.

'விழுந்ததே இனி வாலிதன் வலி' என்றது, சுக்கிரீவன் மனத்தில் வாலி கொல்லப்பட்டுவிடுவா னென்ற நம்பிக்கை யுண்டானதைக் குறித்தது. விழப்போவதை விழுந்ததாகக் கூறியது, துணிபுபற்றி அல்லது தெளிவுபற்றி அல்லது இரண்டும்பற்றி எதிர்காலத்தை இறந்தகாலமாகக் கூறியதாமென்க.

அந்த நம்பிக்கை யுண்டானபின், வாலியைக் கொல்லும் வல்லமை இராமனுக்குள்ளதோ என்ற சந்தேகம் உண்டாக, அதனை வெளிப்படக் கூறுதல் அநாகரிகமும் அவமரியாதையு மாமென்றும், இராமனை விட்டு நீங்கி அனுமானோடியரோடு தனியேயிருந்து ஆலோசிக்கவேண்டு மென்றும், ஆலோசனையின் முடிவுக்கேற்ப 'வாலி யிருக்குமிடத்தைக் காட்டு' என்ற இராமன் மொழிக்கு எதிர்மொழி இயம்பவேண்டு மென்றும், மனத்துள் எண்ணியதைச் சாதுரியமாக வெளியிடுவானாய், 'யாம் எண்ணுவதுண்டு' என்று னென்றார். சிறு சிறு மொழிகளான மூன்றே மொழிகளால் மேற் கூறிய விரிந்த கருத்துக்கள் முழுதும் உய்த்துணரவைத்த கவி சாதுரியம் கவனிக்கத்தக்கது.

இக் கவியின் முன் னிரண்டடிகள் பெருவியப்பு விளைத்துப் பேரின் பம் பயக்கும் சிறந்த கருத்துக்கள் திகழ்பவை. சுக்கிரீவன், வாலி கொடு மையால் நாட்டினின்று துரத்துண்டு மனைவியைப் பறிகொடுத்து வருந்திப் பெருந்துன்பமுற்றுத் தன் துன்பத்துக்கு முடிவில்லையென்ற ஏக்கத்துட னிருக்கின்றான். அந் நிலையிலுள்ளவனுக்கு 'வாலியைக் கொன்று மனைவியை இராச்சியத்துடன் தருவேன்' என்று இராமன் வாக்களித்தத னால், முதலில் வாலி மாளுதலாகிய துன்ப நீக்கமும், அதனை அடுத்து மனைவி மீளுதலாகிய இன்பப் பேறும் எய்துதல் இனிய அலங்காரமாக விளங்கத், துன்பக்கடலுள் ஆழ்ந்து வருந்திக்கொண்டிருந்த சுக்கிரீவன் அதன் கரை யைக் காணும் அதிட்டமுற்றபோதே அதிட்டத்துக்குமே லதிட்டமாகத் துன்பக்கடற் கரையேறியவுடன் சந்தோடத்துடன் தாவி வீழும் இன்பக் கட லிரைதலைக் கேட்டா னென்றார். இது, பாலகாண்டத்தில், பரசுராமப் படலத்தில் பரசுராமன் இரகுராமனைக் கொன்றுவிடுவா னென்ற பயத்தால் மூர்ச்சித்த தசரதன் இரகுராமன் கொல்லப்பட்டானில்லை யென்றும், பரசு ராமன் வெல்லப்பட்டா னென்றுந் தெரிந்து, துன்பம் நீங்கியபோதே இன்ப மெய்தியதை வியப்பும் நயப்பும் பயக்கக் 'குளிர்ப்பரும் துயர்க்கடற் கோடு கண்டவன், களிப்பெனும் கரையிலாக் கடலுள் ஆழ்ந்தனன்' என்றதை நினைப்புறுத்துகின்றது. (கஉ)

இராமன் வல்லமையைச் சோதிக்க அனுமான் சுக்கிரீவனுக்குச் சொன்ன உபாயம்

[இராமனை நீங்கி அனுமானாதிய அமைச்சருடன் சென்று சுக்கிரீவன் ஒரு தனியிடத் திருந்தபோது, அவனை நோக்கி அனு மான், 'உன் உள்ளத்துள்ளே உள்ளதை ஊகித்துணர்ந்தேன். அது, இவ்வீரர் அவ்வாலியை வெல்ல வல்லரோ என்ற ஐயமே. அவ் வையம் நீங்க, யான் கூறுவேன்; கேள். இராமனுடைய

கையிலும் காலிலும் சங்க சக்கர ரேகைகள் உள்ளன. அவன் திருமேனியில் புருடோத்தமனுக்குரிய அங்க லக்கணங்கள் அனைத்தும் அமைந்துள்ளன. சீதையின் பொருட்டு அரன் வில்லை முறித்த அரிய செயல் திருமாலா லாவதன்றி எவராலாகும்! தரைமீதே தருமத்தை நிலைநிறுத்த அவதரித்த திருமாலே இராமன். சிவதநுசை ஒடித்தது செவியுற்றதே யன்றிக் கண்ணுற்றதில்லை. அவன் வல்லமையை நேராகக் கண்கொண்டு கண்டு தெளியக் கருதுவாயேல், அதற்கோருபாய முளது. அது சமீபத்திலே உள்ள ஏழு மராமரங்களில் ஒன்றில் அவன் அம்பு உருவுவதாம்' என்றான். அது கேட்டுச் சுக்கிரீவன், 'இது, சந்தேகம் நீங்குதற்குத் தக்க உபாயம்' என்று உவப்போடுரைத்து, இராமனை அணுகி, 'யான் தெரிவித்துக்கொள்ளும் செய்தி யொன்றுளது' என, அவன் 'சொல்லுக' என்றான்.]

சுக்கிரீவன் இராமனை மராமரத்தை எய்ய வேண்டல்

13. ஏக வேண்டுமிந் நெறியென வினிதுகொண் டேகி
மாக நீண்டன குறுகிட நிமிர்ந்தன மரங்கள்
ஆக வைந்தினோ டிரண்டினோன் றுருவநின் னம்பு
போக வேயென்றன் மனத்திடர் போமெனப் புகன்றான்

கொண்டுகூட்டு: 'இந்நெறி ஏகவேண்டும்' என (அவர்களை) இனிது கொண்டு ஏகி, நீண்டன (ஆன) மாகம் குறுகிட நிமிர்ந்தன (ஆன) மரங்கள் ஐந்தினோடு இரண்டு ஆக, ஒன்றை நின் அம்பு உருவப் போகவே என் மனத்து இடர் போகும்' எனப் புகன்றான்.

பொருள்: (சுக்கிரீவன், அனுமான் குறிப்பித்த ஏழு மரங்களிருக்குமிடத்துக்கு ஏகும் வழியை இராம லக்குமணர்க்குக் கைந் நீட்டிக் காட்டி), 'இந்த வழியே ஏகவேண்டும்' என்று விநயமாகக்*கூறி, அவர்களை இனிதாக அழைத்துக்கொண்டு போய், '(மேலும் கீழும் பக்கங்களும்) நீண்டனவான பத்துத் திக்குக்களும் குறுகியனவாம்படி (உச்சி மேல் நோக்கியும், வேர் கீழ் நோக்கியும், கிளைகள் பக்கங்க ளெல்லாவற்றையும் நோக்கியும்) நீண்டு வளர்ந்தனவான மரா மரங்கள் ஏழுள் ஒன்றை உன் அம்பு உருவிப் போகவே, என் மனத்துன்பம் ஒருவிப்†போகும்' என்றான்.

---

* விநயம் - மரியாதை; புத்தி நுட்பம். † ஒருவி - நீங்கி.

. நெறி - வழி. மாகம் - திக்கு: 'மாகம் நீள் விசும்பிடை' சிந்தா. 569. நிமிர்தல் - நீளல்—த. அ. - நீண்டு வளர்தல். ஆக - ஆகத்தொகை - மொத்தமாய்—த. அ. ஐந்திேனாடு இரண்டு - ஏழு. இடர் - துன்பம். 'உருவ' எச்சத்திரிபாய் 'உருவி' எனப் பொருள்கொள நின்றது. 'உருவ' என்பதற்கு உருவும்படி என்றும் பொருள் கூறலாம்.

இந் நெறி ஏகவேண்டும் எனவும், நீண்டன (ஆன) மாகம் குறுகிட நிமிர்ந்தன (ஆன) மரங்கள் எனவும், நின் அம்பு உருவ எனவும் இயைத்துப் பொருள்கொள்ளப்பட்டிருப்பது காண்க.

'மாகம் நீண்டன குறுகிட நிமிர்ந்தன மரங்கள் ஆக ஐந்திேனாடிரண்டின் ஒன் றுருவ' என்பதற்குப் 'பெரிய ஆகாயத்தை அளாவி உயர்ந்தவையும் (அவ் வாகாயமும்) சிறியதாம்படி பரந்து வளர்ந்தவையுமாகிய மராமரங்கள் ஏழிலும் ஒருங்கு துளைக்கும்படி' என்பது முந்திய உரை. 'மாகம்' என்பது அவ்வுரையில் ஆகாய மென்றும் இவ்வுரையில் திசைக ளென்றும் பொருள் கூறப்பட்டிருத்தல் கவனிக்கத்தக்கது. 'ஒன் று' என்பதற்கு அந்த உரையில் ஒருங்கு என்ற அரும்பொருளும் இந்த உரையில் ஒன்று என்ற செம்பொருளும், கொள்ளப்பட்டிருத்தலும் குறித்தற்குரியது.

முந்திய உரைப்படி ஏழு மரங்களையும் உருவ அம்பெய்யும்படி சுக்கிரீவன் இராமனை வேண்டினவனா யிருந்தால், ஏழு மரங்களும் துளைபட்டபோது, அவனுக்கு உண்டாம் வியப்பினும், இந்த உரைப்படி ஒன்றை உருவ எய்யும்படி வேண்டினவனா யிருந்தால் உண்டாம் வியப்பு மிகப் பெரியதா யிருக்கு மென்பது கூறாமலே விளங்கும்.

வான்மீகத்தில் சுக்கிரீவன் இராமனை நோக்கி, 'நீர் இவ்வாச்சா மரங்களி* லொன்றைத் துளைப்பீராகில் உம்முடைய பலம் இவ்வளவென்பதை நான் அறிந்துகொள்வேன்' என்று கூறியதாகக் கூறியிருத்தல் காண்க.†

(கரு)

இராமன் மராமரங்களி னருகே எய்துதல்

[மேற்கூறியவாறு கூறிய சுக்கிரீவனது உட்கருத்தை இராமன் தெரிந்து, சிறுநகைசெய்து, எய்யச் சித்தமாக வில்லை நாணேற்றி, அந்த மரங்களின் அருகே போய்ச் சேர்ந்தான்.]

* ஆச்சாமரம் - மராமரம்.

† வான்மீகி ராமாயண வசனம், கிஷ்கிந்தா காண்டம் 11-ம் சருக்கம். —பண்டித நடேச சாஸ்திரியார்.

4. மராமரப் படலம்

[இராமன் எய்து துளைத்த ஏழு மராமரங்களைப்பற்றிக் கூறுவது] *

மராமர வருணனை

14. ஊழி பேரினும் பேர்வில வுலகங்க ளுலைந்து
தாழுங் காலத்துந் தாழ்வில தயங்குபே ரிருள்சூழ்
ஆழி மாநிலந் தாங்கிய வரும்பெருங் கிரிகள்
ஏழு மாண்டுசென் றொருவழி நின்றெனை வியைந்த

கொண்டுகூட்டு: (*மராமரங்கள்*) *ஊழி பேரினும்* (*தம் நிலை*) *பேர் வில; உலகங்கள் உலைந்து தாழுங் காலத்தும் தாழ்வில; தயங்கு பேர் இருள் சூழ் ஆழி மா நிலம் தாங்கிய அரும் பெரும் ஏழ் கிரிகளும் ஆண்டு சென்று, ஒரு வழி நின்றென, இயைந்த.*

பொருள்: (*இராமன் அணுகிய ஏழு மராமரங்கள், ஒரு கற்பம் கழிதலும் மறு கற்பம் வருதலுமாகக்*) *கற்பங்கள் மாறி, மற்றெல்லாப் பொருள்களும் நிலைமாறினாலும், தம் நிலை மாறுதலில்லாதவைகள்; கற்பமுடிவிற் கடல் கரை கடந்து பெருகுதலால் உலகம் நிலை குலைந்து கடல் நீருள் முழுகித் தாழுங் காலத்திலும் முழுகாமல் அந் நீர்க்கு மேற்பட்டு நின்று தாழ்தலில்லாதவைகள்; அரிய பெரிய ஏழு குலபருவதங்களும், தாம் நின்ற இடங்களை விட்டு அவ்விடத்தில் வந்து, ஒருசேர நின்றாற் போல, உயரமும் பருமையும் மிகவும் அதிகமாகப் பொருந்தியன.*

ஊழி - கற்பம். உலகங்கள் என்பதில் கள் அசை. உலகம் - (வருணிக்கப்படாநின்ற மராமரங்கள் நிற்கும்) பூமி. தயங்குதல் - திகைத்தல். ஆழி - சக்கரம்; ஆகுபெயராய்ச் சக்கரவாளகிரியை யுணர்த்தி நின்றது. மா நிலம் - பெரிய பூமி. தயங்கு பேர் இருள்சூழ் ஆழி மா நிலம் - திகைக்கும்படியான மிகுந்த இருள் சூழ்ந்த சக்கரவாள பருவதம் (சுற்றெல்லையாகச்) சூழ்ந்த பெரிய பூமி. ' "பேரிருள்" என்றது சக்கரவாள பருவதந்துக்கு அப்பாலுள்ள காடாந்தகாரத்தை.' ஏழு கிரிகள் சத்தகுல பருவதங்களெனப்படுவன. அவை கைலை, இமயம், மந்தரம், விந்தம், நிடதம், ஏமகூடம், கந்தமாதநம் என்பன. ஆண்டு - அவ்விடம் - அம் மரங்கள் உள்ள

---

* ஆச்சாமரம், சாலமரம், மராமரம் என்பவை ஒருபொருள் குறித்தவை.

வனம். ஒருவழி - (அவ்வனத்தில்) ஒரு (குறித்த) இடத்தில். மலைக்குப் பூதரம் (பூ - பூமி; தரம் - தாங்கல்) என்ற பெயருண்மையை 'நிலம் தாங்கிய கிரி' என்றது நினைவுறுத்துகின்றது.

'பேர்வில' என்பதற்கு 'இடம் விட்டுப் பெயர்தல் இல்லாதவை' என்பதும், 'உலைந்து தாழுங் காலத்துந் தாழ்வில' என்பதற்கு 'அழிந்துபோகுங் காலத்திலும் விழுதல் இல்லாதவை' என்பதும் முந்திய உரை.—**வை.மு.கோ.**

இந்தக் கவியும் இதனை அடுத்து வருங் கவிகளும், இராமன் வல்லமையை மேம்படுத்தற்கு அவன் எய்து துளைத்த ஏழு மரங்கள் சாலப் பெரியவையும் வலியவையுமானவை யென்று கூறுவனவாய், உயர்வுநவிற்சியாயுள்ளவை. **தன்மைநவிற்சியணியின்** சார்பினராய் **உயர்வுநவிற்சியணியை** வெறுப்பார் மிகப் பலருளராய இக் காலத்திற் கவனிக்க வேண்டியதொன்றுண்டு. அது, களிப்பு விளைக்கும் கவி சாதுரியத்தோடு கூடியது தன்மைநவிற்சியாயினும் உயர்வுநவிற்சியாயினும் ஏற்றுப் போற்றுதற்குரியது; அச் சாதுரிய மில்லாதது எதுவாயினும் புறக்கணித்தற்பால தென்பது.

இக் கவிகளிற்போல அபரிமித அதிசயமும் ஆனந்தமும் விளைய விருக்கங்கள் விதந்துரைக்கப்பெற்றமை வேறு தமிழ்நூலெதனிலேனும் பிறமொழி நூலெதனிலேனும் உளதோ வென்பது சந்தேகம்.

கவி, இராமன் எய்தற்கு எய்திய ஏழு மராமரங்களுக்கும் ஏற்ற உவமை மலைகளேயாமென மனத்துட் கருதினார். கருதியவர் ஏழென்னும் எண்ணையுடைய அம் மரங்கள்போல, அவ்வெண்ணுடைய மலைகளிருந்தால், அவை உவமித்தற்குச் சிறப்பாயிருக்குமென்று சிந்தித்தார். சிந்தித்தவர், சத்தகுல பருவதங்கள் ஞாபகத்துக்குவர, அவைகளை அம் மரங்களுக்கு உவமையாக உரைக்க உன்னினார். உன்னியவர், ஏழு மரங்கள் ஓரிடத்திருக்க, ஏழு குல மலைகள் வெவ்வேறிடத்திருக்கும் பொருத்தக் குறைவு புலப்பட, அக் குறையை நிரப்புவாராய், இல்பொருளுவமையாக, அந்தச் சத்தகுலாசலங்கள் தாம் நின்ற இடங்களி னின்று பெயர்ந்துசென்று ஓரிடத் துற்றன போன்றன வென்றார்.

மரங்களுக்கு மலைகளை ஒப்பாக உரைத்தவர், மலைகளின் அடிப்பாகம் பாறையாயிருப்பது மரங்களின் அடிப்பாகத்துக்கும், பைஞ்சோலைகளையுடைய மலைகளின் மேற்பாகம் பச்சிலைக் கிளைக ளடர்ந்த மரங்களின் மேற்பாகத்துக்கும், ஒத்திருக்கும் காட்சி உளக்கண்ணெதிரே உதயமாக, அதனைக் கற்பனைசக்தியாற் புனைந்துரைப்பாராய் அடுத்த கவி கூறுகின்றார்.

பாட பேதம்: பேர்வினும்: தயங்குபே ரருளால்: குல கிரிகள்: நின்றென வியந்தான். (கச)

15. கலைகோண் டோங்கிய மதியமுங் கதிரவன் றனும்
தலைகண் டோடுதற் கருந்தவந் தொடங்குறுஞ் சாரல்
மலைகண் டோமென்ப தல்லது மலர்மிசை யயற்கும்
இலைகண் டோமெனத் தெரிப்பருந் தரத்தன வேழும்

கொண்டுகூட்டு: (அவை) ஏழும், 'கலைகொண்டு ஓங்கிய மதியமும் கதிரவனும் (தன்) தலை கண்டு ஓடுதற்கு அருந்தவம் தொடங்குறும் சாரல் (ஒரு) மலை கண்டோம்' என்பது அல்லது, 'இலை(யுடைய மரம்) கண்டோம்' என, மலர்மிசை அயற்கும் தெரிப்பு அரும் தரத்தன.

பொருள்: *அந்த மரங்கள் ஏழும், 'சந்திரனும் சூரியனும் தனது* உச்சியைக் கண்டு செல்லுதற்குத் தவம் செய்யத் தொடங்கும் அடிவாரத்தையுடைய ஒரு மலையைப் பார்த்தோம்' என்று சொல்லுவதே யல்லாமல், 'இலையை யுடைய மரத்தைப் பார்த்தோம்' என்று பிரமதேவனும் சொல்லுதல் கூடாத உயர்வுடையனவாக ஒவ்வொன்றும் உள்ளன.*

சாரல் - மலையடிவாரம். அயன் - பிரமன். தெரிப்பரும் என்பதில் அருமை கூடாமையைக் குறித்தது. தரம் - உயர்வு.—இ. அ. தரம், தன்மை யென்பது முந்திய உரை.

பிரமதேவன், இராமன் எய்யக் கருதிய ஏழு மராமரங்களுள் ஒன்றைப் பார்ப்பானானால், அவன் அதன் அடிப்பகுதியை மட்டும் காணமுடியும். கண்டு, அந்த அடிப்பாகத்தை மலையென்று மயங்குவான். மயங்கி, அந்த மலை சந்திர சூரியர் செல்லும் வானவீதிக்கு மிகவும் உயர்வாயிருப்பதால், அச் சந்திர சூரியர் அதன் உச்சியைக் காணப்பெறுதல் புகழ்ச்சிக்குரியதென் றும், அக் கருத்துத் தவஞ்செய்தாலன்றி நிறைவேறாதென்றும், தவஞ்செய் தற்குத் தக்க தானம் அம் மலைச்சாரலே யென்றும் எண்ணித் தவஞ்செய்யும் படியான தன்மையுடையது அந்த மலையென்று கருதுவான். அந்தப் பிரம தேவன் எந்த மரத்தின் அடிப்பாகத்தைப் பார்த்து இவ்வாறு கருதுவானோ, அந்த மரத்தின் இலை(களோடு கூடிய கிளை)களைக் காணாததலால், அம் மரத்தைப்பற்றிப் பேசுங்கால், 'மலையைக்கண்டோம்' என்பானே யன்றி 'மரத்தைக் கண்டோம்' என்னான். அப்படிப்பட்ட மரங்கள் இராமன் எய்ய எண்ணிய ஏழு மரங்க ளென்பது கருத்து. (கரு)

* மரத்தினது.

16. ஒக்க நாளெலா முழல்வன வுலைவில வாக
மிக்க தோர்பொரு ளுளதென வேறுகண் டிலமால்
திக்கும் வானமுஞ் செறிந்தவத் தருநிழற் சீதம்
புக்கு நீங்கலிற் றளர்வில விரவிதேர்ப் புரவி

கொண்டுகூட்டு : *இரவி தேர்ப் புரவி, ஒக்க நாள் எல்லாம் உழல்வன. (அவை) உலைவு இல ஆக(க் காரணம் தரு நிழல்; அதனின்) மிக்கது (ஆன) வேறு ஓர் பொருள் உளது என (யாம்) கண்டிலம். திக்கும் வானமும் செறிந்த அத் தரு(வின்) சீத நிழற் புக்கு நீங்கலின் (அவை) தளர்வில.*

பொருள்: *சூரியனது தேர்க்குதிரைகள், ஒரேவிதமாக (ஒரு நாள் போல) எல்லா நாள்களிலும் ஓயாமல் அலைவன. ஆயினும் அவைகள் இளைப்பில்லாதனவாதற்கு(த் தக்க காரணம் அம் மரங்களின் நிழலூடு புகுந்து போகுதலே. அக் குதிரைகளின் இளைப்பை நீக்குதற்கு அந் நிழலினும்) மிக்கதான வேறொரு பொருள் உண்டென்று யாம் கண்டிலேம். எல்லாத் திசைகளிலும் வானத்திலும் நெருங்கி மூடிய அந்த ஏழு மராமரங்களின் குளிர்ந்த நிழலுட் புகுந்து நீங்குதலால் அக் குதிரைகள் தளர்ச்சியில்லா திருக்கின்றன.*

'தினந்தோறும் (நாள் முழுதும்) ஒரேவிதமாக (ஓயாமல்) ஓடிச் செல்பவையாகிய சூரியனது தேரிற் பூட்டப்பட்ட ஏழு குதிரைகள் சிறிதும் வருத்தமில்லாதனவா யிருத்தற்கு மேம்பட்டதொரு காரணம் உண்டென்று வேறே கண்டோமில்லை. எல்லாத் திக்குகளிலும் ஆகாயத்திலும் நெருங்கிப் பரந்த அம் மரங்களின் குளிர்ந்த நிழலை அடைந்து செல்வதனால் (அக் குதிரைகள்) தளர்ச்சியில்லாதனவாம்.'—வை. மு. கோ.

ஒக்க - சமமாக - ஒரேவிதமாக. உழலல் - அலைதல்.—த. அ. *உலைவு - இளைப்பு.*—த. அ. *மிக்கது - மேன்மையுடையது. செறிந்த - நெருங்கிய. சீதம் - குளிர்ச்சி. புக்கு - புகுந்து. இரவி - சூரியன். புரவி - குதிரை.*

முந்திய கவியிற் சூரியனையும் இலையையும் (மரங்கள்) ஏழையும் சொல்லியவர், அவற்றின் தொடர்பாகச் சூரியனது பச்சையிலைநிறமுடைய ஏழுகுதிரைகளை நினைந்து, அவைகள் ஒரு கணமும் ஓயாமல் ஒவ்வொரு நாளும் உலகைச் சுற்றி உழன்றும் களைப்புறாமையைக் கருதி, அதற்குக் காரணம் காணமுயன்று கண்டுபிடித்தார் போன்று, அந்தக் காரணத்தைக் கூறுவாராய், அது, ஏழு குதிரைகளும் ஏழு மராமரங்களின் குளிர்ந்த நிழல் வழியாக நிதமும் செல்லுதலால் அக் குதிரைகளுக்கு அன்றன் றுண்டாம்

அயர்ச்சி அன்றன்று அகன்றுவிடுதலே யென்று, அம் மரங்களின் பெருமை யைப் பாவித் துணரப்பண்ணினார். (சகூ)

[அம் மரங்கள், தமது மேற்பாகத்தைக் காணப்பெற்றோர், இவை மலர்கள் இவை நட்சத்திரங்க ளென்று பகுத்தறியப்படாத படி உயரத்தே பூத்த ஒளிமிக்க பூக்கள் பொலிவனவாய், நட்சத்திர மண்டலத்தை அளாவி வளர்ந்த மகோன்னத வளர்ச்சியுடையவை கள்.

அம் மரங்களின் தளிர் இலை அரும்பு காய்கள் காற்று மோதி உதிர்வனவும், கனிகள் கனிந்து முதிர்ந்தும் காற்று மோதி யும் உதிர்வனவும் ஆகியவைகள், பூமியில் விழாமல் ஆகாய கங்கை யில் விழுந்து, அந் நதியோடு பெரும் புறக்கடலிற் போய்ச் சேர்வனவாம்.

அம் மரங்கள், ஒவ்வொன்றும், வேர் பாதாளத்தின் அடிக் குக் கீழேயும், உச்சி விண்முகட்டுக்கு மேலேயும் செல்லப்பெற்று, மகாமேரு வென்னும்படியும், முன் ஒருகால், இருகாலால் மூன்று லோகங்களையும் அளந்து கடந்த திரிவிக்கிரமனை மகாவிட்டுணு வென்னும்படியும் உள்ளவை.]

17. வள்ள லிந்திரன் மைந்தற்குந் தம்பிக்கும் வயிர்த்த
உள்ள மேயென வொன்றினொன் றுள்வயிர்ப் புடைய
தெள்ளு நீரிடைக் கிடந்தபார் சுமக்கின்ற சேடன்
வெள்ளி வெண்படங் குடைந்துகீழ்ப் போகிய வேர

கொண்டுகூட்டு: வள்ளல் இந்திரன் மைந்தற்கும் தம்பிக்கும் (பகை யால்) வயிர்த்த உள்ளம் என, (அவை) ஒன்றின் ஒன்று (குறையாத) உள் வயிர்ப்பு உடைய. (அவை) தெள்ளும் நீர்இடைக் கிடந்த பாரைச் சுமக்கின்ற சேடன் (உடைய) வெள்ளி வெண்படத்தைக் குடைந்து(கொண்டு) கீழ்ப் போகிய வேர.

பொருள்: வாலிக்கும் சுக்கிரீவனுக்கும் (ஒருவருக்கொரு வர் பகை மிகுதியால் இளக்கம் ஒழிந்து கடினப்பட்டு) வயிரமான மனங்கள் வயிரத் தன்மையில் ஒன்றுக்கொன்று தாழாமை போல, அம் மரங்கள் ஒன்றுக்கொன்று குறையாத உள் வயிரம் உடையன. அவைகள் பூமியைத் தாங்குகின்ற ஆதிசேடனுடைய படத்தைத் துளைத்துக்கொண்டு கீழே போகிய வேரினை யுடையன.

வள்ளல் - கொடையாளன். இந்திரன் மைந்தன் - வாலி. வயிர்த்தல் - வயிரித்தல் - வயிரமடைதல் - கடினப்படல். தெள்ளுதல் - தெளிதல். நீர் - கடல். இடை - மத்தி. நீரிடைக் கிடந்த பார் - கடல் சூழ்ந்த பூமி. வெள்ளி வெண் படம் - வெள்ளிபோலும் வெண்மையான படம். வேர - வேரை யுடையன.

பாட பேதம் : *வயிரத் துள்ளமே : உள்வயிரத்த.* (௧௭)

இராமன் நாண் எறியச் சுக்கிரீவாதியர் அஞ்சி ஓடுதல்

[*அப்படிப்பட்ட மரங்களை இராமன் பார்வையிட்டு எய்ய எண்ணி, வில்லின் நாணை விரலால் எறிந்து எழுப்பிய இடங்காரத் தொனி, இவ்வுலகன்றி ஏனைய எல்லா உலகங்களும் அதிர ஆரவாரித்த தென்றால், பக்கத்தில் நின்றவர் பட்டபாட்டை எப்படிப் பகர்வது!*]

18. அரிந்த மன்சிலை நாணெடி தார்த்தலு மமரர்
இரிந்து நீங்கினர் கற்பத்தி னிறுதியென் றயிர்த்தார்
பரிந்த தம்பியே பாங்குநின் றான்மற்றைப் பல்லோர்
புரிந்த தன்மையை யுரைசெயிற் பழியவர்ப் புணரும்

கொண்டுகூட்டு : *அரிந்தமன் (இராமனது) சிலையின் நாண் நெடிது ஆர்த்தலும் அமரர், இரிந்து நீங்கினர்; கற்பத்தின் இறுதி யென்று அயிர்த்தார். பரிந்த தம்பியே (இராமன்) பாங்கு நின்றான்; மற்றைப் பல்லோர் புரிந்த தன்மையை உரைசெயின் அவரைப் பழி புணரும்.*

பொருள் : *இராமனது வில்லின் நாண் மிகுதியாக ஒலித்த மாத்திரத்தில், விண்ணவர்கள் வெருவி ஓடிப்போய்க், கற்பாந்த காலம் வந்து விட்டதுபோலும் என்று சந்தேகங் கொண்டார்கள். இலக்குமணன் ஒருவனே இராமன் பக்கம் விட்டுப் பெயராமல் நின்றான். மற்றைய சுக்கிரீவன் முதலிய பலரும் செய்த செயலின் தன்மையைச் சொன்னால், அவர்களைப் பழி அடையும்.*

அரிந்தமன் - விட்டுணு - இராமன். ஆர்த்தல் - ஒலித்தல். அமரர் - தேவர். இரிதல் - அஞ்சுதல் - ஓடுதல். இறுதி - முடிவு. அயிர்த்தல் - சந்தேகித்தல். பரிதல் - அன்புறல். பாங்கு - பக்கம். பல்லோர் - பலர். அவர்ப் புணரும் - அவரைச் சேரும்.

'அமரர் இரிந்து நீங்கினர்' என இங்கு வருவா னேனெனில், இராவ ணாதி இராக்கதரால் இமிசிக்கப்பட்ட இமையோர், இராவண னுள்பட இராக்கத ரெல்லாரையும் சங்கரிப்பதாகச் சங்கற்பஞ் செய்திருக்கிற இராமன் செயல்களை இடைவிடாமல் அந்தரத்தினின்று எப்போதும் கவனித்துப் பார்த்துக்கொண்டிருப்போ ராதலால், அவர்கள், அபூர்வமும் அருமையும் ஆச்சரியமுமான செயலாகிய மராமர மெய்தலை அவாவோடு எதிர்பார்த்து நின்றனர்; அப்படி நின்றவர், இராமன் வில்லின் நாணொலி கேட்டுப் பயந்து, அம்பெய்தல் காணும் அவாவை அறியாமலே அகலவிட்டு ஓடினு ரென்ப தாம்.

சுக்கிரீவன் முதலியோர், இராமன் வின்னுணொலி கேட்டபோது, செய்த செயல் பயந்தோடியதே. அவர்கள் வீரராயுள்ளார் செய்யத் தகாத அந்தப் பேடிச் செய்கையைச் செய்ததைச் செப்பினால், அவரைப் பழி சேரு மென்று, அவர்கள் பயந்தோடினார்க ளென்பதை வெளிப்படையாகச் சொல்லாமல் குறிப்பாகவும் சமற்காரமாகவும் சொன்னார். (கஅ)

இராமன் அம்பெய்தல்

[அப்படி ஓடின வானர வீரரில், பயம் ஒருபக்கம் இருக்க, 'எய்தலைக் காண்போமாக, அம் முயற்சியில் உயிர் போக நேரினும் நேருக' என்று துணிந்து திரும்பிய அனுமானாதியோரை, 'என்ன துணிவப்பா இவர்களுக்கு! இவர்களன்றோ தீரர்!' என்று ஏனைய வானர வீரரேறுகள் மெச்சிப் புகழ்ந்து வியந்துகொண்டிருக்கும் போது, இராமன், ஓர் அம்பை யெடுத்து, நாணில் தொடுத்து, முதுகுற இழுத்து, முடுக்கி விடுத்தான்.]

இராம பாணத்துக்கு ஏழேண்ணுடைய எவையும் இலக்கோ என்ல்

19. ஏழு மாமர முருவிக்கீ ழுலகமேன் றிசைக்கும்
ஏழு மூடுபுக் குருவிப்பின் னுடனடுத் தியன்ற
ஏழி லாமையான் மீண்டதவ் விராகவன் பகழி
ஏழு கண்டபி னுருவுமா லோழிவதன் றின்னும்

கொண்டுகூட்டு: அவ் இராகவன் பகழி, ஏழு மா மரம் உருவிக், கீழ் உலகம் என்று இசைக்கும் (உலகம்) ஏழும் ஊடு புக்கு உருவிப், பின், உடன் அடுத்து இயன்ற ஏழ் இலாமையால் மீண்டது. இன்னும் ஏழு கண்ட பின் உருவும், ஒழிவது அன்று.

பொருள் : *(அப்படி விடுத்த) அந்த ராமபாணம், அதற்கு இலக்காகக் குறித்த அந்த ஏழு பெரிய மரங்களையும் துளைத்துச் சென்று, அது சென்ற திசையில் இருந்த கீழுலகமென்று சொல்லப் பட்ட உலகங்கள் ஏழையும் ஊடு நுழைந்து உருவிச் சென்று, அப்பால் அவ்வுலகங்களை அடுத்துப் பொருந்திய ஏழு என்ற இலக்கமுடைய பொருள் இல்லாமையினால், (தனது இருப்பிட மான இராமன் அம்பறாத்தூணிக்குத்) திரும்பிவந்து சேர்ந்தது : (அது திரும்பிவிட்டதனால் இம்மட்டோ டொழிந்த தென் றெண்ணவேண்டா.) இன்னமும் எப்போதாயினும் ஏழு ஆக வுள்ள பொருள்களைக் காணுமானால் அவைகளையும் துளைக்கவே செய்யும்; (துளையாது சும்மாவிருந்து) ஒழிவதன்று.*

மா - பெருமை. மா மரம் - பெரிய மரம். இசைத்தல் - சொல்லல். ஊடு - உள்; நடு. புக்கு - புகுந்து - நுழைந்து. இயலல் - பொருந்தல். மீளல் - திரும்புதல். பகழி - அம்பு. இன்னும் - இன்னமும் - மறுபடியும். ' கீழுலகமேழ் - அதலம், விதலம், சுதலம், தராதலம், ரஸாதலம், மகாதலம், பாதாளம் என்பன. மூன்று மடியிலும் நான்கா மடியிலும் ஏழு என்பது ஆகு பெயர். கண்டபின், பின்னீற்று எதிர்கால வினையெச்சம். ஆல் - அசை'.
(கக)

20. ஏழு வேலையு முலகமே லுயர்ந்தன வேழும்
ஏழு குன்றமு மிருடிக ளேழுவரும் புரவி
ஏழு மங்கைய ரேழுவரு நடுங்கின ரென்னே
ஏழு பெற்றதோ விக்கணைக் கிலக்கமென் றெண்ணி

கொண்டுகூட்டு : *ஏழு வேலையும், உயர்ந்தனவான மேல் ஏழ் உலக மும், ஏழு குன்றமும், ஏழுவர் இருடிகளும், புரவி ஏழும், ஏழுவர் மங்கைய ரும், 'என்னே! இக் கணைக்கு ஏழு இலக்கம் பெற்றதோ?' என்று எண்ணி நடுங்கினர்.*

பொருள் : *சத்தசமுத்திர மென்ற ஏழு கடல்களும், (சதுர்த் தச புவன மென்ற பதினான்கு உலகங்களுள் துளைக்கப்பட்ட கீழேழ் உலகங்கள் போக எஞ்சிய) மேலே ழுலகங்களும், சத்த குலாசலங்க ளென்ற ஏழு மலைகளும், சத்தருஷிக ளென்ற ஏழு இருடிகளும், சூரியன் தேரிற் பூட்டிய சத்தசந்தசுக ளென்னும் ஏழு குதிரைகளும், சத்தமாத ரென்ற ஏழு மாதரும், 'என்னே! இந்த*

அம்புக்கு ஏழு என்னும் தொகையுடைய பொருளின மெதுவும் இலக்காகப் பெற்றதோ?' என்று எண்ணிப் பயந்து நடுங்கினர்.

வேலை - சமுத்திரம். புரவி - குதிரை. 'உயர்ந்தன (ஆன) மேல் ஏழு உலகமும்' எனக் கூட்டுக. 'பெற்றதோ' என்ற ஒருமைப் பயனிலைக்குச் சொல்லாற் பொருந்தாத 'ஏழு' என்ற எழுவாயைப் பொருளாற் பொருந்தும்படி, அந்த 'ஏழு' என்பதற்கு 'ஏழென்னும் தொகையுடைய பொருளினம்' எனப் பொருள் கூறியிருத்தல் காண்க. 'ஏழென்னுந் தொகையுடையதெல்லாம் குறியாகப் பெற்றதோ?' என்பது முந்திய உரை. அஃறிணை யெழுவாய்கள் மிகுந்தும் உயர்திணை யெழுவாய்கள் குறைந்து மிருந்தும் எல்லா எழுவாய்களும் 'நடுங்கினர்' என்ற உயர்திணைப் பயனிலை கொண்டது, உயர்திணையின் சிறப்புப்பற்றி என்க. 'என்னே', ஓர் அதிசய இரக்கக் குறிப்புச்சொல்.

'ஏழென்னும் எண்ணினையுடைய பல பொருள்களை ஒருங்கே யமைத்தது, கவிசமத்காரம். ஏழு வேலை - உவர்நீர், கருப்பஞ்சாறு, மது, நெய், தயிர், பால், நன்னீர் இவற்றின் மயமானவை. மேலே ழுலகம் - பூலோகம், புவர்லோகம், சுவர்லோகம், ஜநலோகம், மஹர்லோகம், தபோலோகம், சத்தியலோகம் என இவை. ஏழு குன்றம் - கைலை, இமயம், மந்தரம், விந்தம், நிடதம், ஏமகூடம், நீலகிரி என்பன: இவை ஸப்தகுலாசல மெனப் படும். இருடிகள் எழுவர் - அத்திரி, பிருகு, குத்ஸர், வஸிஷ்டர், கௌதமர், காசியபர், ஆங்கீரஸர்: இவர்க்குப் பிறவாறு முரைப்பர். காயத்ரீ, உஷ்ணிக், அனுஷ்டுப், ப்ருஹதீ, பங்தி, த்ரிஷ்டுப், ஜகதீ என்ற ஏழு சந்தசுகளும் சூரியனது தேரின் குதிரைகளென நூல்கள் கூறும். மங்கைய ரெழுவர் - பிராஹ்மி, மாஹேச்வரி, கௌமாரி, நாராயணி, வாராகி, இந்திராணி, சாமுண்டி.'—வை. மு. கோ.

பாட பேதம்: நடுங்கின: என்ப. (உ௦)

இராமனைச் சுக்கிரீவன் துதிக்க, மற்ற வானரர் வாழ்த்தல்

[இவ்வாறாக, ஏழென்னும் எண்ணுடைய எல்லாரும் யாவையும், எண்ணி முதலிற் கலங்கினாரென்றாலும், பின்பு, அந்த அம்பு தரும மூர்த்தியான தாசரதியினுடைய படையாதலால் தீங்கு செய்யாதென்று தெளிந்தார்கள். அப்போது, சுக்கிரீவன், இராகவன் பாதங்களில் விழுந்து பணிந்து, 'நீ தேவாதிதேவனே! உன்னை எனக்குத் துணையாக இங்கே வரச்செய்தது எனது நல்லூழ். இனி எனக்கு ஆகாத காரியம் யாதும் இல்லை. தாயே

போலும் தயாபரனை உனக்கு அடியேன் அடியார்க் கடியேன்' என்று தாழ்மையோடு சொன்னான். மாருதி முதலிய மற்றைய வானரர் மகிழ்ச்சிக் கள்ளுண்டு மயக்கந் தலைக்கேறி 'வாலிகாலன் வாழி!' என்று ஆடிப் பாடிக் களித்தார்கள்.]

துந்துபி வரலாற்றைச் சுக்கிரீவன் சொல்லத் தொடங்குதல்

[இராமன், அந்த மலைமேல் வேறொரு மலை கிடந்தாற் போலக் கிடந்த எருமை முகமுடைய துந்துபி யென்னும் அசுரனது கங்காளத்தைக்* கண்டு, 'இது, இயமனாரும் எருமைக்கடா இறந்ததன் எலும்பா?' என்று வினவச், சுக்கிரீவன் சொல்லுவானான்.]

5. துந்துபிப் படலம்

[துந்துபி என்னும் அசுரன் எலும்பை இலக்குமணன் கால் விரலால் நெடுந் தொலை போய்விழ எறிந்ததைக் கூறுவது] †

மதங்கமுனி வாலியைச் சபித்தல்

['காரெருமை என்னும் முகமும், பேரிகை என்னும் குரலும், துந்துபி என்னும் பெயருமுடைய ஓர் அசுரன், விட்டுணுவிடஞ் சென்று போருக் கழைக்க, விட்டுணு சிவனிடம் செல்லச் சொல்ல, சிவன் இந்திரனிடமும், இந்திரன் வாலியிடமும் போகச்சொல்லிப் போக்குக் காட்டி ஒருவர்பின் னொருவராகக் கடத்திவிடக் கடைசியாக வாலியை அடைந்து, "போர்புரிய வா!" என்றான். வலிந்து சண்டைக்கு வந்தவனும் வந்த சண்டையை விடாதவனும் நெடுங் காலம் கடும்போர் புரிந்தனர். முடிவில், வாலி, துந்துபியை மண்ணில் மோத்துண்டு மண்டையுடைந்து காலொடிந்து இரத்தங் கக்கக் காலால் எற்றிக் கையாற் குத்தித் தூக்கியெடுத்துத் தூரம் போய்விழ எறிந்தான். அதனால், துந்துபியின் உடம்பு இந்த மலையில் விழுந்திட, உயிர் அந்த உலகை அடைந்தது. ஆவி

* கங்காளம் - உடல் முழு எலும்பு.

† 'இவ் வசுரனது முழக்கம் துந்துபி யென்னும் வாத்தியத்தினது பேரொலியை ஒத்தலால், இவனுக்கு இப் பெயர். துந்துபி - பேரிகை.'

நீங்கிய ஆகமும் அதனினின்று சிந்திய இரத்தமும் மதங்க முனியின் ஆச்சிரமத்தை வாலாமை* செய்ததைக் கண்டு, அம் முனிவன், கோபங்கொண்டு, இது வாலி செயலென்று ஞானதிட்டியாலறிந்து, "அவன் இங்கு வருவானாயின், தலை வெடித்துச் சாகக் கடவன்; அவனைச் சேர்ந்தார் போந்தாற் கல்லாகக் கடவர்" எனச் சபித்தான்' என்று சுக்கிரீவன் சொன்னான்.]

இலக்குமணன் துந்துபி எலும்பை எறிதல்

[இராமன், 'இந்த ஆச்சிரமத்தை அசுத்தப்படுத்திய இதனை அப்புறப்படுத்து' என, இலக்குமணன் எளிதாக அதனைக் கால் விரலால் எற்ற, அது வெகுதூரம் போய்விழுந்தது. அந்த அரிய செயலைக் கண்ட வானரர் ஆச்சரியமடைந்து உற்சாகமுற்று ஆரவாரித்தனர். அப்போது, சுக்கிரீவன் இராமனை நோக்கி, 'நான் தெரிவிக்கவேண்டிய தொன்றுண்டு' என்று தெரிவிப்பானாயினான்.]

6. கலன்காண் படலம்

[சீதையின் ஆபரணங்களைச் சுக்கிரீவன் காட்ட
இராமன் கண்டதைக் கூறுவது] †

சுக்கிரீவன் சீதை நகைகளை இராமனுக்குக் காட்டல்

['முன் ஒரு நாள், இந்த இடத்திலே, யாங்கள் இருந்தபோது, வானத்திலே மிகவும் உயர்ந்த தானத்திலே ஒரு மாது கதறியது காதில் விழுந்தது. அவள், இராவணன் எடுத்துக் கொண்டு போன சீதை போலும்! அவள், தன் ஆபரணங்களை ஒரு சேலையுள்வைத்து முடிந்து யாங்கள் இருந்த இடத்தில் எறிந்தாள். அவைகள் சேதமுறாமற் கையேந்தி ஏற்றுச் சேமமாக வைத்திருக்கின்றோம்' என்று சுக்கிரீவன் சொல்லி, அந்த முடிப்பை எடுத்துக்கொண்டு வந்து இராமனுக்குக் காட்டினான்.]

* வாலாமை - அசுத்தம். † கலன் - ஆபரணம்.

சீதையின் ஆபரணங்களால் இராமன்பால் உண்டான மெய்ப்பாடுகள் *

21. தெரிவுற நோக்கினன் றெரிவை மெய்யணி
எரிகன லெய்திய மெழுகின் யாக்கைபோல்
உருகின னென்கில முயிருக் கூற்றமாய்ப்
பருகின னென்கிலம் பகர்வ தென்கொலாம்

கொண்டுகூட்டு: *தெரிவையின் மெய்யணியைத் தெரிவு உற (இராமன்) நோக்கினன். எரிகனல் எய்திய மெழுகு யாக்கை போல் உருகினன் என்கிலம்; உயிருக்கு ஊற்றம் (அளிப்பது) ஆய்(க் கருதி அவற்றைப்) பருகினன் என்கிலம்; (அவன் நிலைமையை) என் பகர்வது?*

பொருள்: *அந்த முடிப்பிலிருந்த ஆபரணங்களைச் சீதையினுடையவைதாமா வென்று தெரிந்துகொள்ளும்படி இராமன் பார்த்தான். பார்க்கவே, சுவாலித்து எரிகின்ற தீயை அடைந்த மெழுகுருவம்போல மேனி நெகிழ்ந்து உருகினானென்று சொல்லவும் வல்லேமல்லேம்; (அமுதம்போல) உயிருக்குப் பலம் அளிப்பது ஆகக் கருதி அந்த ஆபரணங்களை விழுங்கினான் (போல ஆசையோடு பார்த்தான்) என்று சொல்லவும் வல்லேமல்லேம்: (அவன் அடைந்த நிலைமையை) யாதென்று சொல்வது? (இன்னதென்று சொல்ல இயலவில்லை யென்றபடி.)*

தெரிவை - பெண். மெய் - தேகம். அணி - ஆபரணம். மெழுகின் என்பதில் இன் சாரியை. யாக்கை - உடம்பு. என்கிலம் என்பதில் கில் ஆற்ற லுணர்த்தும் இடைநிலைச் சொல். ஊற்றம் - வலி - பலம். ஆய், ஆக என்னும் எச்சத்திரிபு. பருகுதல் - விழுங்குதல். என் - யாது. கொல், ஆம் இரண்டும் அசை. 'உருகுதல்' தேகம் குழைந்து மெலிதலையும், 'ஊற்றமாய்ப் பருகுதல்' உடம்பு பலப்பட்டுப் பூரித்தலையும் குறிப்பித்தன.

உருகியது பிரிவாற்றாமையாலும், பருகியது ஆபரணத்தை அடைந்தமைபோல ஆபரணத்தை அணிந்தவளை அடையலாமென்னும் ஆசையாலும் என்க. ஆபரண தரிசன† மாகிய ஒரே காரணத்தால், உருகுதலும் பருகுதலுமாகிய ஒன்றுக்கொன் றெதிரிடையான காரியங்கள் நிகழ்ந்தன என இக் கவியிலும், அந்த ஆபரண பரிசனத்தால்‡, நீங்கின உணர்வு மீண்டது, நீங்காதிருந்த உயிர் வதைக்கப்பட்டாற் போல வருந்தியது என்ற இரண்டு எதிரிடைச் செயல்களும், தேகம் சந்தனத்தாற் குளிர்ந்தாற் போலக் குளிர்ந்தது,

---

* மெய்ப்பாடுகள் - *அகத்து நிகழ்ச்சிகளைப் புறத்தார்க்குப் புலப்படுத்தும் உடற் குறிகள்.* † *தரிசனம் - காணுகை.* ‡ *பரிசனம் - தொடுகை.*

தீயினால் வெதும்பினாற்போல வெதும்பியது என்ற வேறிரண்டு மாறுபட்ட நிகழ்ச்சிகளும் நிகழ்ந்தன எனப் பின்வரும் 'விட்டபே ருணர்வினை' என்ற கவியிலும் அநுதாபமும் ஆச்சரியமும் உண்டாகக் கூறினார். இவ்வாறே, சீதை ஆபரணங்களைக் கண்ட இராமன் மெய்ப்பாடுகள் போல, இராமன் கணையாழியைக் கண்ட சீதையின் மெய்ப்பாடுகள் நிகழ்ந்ததை, 'வீங்கினள் மெலிந்தனள் குளிர்ந்தனள் வெதுப்போ - டேங்கினள்'* என்றும்,

'ஒருகணைத் திரண்டு கண்டேன் ஒளிர்மணி ஆழி ஆன்ற
திருமுலைத் தடத்து வைத்தாள் வைத்தலும் செல்வ நின்பால்
விரகமென் பதனின் வந்த வெங்கொழுந் தீயினால் வெந்
துருகிய துடனே ஆறி வலித்தது குளிர்ப்புள் ளூற' †

என்றும் கூறியிருத்தல் காண்க.

'மெழுகின் யாக்கை போய் உருகினன்' என்ற பாடத்துக்கு, மெழுகு போல மேனி உருகிப்போனா னென்று பொருள் கொள்க.

பாட பேதம்: யாக்கைபோய். (உக)

22. நல்குவ தென்னினி நங்கை கொங்கையைப்
புல்கிய பூணுமக் கொங்கை போன்றன
அல்குலி னணிகளு மல்கு லாயின
பல்கலன் பிறவுமப் படிவ மானவே

கொண்டுகூட்டு: நங்கை கொங்கையைப் புல்கிய பூண் அக் கொங்கை போன்றன; அல்குலின் அணிகளும் அல்குல் ஆயின; பிற பல் கலனும் அப்படிவம் ஆன; இனி (அவை) நல்குவது (ஆன மகிழ்ச்சி) என்?

பொருள்: சீதையினால் அணியப்பட்டு அவள் தனங்களைப் பொருந்தியிருந்த ஆபரணங்கள் அந்தத் தனங்கள் போன்றன; அவ்வாறே மற்றைய பல ஆபரணங்களும் அவை அவை அணியப் பட்டிருந்த அந்த அந்த அங்கங்கள் போன்றன: (இவ்வாறு இராமனுக்கு மகிழ்ச்சி அளித்த ஆபரணங்கள்) இதன்மேல் அளிப்பது ஆன மகிழ்ச்சி யாது உளது?

நல்கு - உதவு. என் - யாது. இனி - இதன்மேல் - இதற்கதிகமாக. புல்கு - புல்லு - பொருந்து. பூண் - ஆபரணம். அல்குல் - அரை—தூ. அ. படிவம் - உடலுறுப்பு.—தூ. அ. ஆன - போன்றன. 'ஆதல்' போலல் எனப் பொருள்படல் 'ஆள்வா ரிலிமாடாவேனோ' என்பதிற் காண்க.

* உருக்காட்டு படலம் கூகூ. † திருவடி தொழுத படலம் எஎ.

உம்மை பிரித்துப் 'பிற பல்கலனும்' என இயைக்க. 'படிக ளாயவே' என்ற பாடத்தில் கள் அசை.

சீதையின் ஆபரணங்கள் அவைகளை அணிந்திருந்த அவள் அங்கங்கள் போல இராமனால் பாவிக்கப்பட்டு, அவன் அவைகளைத் தரிசித்தபோதும், பரிசித்தபோதும், அவனுக்கு இன்பம் ஈந்தன வென்பதாம்.

பாட பேதம்: *படிக ளாயவே.* (உஉ)

23. விட்டபே ருணர்வினை விளித்த வென்கேனோ
அட்டன வுயிரையவ் வணிக ளென்கேனோ
கொட்டின சாந்தெனக் குளிர்த்த வென்கேனோ
சுட்டன வென்கேனோ யாது சொல்லுகேன்

கொண்டுகூட்டு: *அவ் அணிகள் (இராமன் திறத்தில்) விட்டபேர் உணர்வினை விளித்த என்கெனோ! உயிரை அட்டன என்கெனோ! கொட்டின சாந்து என, (அவன் மேனியைக்) குளிர்த்த என்கெனோ! (அல்லது, தீப்போலச்) சுட்டன என்கெனோ! யாது சொல்லுகேன்!*

பொருள்: *இராமன் திறத்தில் அந்த ஆபரணங்கள் நீங்கின உணர்வை மீண்டுவர அழைத்தன வென்று சொல்வேனோ! உயிரைக் கொன்றன (போல வருந்தச் செய்தன) என்று சொல்வேனோ! பூசின சந்தனம் போல அவன் மேனியைக் குளிரச் செய்தன வென்று சொல்வேனோ! தீயைப் போலத் தபிக்கச் செய்தன வென்று சொல்வேனோ! என்ன வென்று சொல்வேன்!*

விடுதல் - நீங்குதல். விளித்தல் - அழைத்தல். என்கென் - என்று சொல்வேன். அடுதல் - கொல்லுதல். அட்டன - கொன்றன. அணி - ஆபரணம். கொட்டுதல் - பூசுதல்; அப்புதல்—த. அ. 'குளிர்த்த', குளிர்ந்த என்பதன் பிறவினை: குளிரச்செய்தன என்பது பொருள்.

'பிரிந்திருக்கின்ற சமயத்தில் அப் பிரிந்த பொருளை நினைப்பூட்டுகின்ற பொருள்கள் யாவும் ஒருபால் மகிழ்ச்சியையும் ஒருபால் வருத்தத்தையும் விளைத்தல் இயல்பாதலால், இங்ஙனம் மாறி மாறிக் கூறினர்............ இராமபிரானுக்கு இயல்பாக வுள்ள பேரறிவு பிராட்டியைப் பிரிந்ததனாலாகிய வருத்தத்தால் நீங்கியிருந்தது அவளது ஆபரணங்களைக் கண்டதனால் மீண்டுவரலாயிற் றென்பது முதல் வாக்கியத்தின் கருத்தும், அவ்வணிகலங்கள் அவளது அழகிய அவயவங்களை நினைப்பூட்டிப் பிரிவுத் துயரை மிகுவித்து அப் பெருமானுக்கு மரண வேதனையைச் செய்வனவுமாயின வென்பது இரண்டாம் வாக்கியத்தின் கருத்தும், அவை அவனது

விரகதாபத்தைத் தணிவித்தன வென்பது மூன்றும் வாக்கியத்தின் கருத்தும் அத் தாபத்தை மிகுவிப்பனவு மாயின வென்பது நான்காம் வாக்கியத்தின் கருத்துமாம். இன்னபடி யென்று ஒன்றைத் துணிந்து, கூறமாட்டாமை யின், இங்ஙனம் விகற்பித்து, "யாது சொல்லுகேன்" எனலாயிற்று.' —வை. மு. கோ.

பாட பேதம்: குளிர்ந்த. (உங)

24. மோந்திட நறுமல ரான மொய்ம்பினில்
ஏந்திட வுத்தரி யத்தை யேய்ந்தன
சாந்தமு மாயொளி தழுவப் போர்த்தலால்
பூந்துகி லாயவப் பூவை பூண்களே

கொண்டுகூட்டு: அப் பூவை பூண்கள் (இராமனுக்கு) மோந்திட நறுமலர் ஆன; மொய்ம்பினில் ஏந்திட உத்தரியத்தை ஏய்ந்தன; (அவற்றின்) ஒளி தழுவச் சாந்தமாய் (ஒளி) போர்த்தலால் பூந்துகிலும் ஆய.

பொருள்: இராமனுக்குச் சீதையின் ஆபரணங்கள், மோந்து பார்த்தற்கு நறுமணமுடைய மலர்கள் போன்றன; தோள்களில் ஏந்த உத்தரீயம்போ லாயின; (அவ் வாபரணங்களை மோந்த போதும் ஏந்திய போதும் அவற்றின்) ஒளி (அவன் உடம்பைப் பொதிந்தாற்போலப்) பொருந்தலாற் சந்தனம் போன்று, (அவ் வொளி உடலை) மூடுதலால் அழகிய (போர்வை) வஸ்திரமும் போன்றன.

நறுமை - நன்மணம்.—ஐங்குறு. ஆன - போன்றன. மொய்ம்பு - தோள். உத்தரீயம், அங்கவஸ்திரம், மேலாடை என்பவை ஒரு பொருள் குறித்தவை. ஏய்ந்தன - போன்றன. சாந்தம் - சந்தனம். ஆய் - போன்று. தழுவல் - பொருந்தல். பூந்துகில் - அழகிய வஸ்திரம்; பூப்போல மென்மை யான ஆடையுமாம். ஆய - போன்றன. பூவை - பெண். பூண் - ஆபரணம். உம்மை பிரித்து 'ஒளிதழுவச் சாந்தமாய் (ஒளி) போர்த்தலாற் பூந்துகிலும் ஆய' என இயைக்க. சாந்தமும் என்பதில் உள்ள உம்மையை இசைநிறை யாகவுங் கொள்ளலாம். செய்யுளாதலால், பூந்துகிலுக்குப் பின் உம்மை தொக்கதாகக் கொண்டு, ஒளி (உடம்பைத்) தழுவப் போர்த்தலால், 'சாந்த மும் ஆய்ப் பூந்துகிலும் ஆய' எனவும் கொள்ளலாம்.

பாட பேதம்: பூந்துகி லாயின. (உச)

சோகித்த இராமனைச் சுக்கிரீவன் தெளிவித்தல்

[　இவ்வாருக, இராமபிரான், சீதாதேவியின் ஆபரணத்தால், மகிழ்ச்சியும் வருத்தமும் மாறி மாறி அடைந்தபோது, இறுதியாக விரகதாப வேதனை, விடமேறினற் போல மிகுதியாக, அதனை ஆற்றும் ஆற்றலின்றி, உள்ளமும் உடலும் ஒருங்கு தளர்ந்து, நினைப்பும் மூச்சும் நெடும்பொழுது நீங்கித் தன்வச மிழந்து, தரையிற் சாய்ந்து விழுந் தருணத்தில், அருகிலிருந்த சுக்கிரீவன், அவனைத் தழுவித் தாங்கி, அவனுடைய பரிதாப நிலைமையைப் பார்க்கச் சகியானய்த் துக்கம் மிகுந்து சொல்லுகின்றன்: 'அந்தோ! இந்த ஆபரணங்களைக் காட்டி உன் உயிரைப் போக்கினேன்போலும்! ஐயா! வருந்தாதே! தேவி எந்த உலகத்திலிருந்தாலும் தேடிக் கண்டுபிடித்து, அவளைத் திருடிய தீயவனை மாயச்செய்து, அவளை மீட்டுக்கொண்டுவந்து கொடுத்து என் சேவகத்தைக் காட்டுவேன். அவளைக் கவர்ந்த காதகன் கரங்கள் இருபதும் சிரங்கள் ஒருபதும் உன் அம்பு ஒன்றுக்கே பற்றுதே! அப்படிப்பட்ட பெருமையுடைய நீ அந்த அற்பனைத் தண்டித்தற்கு எழுந்தருளல் வேண்டா. இங்கேயே யிருந்தருள். அடியேன் சென்று அவன் சிரங்களைத் திருகி யெறிந்து தேவியைச் சிறையினின்று திருப்பிக்கொண்டுவந்து சேர்ப்பேன். சிறியேன் சிறு தொண்டைச் சிறிது திருக்கண் சார்த்தியருள்.

'நீ இட்ட கட்டளையை இயற்றும் ஏவலரோ, ஆற்றல் மிக்க அனுமானுதியரோம்; தம்பியோ, போராற்றல் பெரிதுள்ள பெருந்தகை; நீயோ, ஆர்துணையும் வேண்டாத அசகாயசூரன். இப்படியெல்லாமிருக்க, எப்படி உன்னைக் குறையுடையவனுகக் கருதுகின்றய்? உன்னு லாகாத காரியம் ஒன்றுமின்று. மும்மூர்த்திகளுள் எம்மூர்த்தியும் உன்னை ஒவ்வார். ஒவ்வொருவராக ஒவ்வுதலில்லாத அவ் விறைவர் மூவரும், ஒன்றுசேர்ந்து ஒருவராலன்றி உனக்கு ஒப்பாகார். எனது சிறு குறைதீர்த்தல் பிற்பாடாகுக. இப்போது யாங்கள் தேவியைத் தேடச் செல்வேம். விடை தருக.'

அவ்வாறு சொல்லவே, அதுவரையும் அவன் சொல்லியதைக் கண்மூடியிருந்தபடியே கேட்பதன்றிச் சொல்லக்கடவதில்லாதிருந்ததனற் சும்மா இருந்த இராமன், 'விடைதருக'

என்றதற்கு மறுமொழி அளிக்கவேண்டிய அவசியத்தால் அறிவு கிளர்த்தப்பெற்றுக், கண்திறந்து அன்புடன் நோக்கிச் சொல்லு கின்றான்.]

சானகியைச் சிறைமீட்காமைக்காகத் தாசரதி தன்னை நொந்துகொள்ளல்

['தீவினையேன் சீவனோடிருக்கும்போதே அவள் ஆபரணங் களை அகற்றிவிட்டாள். நாயகன் சாகுமுன் நகைகளை நீத்த நாயகி என்காலத்துக்கு முன்காலத்தில் எவளேனும் இருந்த துண்டோ! இதனால் யான் இருந்தும் இறந்தேனே யன்றோ! அவள், ''நாயகன் வருவான், நம்மை மீட்பான்'' என்றிருக்க, நான் வீணே நாட்போக்கிக்கொண் டிருக்கின்றேன்! அவளைக் காத்தற் குதவாமற் போனதன்றி மீட்டற்கும் உதவாதிருக்கிற வில்லை வெட்கமின்றி வீணே சுமந்துகொண் டிருக்கின்றேன்! தக்கோரா யுள்ளோர், தம்மொடு எவ்வகைத் தொடர்பு மில்லாமல் தற்செய லாகத் தாம் செல்லும்வழியிற் செல்லும் தையலாரை ஆரேனும் துன்புறுத்துவாரானால், அவரைத் தடுத்து அவரோடு அமர் புரிந்து ஆவியும் ஈகுவர். யானோ, என்னையே பரமாக நம்பிய என் இல்லாள் துன்பத்தையும் தீர்க்காதிருக்கின்றேன். எனது முன்னோர் கடலைத் தோண்டினர். கங்கையை வானகத்தினின்று மண்ணகத்துக்கு வரச்செய்தனர். அத்தகைய அருஞ்செயல்கள் புரிந்தவர்கள் பெருங்குலத்திற் பிறந்த யானோ, என் மனைவியின் வருத்தத்தையும் மாற்றமாட்டாத மகா நிர்ப்பாக்கியனா யிருக்கின் றேன். எனது பூர்வீகர் புகழைப் புகழ்வானேன்! என் தந்தை, இந்திரனை வென்று இந்திரலோகத்தைக் கைப்பற்றிய, அந்தகனும் அஞ்சும் சம்பராசுரனைச் சயித்து, இந்திரனுக்கு அவன் இராச்சி யத்தை ஈந்து அரிய புகழ்பூண்டான். அவன் வயிற்றிற் பிறந்த யான் பெரிய பழிபூண்டேன். என் தந்தை சத்தியவாக்குத் தவறாதபடி காக்க முடிகூடாத யான், மனைவியை மாற்றான் கவராத படி காவாத பழிசூடினேன்' என்று நொந்து துன்பம் மேலிடச் சோர்வானான இராமனைச் சுக்கிரீவன் ஆறுதல் வார்த்தைகள் கூறித் தேறுதலடையச் செய்தான்.

தேறுதலடைந்தவன், 'சினேகித! நீ தேற்றியதனால் தேறி னேன். தேற்றாதிருந்தால், செத்திருப்பேன். இனி, எனக்குச்

சாதலை தாரகம். உயிர்விடா தொழியேன். ஆயின், உன் குறை தீர்த்தாலன்றி உயிரை விடேன்.' என்றான்.]

இராமனாதியர் வாலி வாழ்ந்த மலையை அடைதல்

[அப்போது, அனுமான் அஞ்சலித்து, 'அடியேன் அறிவித்துக்கொள்ளுவ துள்ளது. அதனைத் திருச்செவி சேர்த்தருள். வாலியை மடித்து, மன்னவன் சுக்கிரீவனைச்செய்து, சேனையைத் திரட்டினாலன்றித் தேவியைத் தேடலரிது. அவளை ஒளித்து வைத்திருக்கும் இராக்கத ரிருப்பிடத்தை யாமறியேம். அவளை ஒவ்வோரிடமாகத் தேடினால், அதற்கு அளவற்ற ஆண்டு வேண்டும். அன்றி, அரக்கர், அவளை அடிக்கடி வெவ்வேறிடங்களிற் கொண்டுபோய் வைப்பார்கள். ஆதலால், எல்லா இடங்களிலும் ஏககாலத்திற் சென்று துருவுதல் இன்றியமையாதது. அது, படையாலன்றி முடியாது. எம்மவர் படை எழுபது வெள்ளமுள்ளது. ஊழிக்காலக் கடல்போல உலக முழுதும் ஒருமிக்கச் சென்று தேடவல்லது' என்றான்.

அதுகேட்டு, இராமன், 'வாலியிடம் போவோம், வாருங்கள்' என, எல்லாரும் புறப்பட்டனர். அவர்கள், சிங்கம் புலிகள் திரண்டு செல்லல்போல, மலைமேல் மலையாகப் பல மலைகளேறிப் பல யோசனை உயரம் போய் வாலியிருந்த மலையை அடைந்தனர். அடைந்தவர்கள், அப்பாற் செய்யவேண்டியது யாதென ஆலோசனை செய்வாராயினர்.]

7. வாலி வதைப் படலம்

[இராமன் வாலியைக் கொன்றதைக் கூறுவது]

சுக்கிரீவன் போர்க்கழைக்க, வாலி புறப்படத், தாரை* தடுத்தல்

[இராமன் சுக்கிரீவனை நோக்கி, 'நீ வாலியைப் போருக்கழைத்துவந்து போர்செய்யும்போது மறைந்து நின்று வாளி எய்து அவனைக் கொல்வது தக்கதென்பது யான் தீர்க்கமாக

* தாரை, வாலி மனைவி.

ஆலோசித்துச் செய்த முடிவு' என்றான். தன் தமையனை எவ்வாற்றானும் கொல்லும் நோக்கமுடைய சுக்கிரீவன், அதற்கிசைந்துசென்று, வாலி காதுள் மோதும்படி, 'போர்க்குப் புறப்படு! போர்க்குப் புறப்படு!' என்று ஆர்ப்பரித்து, இடியிடித்தாற்போலத் தோள்புடைத்துத், தொடைதட்டி வீர ஆரவாரம் செய்தான். அந்த ஆரவாரம், குகைக்குள் உறங்கும் சிங்கத்தின் செவியுள்ளே வெளியிலிருந்து பிளிறுகின்ற யானை முழக்கம் புகுந்தாற்போல, மாளிகைக்குள்ளே வெண்மலர் மெத்தைமீதே, வெள்ளிய பாற்கடலில் வெள்ளியங்கிரிபோற் கிடந்து விழிதுயிலும் வாலி காதுள் நுழைந்தது. நுழையவே, அவன் ஆச்சரியமடைந்து, 'ஒளித்துப் பிழைத்திருந்தவன் வெளிப்பட்டு வந்தது நன்றாயிருக்கின்றது!' என்று, இகழ்ச்சிக்குறிப்பு வெளிப்படச் சிரித்து, 'இதோ! வந்துவிட்டேன்!' என்று உரத்து உரைத்த ஓசை அ ௗிக்கும் முட்ட, போது,
மீ தாரை தடுக்க, அஞ்சாது அறைகூவியவன் ஆவியை அரைக்கணத்தில் உண்டு மீள்வேன்' என, 'உன் தோள்வலிக்கு ஆற்றாது தோற்றோடியவன் புது வலிமை பெறவில்லை, மறு சனனமும் உறவில்லை. அப்படியிருக்க இப்பொழுது வலிந்து போர்க்கு வந்தது வலிமிகுத்த துணை படைத்தமையால்' என, 'அவனுக்காக மூன்றுலகத்தோரும் ஒன்றுகொண்டு வந்து என்னை எதிர்த்தாலும், அவர்களனைவரும் தோற்று ஓடுதல் தேற்றமானது. ஆதலால், ஒருவரும் அவனுக்குத் துணையாக வாரார். எவரேனும் வருவாரெனில், அவர் பலத்திற் பாதி எனக்குச் சேரும். என் பலத்தோடு அவர் தம் பலத்திற் பாதியும் அடைந்த என்னை அவர்கள் எவ்வாறு வெல்வார்கள்?' என, 'இராமனென்பவன் அவனுக்கு உயிர்த்துணைவனாகி உன்னைக்கொல்ல உடன்வந்துள்ளானென்று, உண்மையன்புடையாருளவறிந் துரைத்தனர்' என, 'அடி, பாவி! அந்த ஆண்டகை திறத்தில் அடாதது கூறி அபசாரப்பட்டுவிட்டாய்! அவனி மாந்தர்க்கு அறநெறிகள் இவைகளென அவைகளை அனுட்டித்துக் காட்ட அவதரித்திருக்கிற அறக்கடவுளான அவன், இருவர் பொரும் போரில் இடையே புகுந்து ஓரவாரமாக ஒருவருக்கு உதவிசெய்வானென்று, பெரிய பேதைமைப் பெண்மதியாற் கூறிப் பிழைபாடு பெரிதுடையை ஆனாய். மாற்றாந்தாய் வார்த்தைப்படி

தம்பிக்குத் தன் அரசப் பெருஞ்செல்வம் அனைத்தையும் அக மகிழ்ந்து அளித்துத் "தம்பிய ரல்லது தனக்கு வேறுயிர்" இல்லாத சகோதர வாஞ்சை வடிவமானவன், யானும் என் தம்பியும் போர்புரியும்போது என்மீது அம்பு விடுவானோ! சிறிது போது பொறுத்திரு. இமைக்குமுன் சென்று, அவனையும் அவனுடன் வந்தாரையும் கொன்று திரும்புவேன்' என்றான். அவள் அச்சத்தால் மறுத்துரை வழங்க மாட்டாதவளானாள்.]

வாலி வடிவை இராமன் வியத்தல்

[மலையினின்று புறப்பட்டுச் சுக்கிரீவ னெதிரே தோன்றிய வாலி, தூணினின்று வெளிப்பட்டு இரணிய னெதிரே தோன்றிய நரசிங்கம் போல நின்றான். அப்போது, இராமன், அவன் தோற்றங் கண்டு ஆச்சரியங்கொண்டு, இலக்குமணனை நோக்கித், 'தம்பி, இவனை நன்றாகப் பார். மானவர், வானவர், தானவர், ஏனவர் * யாவரும் இவனுக்கு இணையாகா ரென்பது கிடக்க: எந்தக் கடல்தான், எந்த மலைதான், எந்தக் காலாக்கினிதான், இவனை நேரும்? சொல்!' என்றான்.]

வாலி சுக்கிரீவரைப்பற்றிய இராம லக்துமண சம்வாதம்

[இலக்குமணன், 'சுக்கிரீவன், தமையனைக் கொல்லும் இயமனைக் கொண்டுவந்திருக்கின்றான்: சாதாரணமாகக் குரங்குகள் செய்யும் சண்டையைச் செய்ய வந்தவனல்ல னென்பது என் மனத்தை வருத்துதலால், வாலி மேனி மாண்பை மதித்துணர மாட்டா திருக்கின்றேன். இன்னும், என் மனம் பொறுக்கமாட்டாது புழுங்குகின்ற ஒன்றைப் புகல்வேன். தருமமுறை தவறித் தம் காரியத்தைச் சாதிக்க முயல்வாரை நம்புதல் நல்லதன்று. தனது தமையனைப் பகைவனாகக் கருதிச் சூழ்ச்சி செய்து மாய்க்கத் துணிந்தவன், மற்றவர் திறத்தில் பற்றுக்கோடாவனோ?' என்றான்.]

25. அத்தா விது கேளென வாரியன் கூறு வானிப்
பித்தாய வி லங்கி னொழுக்கினைப் பேச லாமோ
எத்தாயர் வயிற்றினும் பின்பிறந் தார்க ளெல்லாம்
ஒத்தாற் பரதன்பெரி துத்தம னாத லுண்டோ

* ஏனவர் - மற்றவர்.

கொண்டுகூட்டு: 'அத்தா, இது கேள்' என ஆரியன் கூறுவான்: 'இப் பித்து ஆய விலங்கின் ஒழுங்கினை(ப் பற்றிப்)பேசலாமோ? எத்தாயர் வயிற்றினும் பின்பிறந்தார்கள் எல்லாம் (தமையனிடம் அன்பில்) ஒத்தால், பரதன் (தம்பியருள்) பெரிது உத்தமன் ஆதல் உண்டோ?

பொருள்: **'அப்பா, யான் கூறும் இதனைக் கூர்ந்து கேள்' என்று இராமன் கூறுகின்றான்: '(பகுத்தறிவுடைய மனிதர் நடக்கைகளைப் பற்றிப் பேசுங்கால், இது நியாயமானது, இது அநியாயமானதென்று பேசுதல் போல,) இந்தப் பகுத்தறிவில்லாத மிருகங்களான குரங்குகளின் நடக்கைகளைப்பற்றிப் பேசுதல் பொருந்துமோ? (மிருக சகோதரருள் தமையனைப் பகைத்த சுக்கிரீவன் கிடக்க; மனித சகோதரருள்) எல்லாத் தாய்மார் வயிற்றிலும் பிறந்த தம்பிமாரெல்லாம் தமையன்மாருக்கு அன்புடைமையில் ஒத்தவர்களாயிருந்தால், பரதன் தம்பியரெனப்படுவாருள் சிறந்தவனாவ துண்டோ?**

அத்தன் - அப்பன்: அன்பு பற்றித் தம்பியை 'அத்தா' என விளித்தது மரபுபற்றி வந்த வழுவமைதி. ஆரியன் - வணங்கப்படத் தக்கவன்; அறிஞன்; தலைவன்; இராமனைக் குறித்தது. பித்தம் - அம் கெட்டுப் பித்து என நின்றது. பித்து - (அறிவுத்) தெளிவின்மை - பகுத்தறிவின்மை. ஒழுக்கு, ஒழுகு என்ற முதனிலை திரிந்த தொழிற்பெயர்: அம் சாரியை பெற்று ஒழுக்கம் எனப் பெரும்பான்மையாக வழங்கும்.

தமையன் திறத்தில் பகைமை மிகுந்த சுக்கிரீவனைப் பற்றிப் பேசும்படி நேரவே, தனக்கு அளவற்ற அன்புடைய தம்பி பரதன் ஞாபகம் வர, இராமன், 'எத்தாயர் வயிற்றினும் பின்பிறந்தார்கள் எல்லாம் — ஒத்தால், பரதன் பெரி துத்தமன் ஆதல் உண்டோ?' என்றான்.

இங்கே இராமன், தம்பியருள் பரதன் உத்தமனென்றது, பொதுமை பற்றிக் கூறியது; தன் தம்பியருள் பரதன் சிறந்தவனெனக் கருதிக் கூறியதன்று: அக் கருத்துப்படக் கூறியதெனின், அது, சொல்லப்பெற்ற தம்பிக்குக் கேட்கலுற்ற தம்பியைக் கீழாகக் கூறியதாய், அபசாரமாவதே யன்றி, உண்மை விரோதமுமாம். இராமன், பரத லக்குமணரை இரண்டு கண்கள் போலக் கொண்டு, இருவர்பாலும் ஒத்த அன்புடையவன். ஒருகால், ஒருவர்பால் சற்று ஏற்றமான அன்புடையனா யிருந்தால் அவ் ஏற்றமான அன்பு இலக்குமணன்பாலதா மென்பது, இராமன் இலக்குமணனைப் பிரிந்து வருந்தியபோது தனக்குத்தானே கூறிய,

'என்னைத்தரும் எந்தையை என்னையரைப்
பொன்னைப்பொரு கின்ற பொலங்குழையாள்
தன்னைப்பிரி வேன்உளென் ஆவதுதான்
உன்னைப்பிரி யாத உயிர்ப்பலவோ?' *

என்றதனாலும், பின்பு, திரும்பி வந்துசேர்ந்த இலக்குமணனுக்குக் கூறிய 'தந்தை தாயர் மற்றைத் தம்பியர் முதலாகப்

"பிரிபவர் யாவரும் பிரிக, பேரிடர்
வருவன யாவையும் வருக, வார்கழல்
பெருவலி வீரநிற் பிரியி னல்லது
பருவரல் என்வயிற் பயிலற் பாலதோ?" ' †

என்றதனாலும் விளங்குதல் காண்க.

இராமன், பரத லக்குமண ரிருவருள் எவன்பால் ஏற்றமான அன்புடையா னென்பது இயம்பவொண்ணாதது போல, அவ் விருவருள் யாவன் இராம பக்தி மிக்குடையா னென்பதும் இசைக்கமுடியாத தென்பது, இராமன் பதினாலு வருட வனவாச காலம் கழிந்து அயோத்தியை அடைந்த போது, 'அந் நெடுங்கால முழுவதும் தவவேடந் தாங்கி முறையே நாட்டிலிருந்தும் காட்டிலுறைந்தும் இராம சேவை செய்து இளைத்திருந்த பரத லக்குமண ரிருவரையும் ஒருசேரப் பார்த்த உலகத்தோர், யாருடைய மேனி அதிகமாக நைந்ததென இதயம் நைந்திடலானார்' என்ற பொருளடங்கிய

காடுறைந் துலைந்த மெய்யோ கையறு கவலை கூர
நாடுறைந் துலைந்த மெய்யோ நைந்ததென் றுலகம் நைவ ‡

என்றதனால் விளங்கும். (உரு)

26. விற்றாங்குவெற் பன்ன விலங்கெழிற் றோள மெய்ம்மை
உற்றார்சில ரல்லவ ரேபல ரேன்ப துண்மை
பெற்றாருழைப் பெற்ற பயன்பெறும் பெற்றி யல்லால்
அற்றார்நவை யென்றலுக் காகுந ரார்கொ லென்றான்

கொண்டுகூட்டு: 'வில் தாங்கு வெற்பு அன்ன இலங்கு எழில் தோள! (உலகில்) மெய்ம்மை உற்றார் சிலரே; அல்லவர் பலர் என்பது உண்மை. (துணையாகப்) பெற்றார் உழை (அவர் குற்றம் உடையராயினும்) பெற்ற பயனைப் பெறும் பெற்றி (அறிவுடைமை) அல்லால், நவை அற்றார் என்றலுக்கு ஆர் ஆகுநர்?' என்றான்.

பொருள்: 'உலகத்திலே உண்மையுடையார் ஒரு சிலரே உள்ளார். உண்மையுடையார் அல்லார் மிகவும் பல்லார் என்று

* க. ரா. சா. ஆரணிய காண்டம் பாட்டு 79.
† ,, ,, ,, 80.
‡ மீட்சிப் படலம் ௬௪௮.

அறிவுடையார் கூறுவது உண்மை (என்பது உலக அனுபவமுடையார் நன்கறிந்தது). (தமக்குத் துணையாகப்) பெற்றவரிடத்தே (அவர் குற்றமுடையவராயினும்) பெறக் கிடைத்த பிரயோசனத்தைப் (புறக்கணித்துத் தள்ளிவிடாமல்) பெற்றுக்கொள்ளுந் தன்மை (அறிவுடைமை. அவர் குற்றமே யில்லாதவரா யிருந்தாலன்றி அவ ருதவியைப் பெற்றுக்கொள்ளாமை அறிவுடைமை யாகாது. உலகத்திலே மிகப் பெரும்பாலார் குற்றமுடையாரே) அல்லாமல் குற்றமற்றா ரென்று கூறுதற்குத் தகுதி ஆனவர் யார் இருக்கின்றார்கள் ?' என்றான்.

வில் தாங்கு வெற்பு அன்ன இலங்கு எழில் தோளா - வில்லைத் தாங்கிய (மலையுண்டேல் அம்) மலை போன்ற பிரகாசிக்கின்ற அழகுடைய தோளுடையோனே. 'அல்லவரே' என்பதில் உள்ள தேற்ற ஏகாரம் சிலர் என்பதனோடு சேர்க்கப்பெற்றது. உழை - இடம். பெற்றி - தன்மை. ஆகுநர் - ஆகுவார்: நகரம், இடை நிலை.

' "(வேத சாஸ்திரங்களிற் கூறியபடி) தவறாத நல்லொழுக்கம் பொருந்தியவர் சிலரே: அந் நல்லொழுக்க முடையவ ரல்லாதவரே பலர்: என்பது உண்மையாகும்; (நாம்) சந்திக்கப்பெற்றவரிடத்தில், நேர்ந்த நற்குணத்தைக் கிரகித்துக்கொள்ளுந் தன்மை யல்லாமல் குற்றமற்றவ ரென்று சொல்லுதற்கு உரியவர் யாவருளர்?" என்று (இராமன் இலக்குமணனை நோக்கிக்) கூறினான்......... "நெல்லுக்குமியுண்டு நீர்க்கு நுரையுண்டு — புல்லிதழ் பூவிற்கு முண்டு" என்றபடி குற்றமில்லாதவர் உலகத்தில் அரியராதலால், அவரவ ரிடமுள்ள குணங்களை மாத்திரம் நாம் கிரகித்துக் கொள்ளவேண்டு மென்று பெருமாள் இளையபெருமாளுக்குச் சமாதானங் கூறியருளின ரென்பதாம்.'—வை. மு. கோ.

முந்திய பாட்டில், சுக்கிரீவன் தமையனைப் பகைத்தமைக்குச் சமாதானங் கூறிய இராமன், இந்தப் பாட்டில், 'அப்படிப் பகைத்தாலும், சாதாரணமான சண்டை செய்யாமல், பகைவனுக்குக் கூற்றுவனாக ஒரு துணையைக் கொண்டுவந்து வைத்துக்கொண்டு சூழ்ச்சியான போர்புரிதல் குற்றமானது, அத்தகைய குற்றமுடையவனைத் துணையாகக் கொள்ளக்கூடாது' என்றதற்குச் சமாதானங் கூறினனென்க. (உசு)

வாலி சுக்கிரீவ யுத்தம்

[மேலே கூறியவாறு இராம லக்குமணர் வாலி சுக்கிரீவரைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கும்போது, அவ் இரு வீரரும் எதிர்த்தார்கள். அவர்கள், ஒருவரையொருவர் எதிர்ந்து நின்ற

நிலையில், இரு குன்றுகள் எதிரெதிர் நின்றவற்றுக்கு இணையாயினர். இருவோரும், பொருவாரானபோது, யானையொடு யானையும் யாளியொடு யாளியும் அடர்ப்பன நிகர்த்தனர். ஒருவரை யொருவர் சாரிசுற்றல், குலால சக்கரச் சுழற்சி நிகர்த்தது. உருமை*மாது பொருட்டுப் பொருதல் புரிபவரான இருசகோதரரும், திலோத்தமை யணங்கு நிமித்தம் செருச்செய்த சுந்தோபசுந்த ரென்ற சோதர ரிருவரை நேர்ந்தனர். கோபமென்ற ஒரு கொடிய குணம் இரு வடிவு கொண்டு ஒன்றோடொன்று பொருதல் போலப் பொருதனர்.

அவர்கள், புரியும் போர்வேகத்தால், மண்மேலுள்ளாரோ, விண்மேலுள்ளாரோ, கண்மேலுள்ளாரோ என்று, காண்போர் கருதாநிற்கப் பொருதார்கள். ஒருவரை யொருவர் குத்தும் ஓசை இடியோசை ஒத்தது. அவர்கள் பல்லினாற் கடித்தும், கையினாற் புடைத்தும், காலால் உதைந்தும், வாலால் வரிந்தும், மலைகொண் டெறிந்தும், மரங்கொண் டறைந்தும், தோல்வி வெல்வி துலங்காமல், நெடும்போது கடும்போர் புரிந்தார்கள். முடிவில், வாலி செயசாலியாகிச் சுக்கிரீவனை நெருக்கியபோது, அவன், தப்பியோடித் தாசரதியிடம் சார்ந்தான்.]

வாலி மார்பில் இராமன் அம்பெய்தல்

[அப்போது, இராமன், 'சுக்கிரீவ! நீயும் உன் அண்ணனும் ஒத்திருந்தமையால் உனக்கு உதவிசெய்ய ஒண்ணாமற்போயிற்று. வேற்றுமை தெரிய இந்தக் கொடிப்பூமாலையை அணிந்து செல்' என, மீண்டு சென்றான். சென்றவன் தமையனைத் தாக்க, அவன், 'தோற்றோடியவன் மீட்டும் வருவானேன்!' என்று சந்தேகித்து, இயமனும் பயமுறும்படி சினந்து நோக்கிச், சிறுநகை செய்து, தம்பியின் உயிர்த்தலந்தோறும் ஊக்கத்தோடு தாக்க, அவன், ஆற்றமாட்டானாய் இராமன் இருந்த இடத்தை நோக்கினான். நோக்கிச், செயலின்றித், தியங்கித், திகைத்திருந்த சுக்கிரீவனது சோர்வை வாலி பார்வையுற்று, அதுவே அவனை எடுத்துத் தூக்கி எற்றிக் கொல்லுதற் கேற்ற சமயமென்று, தம்பியின் இடுப்பிலொரு கையும் கழுத்திலொரு கையுமாகப் பிடித்து எடுத்துத்,

8

* உருமை - சுக்கிரீவன் மனைவி.

தன் தலைக்கு மேலாகத் தூக்கியபோது, மறைப்பற்றுத் திறப் புற்ற வாலி மார்பு குறித்து இராமன் வாளி விடுத்தான்.

மாப்பெரும் பூதங்களின் வன்மை முழுதும் வாய்ந்திருந்த வலிய வாலி மார்பினூடு, வாழைப்பழத்துள் ஊசி இறங்குதல் போல, இராமபாணம் எளிதாக நுழைந்தது. கற்பாந்த காலத் திலே, ஊழிப் பெருங்காற்றால் மோதப்பட்டு, நிலைபேர வீழும் மகமேரு நேர, இராமபாணத்தால் தாக்கப்பட்ட வாலி, நிலை குலைந்து நிலத்தில் விழுந்தான்.]

வாலி, தம்பியைப் பிடித்த கையைத் தளரவிட்டாலும்
அம்பினைப் பிடித்த கையை அகலவிடாமை

27. சையம் வேரோடு முருமுறச் சாய்ந்தெனச் சாய்ந்தான்
வைய மீதிடைக் கிடந்தபோ ரடுதிறல் வாலி
வெய்ய வன்றரு மதலையை மிடல்கொடு கவரும்
கைநெ கிழ்ந்தன னெகிழ்ந்திலன் கடுங்கணை கவர்தல்

கொண்டுகூட்டு : *உரும் உறச் சையம் வேரொடும் சாய்ந்தாலெனச் சாய்ந்தானாகி வையம்மீதிடைக் கிடந்த போர் அடுதிறல் வாலி, வெய்யவன் தரு மதலையை மிடல்கொடு கவரும் கை நெகிழ்ந்தனன்; (தன் நெஞ்சுள் நுழையும்) கடும் கணை கவர்தல் நெகிழ்ந்திலன்.*

பொருள் : *இடி வீழ்ந்ததனால் அடியோடு பேர்ந்து மலை வீழ்ந் தாற்போல, நிலைகுலைந்து வீழ்ந்து பூமிமீது கிடந்த வாலி, சுக்கிரீ வனை வலிமையோடு பிடித்த பிடி நழுவக் கை நெகிழ்ந்தான். (என் றாலும், அக் கைகளால் தன் நெஞ்சுள் நுழையும்) பாணத்தை அகப்படுத்தும் தொழிலில் சிறிதும் நெகிழ்ச்சியுற்றானில்லை.*

*சையம் - மலை. உரும் - இடி. போர் அடு திறல் வாலி - யுத்தத்தில் (பகைவரைக்) கொல்லும் வல்லமையுடைய வாலி. சாய்ந்தான், முற்றெச்சம். வெய்யவன் தரு மதலை - சூரியன் பெற்ற பிள்ளை - சுக்கிரீவன். மிடல் - வலி - பலம். கவர்தல் - பிடித்தல்; அகப்படுத்தல்—*தி. அ. *நெகிழ்ந்திலன் கடுங் கணை கவர்தல் - 'உக்கிரமான (இராம) பாணம் (தனது உடம்பையும் உயிரை யும்) பற்றிய பிடி நெகிழப் பெற்றானில்லை.'—*வை. மு. கோ.

வாலி சுக்கிரீவனைப் பிடித்த பிடியை நெகிழவிட்டாலும், இராம பாணத்தைப் பிடித்த பிடியை நெகிழவிட்டானில்லை என்ற கவி சமற்காரம் கண்டு களிக்கத்தக்கது.

இங்கே 'நெகிழ்ந்திலன் கடுங்கணை கவர்தல்' என்ற பகுதி, பாரதம் பதினேழாம் போர்ச்சருக்கம் ௨௩௬ ம் பாட்டில், அருச்சுனன் அம்பினால் கன்னனுடைய உயிர் போம்போது அவன் 'கைத்தலம் மறந்த தில்லைவிற் குனிப்பும் கடுங்கணை தொடுத்திடும் கணக்கும்' என்ற பகுதியை நினைவுறச் செய்கின்றது. 'கடுங்கணை' என்ற சொற்றொடர் இந்த ஒத்த பகுதிகளிரண்டினும் வருதல் கவனிக்கத்தக்கது. (௨எ)

வாலி, அம்பைப் பிடுங்க முயன்று வருந்தல்

[வாலி, தன் மார்பிலே பாய்ந்த பாணத்தை அப்புறம் போகவொட்டாமல் அகப்படுத்தினான். அகப்படுத்தியவன், ஆக்கிரகங்கொண்டு, 'விண்ணை இடித்து விழுத்துவேன், மண்ணை வேரோடு பேர்த்துக் கவிழ்த்துவேன்!' என்பனவாதிய வீர எண்ணங்களெண்ணி, 'அகப்படுத்தப்பட்டும் அழுந்துத லொழிந்திலாத இதனை ஏவினோன் யாவனோ?' என்று ஐயுற்றான். ஐயுற்றவன், ஏவினவனைக் காணக்கருதிக், கண்கள் கனற் பொறி சிதற, அனைத்துத் திசைகளையும் சினத்தோடு நோக்கினான். அந்த அம்பைக் கைகொண்டும், கால்கொண்டும், வால்கொண்டும் தன் முழு வலியினாலும் பறிக்க முயன்றும் பறிக்க முடியாமையால் வருந்தி மலைந்து, மலை உருளல் போலப் புரளலுற்றான்.

பின்பு, 'இதனை ஏவினோர் தேவரோ?' எனச் சந்தேகித்துத், தேவர் இத்தனை சக்தியையுடைய இதனை ஏவுவதற்குப் போதிய ஆற்றலுடையா ரல்லரென் றெண்ணி, 'இது பலர் செயலன்று, ஒருவன் செயலே, அவ் வொருவன் தேவ தேவர் மூவரையும் ஒருசேர ஒப்பான்' என்று துணிந்து, 'இந்த ஆயுதந்தான் யாவதோ அறியேன்; இது திருமால் சக்கராயுதமோ? சிவன் சூலாயுதமோ? செவ்வேள் வேலாயுதமும் என் மார்பை உருவும் வலிமையுடையதல்லவே!' என்று மனம் புழுங்கினான்.]

வாலி மார்பினின்று வாளியை வாங்கிவிடக் கண்ட விண்ணவராதியர் விம்மிதராதல்

[பின்பு, 'இந்தச் சந்தேகம் தீர, இதனைப் பறித்து வெளிப்படுத்திப் பார்ப்பே' னென்று, மற்றுமொருமுறை முயன்று சற்று வெளிவந்த பாகத்தைப் பார்க்க, அது அம்பென்ற தன்மை விளங்கியது. 'ஆயுதம் இன்னதென அறிந்தேன். ஏவினவன்

பேர் யாவதெனத் தெரிய இதனை முழுதும் பறிப்பே' னென்று தனது முழுப்பலத்தையும் செலுத்தி மூன்றும் முறை முயன்று முற்றும் வெளிப்படுத்தினன். அது கண்ட அமராதியோர், ஆச்சரிய பரவசராய்த், தாம் தாம் அந்த அருஞ்செயல் புரிந்தார் போன்று, வீராவேசம் மேவி, 'வீங்கினர்கள் தோள் *; வீரனை யார் வியவாதார்!' அம்பை அகற்றிய அக்கணமே, வெள்ளி மலையி னின்று செங் கலங்கற் புதுப்புன லருவி இரைந்து விரைந்து பாய்ந்தாற் போல, வாலி மார்பினின்று வாளி வந்த வழியே இரைச்சலோடு இரத்த வெள்ளம் புறப்படலுற்றது.]

வாலி மார்பினின்று இரத்தம் புறப்படக் கண்ட சுக்கிரீவன் கண்ணீர் சோர மண்மேல் வீழ்தல்

[அந்த இரத்தப் பிரவாகத்தைச் சுக்கிரீவன் கண்டவுடனே, அதுவரையும் தமையன் திறத்தில் பகைமையால் வன்மையுற் றிருந்த மனம், மென்மையுற்று, நீராய் நெகிழ்ந்து, பொங்கி யெழுந்து விழிவழி யொழுகினற்போலக், கண்ணீர் சோர, மண் மேல் வீழ்ந்தான். அவன் கண்ணீர்ப் பெருக்கு, பகைமையாகிய வடவாமுகாக்கினியால் அடங்கியிருந்த சகோதர வாஞ்சையாகிய சமுத்திரம், அந்த அக்கினி அவிந்ததனால் கரைபுரண்டு பெருகி னற் போன்றது.

வாலி, தான் பறித்தெடுத்த பாணத்தை 'முறித்தொழிப்பே' னென் றெண்ணிக்கொண் டெழுந்து, அது முறிக்க முடியாததென் றுணர்ந்து, அதிற் செதுக்கப்பட்டிருந்த பெயரைத் தெரியக் கருதிப் பார்க்கலானன்.]

அம்பிற் செதுக்கப்பட்டிருந்த ராம நாமத்தை வாலி காணல்

28. மும்மைசா லுலகுக் கெல்லா மூலமந் திரத்தை முற்றும்
தம்மையே தமர்க்கு நல்குந் தனிப்பெரும் பதத்தைத் தானே
இம்மையே யெழுமை நோய்க்கு மருந்தினை யிராம னென்னும்
செம்மைசேர் நாமந் தன்னைக் கண்களிற் றெரியக் கண்டான்

கொண்டுகூட்டு : மும்மைசால் உலகுக்கு எல்லாம் மூல மந்திரத்தை, தமர்க்குத் தம்மையே முற்றும் நல்கும் தனிப் பெரும் பதத்தை, தானே,

* தோள் வீங்கினர்கள் - புயங்கள் பூரித்தார்கள்.

இம்மையே, எழுமை நோய்க்கும் மருந்தினை, 'இராமன்' என்னும் செம்மை சேர் நாமம் தன்னைக் கண்களில் தெரியக் கண்டான்.

பொருள் : மூன்றுலகங்களினும் உள்ளார் அனைவருக்கும் மூலமந்திரமா யுள்ளதும், (பரமபதமாகிய - மிக மேலான சொல்லாகிய) தன்னைச் செபிப்பார்க்குத் தன்னையே (- பரமபதத்தையே - மோட்சத்தையே) தருகின்ற ஒப்பற்ற பெருமையுடைய சொல்லா யுள்ளதும், தான் (வேறொன்றின் துணையை வேண்டாமல்) தனியாகவே, இப் பிறப்பிலேதானே, எழுவகைப் பிறவி நோய்க்கும் மருந்தாயுள்ளதும் 'ராம:' என்று பிரசித்தமாகச் சொல்லப் பெற்றதுமான சிறப்புப் பொருந்திய திருநாமத்தைக் கண்களால் தெளிவாகக் கண்டான், வாலி.

மும்மைசால் - மூன்றாக அமைந்த. தமர்க்கு - தம்மவர்க்கு - தன்னைச் செபிக்கும் அடியார்களுக்கு. எழுமை - (தேவர், மனிதர், மிருகம், பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம் என்னும்) எழு (வகைப்) பிறப்புக்கள். 'தன்னை' என்பது உயர்வுபற்றி யெனினும், எதுகை நோக்கி யெனினும், இரண்டையுங்கொண் டெனினும் 'தம்மை' எனப்பட்ட தென்க. 'தமக்கு' என்ற பாடத்திற்குச், செபிப்பார் தமக்கு (—செபிப்பார்க்கு) என்று பொருள் கூறுக.

வைணவர்க்கு மூலமந்திரமாய் ஸ்ரீமந்நாராயணன் மந்திரமாகிய 'ஓம் நாராயணாய நம:' என்பதை அவர்கள் செபித்தல்போல, அவன் அவதாரமான இராமன் மந்திரமாகிய 'ராம:' என்பதையும் செபிப்பர். இதனையும் மூலமந்திர மென்றது, உபசாரமாகக் கூறப்பட்ட தெனினும், அதனோ டொத்த மகிமையுடைய தென்பதுபற்றிக் கூறப்பட்டதெனினும் பொருந்தும். இவ்விரு மந்திரங்களுள் பிந்தியதே பிரபலமாய்ப் பெரு வழக்காய்ச் செபிக்கப்படுவதாகக் காணப்படுகிறது. இது, 'பின்முளைத்த கொம்பு முன் முளைத்த காதுக்கு மேலாய்விட்டது' என்ற பழமொழியை நினைவுறுவிக்கின்றது.

'தம்மை' என்றது, 'ராம' என்ற சொல்லின் பொருளான இராமனைப் புலப்படுத்தி, அதன்மூலமாக இராமனாக அவதரித்த ஸ்ரீமந் நாராயணனைச் சுட்டி, அவனை அடையும் முத்தியாகிய 'பரமபதம்' என்பதை உணர்த்தியது. '"தம்மை" என்றது அந்த நாமத்தின் பொருளான எம்பெருமானைக் குறித்தது.'—வை. மு. கோ.

ராம மந்திரம், 'ஓம் நாராயணாய நம' என்ற மந்திரத்தினோடு ஒத்த மகிமை குறிப்பதென்பது கொண்டால், 'தனிப்பெரும் பதம்' என்றது

ஒப்பற்ற பெருமையுடைய சொல்லென்று பொருள்படும்; அது (ஓம் நாராயணாய நம), பல சொற்ரொடரா யிருத்தல்போலன்றி, இது (ராம), தனிச் சொல்லா யிருப்பதைக் கருதினால், 'தனிப்பெரும் பதம்' என்பது ஒற்றையாய் மகத்துவ முடையதாயுள்ள சொல்லென்று பொருள்படும்.

ராம மந்திரத்தைச் செபிப்பார்க்கு இப்பிறப்பின் இறுதியிலே முத்தி சித்திக்குமென்பது பற்றியும், முத்தி அடைந்தார் திரும்பப் பிறவாரென்பது பற்றியும், 'இம்மையே எழுமை நோய்க்கும் மருந்தினை' என்றார்.

பாட பேதம்: தமக்கு. (உஅ)

இராமன் பிறந்ததால் சூரிய குலம் நல்லறம் துறந்தது என்று வாலி நகையும் நாணமுங் கொள்ளல்.

29. இல்லறந் துறந்த நம்பி யெங்களுக் காகத் தங்கள்
வில்லறந் துறந்த வீரன் றோன்றலால் வேத நூலில்
சொல்லறந் துறந்திலாத சூரியன் மரபுந் தொல்லை
நல்லறந் துறந்த தென்னா நகைவர நாணுட் கொண்டான்

கொண்டுகூட்டு: '(கைகேயி சொல்லுக்காக) இல்லறம் துறந்த நம்பியும், எங்களுக்காகத் தங்கள் வில்லறம் துறந்த வீரனும் (ஆன இராமன்) தோன்றலால், வேத நூலில் சொல் அறம் துறந்திலாத சூரியன் மரபும் தொல்லை நல் அறம் துறந்தது!' என்னா, நகைவர, உள்(ளத்தில்) நாண் கொண்டான்.

பொருள்: '(கைகேயி சொற்படி காட்டுக்குப் போவதற்காகக்) கிருகஸ்தனாயிருந்தமை நீங்கி (வானப்பிரஸ்தன் ஆ)ன புருஷோத்தமனும், (என் தம்பிக்கு அனுகூலமும் எனக்குப் பிரதிகூலமுமாக,—இருவர் சேனை சகிதராய்ப் போர் செய்யாராய்த் தொந்த யுத்தஞ் செய்யுங்கால், அவ்விருவருள் ஒருவருக் குதவியாக மற்றொருவரை—வேறெவரும் தாக்கும் அதருமத்தினும் அதிக அதருமமான—மறைந்து நின்று தாக்குதலைச் செய்வானாகி,) எங்கள் பொருட்டுத் தங்கள் க்ஷத்திரிய சாதிக்குரிய யுத்த தருமத்தைக் கைவிட்ட வீரனுமான இராமனொருவன் பிறந்ததனால், வேத சாஸ்திரங்களிற் சொல்லப்பட்ட நல்ல தருமங்களை(ப் பரம்பரை பரம்பரையாக) அனுட்டித்துவந்த உயர்ந்த சூரிய குலமும் (ஏனைய இழிந்த குலங்கள் போலப்) பழமையான சுதருமத்தைத் துறந்து விட்டதே!' யென்றெண்ணி, (இராமனைப்பற்றிய இகழ்ச்சிச்) சிரிப்பு ஒருபுறம் உண்டாக, மற்றொருபுறம், 'இவன் ஒருகாலும் தருமநெறி தவறானென்ற முழு நம்பிக்கையுடன், "தருமமே

தவிர்க்குமோ தன்னைத்தானரோ?" என்று இவனைக் குறித்து என் மனைவியிடஞ் சொன்னேனே! என்னே! என் மதியீன மிருந்த வாறு!' என்றெண்ணி, மனத்துக்குள்ளே (தன்னைப்பற்றிய) வெட்கமுற்றான்.

இல்லறம் - மனைவியுடன் வீட்டிலிருந்து வாழும் கிருகத்தாச்சிரமம்: 'இல்லறம் துறந்த' என்றது மனைவியுடன் காட்டிலிருந்து வாழும் வானப் பிரத்தாச்சிரமத்தை மேற்கொண்ட என்ற பொருள் பயந்து நின்றது. துறந்த - நீக்கிய. நம்பி - ஆடவரிற் சிறந்தோன் - புருடோத்தமன். வில் லறம் - விற்போர்க்குரிய நெறி; பொதுவாய்ச் சத்திரிய தருமத்தைக் குறித் தது. தங்கள் சத்திரிய சாதிக்குரிய வில்லற மென்பது, சுருக்கமாகத் 'தங்கள் வில்லறம்' எனப்பட்டது. வேதம் நூல் - வேதங்களும் நூல் (-சாத்திரங்)களும்; வேதமாகிய நூல். மரபு - வமிசம் - குலம்.

'நகைப்பு வந்தது இகழ்ச்சி பற்றி.

> பிறர்பழியும் தம்பழியும் நாணுவார் நாணுக்கு
> உறைபதி யென்னு முலகு

என்றபடி பிறர்க்கு வரும் பழியையும் தமக்கு வந்ததாகவே கருதி நாணுதல் உயர்ந்தோ ரியல்பாதலால், இராமனது பழிக்கத்தக்க செயலைக் குறித்து வாலி நாணங்கொண்டான். அன்றி, நாண் உட்கொண்டது, இங்ஙனஞ் செய்த போலி வீரனது அம்பு பட்டதனால், தான் உயிரிழக்க நேர்தல் கருதி யென்றலுமாம்.'—வை. மு. கோ.

வாலி இராமன் செயல்பற்றி யுண்டான சிரிப்பை மறையாமல் வெளிப்படக் காட்டித், தன் செயலா லுண்டான வெட்கத்தைக் காட்டா தடக்கினு னென்பார், 'நகைவர நாணங்கொண்டான்' என்றது 'நகைவர நாண் உட் கொண்டான்' என்று ரென்றலுமாம்.

பாட பேதம்: எம்மனோர்க் காக. (உகூ)

வாலி எதிரே இராமன் வருதல்

['என்ன ஆச்சரியம்! தலைவனே தவறு செய்திட்டானே! இனித் தாழ்ந்தோர் தன்மையைச் சாற்றுவானேன்!' என்று வாலி கூறியது காதில் வீழாநிற்க, அவனெதிரே, அரசநீதி தவறாமற் காக்க அவதாரஞ்செய்த இராமன் வந்தான். வில்லோடு விண் மீது விளங்கும் மேகம் மண்மீது வந்தாற்போல வந்த கோதண்ட ராமனை வாலி கோபித்து நோக்கி, 'என்ன எண்ணி, என்ன பண்ணினுய்!' என்று ஏசுவானுய்ப் பேசுவானுனுன்.]

இராமனை வாலி இகழ்தல்

'தருமம் தடுமாற அகிருத்தியம் செய்யலாமா?' எனல்

['தன் குலப்பெருமைக்குத் தாழ்வு நேராமல் சத்தியத்தைக் காக்கத் தன் இன்னுயிரைத் தியாகஞ்செய்த தாதாவான தசரத சக்கரவர்த்திக்கு மகனாகவும், பரம தருமாத்துமாவான பரதாழ் வானுக்குத் தமையனாகவும் பிறந்தாயே! அரசனானவன் அந்நியரைக் குற்றஞ் செய்யாமல் தடுத்துத் தானே செய்தானானால், அவன் செய்தா னென்பதுபற்றிக், குற்றம் குற்றமற்றதாய்விடுமோ!

'உனது குலமோ, கருங்கடல் தோண்டினோர், கங்கையை வருவித்தோர் முதலிய பெரியோர் பிறந்த பெருஞ் சிறப்புற்றது! உனது வீரமோ, கரதூடணாதி பல ஆயிர அரக்கரை ஏகனாக எதிர்த்து வென்ற பிரதாபம் பெற்றது! உனது தலைமையோ, திரிலோகத்தையும் உட்கொண்டது! உனது குணஞ் செயல் களோ, உத்தமமானவை! உனது ஆற்றலோ அபாரமானது! உன் பெருமை இப்படியெல்லாமிருக்க, நீ எல்லா மறிந்திருந்தும் ஏது மறியாதவன்போலத், தருமம் தடுமாற இந்த அகிருத்தியத் தைச் செய்யலாமோ?]

'சீதையைப் பிரிந்ததனால் சித்தந் திகைத்து இச்செயல் செய்தாய்போலும்!' எனல்

30. கோவியற் றரும முங்கள் குலத்துதித் தோர்கட் கெல்லாம்
ஓவியத் தெழுத வொண்ணா வுருவத்தா யுடைமை யன்றோ
ஆவியைச் சனகன் பெற்ற வன்னத்தை யமிழ்தின் வந்த
தேவியைப் பிரிந்த பின்னைத் திகைத்தனை போலுஞ் செய்கை

கொண்டுகூட்டு: 'ஓவியத்து எழுத ஒண்ணா உருவத்தாய்! கோ இயல் தருமம் உங்கள் குலத்து உதித்தோர்கட்கு எல்லாம் உடைமை யன்றோ! ஆவியை, சனகன் பெற்ற அன்னத்தை, அமிழ்தின் வந்த தேவி யைப் பிரிந்த பின்பு செய்கை திகைத்தனை போலும்!

பொருள்: 'சித்திரத்திலே தீட்ட முடியாத திவ்விய செவ் விய தேக லட்சணமுடையோனே! இராச தருமங்கள் எல்லாம், உங்கள் குலத்திற் பிறந்தோ ரெல்லாருக்கும் (அவர்களுடன்

பிறந்து) உரிமையானவையன்றோ ! (அப்படியிருக்க, இப்படிச் செய்தா யாதலால்) ஆவியைப் போன்ற தேவியைப் பிரிந்த பின்பு (சித்தப்பிரமை கொண்டு, நற்செய்கை யென்று மயங்கித் தீச் செய்கை செய்யும்) செய்கைத் திகைப்பை அடைந்தாய் போலும்!

கோ. அரசன். இயல் - இயற்கை. கோ இயல் தருமம் - அரசர்(களு டைய) இயற்கைத் தருமங்கள். ஓவியம் - சித்திரம். எழுதல் - ஓவியந் தீட்டல் — த. அ. ; சித்திரித்தல். உருவம் - அழகு; வடிவம். ஆவி, அன்னம், உவமை யாகுபெயர்கள். இன்றியமையாமையிலும் மிக்க அன்பிற்கு இட மாதலிலும் ஆவியும், நடையழகில் அன்னமும், சீதைக்கு உவமை. அமிழ்து - இனிமைக்கே யன்றிக் கிடைத்தற் கருமைக்கும் உவமையாயிற்று.

வாலி, தன் ஆவிக்கே ஆபத்து விளைத்துவிட்ட இராமன்பாற், கோப மும் இகழ்ச்சியும் கொண்டா னெனினும், அவன்பால் வைத்திருந்த அன்பும் மதிப்பும் முழுதும் நீங்கினானில்லை யென்பது, இக் கவியிலும் இதன் முன் னும் பின்னும் உள்ள இராமதூடண கவிகள் பெரும்பாலனவற்றிலும் இலை மறை காய் போல் இனிது விளங்குதல் நோக்கத்தக்கது. முந்திய பாட்டுக் களில், ' தீமைதான் பிறரைக் காத்துத் தான் செய்தால் தீங்கன் றாமோ ? ' எனக் குற்றம் சுமத்தியபோதே, 'தாய்மையு மன்றி நட்பும் தருமமும் தழுவி நின்றாய் ! ' என்றும், 'குலநல முதலிய பல நலங்களும் உயர்வொப்பின்றி யுடைய நீ, " திண்மை அலமரச் செய்யலாமோ அறிந்திருந் தயர்ந்துளார் போல் ? " ' என்றும் வந்தவைகளிலும், இப்பாட்டில், 'இயற்கைப் புத்தியோ டிருந்தால் செய்யாத தீச் செயலைத் தேவியைப் பிரிந்து சித்தந் திகைத்தமை யாற் செய்தாய் போலும் ! ' என்றதனிலும், வாலிக்கு இராமன்மீதிருந்த அன்பும் மதிப்பும் முற்றும் நீங்கவில்லை யென்பது தெற்றெனப் புலப்படும்.

பின்வரும் பாட்டுக்களிலும் வாலியின் இராம பத்தித் தீபம் அருகி ஒளிர்வுற்றதேயன்றி அறவும் ஒளி அற்று அவிந் தொழிந்திடவில்லை யென் பது அறியப்படும். தன்னை இராமன் மறைந் தெய்ததற்குப், பின்னர், இலக்குமணன் சமாதானங் கூறக்கேட்டு வாலி திருப்தியடைந்தவுடனே, அந்த அன்புத் தீபம் தீடீரெனக் குதித் தோங்கியெழுந்து கொழுந்துவிட் டெரிந்து சொலிப்பதனால், அத்தீபம், எப்போதும் அவிந்ததில்லை யென்பது விசதமாம்.

பாட பேதம் : ஓவியர்க் கெழுத : உடைமை யன்றே : பிரிந்த பின்பு. (௩௦)

‘அரக்க ராசன் அகிருத்தியஞ் செய்ததற்குக்
குரக்கு ராசனைக் கொல்லல் முறையோ?’ எனல்

31. அரக்கரோ ரழிவு செய்து கழிவரே லதற்கு மாறோர்
குரக்கர சதனைக் கொல்ல மனுநெறி கூறிற் றுண்டோ
இரக்கமெங் குகுத்தா யென்பா லெப்பிழை கண்டா யப்பா
புரக்கழி விதுநீ பூண்டாற் புகழையார் பரிக்கற் பாலார்

கொண்டுகூட்டு: *‘அப்பா, அரக்கர் ஓர் அழிவு செய்து கழிவரேல், அதற்கு மாறு ஓர் குரங்கு அரசைக் கொல்ல மனுநெறி கூறிற்று உண்டோ? இரக்கம் எங்கு உகுத்தாய்? என்பால் எப்பிழை கண்டாய்? புர(த்தலு)க்கு அழிவு * இதை நீ பூண்டால் புகழைப் பரிக்கல்பாலார் யார் (உளர்!)*

பொருள்: *‘அரக்கர் அரசன் ஓர் அகிருத்தியத்தைச் செய்து (அகப்படாமல் தப்பிப்) போய்விட்டால், (அவனைக் கண்டுபிடித்துத் தண்டிப்பதைவிட்டு,) அதற்கு மாறாக, (அகப்பட்ட) குரங்கு ராசனைக் கொல்லும்படி மனுதர்மசாஸ்திர முறை கூறியிருக்கிறதோ? (உனக்கு இயல்பாக உள்ள) இரக்கத்தை எங்கே கவிழ்த்துவிட்டாய்? (என்னைக் கொல்லுதற்கு) என்னிடத்தில் என்ன குற்றத்தைக் கண்டாய்? (அரசர்க்குரிய காத்தற் றொழிலுக்கு எதிரிடையாக என்னைக் கொன்று) காத்தலை அழித்தலான இச் செயலை நீயே மேற்கொண்டாயானால், (காத்தற் றொழிலாலுண்டாம்) புகழைப் பூண்பார் வேறு யார் இருக்கின்றார்!*

அழிவு - அகிருத்தியம்: அழிம்பு என உலகில் வழங்குவது. ‘அரக்கர் ஓர் அழிவு செய்து’ என்றது இராவணன் சீதையைக் கவர்ந்ததைக் குறித்தது. கூறிற்று - கூறினது. உகுத்தல் - சிந்தல். புரக்கழிவு என்பதில் புர என்பதை(ப் புரத்தல் அதாவது காத்தல் என்று பொருள்படும்) முதனிலைத் தொழிற்பெயராகக் கொண்டு, புரக்கு அழிவு எனப் பிரித்துப் புரத்த(ற் றொழி)லுக்கு அழிவு எனக்கொண்டு பொருள் கூறப்பட்டது. புரத்தல் வல்லனென்னும் பொருளுடைய புரவலன் என்பதில் புர முதனிலைத் தொழிற்பெயரா யிருத்தல் காண்க. அறக் கழிவு (- உலக வழக்கத்திற்குப் பொருத்தமில்லாமை. தொல். பொ. 218. — த. அ.) என்பதில், அறம் உலக வழக்கத்தொடு பொருத்தமுடைமை எனக்கொண்டு அறத்தின் கழிவு (- அழிவு — த. அ.) அறக்கழிவு என வழங்கலாயின தெனலாம். அது

---

* *‘புரக்கு அழிவு’ என்ற பாடம் திரிசிரபுரம், வி. கோவிந்த பிள்ளை (இரக்தாக்ஷி வருஷப்) பதிப்பிற் கண்டது.*

போலப் புரக்(குதலின்) கழிவு (- அழிவு) புரக்கழிவு எனப்பட்டதெனலுமாம். அறத்துக்கு மாறான பாவம் அறக்கடை யெனப்படுவது போலப் புரத்தலுக்கு மாறான அழித்தல் புரக்கழி வெனப்பட்டதெனலுமாம். பரித்தல் - தரித்தல். குரங்கு அரசு, குரக்கரசு என வலித்தல்விகாரமுற்றது.

'உனக்கு இயல்பான இரக்கம் நீங்காதிருந்தாயானால், நிரபராதியான என்னைக் கொன்றிரா' யென்பான், 'இரக்கமெங் குகுத்தாய் ?' என்றான்.

'ஐயோ! புகழெனப்பட்டவை யனைத்தையும் பூண்டிருந்த நீ இந்த அநியாயக் கொலை செய்து அபகீர்த்திக்காளாய் விட்டாயே! இனிப் புகழைப் பூணத்தக்கா ரெவருமில்லையே!' என் றிரங்குவானாய்ப் 'புரக்கழி விதுநீ பூண்டாற் புகழையார் பரிக்கற் பாலார்!' என்றான்.

முன் 'திகைத்தனை போலும் செய்கை' என்று குறிப்பாகக் கூறியதை வெளிப்படையாகக் கூறுவானாய், 'மனைவியை வெளவினவனை மாய்க்கும் கிரமமான செயலைச் செய்யாமல் விட்டு, அதற்கு மாறாக, அக்கிரமமாகக், குற்றஞ் செய்யாதவனைக் கொன்றா' யென்றான்.

பாட பேதம்: அதற்கு வேறோர்: குரக்கினத் தரசை: பரக்கழி. (௩க)

'விதி விலக்குகள் மெலியவர்க்கு மட்டுமோ?' எனல்

32. ஒலிகட லுலகந் தன்னி லூர்தரு குரங்கின் மாடே
கலியது காலம் வந்து பரந்ததோ கருணை வள்ளால்
மெலியவர் பால தேயோ வொழுக்கமும் விழுப்பந் தானும்
வலியவர் மெலிவு செய்தாற் புகழன்றி வசையு முண்டோ

கொண்டுகூட்டு: 'கருணை வள்ளால்! ஒலி கடல் உலகந் தன்னில் கலியது காலம் ஊர்தரு குரங்கின்மாடு வந்து பரந்ததோ? ஒழுக்கமும் (அதனாலாம்) விழுப்பமும் மெலியவர் பாலதேயோ? வலியவர் (எளியவரை) மெலிவு செய்தால் (அவர்க்குப்) புகழ் அன்றி வசையும் உண்டோ?

பொருள்: 'உலகத்திலே (இப்போது நிகழ்வது, தீமை நிகழாத திரேத யுகம். அப்படிப்பட்ட யுகத்தில் இப்படிப்பட்ட குரங்குக் கொலை நிகழ்ந்ததனால்) கலிகாலம் குரங்குகளுக்கு மட்டும் வந்ததோ? நல்லொழுக்கமும் அதனால் உண்டாம் சிறப்பும் எளியவரிடத்து மட்டும் இருக்கவேண்டியனவோ? வலியவர் எளியவரை மெலிவு உறும்படி வருத்தஞ் செய்தால், அதனால் அவர்க்குப் புகழ் உண்டாவது அன்றிப் பழி உண்டாவதும் உண்டோ!

ஒலி கடல் உலகம் - ஒலிக்கின்ற கடல் (சூழ்ந்த) பூமி. ஊர்தல் - ஏறுதல்—பெரும்பாணாற்றுப்படை. ஊர்தி - ஏறப்படுவது—சிந்தா. ஊர்தரு குரங்கு - (மரம்) ஏறும் குரங்கு. 'அம்பு எய்தல் காண்டும்' என்றது 'எய்தல் காண்டும்' (மராமரப் படலம்) என்றது போல, 'மரம் ஊர்தரு (-மரமேறும்) குரங்கு' என்றது 'ஊர்தரு குரங்கு' எனப்பட்டது. 'ஊர்தரு குரங்கு' என்பதற்கு 'ஓடித்திரிகின்ற குரங்கு' என்பது முந்திய உரை. தரு, துணைவினை. மாடு, ஏழனுருபு. அது, ஆறனுருபு: கலியது காலம் - கலிபுருடனுடைய காலம் - கலியுகம். வள்ளல் - (தன்னிடம் வந்த யாசகர் எவரையும்) வரையாது (-விலக்காமல்) கொடுப்போன். வள்ளல், விளிவேற்றுமையில் வள்ளால் என ஈற்றயல் நீண்டது. கருணை வள்ளால் - கிருபையுடைய கொடையாளனே. 'மெலியவர் - அறிவு ஆண்மை ஆற்றல் என்ற வற்றிற் குறைபாடுடையவர். அவற்றில் மிக்கவர், வலியவர்'. ஒழுக்கம் நல்லொழுக்கத்தைக் குறித்தது. விழுப்பம் இங்கே ஒழுக்கத்தா லுண்டாம் சிறப்பைக் குறித்தது. 'ஒழுக்கம் விழுப்பம் தரலால்' எனக் குறளில் வருதல் காண்க. மெலிவு ஆகுபெயராய், மெலிவுறுதற்குக் காரணமான வருத்தத்தைக் குறித்தது. மெலிவு - இழிதொழி லென்றது முந்திய உரை.

வாலி, தன்னை அக்கிரமமாகக் கொன்ற இராமன் 'வாலியை வென்ற சூரன்' எனப் புகழப்படுவானன்றி இகழப்படா னென்பதைக் கோபத்தோடும் வருத்தத்தோடும் மனத்துட்கொண்டு, 'வலியவர் மெலிவுசெய்தாற் புகழன்றி வசையும் உண்டோ?' என்றான். இக் கருத்து நன்கு விளங்க அவன் இதன்பின் 'அறைகழல் அலங்கல் வீர ராயவர் புரிவ தாண்மைத் துறையென லாயிற் றன்றே' என்பதைக் காண்க.

இவ் விரு வாக்கியக் கருத்துக்களோடு இதன்முன் கூறப்பட்ட 'தீமைதான் பிறரைக் காத்துத் தான் செய்தாற் றீங்கன்றாமே'* என்ற வாக்கியக் கருத்து, தீமை நன்மையாகத் தவறுபடப் பாவிக்கப்படுந் தன்மையில் ஒப்பு நோக்குதற் குரியது. இம் மூன்று வாக்கியங்களும், வலியவரது நற்செயல்களையே யன்றித் தீச்செயல்களையும் பகுத்தறிவில்லாத உலகம் பாராட்டுகிறதே யென்று வாலி மனம் எரிந்து வருந்தி மொழிந்தனவாய், இராமனை,

வானுயர் தோற்றம் எவன்செய்யும் தன்நெஞ்சம்
தான்அறி குற்றப் படின்

என்ற குறட் கருத்துப்படி வருத்தமுறுத்தக் குறித்தனவா யுள்ளன.

பாட பேதம்: உறைதரு குரங்கு: வந்து கலந்ததோ: வலியவர் பிழையைச். (௬௨)

* வாலி வதைப் படலம், ௭௬.

'புதுமையான் செயல்கள் புரிந்தாய்!' எனல்

33. கூட்டொரு வரையும் வேண்டாக் கொற்றவ பெற்ற தாதை
பூட்டிய செல்வ மாங்கே தம்பிக்குக் கொடுத்துப் போந்து
நாட்டொரு கருமஞ் செய்தா யெம்பிக்கிவ் வரசை நல்கிக்
காட்டொரு கருமஞ் செய்தாய் கருமந்தா னிதன்மே லுண்டோ

கொண்டுகூட்டு: *கூட்டு ஒருவரையும் வேண்டாக் கொற்றவ! பெற்றதாதை (உனக்குப்) பூட்டிய செல்வத்தை ஆங்கே தம்பிக்குக் கொடுத்துப் போந்து, நாட்டில் ஒரு கருமஞ் செய்தாய்! எம்பிக்கு இவ் அரசை நல்கிக், காட்டில் ஒரு கருமஞ் செய்தாய்! இதன் மேல் கருமம் உண்டோ?'*

பொருள்: *'ஏ! அசகாயசூர! உன்னைப் பெற்ற பிதாவான தசரத சக்கரவர்த்தி உனக்கு உரியதாக்கிய அரசுச் செல்வத்தை உன் தம்பி பரதனுக்குக் கொடுத்துவிட்டுக் காட்டுக்கு வந்ததனால், நாட்டிலே ஒரு (புதுமையான) காரியத்தைச் செய்தாய்! என் தம்பி சுக்கிரீவனுக்கு இந்த எனது அரசுச் செல்வத்தைக் கொடுத்ததனால், காட்டிலே ஒரு (புதுமையான) காரியத்தைச் செய்தாய்! (புதுமைமிக்க) இப்படிப்பட்ட செயலினும் மேலான (புதுமையுடைய) செய லுண்டோ!*

கொற்றம், வெற்றியன்றிப் பலத்தையும் குறிக்கும்: இங்கே பலத்தைக் குறித்ததாகக் கொள்ளல் பொருத்தமானது. 'வேறொருவரது சகாய மில்லாமல் பகைவரை வெல்லும் பலமுள்ளவன்' என்ற பொருளுடைய அசகாய சூரன் என்ற வடமொழித் தொடர்க்கு, 'கூட்டொருவரையும் வேண்டாக் கொற்றவன்' என்ற மொழிபெயர்ப்பு நெஞ்சுள் நெடிது நின்று நிரம்பவும் மகிழ்வூட்டும் நீர்மையதா யிருத்தல் காண்க. ஆங்கே - அப்பொழுதே அல்லது அந்த இடத்திலேயே. போந்து - வந்து. கருமம் - செயல்.

பெரும்படைகளோடு தன்னை எதிர்த்த கர தூடணதியரை இராமன் எவரொருவர் துணையு மில்லாமல் தன்னந்தனியனாய் நின்று பொருது கொன்று வென்ற போர்த்திறத்தை நினைந்து, 'கூட்டொருவரையும் வேண்டாக் கொற்றவ!' என்றான்.

'நாட்டிலேயன்றிக் காட்டிலேயும் வரன்முறைக்கு மாறாகத் தமையனரசைத் தம்பிக்குக் கொடுக்கும் புதுமையான செயல்கள் புரிந்தாய்! அச் செயல்களால், நாட்டிலே, வேண்டுமென் றன்றி, ஓர் அரசனையும், காட்டிலே, வேண்டுமென்றே, ஓர் அரசனையும் உயிரொழியச் செய்தாய்! இப்படிப்பட்ட

அபூர்வமும் அநியாயமுமான செயல்களினும் அதிகமான செயல் யாதிருக்கின்றது !' என்று இராமனை நோக்கி வாலி பரிகாசமும் பரிதாபமும் ஒருங்கு புலப்பட உரைத்தா னென்பது கருத்து.

'நாட்டிலே தன்னலங் கருதாது, தியாகமூர்த்தியாய், எல்லாச் செல்வங்களையுந் தன்னுட்கொண்ட அரசப் பெருஞ்செல்வ மனைத்தையும் தம்பிக்குக் கொடுத்துப் பரம பரித்தியாகபர னெனப் பார் முழுதும் பரவிய மிக வுயர்ந்த புகழ்பெற்ற நீயே, காட்டிலே இராவணனை வெல்லச் சுக்கிரீவன் துணையை வேண்டிச், சுயகாரியதுரந்தரனாய், உன்னை எதிராத நிரபராதியான என்னை மறைந்துநின்று கொல்லும் மாபாதகத்தைச் செய்து, மிக இழிந்த வெம்பழியுற்றாய்! அச்செயலினுஞ் சிறந்தது மில்லை. இச்செயலினும் இழிந்ததுமில்லை. இப்படி ஒன்றற்கொன் றெதிரிடையான செயல்கள் செய்தலில் உனக்கு மேற்பட்டவர் யார் இருக்கின்றனர் !' என்று விரித்துப் பொருள்கூற இக்கவி இடந்தருகின்றது. (௩௩)

'இப்படி என்னை வஞ்சித்த நீ
எப்படி இராவணனைக் கோபிக்கலாம்?' எனல்

அறைகழ லலங்கல் வீர ராயவர் புரிவ தாண்மைத்
துறையெனு லாயிற் றன்றே தொன்மையி னன்னூற் கெல்லாம்
இறைவ நீ யென்னைச் செய்த தீதெனி லிலங்கை வேந்தன்
முறையல செய்தா னென்று முனிதியோ முனிவி லாதாய்

கொண்டுகூட்டு: '*அறைகழல் அலங்கல் வீரர் ஆயவர் புரிவது ஆண்மைத் துறை எனல் ஆயிற்றே! தொன்மையின் நல் நூற்கு எல்லாம் இறைவ! முனிவு இலாதாய்! நீ என்னைச் செய்தது ஈது எனில், இலங்கை வேந்தன் முறைஅ(ல்)ல(து) செய்தான் என்று முனிதியோ?*

பொருள்: '*("கருடி கற்றவன் இடறிவிழுந்தால் அதுவும் ஒரு வித்தை" என்பதுபோல) வீரர் செய்வது (பேடிச்செயலானாலும்) வீரமென(ப் பகுத்தறிவில்லாத உலகத்தாராற் சொல்லப்பட) லாய்விட்டதே! (பேடித்தனமாக என்னை மறைந்து கொன்ற உன்னை "வாலியை வென்ற வீரன்" என்று உலகத்தார் சொல்வார்க ளென்றவாறு.) பழைய நீதி நூல்களுக் கெல்லாம் போதனை குரு (என்னுமாறு அவைகளை நன்கு கற்று வல்லவன்) ஆனவனே! நீ என் திறத்திற் செய்தது இது—இப்படி வஞ்சகமாக மறைந்து கொலைசெய்தது—என்றால் (நீ அறியாமல், வஞ்சனையால் உன் மனைவியைக் கவர்ந்த) இராவணன் அக்கிரமஞ் செய்தானென்று கோபிக்கக் கடவையோ?*

அறை கழல் - ஒலிக்கின்ற வீரகண்டை. அலங்கல் - (வெற்றி) மாலை. துறை - ஒழுங்கு - முறை. ஆண்மைத் துறை - வீரர் முறை; வீரச் செயலை யுணர்த்தி நின்றது. அன்றே - அல்லவா: அன்று, ஏ, அசைக ளெனலுமாம். தொன்மை - பழமை. 'நன்னெறி' 'நல்வழி' என்பவை நீதிநெறி நீதிவழி எனப் பொருள்படல்போல, 'நன்னூல்' நீதிநூல் (- நீதி சாஸ்திரம்) எனப் பொருள்பட நின்றது. இறைவன் - குரு: தலைவனென் பது முந்திய உரை. முறை - கிரமம். முறை அல என்பதில் அல என் பதை அல்லது என்பது லகர ஒற்றும் தகர உகரமும் தொக்கு வந்ததாகக் கொண்டு பொருள் கூறப்பட்டது. திருவவதாரப் படலம் ௧௩-ம் பாட்டில் 'வருவது வருவ' எனப்பட்டதுபோல, இங்கே 'அலது' 'அல' எனப்பட்டது. 'முறை அல' என்பதற்கு 'நீதியல்லாத காரியங்கள்' என்பது முந்திய உரை. முனிதல் - கோபித்தல். 'முனிவு இலாதாய்' என்பது 'தீ, கொலை, களவு, கள், காமம், பொய் என்னும் பஞ்சமாபாதகங்களுள் முதலாவதான கொலைப் பாவஞ் செய்தவனாதலால், நான்காவதான காம சம்பந்தமான பாவஞ்செய்த இராவணனைக் கோபிக்கத் தகுதியில்லாதாய்' என்ற பொருள் குறித்து நின்றது: '(இயல்பிற்) கோபமில்லாதவனே' என்பது முந்திய உரை.

இராமன் தன் பெருங் குற்றத்தை யுணரானாய் இராவணனது சிறு குற்றத்தைப் பெரிதாகப் பாராட்டுவதாக வாலி கூறியது, 'தன் கண்ணில் உத்திரங் கிடப்பதை யறியாமல், பிறன் கண்ணில் துரும்பு இருப்பதைச் சுட்டிக்காட்டல் போல' என்னும் ஆங்கிலப் பழமொழியை நினைவுகூரச் செய்கின்றது. (௩௪)

'அகாரணமாக வாரபட்சம் செய்தாய்' எனல்

['உன்திறத்தில் ஒருதன்மையரான இரு சகோதரரேங்க ளுள் ஒருவன்மேல் அன்பு செலுத்தி, ஒருவன்மேல் அம்பு செலுத்தல், தருமமோ? வீரமோ? உன் பூமிக்கு என் தேகம் பாரமோ? எது கருதி இது செய்தாய்?]

'சிங்கத்தைவிட்டு முயலைத் துணைக்கொண்டாய்' எனல்

35. செயலைச் செற்ற பகைதெறு வான்றெறிந்
தயலைப் பற்றித் துணையமைந் தாயெனில்
புயலைப் பற்றுமப் பொங்கரி போக்கியோர்
முயலைப் பற்றுவ தென்ன முயற்சியே

கொண்டுகூட்டு: '(உனது) செயலைச் செற்ற பகை(வனைத்) தெறு வான் தெரிந்து, அயலைத் துணைப்பற்றி அமைந்தாய் எனில், (அது), புயலைப்

பற்றும் அப் பொங்கு அரி போக்கி, ஓர் முயலைப் பற்றுவது (ஆம். இது) என்ன முயற்சி !

பொருள் : '(நீயும் இலக்குமணனும் சீதையைக் காத்திருந்த) காவலை (மாய மானால்) அழித்த (எனவே, அவளை விட்டு உங்களைப் பிரியச் செய்து அவளைக் கவர்ந்த) பகைவனை இராவணனை அழித்தற் பொருட்டு வேறொருவனை (சுக்கிரீவனை)த் துணையாகக் கொண்டாயென்றால், அது, சிங்கத்தை விட்டு முயலைப் பற்றுவது (போலாம்). இது என்ன (பைத்தியகார) முயற்சி!

செயல் - காவல்.—பிங்கலந்தை; ஒழுக்கம்.—சூடா.: இப்பொருள் கொண்டால், 'செயலைச் செற்ற பகை' என்பது (பிறனில்விழையாமையாகிய) ஒழுக்கத்தை(ச் சீதையைக் கவர்ந்ததனால்) அழித்த என்று பொருள் படும். செற்ற - அழித்த. பகை - பகைவன். தெறுவான் - அழிக்கும்படி. தெரிந்து - ஆராய்ந்து. அயல் - அந்நியம்; ஆகுபெயராய் அந்நியனை உணர்த்தியது. புயல் - மேகம். பற்றும் - பிடிக்கும். பொங்குதல் - (கோபத்தாற்) கொதித்துக் கிளர்தல். அரி - சிங்கம். அப்பொங்கரி என்பதில் அ, பலரறிசுட்டு: பிரசித்தமான என்னும் பொருட்டு.

புயலைப் பற்றும் பொங்கு அரி - (விசைகொண்டு குதித்து மேற்பாயுங்கால் ஆகாயம் அளாவ எழும்பி) மேகத்தைப் பிடிக்கின்ற கோபத்தோடு கூடிய சிங்கம்.

புயல், 'மேகம்போன்றதான யானை' என்பது முந்திய உரை. அவ்வுரை 'புயல் - உவமையாகுபெயர்; கரிய பெரிய வடிவிலும் மதமழை சொரிதலிலும் பெருமுழக்கத்திலும் உவமை' எனல் காண்க.

பாடபேதம் : பற்றுறும் பொங்கரி. (௩௫)

'நீ பிறந்து சூரியகுலத்தை மறுவுற்றதாக்கினாய்' எனல்

36. காரி யன்ற நிறத்த களங்கமோன்
றூரி யன்ற மதிக்குள தாமென்ப
சூரி யன்மர புக்குமோர் தோன்மறு
ஆரி யன்பிறந் தாக்கினை யாமரோ

கொண்டுகூட்டு : 'கார் இயன்ற நிறத்த களங்கம் ஒன்று ஊர் இயன்ற மதிக்கு உளது என்ப; சூரியன் மரபுக்கும் ஓர் தொல்மறு ஆரியன் பிறந்து ஆக்கினை.

பொருள் : 'கருமை பொருந்திய நிறத்தையுடைய களங்கம் ஒன்று சந்திரனுக் குள்ளதென்று சொல்வார் (உலகத்தோர்) : (மறுவற்ற சூரியனுக்கும் மறுவுண்டென்று சொல்லும்படி, அச் சூரியனை மூலபுருடனாக வுடைய) சூரியகுலத்துக்கு ஒரு மறுவை அக்குலத்தில் நீ பிறந்து உண்டாக்கினாய்! (இது இரங்கத்தக்கது).

கார் - கருமை. இயன்ற - பொருந்திய. ஊர் - ஊர்கோள்—பரிவேடம். தொல் - பழமையான. மறு - குற்றம். புதிதாக இராமனால் உண்டான மறுவைத் தொல்மறு (- பழமையான மறு) என்பது முரணாயிருத்தற்குச் சமாதானமாகத் 'தொல் மறு - முன்னோரனைவரையும் தொடரும் மறு' என்பது முந்திய உரை. '(பழிச்) சொல் (ஆகிய) மறு' என்பது 'தொல் மறு' என (ச என்ற எழுத்துக்குப் பதிலாகத் த என்று) எழுதுவோரால் மாற்றி எழுதப்பட்டதுபோலும். மறு களங்கத்துக்கும் குற்றத்துக்கும் பொதுவாய்ச், சூரியனைக் குறிக்கும்போது களங்கம் என்றும், சூரியகுலத்தைக் குறிக்கும்போது குற்றம் என்றும் பொருள்படக் கூறிய நயம் காண்க. ஆரியன் - தலைவன். ஆம், அரோ, அசைகள்.

பாட பேதம் : களங்க நிறத் தொன்மை : உள தாமென. (௩௬)

'மறைந்து நின்று கொன்ற நீ வீரரேறுபோல் நிற்கின்றயே!' எனல்

37. மற்றொ ருத்தன் வலிந்தறை கூவவந்
துற்ற வென்னை யொளித்துயி ருண்டநீ
இற்றை யிற்பிறர்க் கும்மிக லேறெனா
நிற்றி போலுங் கிடந்த நிலத்தரோ

கொண்டுகூட்டு : 'ஒருத்தன் வலிந்து அறை கூவ, வந்து உற்ற என்னை ஒளித்து உயிர் உண்ட நீ, இற்றையில், (யான்) கிடந்த (இந்) நிலத்து, பிறர்க்கும் இகல் ஏறு என நிற்றி!

பொருள் : 'சுக்கிரீவன் வலியப் போர் செய்தற் கழைத்ததனால் வந்து சேர்ந்த என்னை (வஞ்சகமாக) மறைந்து (நின்று அம்புவிட்டுக்) கொன்ற நீ, (இந்த அதம அதர்ம காரியத்தைச் செய்த) இன்றைத் தினத்திலேயே, (உன் அநியாயச் செயலாற் கொல்லுண்டு யான்) கிடக்கின்ற இந்த இடத்திலேயே, பிற வீரரெல்லாருக்கும் வலிய ஆண்சிங்கம் போல வெட்கமின்றி (இறுமாந்து) நிற்கின்றாயே!

அறைகூவல் - போர்செய்தற் கழைத்தல். இற்றை - இன்றைத்தினம். இகல் - வலி. ஏறு, சிங்கம் முதலிய மிருகங்களின் ஆண்; இங்கே அவற்றுட் சிறந்த ஆண்சிங்கத்தைக் குறித்தது. நிற்றி - நிற்கின்றாய். போலும், ஒப்பில் போலி. அரோ - ஈற்றசை. (௩எ)

'வாலியை அழித்தா யல்லை; தரும வேலியை அழித்தாய்' என்ல்

38. நூலி யற்கையு நுங்குலத் துந்தையர்
போலி யற்கையுஞ் சீலமும் போற்றலை
வாலி யைப்படுத் தாயலை மன்னற
வேலி யைப்படுத் தாய்விறல் வீரனே

கொண்டுகூட்டு: 'விறல் வீரனே! நூல் இயற்கையும், நும் குலத்து உந்தையர் இயற்கையும் (அவர்) சீலமும், போற்றலை. வாலியைப் படுத்தாய் அல்லை! மன்(னர்) அற வேலியைப் படுத்தாய்!

பொருள்: '(மறைந்து நின்று என்னைக் கொன்றதனால்) தரும சாஸ்திர முறையையும், உங்கள் குலத்து முன்னோர் அனுசரித்த முறையையும், அவர்கள் நல்லொழுக்கத்தையும் பாதுகாத்தவ னல்லாதவனாயினாய். வாலியைத் தொலைத்தா யல்லை! தரும வேலியைத் தொலைத்தாய்!

இயற்கை - முறைமை. நும் - உங்களுடைய. உந்தை - உன் தந்தை. உந்தையர் - உங்கள் முன்னோர். இராமனையும் அவன் தம்பியரையும், உளப்படுத்தி 'நும் குலத்து உந்தைய' ரென்றான். 'வாலியை' யென்றது 'என்னை' யென்றபடி. வாலி, தன்மைப்படர்க்கை. இவ்வாறு தன்னைப் பிறன் போலக் கூறியதனால் ஒருவகை நயம் அமைதல் கவனிக்கத்தக்கது. மன் அறவேலி - அரசர் - (ஏற்படுத்திய) தருமமாகிய (காப்பு) வேலி. விறல் - வெற்றி; வலி.

'உன் செயல், தோற்றத்திற் குரங்கினைக் கொன்றதாய், உண்மையில், அறத்தை அழித்ததாயுள்ளது' என்பது குறிப்பு.

உண்மையாக வாலியைக் கொன்றிருக்கவும், 'வாலியைக் கொன்றா யல்லை'யென முரண்படக் கூறி, அதிசயமுண்டாக்கிப், பின்பு, அக் கொலை சிறிது, அதனால் விளையும் பயன் பெரிது, அப்பயன் இன்றளவும் அழியாது நிலையிலிருந்த தரும வேலியை அழித்ததா யுள்ள தென்று கூறிய சாதுரியம் பாராட்டற்பாலது. அரசன் அக்கிரமஞ் செய்தால், அவனைப் பிறர் பலர் பின்பற்றுவர்: அதனால் தருமம் அழிந்துவிடு மென்பது கருத்து.

பயிர் குடியாக, ராஜநீதி வேலியாக, பயிரைக் காக்கும் காவற்காரன் குடியைக் காக்கும் அரசனாக,—வேலி அழிக்கப்பட்டால் மிருகங்கள் மேய்தலுக் குள்ளாகிப் பயிர் அழிந்துவிடல் போல, நீதி அழிக்கப்பட்டால் தீயோர் கொடுமைக்குள்ளாகிக் குடி அழிந்துவிடு மென்றும், காவற்காரனே வேலியை அழித்தாற்போல அரசனே நீதியை அழித்தால், அதுபோன்ற விபரீத வினை வேறு யாதுளது! என்றும் விரித்துக் கூறுதற்குரிய கருத்தைச் சுருக்கமான சொற்களால் எளிது விளங்க இனிது கூறியிருக்கும் நயம் கூர்ந்து நோக்குதற் குரியது.

பாட பேதம்: *வேலியைப் பிரித்தாய்.* (௩௮)

'மனைவியைக் காவாத வில்லை வைத்திருந்தது, ஆயுதமில்லாதவன் மார்பில் அம்புவிடவோ?' என்னல்

39. தார மற்றொரு வன்கொளத் தன்கையில்
பார வெஞ்சிலை வீரம் பரிப்பதேன்
நேரு மன்று மறைந்து நிராயுதன்
மார்பி னெய்யவோ வில்லிகல் வல்லதே

கொண்டுகூட்டு: *'(உன்) தாரத்தை மற்றொருவன் கொள்ள, பார வெம்சிலையைக் கையில் வீரத்தோடு பரிப்பதுஎன்? நிராயுதன் மார்பின், நேர்(ஆக) அன்று, மறைந்து எய்யவோ (நீ) வில் இகல் வல்ல(மையுடைத்தாயிருப்ப)து!'*

பொருள்: *'நீ கொண்ட மனையாளை மற்றொருவன் கவர்ந்து கொள்ள (வொட்டாமல் தடுத்து அவனைக் கொன்று, அவளைக் காக்கப் பயன்படாமல், வீண்) பாரமும் கொடுமையுமா யுள்ள வில்லைக் கையில் வீரத் (தோற்றத்)தோடு தாங்கியிருப்பது எதற்காகவோ? (உனக்கு ஒரு தீங்கும் செய்யாதிருப்பதே யன்றி) ஓராயுதமு மில்லாதிருப்பவன் மார்பிலே (வீரர்போல நேரில் நின்று எய்தலே நீதியற்றதாயிருக்க), நேராக அல்லாமல், (பேடிகள் போல வஞ்சகமாக,) மறைவாக நின்று எய்தற்கோ நீ விற்போர் வன்மையுடைத்தா யிருப்பது!'*

தாரம் - மனைவி. பரித்தல் - தாங்குதல். இகல் - போர். தாரம், சிலை, இரண்டாம் வேற்றுமைத் தொகை. வீரம், மூன்றாம் வேற்றுமைத் தொகை.

வாலி இராமனை நோக்கி, 'பாரியைப் பறிகொடாது பாதுகாத்தற்குப் பயன்படுத்தப்படாத பார வில்லை, வீரர்போல, என் இறுமாப்போடு ஏந்தி யிருக்கின்று யென்றெண்ணினேன்; எண்ணித் தெளிந்தது யாதெனில், அவ் வில்லைத் தொழிற்படுத்தாது சும்மா வைத்திருத்த லாகாதென்று நிராயுதனை மறைந்து கொல்லுதற் குபயோகித்துச், செய்யக் கடவதைச் செய்யாது விட்டதே யன்றிச், செய்யா தொழியக் கடவதைச் செய்து, விதி விலக் கிரண்டையுமே மீறினு யென்பது!' என்று னென்க.

இராமன் தன்னை மறைந் தெய்ததற்காக, வாலி மனமெரிந்து வருந்திக் கூறிய 'திகைத்தனை போலும் செய்கை' யென்றற்றொடக்கத்த ஏச்சுப் பேச்சின் இறுதியாக அதன் மகுடமென்னும்படி இப்போது கூறியதினும் அதிக பலமாக ரோசமுண்டாகும்படி இழித்து ஏளனஞ் செய்தல் இயலாததா யிருத்தல் நோக்கத்தக்கது.

பாட பேதம்: வீரம் பழிப்பதே: வில்லிகள் வல்லரே. (௩௧)

வாலிக்கு ராமன் மறுமொழி கூறல்

'குற்றமில்லாத் தம்பியைக் கொல்வது குறித்தாய்' என்றல்

['உன் குலப் பகைஞனை மாயாவியைக் கொல்லப் பாதாளத் துள்ளே போன நீ, நெடுங்காலம் திரும்பாமையால், இறந்தா யென்று உன்குலப் பெரியோர் உன் தம்பியை "அரசாள்க" என, "மன்னனை மாய்த்தவனை மாய்ப்பேன், மாய்க்கொணு தெனில் மாள்வேனே யன்றி ஆளேன்" என மறுக்க, அப்பெரியோர் அரசை வற்புறுத்திக் கொடுத்ததுண்டு; அவன் (மனமொடு) கொண்டதில்லை. நீ திரும்பிவந்தபோது, விரும்பி வரவேற்று வணங்கி, "உன் அரசை ஒப்புக்கொள்" என்றனன். அவன் தம்பி யென்ற அன்பு சற்றும் இல்லாயாய் அவன் குற்றமற்றவ னென் றறிந்தும், கொல்லப் புகுந்தாய். அஞ்சி அபய மென்றும் அருளினு யில்லை. தோற்றன னென்று தொழுதும் கூற்றுவன்போலக் கொல்வது குறித்தாய். உயிர் தப்ப ஓடியவனை உய்யவிடாது தொடர்ந்தாய். இப்போது அவன் உயிரோடிருப்பது, "இந்த மலைக்கு வாலி வந்தால் இறந்திடுக" என மதங்கமுனி சபித்த சாபத் தடையுடைய மலையை அடைந்திருப்பதனாலன்றி நீ மன மாரக் கொல்லாமல் விட்டிருத்தலா லன்று.]

'பிறன் இல் விழைவானுக்குப் பெருமை யில்லை' எனல்

40. ஈர மாவது மிற்பிறப் பாவதும்
வீர மாவதுங் கல்வியின் மெய்ந்நெறி
வார மாவது மற்றொரு வன்புணர்
தார மாவதைத் தாங்குந் தருக்கதோ

கொண்டுகூட்டு: *'ஈரம் ஆவதும் இற்பிறப்பு ஆவதும் வீரம் ஆவதும் கல்வியின் மெய்ந்நெறி வாரம் ஆவதும் மற்றொருவன் புணர் தாரம் ஆவதைத் தாங்கும் தருக்கோ*?*

பொருள்: *'(கொல்ல முடியாத தம்பியைக் கொல்லாதிருந் தாயே யன்றிக் கவரக்கூடிய அவன் மனைவியைக் கவராது விட்டா யில்லை.) அன்பும் குடிப்பிறப்பும் கல்வியின் பயனான உண்மை யொழுக்கத்துக்கு உரிமையும் ("உடையே" மென்று களிப்புற் றிருந்தாய்; இவைகளை உடைமை) மற்றொருவன் மணஞ் செய்த மனைவியைப் பிடித்துக்கொள்ளும் அகங்கார(ச் செயலோடு பொருந்து)மோ?*

ஈரம் - அன்பு. இற்பிறப்பு - உயர்குடிப்பிறப்பு. வாரம் - உரிமை. கல்யாணஞ்செய்த லென்னும் பொருளுடைய மணம் புணர்தல், புணர்த லெனச் சுருக்கிக் கூறப்பட்டது. தாங்குதல் - பிடித்துக்கொள்ளுதல். — த. அ. தருக்கு - அகங்காரம். அது, பகுதிப்பொருள்விகுதி.

'தாங்கும் தருக்கரோ' என்ற பாடத்துக்கு 'பாதுகாக்கும் பெருமையே யன்றோ' என்பது முந்திய உரை.

பாட பேதம்: *தருக்கரோ.* (௪0)

'போர் அறம் இல்லறங்களுக்குப் பேர்நந்தாதன புரிந்தாய்' எனல்

[*'நாம் வலியேமென்று மெலியாரை வெகுண்டு வேதனைப் படுத்தலால் வீரதருமம் கெட்டுவிடும். பூவையர் கற்பழித்தலாற் பொதுத் தருமமே கெட்டுவிடும். நீ சுக்கிரீவனைத் துன்புறுத்தி யும் அவன் மனைவியை வௌவியும் இரு தருமங்களையும் ஒருசேரக் கெடுத்தா யாதலாலும், எனக்கு இன்னுயிர் நண்பனான உன்னு டைய தம்பியைக் காத்தல் என்னுடைய கடனாதலாலும் உன்னைக் கொன்றேன்' என்றான் இராமன்.*]

* *'தருக்கதோ' என்ற பாடம் திரிசிரபுரம் V. கோவிந்த பிள்ளை பதிப்பிற் கண்டது.*

இராமனுக்கு வாலி எதிர்மொழி இயம்பல்

'எங்களுக்கு ஏற்பட்டது விவாகச்சேர்க்கை யன்று' எனல்

41. ஐய நுங்க ளருங்குலக் கற்பினப்
பொய்யின் மங்கையர்க் கேய்ந்த புணர்ச்சிபோல்
செய்தி லன்னெமைத் தேமலர் மேலவன்
எய்தி னெய்திய தாக வியற்றினான்

கொண்டுகூட்டு : 'ஐய, நுங்கள் அருங்குல(த்துத் தோன்றும்) கற்பினையுடைய அப் பொய்(ம்மை) யில்(லாத) மங்கையர்க்கு ஏய்ந்த புணர்ச்சி போல், எமக்கு (ஓர் ஏற்பாடும்) தேமலர் மேலவன் செய்திலன். எய்தின் எய்தியதாக இயற்றினான்.

பொருள் : '(மனித இனத்தினரான) உங்களுடைய குலத்துத் தோன்றும் மாதருக்குப் பொருத்தமான (விவாகஞ்செய்தே ஆடவரைச்) சேர்தல் என்ற (ஏற்பாட்டைப் பிரமதேவன் செய்திருப்பது) போல, (மிருக இனத்தைச் சேர்ந்த வானரரான) எங்கள் மாதர்களுக்கு (ஒரு ஏற்பாடும் அந்தப்) பிரமதேவன் செய்யவில்லை. (எங்களுள் எவனேனும் எவளையேனும்) அடையும்படி நேர்ந்தால், (அவ்வடைதல் கல்யாணச் சடங்கில்லாமல் அவன் அவளைக் கலத்தலுக்கு) அடைந்ததாகுமாறு செய்திருக்கிறான்.

ஐய - ஐயனே - தலைவனே: அண்மைவிளி. நுங்கள் - உங்கள். கற்பின் - கற்பினையுடைய. அ, பலரறிசுட்டு. பொய்இல் - பொய்ம்மையில்லாத. பொய்யின்மை - மனம் வாக்குக் காயம் வேறுபடாமை. புணர்ச்சி - (விவாகஞ்செய்து) கலத்தல் (ஆகிய விவாகப் புணர்ச்சி). எமை - எங்களுக்கு: உருபுமயக்கம். தேம் மலர் மேலவன் - வாசனையுடைய (தாமரை) மலர்மேலிருப்பவன் - பிரமன். எய்தல் - அடைதல்.

'ஆண் பெண் நெருங்க நேர்ந்தால் பொருந்த நேர்ந்ததாக யாங்கள் சிருட்டிக்கப்பட்டிருக்கிறோம்' என்பது கருத்து. (சக)

['ஆதலால் என் செயல் இயற்கையானதே யன்றிக் குற்றமாகாதென்று கொள்வாயாக' என்றான் வாலி.]

வாலி கூறிய சமாதானம் போலியாம் எனல்

' மிருகச் செயல் உனக்கு அடாது ' எனல்

[*இராமன் ஏதுக்காட்டி வாலியின் கூற்றுக்களை மறுத்துக் கூறுவான்: 'நீ, உன் தம்பி, அனுமான் முதலியோர், வடிவத்தால் வானரராயினும், தேவர்களது புதல்வரா யிருத்தலாலும் அற நெறியை ஐயந்திரிபற அறிந்திருத்தலாலும் மிருகங்களாகீர்; ஆதலால் மிருகச்செயல் உனக்கு அடாததே.*]

' நீ செய்த தவறு தவறே! ' எனல்

42. பொறியின் யாக்கைய தோபுல னோக்கிய
அறிவின் மேலதன் றோவறத் தாறுதான்
நெறியு நீர்மையு நேரி துணர்ந்தநீ
பெறுதி யோபிழை யுற்றுறு பேற்றிதான்

கொண்டுகூட்டு : *'அறத்தின் ஆறுதான் பொறியின் யாக்கையதோ? புலனை நோக்கிய அறிவின் மேலது அன்றோ? (அற) நெறியும் (அதன்) நீர்மையும் நேரிதாக உணர்ந்த நீ (இது போலும்) பிழையை உற்று (அதற்குள்ளாகாமல்) உறும் பெற்றியைப் பெறுதியோ?*

பொருள் : *' அறநெறியானது, (மக்களுக்கும் மிருகங்களுக்கும் பொதுவான) ஐம்பொறிகளையுடைய உடம்பைச் சார்ந்ததோ? (அவ் வைம்பொறி வாயிலாக அடையும்) புலன்களை (ஏற்று ஆராய்ந்து பகுத்து) அறிகின்ற (மக்களுக்கே உரித்தான) அறிவைச் சார்ந்த தன்றோ? (மக்கள்போல அவ் அற) நெறியையும் (அறநெறிப்படி ஒழுகுவார் நற்பயனையும் ஒழுகாதார் தீப்பயனையும் அடையச் செய்தலாகிய அவ் அறநெறியினது) இயல்பையும் செவ்விதாகத் தெரிந்த நீ (மிருகங்களுக் கியல்பான, ஆண் பெண் முறைதவறிச் சேர்தல் போன்ற) பிழையைச் செய்து (அப்பிழையால் அம் மிருகங்கள் போலக் குற்றத்துக்குள்ளாகாமல்) இருக்குந் தன்மையைப் பெறுதற்பாலையோ?*

பொறி புலன்கள், முறையே வடமொழியில் இந்திரியங்கள் விஷயங்கள் எனப்படும். மேல் - இடம். மேலது - இடத்தினது. அறத்து ஆறு - அறநெறி - தரும மார்க்கம் - நல்லொழுக்கம். மூன்றாவதடியில் வரும் நெறி அறநெறியைக் குறித்தது. நீர்மை - இயல்பு - தன்மை. நேர்மை - செவ்வை ;

நுண்மை. நேரிது (ஆக) - செவ்வையாக; நுண்ணிதாக. பெறுதி - பெறுவாய்.

இப் பாட்டின் இறுதியடிக்கு, 'தவறுகளை மிகுதியாகச் செய்யுந் தன்மையைப் பெறக்கடவையோ?' என்பது முந்திய உரை.

'"நீ, வடிவினால் விலங்காகிய வானரம்போலிருப்பினும், பகுத்தறிவுடைமையால் மனிதர் போலுதலால், தரும மார்க்கத்தை யறிந்திருந்தே தவறுகள் செய்தது தகாது" என்பதாம். தொல்காப்பியத்து மரபியலில் "மக்கள் தாமே ஆறறிவுயிரே - பிறவு முளவே அக்கிளைப் பிறப்பே" என்ற சூத்திரத்தின் உரையில் "பிறப்பென்றதனால், குரங்கு முதலாகிய விலங்கினுள் அறிவுடையன வெனப்படும் மனவுணர்வுடையன உளவாயின் அவையும் ஈண்டு ஆறறிவுயிரா யடங்கு மென்பது" என்பது இங்குக் காணத் தக்கது.'—வை. மு. கோ.

பாட பேதம்: புலனாகிய: புலனாக்கிய: நெறியினோன்மையை நேர்மின் றுணர்ந்தநீ. (௪௨)

'முதலை பிடிக்க, "மூலமே" என்ற யானையும் மிருகமோ?' எனல்

43. மாடு பற்றி யிடங்கர் வலித்திடக்
கோடு பற்றிய கொற்றவற் கூயதோர்
பாடு பெற்ற வுணர்வின் பயத்தினால்
வீடு பெற்ற விலங்கும் விலங்கதோ

கொண்டுகூட்டு: '(தன்னை ஒரு) மாடு (- பக்கம்) பற்றி இடங்கர் வலித்திடக், கோடு பற்றிய கொற்றவனைக் கூயது (ஆகிய) ஓர் பாடு பெற்ற உணர்வின் பயத்தினால் வீடு பெற்ற விலங்கும் விலங்கோ?

பொருள்: 'தனது தேகத்தில் ஒரு பக்கத்தைக் கௌவிப் பிடித்து முதலை யிழுத்ததனால், (பாஞ்சசன்னிய மென்னும்) சங்கை (இடக்கையினிடத்து)ப் பிடித்த திருமாலை ("ஆதி மூலமே!" என்று கூவி யழைத்து) ஓலமிட்டதாகிய ஒப்பற்ற பெருமைபெற்ற அறிவின் பலன் படைத்தமையினால் (தன்னைப் பிடித்த முதலை வாயினின்றும்) விடுதலை பெற்ற (கஜேந்திராழ்வானென்னும் யானையாகிய) மிருகமும் மிருக மென்று சொல்லப் படுமோ?

மாடு - பக்கம். இடங்கர் - முதலை. வலித்தல் - இழுத்தல். கோடு - சங்கு. கொற்றம் - வெற்றி. கொற்றவன் - வெற்றியுடையவன். கூய - கூவிய - ஓலமிட்ட (கந்தபு. மாகாளர். சு)—த. அ. ஓர் - ஒப்பற்ற. பாடு - பெருமை. பயம் - பயன் - பலம் - பலன். வீடு - விடுதலை; முத்தி. விலங்கு - மிருகம். அது, பகுதிப்பொருள் விகுதி.

முதலைவாய்ப் பிடியினின்றும் பிறவிக்கட்டினின்றும் ஒருங்கே விடுதலை பெற்ற என்ற இருபொருள்பட 'வீடுபெற்ற' என இரட்டுற மொழிந்த நயம் நோக்கத்தக்கது.

'கஜேந்திராழ்வான் போல நீ உருவத்தால் மிருகமானாலும், உணர்வால் மனுடனாதலால், மிருகச்செயல் (தம்பி மனைவியைச் சேர்தல்) செய்தது தவ' றென்பது குறிப்பு.

பாட பேதம் : *விலங்கரோ.* *(சங)*

'தீமை நன்மை தெரியாமை மிருக இயல்' என்ல்

44. நன்று தீதென் றியறெரி நல்லறி
வின்றி வாழ்வதன் றோவிலங் கின்னியல்
நின்ற நன்னெறி நீயறி யாநெறி
ஒன்று மின்மையுன் வாய்மை யுணர்த்துமால்

கொண்டுகூட்டு : *'விலங்கின் இயல், (இது) நன்று (இது) தீது என்று (அதனதன்) இயலைத் தெரி(கின்ற) நல் அறிவு இன்றி வாழ்வது அன்றோ? (வழங்கா) நின்ற நல்நெறி(களுள்) நீ அறியாத நெறி ஒன்றும் இன்மை உன் வாய்மை உணர்த்தும்.*

பொருள் : *'மிருக சுபாவமென்பது, இச்செயல் நல்லது இச் செயல் தீயதென்று அதனதன் தன்மையைப் பகுத்தறிகின்ற அறிவில்லாமல் உயிர் வாழ்வதன்றோ? (அதற்கு மாறாக, உலகத்தில் வழங்கா) நின்ற நன்னெறிகளுக்குள்ளே நீ அறியாதது ஒன்றும் இல்லாமையை (நீ இப்போது விவகாரமாகக் கூறிய) உன் வாய்ச்சொற்களே தெரிவித்துவிட்டன. ('எல்லா நன்னெறிகளையுந் தெரிந்துவைத்தும் அவைகளுக்கு மாறாக நீ நடந்தது தவறே' யென்பது குறிப்பு).*

இயல் - தன்மை - சுபாவம். விலங்கு - மிருகம். வாய்மை - வாக்கு—(திருவிளை. வெள்ளையானை 2.)—த. அ. - வாய் மொழி. ஆல், ஈற்றசை.

விலங்கின்னியல் என்பதில் னகர ஒற்று விரித்தல். 'விலங்கின்னிடை' என்ற பாடத்திற்கு 'மிருகங்கட்கு (மனிதரோடு) வேறுபாடு' என்பது முந்திய உரை.

பாட பேதம்: விலங்கின்னிடை. (சச)

'விதி விலக் கறியாத மனிதர் மிருகங்களே;
விதிப்படி ஒழுகும் மிருகங்கள் தெய்வங்களே' எனல்

45. தக்க வின்ன தகாதன வின்னவென்
றொக்க வுன்னல ராயி னுயர்ந்துள
மக்க ளும்விலங் கேமனு வின்னெறி
புக்க வேலவ் விலங்கும்புத் தேளிரே

கொண்டுகூட்டு: 'உயர்ந்து உள்ள மக்களும், இன்ன தக்க இன்ன தகாதன என்று, ஒக்க உன்னலராயின் விலங்கே. அவ் விலங்கும், மனுவின் நெறி புக்கவேல், புத்தேளிரே.

பொருள்: 'மனிதர்களும், இன்னவை தகுதியானவை, இன்னவை தகாதவை யென்று பகுத்தறியாரானால், மிருகங்களுக் கொப்பானவர்களே. மிருகங்களும் சன்மார்க்கத்திற் பிரவேசித்தவைகளானால், தெய்வங்களுக்கொப்பானவைகளே.

தக்க, புக்க: அன்சாரியை பெறாத தக்கன புக்கன; இறந்தகால வினையாலணையும் பெயர்கள். இன்ன - இவை. ஒக்க - பொருந்த. உன்னல் - நினைதல். விலங்கு - மிருகம். புத்தேள் - தெய்வம்.

விலங்கும் மனிதரே என்பது இயல்பான முடிவு. அதுவே உயர்வு குறித்தற்குப் போதியதா யிருக்கவும், 'விலங்கும் மனிதரே' என்னாது 'விலங்கும் புத்தேளிரே' என நனி உயர்த்திக் கூறி நன்னெறிச் சிறப்பை நயம்பட வற்புறுத்திய கவிசாதுரியம் பாராட்டற் பாலது.

விலங்கொடு மக்க ளனையர் இலங்குநூல்
கற்றாரோ டேனை யவர்

என்ற குறள் இங்குக் கருதத் தக்கது.

'மநு, வடசொல்; இது இங்கே அவனாற் செய்யப்பட்ட தரும சாஸ்திரத்தைக் குறித்தலால், கருத்தாவாகுபெயர். மனுவின்னெறி னகரமெய் விரித்தல். ஏல் - எனில்: மரூஉ. புத்தேளிர், இர் பலர்பால் விகுதி: கேளிர், மகளிர் என்ற இடங்களிற் போல'.—வை. மு. கோ.

பாட பேதம்: உன்னல ராகி. (சரு)

'புண்ணியஞ்செய்து புண்ணியபலனை யடைந்தது போலப்,
பாவஞ்செய்து பாவபலனை யடைந்தாய்' என்லி

['நன்னெறியில் நின்று சிவபூசை செய்த புண்ணியபலனாக நாற்பெரும் பூதங்களின் வலிமையையும் ஒருசேர நண்ணினாய்; தீநெறியிற் புகுந்து தம்பியைக் கொல்ல முயன்று அவன் மனைவியைக் கவர்ந்து இல்லற மாண்பைக் கெடுத்த பாவபலனாக என் அம்புக் கிரையானாய்.']

வாலி வத நியாயம்

தன்னை மறைந்து எய்தமைக்கு இராமனை வாலி காரணம் வினவுதல்

46. அவ்வுரை யமையக் கேட்ட வரிகுலத் தரசு மாண்ட
செவ்வியோ யனைய தாக செருக்களத் தெதிர்த்தெய் யாதே
வெவ்விய புளிஞ ரென்ன விலங்கியே மறைந்து வில்லால்
எவ்விய தென்னை யென்று னிலக்குவ னியம்ப லுற்றான்

கொண்டுகூட்டு: (இராமன் கூறிய) அவ் உரை அமையக் கேட்ட அரிகுலத்து அரசு, 'மாண்ட செவ்வியோய்! அனையது ஆக. (நீ) செருக்களத்து (என்னை) எதிர்த்து எய்யாது, வெவ்விய புளிஞர் என்ன, விலங்கி மறைந்து வில்லால் எவ்வியது என்னை?' என்றான். இலக்குவன் இயம்ப லுற்றான்.*

பொருள்: இராமன் கூறிய அந்த வார்த்தைகள் மனத்திற் பதியக் கேட்ட வாலி, 'நீ கூறியதை ஒப்புக்கொள்கிறேன். (யான் என் தம்பி மனைவியைக் கவர்ந்தது இல்லற முறைக்கு மாறானதென நியாயங் கூறிய நீ) போர்க்களத்திலே (பகுத்தறிவுடைமையால் மனிதனென்று நீ கூறிய) என்னை எதிர்த்தெய்யாமல், (வில்லற முறைக்கு விரோதமாக,) வெய்ய வேடர் (மிருகங்களை மறைந்து நின்று எய்தல்) போல, விலகி மறைந்து நின்று வில்லினால் அம்பு எய்தது என்ன நியாயத்தால்?' என்றான். இலக்குமணன் அதற்கு விடை கூற லுற்றான்.

உரை - வார்த்தை. அமைய - மனத்திற் பதிய: 'ஆசாற் சார்ந்தவை அமைவரக் கேட்டல்'.† அரி - குரங்கு. மாண்ட - மாட்சிமைப்பட்ட. செவ்வி - தன்மை. மாண்ட செவ்வியோய் - மாட்சிமைப்பட்ட தன்மை

* இதிலிருந்து 50-ம் பாட்டு இறுதியாக 'வாலி வத நியாயம்' என்ற தலைப்புடன் தனிச் சிறுநூலாக முன்னர் அச்சிடப்பட்டது. வதம் - கொலை.

† நன்னூல், சூத்திரம் - 41.

யுடையோனே. வெம்மையுடையோனை 'வெவ்வியோய்' என விளித்தல் போலச், செம்மை (- நடுவுநிலைமை — சிலப்.) உடையோனைச் 'செவ்வி யோ' யென விளித்தா னெனலுமாம். அத்தன்மையுடையது என்னும் பொருளுடைய அன்னது, அற்று, அனையது என்பவை அது என்ற பொருள் பட வரும். ஆக - ஆகட்டும். அனையது ஆக - அது ஆகட்டும் - நீ கூறிய படியே ஆகட்டும்: காஞ்சிப்புராண முத்தீசப்படலம் கசு-ம் பாட்டில் வரும் 'வார்த்தை யிற்பிறழ் வஞ்சியற் றுகெனா' என்பதிலுள்ள 'அற்றாக' என்பது போல, 'நீ சொல்லியதை நான் ஒப்புக்கொள்கிறேன்' என்ற பொருள்பட நின்றது. 'அனையதாக' என்பதற்கு 'அப்படியானால்' என்பது முந்திய உரை. செரு - போர். களம் - இடம். செருக்களம் - போர் (செய்யும்) இடம். வெவ்விய - கொடிய. புளிஞன் புளினன் என்பன, வேடன் என் னும் பொருளுடையவை. விலங்குதல் - விலகுதல். எவ்வுதல் - ஏவுதல் - செலுத்தல். தாவுதல் தவ்வுதலென வருதல்போல, ஏவுதல் எவ்வுதலென வந்தது. இப்படல முதற்பாட்டில் 'எவ்விடத் துணிந்து' என வருதல் காண்க. 'என்னை' என்பது வினாப்பொருளோடு இகழ்ச்சிப்பொருள் குறித்து நிற்றல் கவனிக்கத்தக்கது.

பாட பேதம்: உருத்தெய்யாதே: விலங்கினே. (சகூ)

வாலிக்கு இலக்குமணன் விடையளித்தல்

47. முன்புநின் றம்பிவந்து சரண்புக முறையி லோயைத்
தென்புலத் துய்ப்ப னென்று செப்பினன் செருவி னீயும்
அன்பினை யுயிருக் காகி யடைக்கலம் யானு மென்பாய்
என்பது கருதி யண்ணன் மறைந்துநின் றெய்த தென்றான்

கொண்டுகூட்டு: 'அண்ணல் மறைந்து நின்று எய்தது, முன்பு நின் தம்பி வந்து சரண்புக, முறையிலோயைத் "தென்புலத்து உய்ப்பன்" என்று செப்பினன். செருவில் நீ உயிருக்கு அன்பினை ஆகி "யானும் அடைக் கலம்" என்பாய்; (ஆயின் அவ்வுரை நிறைவேறாது) என்பதைக் கருதி (யதால்)' என்றான்.

பொருள்: 'இராமன் உன்னை மறைந்துநின் றெய்தது எதனா லென்றால், முதலில் உன் தம்பி அவனிடம் வந்து சரணமடைய, (உன் னுயிருள்ளவரையும் அவனுயிர் ஆபத்துக்குள்ளாயிருப்ப தைக் காக்கும்பொருட்டு) உன்னை "எமலோகத்துக் கனுப்புவே" னென்று அபயவாக்களித்தான். (அவ் வாக்கை நிறைவேற்றுவ தற்குப்) போர்க்களத்தில் (உனக் கெதிர்நின்று பொருதால், உன்

உயிர் போம்படி நேரும்போது) நீ, உயிர்மீது ஆசையுடையவனாகி, (அதனைக் காத்தற்கு அவனிடம்) "சரணம்!" என்று சொல்வாய். (அப்படிச் சரணடைந்த உன்னைக் கொல்லுதல் கூடாது. கூடாதாகவே, உன்னைக் கொல்வதாகக் கூறிய வாக்கை நிறைவேற்றல் கூடாததாம்) என்பதைப் பரியாலோசனை செய்ததனால் என்று தெரிவாயாக' என்று விடைகூறினான் இலக்குமணன்.

'எய்தது,' 'கருதி' என்று முடிந்தது.

சரண் - சரணம் - அடைக்கலம். சரண்புகுதல் - அடைக்கலமடைதல். தென்புலம் - இயமலோகம். உய்த்தல் - அனுப்புதல். செரு - போர். அன்பினை - அன்புடையாய். அண்ணல் - அரசன்; தலைவன்; பெருமையிற் சிறந்தோன். 'உயிருக்கு அன்பினை ஆகி' யென இயைக்க. 'முறையிலோயை' என, 'முறையில்லாதவனான உன்னை' என்ற நெடுந்தொடரை ஒரே ஒருபதமாகச் சுருக்கமாகக் கூறிய இலக்கண நுணுக்கப் பிரயோக நயம், கூர்ந்து நோக்கிக் குதுகலிக்கத் தக்கது. 'யானும்' என்பதில் உள்ள உம்மை, 'உன் தம்பி தன்னுயிரைக் காக்க "அடைக்கலம்!" என்றதுபோல நீ உன்னுயிரைக் காக்க "அடைக்கலம்!" என்பா' யென்பது குறித்தது.

'உன்னைக் கொல்வதற்குக் காரணம், சரண மடைந்தவனும் குற்றமற்றவனுமான உன் தம்பியைக் காத்தலன்றி, அவன் மனைவியைக் கவர்ந்து அறமுறை திறம்பிய உனது தீயொழுக்கமுமா மெனத் தெரிவாயாக' வென்பான் 'முறையிலோயை' என்றா னென்க.

தான் மறைந்தெய்ததற் குரிய நியாயத்தை இராமன் கூறினனென, வான்மீகர் கூறியிருக்க, இலக்குமணன் கூறினனெனக், கம்பர் சாதுரியமாகக் கூறிய நாகரிக முறை கவனித்தற்குரியது.

பகைவனை எதிர்ந்து கொல்லாமல் மறைந்து கொல்லுதல், யுத்த தருமமன்றென நீதி நூல்கள் கூறுதற்கு மாறாக, இராமன் வாலியை மறைந்து நின்று கொன்றது குற்றமென்றும், அது வானச் சந்திரனுக் கேற்பட்ட மறுப்போல, ராமச்சந்திரனுக் கேற்பட்ட பரிகாரமில்லாத மறுவென்றுங் கூறுவதுண்டு. 'மன்னர்க்கு—முன்னஞ் சொல்லும்—துறைதிறம்பாமற் காக்கத் தோன்றினான்' *, 'அறத்துறை நிறுத்தவந்த இறை' † எனச் சிறப்பித்துக் கூறப்பெற்ற கதாநாயகனான இராமனது செயல்களெல்லாம் சிறந்தனவாக இருக்க, இச்செய லொன்றே, குற்றங் கூறுதற் கிடமா யிருக்கிறதென, இராமபத்தருள்ளேயே சிலரும், ஏனையோ ரெல்லாரும் கூறுவர்.

---

* இப்படலம் எச. † இப்படலம் கஙஉ.

வாலியை இராமன் மறைந்தெய்ததற்கு வான்மீக கம்ப ராமாயணங்களிரண்டினும் நியாயங்கள் விரிவாகக் கூறப்பட்டிருக்கின்றன. இருதிற நியாயங்களுக்கும் முக்கியாமிசங்களில் மிக்க பேதமுண்டு. கம்பராமாயண நியாயம் மேலே கூறப்பட்டது. வான்மீக நியாயம் வருமாறு :—

வாலி, தன்னை எய்ததற்காக இராமனைக் குற்றங் கூறும்போது, ' "வேறொருவருடன் நான் போர்புரியும்போது இராமர் என்னை எதிர்க்க மாட்டார் என்று எண்ணினேன். நீர் தருமத்தை நிலைநிறுத்துவதாக வீண் கொடி கட்டிக்கொண்டு அதற்கு மாறாய் நடந்து பாவத் தொழிலைச் செய்கிறவ ரென்றும், புற்களால் மூடப்பட்ட பாழ்ங்கிணறு போல்பவ ரென்றும், ...சாம்பல் மூடிய நெருப்புப்போலத் தருமப் போர்வை போர்த்துத் திரியும் கொடியவ ரென்றும் இதுகாறும் நான் அறிந்திலேன்......... போரில் புறங்காண முடியாத என்னைக், குடித்து மயங்கித் தூங்குபவரைப் பாம்பு கடித்தாற்போல, நீர் மறைந்து நின்று கொன்றீர்..........நீர் செய்த காரியத்துக்குத் தகுந்த சமாதானம் சொல்ல வழிதேடும்" (என்று) சொல்லி விட்டு.........இராமருடைய முகத்தைப் பார்த்துக்கொண்டு மௌனமாயிருந்தான்.

' இராமர் அவனை நோக்கி, "நான் உம்மைக் கொன்றதன் காரணம், புராதனமாயுள்ள தருமத்தை விட்டுவிட்டு நீர் உம்முடைய தம்பியின் மனைவியைக் கவர்ந்துகொண்டீர் என்பதே.........நீர் செய்த காரியத்துக்கு இத்தண்டனை எவ்விதத்தாலும் தருமமே.........உமது பாபத்துக்குத் தக்கபடி தருமானுசாரமாக நான் தண்டனை செய்தேன். ......மனிதர்கள்,...... மிருகங்களை வலைகளாலும் கயிறுகளாலும்......எதிர்ப்பட்டும் மறைந்து நின்றும் பிடிக்கிறார்கள். அவர்கள், அம்மிருகங்களைப் பயந்து ஓடும்பொழுதும், நம்பி நிற்கும்பொழுதும், சண்டையிடும்பொழுதும், பராக்காயிருக்கும் பொழுதும், குத்தியும் அடித்தும் கொல்லுகிறார்கள். அதற்குத் தோஷம் ஒன்றும் சொல்லப்படவில்லை......நீர் வானரஜாதியானதால் நீர் என்னுடன் போர்புரிந்தாலும் புரியாவிடினும் உம்மை நான் கொல்லுவதில் தோஷமில்லை..........நீர் தருமம் இன்னதென் றுணராது, கோபத்தால், முன்னோர்களுடைய தருமத்தை அனுசரிக்கும் என்னைத் தூஷிக்கிறீர்" என்று சொன்னார்.' *

வான்மீகத்தில், இராமன் முதலில் வாலியை மனிதனாகக்கொண்டு, ' நான் உம்மைக் கொன்றதன் காரணம் நீர் உம்முடைய தம்பி மனைவியைக் கவர்ந்துகொண்டீர் என்பதே ' என்று, வாலி மனிதன் செய்யத் தகாததைச்

* வான்மீகராமாயணம், பண்டித நடேச சாஸ்திரி மொழிபெயர்ப்பு.

செய்தானென்று குற்றஞ்சார்த்திவிட்டுப், பின்பு அவ்வாலியையே மிருகமாகக்கொண்டு, 'நீர் வானர ஜாதியானதால் நீர் என்னுடன் போர்புரிந்தாலும் புரியாவிடினும் உம்மை நான் கொல்லுவதில் தோஷமில்லை' என்று கூறியிருப்பது, முன்பின் விரோதமாய் ஒப்புக்கொள்ளத் தகாததாகத் தோன்றுகின்றது.

கம்பராமாயணத்தில், வாலியை இராமன் மறைந்தெய்ததற்குக் கூறும் நியாயம், அவன் தம்பிக்களித்த வாக்கை நிறைவேற்றுதற்கு அவனை மறைந்து நின்று கொல்லுதல் இன்றியமையாததா யிருந்ததென்பது. இந்த நியாயமும், வாக்குத்தத்த நிறைவேற்றமாகிய ஒரு தருமத்துக்கு எதிரியை மறைந்து கொல்லாமையாகிய வேறொரு தருமம் பலியிடப்பட்டதாமெனக் குற்றங் கூறுதற் கிடமாயிருத்தலால், ஒப்புக்கொள்ளத்தகாததாகவே தோன்றுகிறது. (சஎ)

வாலியை ராமன் மறைந்தெய்தது, தோற்றத்தில் தருமவிரோதமானதேயன்றி, உண்மையில் தருமானுசாரமானதெனக் கவி குறிப்பாக உணர்த்தல்

கவிகுலத் தரசு மன்ன கட்டுரை கருத்திற் கொண்டான்
அவியுறு மனத்த னாகி யறத்திற னழியச் செய்யான்
புவியிடை யண்ண லென்ன வெண்ணினன் பொருந்த முன்னே
செவியுறு கேள்விச் செல்வன் சென்னியி னிறைஞ்சிச் சொன்னான்

கொண்டுகூட்டு: கவி குலத்து அரசு அன்ன கட்டுரையைக் (கேட்டுக்) கருத்தில் (வாங்கிக்) கொண்டான். முன்னே (ஆதி பகவன் இராமனாக அவதரித்திருக்கிறானென்ற) செவியுறு கேள்விச் செல்வ(முடையவ)ன்(ஆன அவன்) அண்ணல் புவியிடை அறத்திறன் அழிய (ஒன்றும்) செய்யான் என்னப் பொருந்த எண்ணினான். (எண்ணி) அவியுறும் மனத்தன் ஆகிச் சென்னியினால் இறைஞ்சிச் சொன்னான்.

பொருள்: வாலி, அந்தப் பொருள் பொதிந்த வார்த்தைகளை மனத்திற் கொண்டான். செவியுற்ற கேள்விச்செல்வத்தையுடையவனை அவன், இராமன் பூமியிலே அறத்தின் உறுதி அழியும்படி ஒன்றும் செய்யானென்று எண்ணினான். எண்ணி, மனம் அடங்கித் தலையால் வணங்கிப் பின்வருவதைச் சொன்னான்.

இதனில் அடக்கப்பட்டிருக்கிற புதை பொருள் புலப்படப் பெய்வன பெய்து நிரப்பி விரித்துரைக்கலாம். அவ் விரிவுரை வருமாறு:—

வாலி, (இலக்குமணன் கூறிய) அந்தப் பொருள் பொதிந்த வார்த்தைகளை(க் கேட்டு) மனத்தில் (வாங்கிக்)கொண்டான். (பூமியில், அதருமம் மேலிட்டுத் தருமம் தாழ்வுறுங் காலங்களில், முன்னையதைப் போக்கிப், பின்னையதைக் காத்து நிலைநிறுத்தும் பொருட்டு, நீதிபரனான ஆதிபகவன் அவதாரஞ் செய்வானென்றும், அவன் இந்தக்காலத்தில் இராமனாக அவதரித்திருக்கிறானென்றும் பெரியோர் சொல்ல,) முன்பு (அப் பெரியோர்பால் கல்வி கற்றபோது) கேட்ட கேள்விச் செல்வத்தையுடையவனான வாலி அத்தகைய இராமன் அறத்தின் உறுதி அழியும்படியான யாதொரு செயலும் செய்யானென் றெண்ணினான். (அப்படி எண்ணவே, சமாதானந் தோன்றச் சாந்தி அடைந்து) மனம் அடங்கி (அதனால் அகங்காரம் நீங்கி, அதனால் தற்போதம் கழன்று, அதனால் பரபோத மடைந்து — ஞானக்கண் பெற்று; அதனால் பகவானே இராமனாகித் தன் வினைக்குத் தக்க பலனளித்தானென்று தெரிந்து, அநியாயஞ் செய்தவனென்று இதுவரை தான் வணங்காதிகழ்ந்த இராமனுக்குச் சாட்டாங்க நமஸ்காரம் செய்யக் கருதியபடி செய்யச் சத்தியின்றித், தன்னெஞ்சை உருவிக்கொண்டிருந்த அம்பை மேற்கொண் டுருவாமல் பற்றிக்கொண்டிருந்த கைகளால் அஞ்சலி செய்யவும் அசக்தனாய்)த், தலையால் வணங்கிப், பின்வருவதனைச் சொல்வானானான்.

கவி - குரங்கு. குலம் - கூட்டம். அரசும் என்பதில் உம்மை இசை நிறை. கட்டுரை - பொருள் பொதிந்த சொல்—சிலப். அவிதல் - அடங்குதல்—புறநா. உறு, துணைவினை. அறத்திறன் - தருமத்தின் உறுதி நிலைமை. அண்ணல் - தலைவன்; கடவுள்—தி. அ. செவியுறுதல் - கேட்டல். சென்னியின் - தலையால். இறைஞ்சுதல் - வணங்குதல்.

'முன்னே செவியுறு கேள்விச் செல்வன், அண்ணல் புவியிடை அறத்திறன் அழியச் செய்யான் என்னப் பொருந்த எண்ணினன்; அவியுறும் மனத்தனாகிச் சென்னியின் இறைஞ்சிச் சொன்னான்' என இயைக்க.

உரையில் எடுத்துக்கூறப்பட்ட 'அஞ்சலி செய்யவும் அசக்தனாய்' என்றதனோடு, இதன்பின், வாலி, 'இளவல் தன்னை — வன்றுணைத் தடக்கை நீட்டி வாங்கினன் தழுவி' * என வருவதும், அவன் அங்கதனை 'நெஞ்சிற் புல்லி'† என வருவதும் பொருந்தவில்லையே எனின், அச் செயல்கள் அம்புப் பிடிப்பை விட்டுவிடாமல், பூரணமாகவன்றி அரை குறையாக இயன்றமட்டிற் செய்யப்பட்டன அல்லது பாவனையாகச் செய்யப்பட்டனவென்பது, இறுதியில், 'கை அவன் நெகிழ்தலோடும் கடுங்கணை கால வாலி வெய்யமார் பகத்துள் தங்கா துருவி' ‡ என வருதலால் விசதமாம்.

---

* இப் படலம் கஙக. † இப் படலம் கசுகூ. ‡ இப் படலம் கடுங.

பாட பேதம்: கவிகுலத்தரசு மன்னன்: என்ப தெண்ணினன் பொருந்தி: சென்னியை இறைஞ்சி.

கம்பர், கதையை நடத்திக்கொண்டுபோகையில், அநீதமாகத் தோன்றும் நிகழ்ச்சிகளுக்குத் தோன்ருக் காரண முளவெனச் சூசிப்பித்துப்போவர். கைகேயி இராமனைக் காட்டுக்குப் போகச்செய்தபோது, நல்லா ளொருத்தி தீங்கிழைக்க நல்லா னொருவன் தீங்குக் குள்ளாம் அநீதத்துக்குத் தோன்ருக் காரணம் உளதென

> 'வெவ்வினை யவள்தர விளைந்த தேயுமன்று
> இவ்வினை யிவன் வயின் எய்தற் பாற்றுமன்று
> எவ்வினை விளைந்ததோ எவர் எண்ணமோ?' *

என வசிட்டன்வாயிலாகக் குறிப்பித்தார். அதுபோல, இராமன் மறைந்தெய்ததற்குத் தோன்ருக் காரணத்தை இந்தக் கவியில் வாலி வாயிலாகக் குறிப்பித்தார்.

இராமன் வாலியை மறைந்தெய்ததற்கு இலக்குமணன் கூறிய நியாயத்தை வாலி மனத்திற்கொண்டா னென்ருரன்றி, ஒப்புக்கொண்டா னென்ருரல்லர்: ஒப்புக்கொள்ளவில்லை யென்று கூறினருமல்லர். இலக்குமணன் கூறிய நியாயம், இதற்குமுந்திய கவியின் விசேடவுரையிற் கூறியவாறு, அவன் சொற்படியே, ஒரு தருமத்தைக் காக்க மற்றொரு தருமத்தை அழித்ததா யிருத்தலன்றி, எதிர்த்தாரது பாதிப் பலம் பெறும் வரம் படைத்த வாலியை எதிர்ப்பவர், அவர் பலத்திற் பாதியும் தன் பலமுமுடைய அவனல் செயிக்கப்படுதல் திண்ணமாதலால், இராமன் வாலியை எதிராமல், வீர தருமத்துக்கு விரோதமாக, வஞ்சகமாக, மறைந்து நின்று அம்பெய்து கொன்ருனென்று குற்றங் கூறுதற் கிடமாயிருக்கின்றது. இந்த ஆட்சேபங் களுக் கிடமான நியாயமன்றி, வேறு தக்க நியாயம் உண்மையை உறுதியாகக் கொண்டே, கம்பர், தான் மறைந்தெய்த அம்புபட்டுச் சாய்ந்து கிடந்த வாலி எதிரே இராமன் போந்ததை 'மன்னர்க்கு முன்னம் சொல்லும் — துறைதிறம் பாமற் காக்கத் தோன்றினன் வந்து தோன்ற' என்று துணிந்து கெம்பீரமாகச் சொன்னர். தக்க நியாயம் இல்லையாயின், 'இராமன் வந்தான்' என விசேடணமின்றி, வெறுமனே சொல்லியிருப்பார். அவர் தகுதியாகக்கொண்ட நியாயம் யாதோவெனின், அது வருமாறு:—

வாலி, இராமனம்புபட்டு இரத்தம் மிகுந்து வடிந்து உடற் கருவிகளும் உளக் கருவிகளும் ஒடுங்கினவனுனன். அப்போது, முன் கூறியவாறு, பகவான் தருமரட்சண நிமித்தம் இராமனுக அவதரித்திருக்கிருனென்று

* க. ரா. சா. அயோத்தியா காண்டம் 66-ம் பாட்டு.

கேட்டிருந்தது நினைவிற்கு வர, 'இராமன் எது செய்யினும் அது தருமானு சாரமாயிருக்கும்' என்று எண்ணிக் கோபத்தைவிட்டுச் சமாதானமுற்றுத், தன்முனைப்பின்றி மனம் அடங்கத், தற்போதம்* கழன்று பரபோத† மடைந்து சீவன் முத்தனானான்.

தற்போதம் நீங்குதற்குமுன் நிகழும் நிகழ்ச்சியாகிய மனம் அடங்குதல் வாலிக்கு நிகழ்ந்த தென்பதை 'அவியுறும் மனத்தனாகி' என்றதனாற் பெற வைத்தார். தற்போதம் நீங்குவதற்குப் பின் நிகழும் நிகழ்ச்சியாகிய பரபோதம் பெறுதலை அவன் உற்றா னென்பதைப், பின்னர் அவன் இராமனை நோக்கி 'ஆவிபோம் வேலைவாய் அறிவு‡தந் தருளினாய்' என்றா னென்றதனாற் பெறவைத்தார். தற்போத நீக்கத்துக்கு முன் நிகழும் மன அடக்கமும் பின் நிகழும் பரபோதப் பேறும் நிகழ்ந்தமையைக் கூறியதனால், இரண்டுக்கும் இடையில் நிகழும் தற்போத நீக்க நிகழ்ச்சியைக் கூறாமலே பெற வைத்தார். பரபோதம் பெற்றவர் தேகத்தோ டிருக்கும்போது பிறவாநிலை யடைந்த சீவன்முத்த ரென்பது கூறவேண்டியதில்லை. ஆவி தேகத்தை விட்டுப் போகுமுன் சீவன்முத்தனான வாலி, ஆவி தேகத்தினின்று நீங்கிய போது, விதேகமுத்தனானா னென்பதை 'வாலி — அந்நிலை (- சீவன் முத்தனாயிருந்த நிலையைத்) துறந்து (- விட்டுத், தேகத்தினின்று நீங்கி, விதேக முத்தனாகி) வானின் அப்புறத் துலகன் (இந்திரலோகம் பிரமலோகம் முதலிய பதமுத்திகளுக்கு அப்பாற்பட்ட நிலையான பரமுத்தியடைந்தவன்) ஆனான்' என்றதனாற் பெறவைத்தார். அவன் அடைந்த முத்தி, பதமுத்தி யன்று, 'மோக்ஷம்' என்னும் வீடாகிய பரமுத்தியே யென்பதை அவன், 'வெற்றர செய்தி எம்பி வீட்டர செனக்கு விட்டான்' என்றா னென்றதனாலும், 'யார்க்கும் சான்றென நின்ற வீரன் தான் வந்து வீடு தந்தான்' என்றா னென்றதனாலும் வலியுறுத்தினார். இப்படலத்துக்கு 'வாலி மோக்ஷப் படலம்' § என்ற பெயருண்மை இங்கே கவனிக்கத் தக்கது.

---

* தற்போதம், தன்னறிவு, சீவபோதம், ஆன்மபோதம், ஆன்மஞானம், இகஞானம், சிற்றறிவு என்பவை ஒருபொருட் பல்பெயர்.

† பரபோதம், தேவபோதம், பரஞானம், தத்துவஞானம், சிவஞானம், மெய்ஞ்ஞானம், மெய்யுணர்வு, கேவலவுணர்வு, பேரறிவு, ஞானதிருட்டி, ஞானக்கண் என்பவைகளும் ஒருபொருட் பல்பெயர்.

‡ இந்த அறிவுக்குத் தத்துவஞானம் என முந்திய உரைகாரர் பொருள் கூறியிருத்தல் காண்க.

§ பண்டித சவரிராயர், பாலசரஸ்வதி கிருஷ்ணமாச்சாரியர் பதிப்பித்திருக்கிற கிஷ்கிந்தாகாண்டம், பக்கம் 46, அடிக்குறிப்பைப் பார்க்க.

மோட்ச பக்குவர்க்கு* முத்தி அளிக்க, மானுடச் சட்டை சாத்திக்† குருவா யெதிரே தோன்றி அனுக்கிரகஞ் செய்யும் பரம்பொருள்‡, (பின்பு, வாலி தன் மகன் அங்கதனுக்கு இராமனைச் சுட்டிக்காட்டித்,

'.. தன்னின்
மேலொரு பொருளும் இல்லா மெய்ப்பொருள் வில்லும் தாங்கிக்
கால்தரை தோய நின்று கண்ணுக்கும் எளியன் ஆனான்'

என்று கூறுமாறு) அவனுக் கெதிர்நின்ற இராமனாகத் தோன்றிச், சட்சு தீட்சை§யாக அருள் நோக்கம் அளிக்க, அடைந்த ஞான திருட்டியினால் அவன் நோக்கியபோது, தன்னை இராமன் மறைந்தெய்த செயல், உயிர்கள் செய்யும் வினைக்கும் வினைசெய் விதத்துக்கும் தக்கவாறு பலனூட்டும் பரம் பொருள் தருமானுசாரமாகச் செய்த நீதிச் செயலென்று அனுமானமாக வன்றிப் பிரத்தியட்சமாகத் தெரிந்தான்.

வாலியை இராமன் மறைந்தெய்தற்குரிய உண்மை நியாயம் ஒன்று உள தென ஊகித்து உணரும்படி விடப்பட்டதன்றிக், கூறப்படவில்லை. கூறப் படாததன் காரணம் யாதெனின், அந்த நியாயம் யாருக்குக் கூறப்பட வேண்டுமோ, அந்த வாலி, அதனை இக ஞான மட்டும் உள்ள வரை அறியா திருந்தானேயன்றிப் பரஞானம் படைத்தபோது அறிந்துகொண்டா னென்பது.

அந்த உண்மை நியாயம் இதுவென, அவன்போல ஞானதிருட்டி பெற்றாரன்றிப் பிற ரெவராலும் தெரிதலும் செப்புதலும் இயலாததென்பது இயம்ப வேண்டியதில்லை. ஆயினும், அது இன்ன தன்மையதா யிருக்கலா மென மனோபாவனை துணையாக ஊகிக்கலாம்.

உண்மை நியாயத்தை உணர்ந்தபோது, வாலி பின்வருமாறு கருதி யிருப்பான்:— 'பொருள் கொடுப்பவன், உயிருக்கு உறுதிசெய்யும் மருந் தைக் கேட்டாலும், இறுதி செய்யும் நஞ்சைக் கேட்டாலும், கடைக்காரன், பெற்ற பொருளுக்குப் பிரதியாகக் கேட்டதைக் கொடுத்தல் போலத், தவஞ் செய்பவன் நல்ல வரத்தைக் கேட்டாலும், தீயவரத்தைக் கேட்டாலும் அவ னுடைய உபாசனாமூர்த்தி கொடுக்கும். என் தவப்பலனாக, என்னை எதிர்த்தாரது பலத்திற் பாதி என்னைச் சேரவேண்டுமென்று வரங்கேட்டுப்

* மோட்ச பக்குவர் - மோட்ச மடையும் பக்குவ முற்றவர்.

† மானுடச் சட்டை சாத்தி - மனித வடிவங் கொண்டு.

‡ பரம்பொருள், மெய்ப்பொருள், செம்பொருள், பசுப்பொருள், சிவம், தெய்வம், பிரமம், கடவுள், கருத்தா, முதல்வன் என்பவை ஒரு பொருள் குறித்தவை.

§ சட்சு தீட்சை - நயன தீட்சை - பார்வையால் உபதேசித்தல்.

பெற்றேன். எதிரிகள் பலத்திற் பாதியைப் பறித்துக்கொண்டு, அவர்களை அநியாயமாக வென்றுவிட வஞ்சகஞ் செய்த யான், என்னை எதிராமல் என் எதிரி எவனேனும் என்னைக் கொல்லலா மென்பதை ஊழ்வலியால்* உணர்ந்தேனில்லை.

'இரவிலும் பகலிலும் இறவாமலும், மனிதராலும் மிருகங்களாலும் மாளாமலும் வாழ்ந்திருக்க வரம்பெற்ற இரணியன், பகலும் இரவுமல்லாத சாயங்கால சமயத்தில், மனிதனும் மிருகமுமல்லாத நரசிங்கத்தால் இறந்து படுவதை எதிர்பாராதது போலவும், "நாங்கள் எவராலும் கொல்லப்படா திருக்க வேண்டும்" என்று வரம்பெற்ற சுந்தோபசுந்த ரிருவரும் ஒருவர் மற்றொருவரால் உயிரிழப்பதை முன்னறியாதது போலவும், என்னைக் கொல்வோன் என்னை எதிராமற் கொல்வா னென்பதை அறியும் எதிர்கால அறிவு இல்லாமற் போனேன்.

'இராவணாதி யிராக்கத சங்கார நிமித்தம் திருமால் இராமனாகவும் தேவர்கள் அவன் சேனைவீரராம் வானரராகவும் பிறந்திருக்கும் அவதார ரகசியங்களைக் கேள்வியால் அறிந்திருந்தபடி, யான், ராமசேனைத் தலைவனா யிருந்தும், என் வலி மிகுதியால் செவிப்பட்ட செய்தியைப் பொருட்படுத் தாமல், ஈசனும் ராசனுமான இராமனுக்கு எதிரியான இராவணனோடு கூடி அக்கினி சாட்சியாக நட்புரிமை கொண்டேன். இது இராமகாரிய மூலநாச முயற்சியாய், ஒருங்கே ஈசத்துரோகமும் ராசத்துரோகமும் ஆயிற்று. இதற்குப் பரிகாரம் கொலைத்தண்டமேயன்றி வேறு தண்டம் யாதுமின்று. அன்றியும் அரக்கரை அடக்க வல்ல ஆற்றல் அடைந்திருந்தும், அவ் அரக்கரும் அவர் தலைவனான இராவணனும் உலகிற்கும் இராமனுக்கும் இழைத்து வந்த தீங்குகளைக் கண்டும் காணான்போலத் தடுக்காதிருந்தேன். இவ்வாறு, செய்யத்தகாத காரியத்தைச் செய்தும் செய்யத்தக்கதைச் செய்யாதும் தவறினேன்.† இவை யான் செய்துள்ள தவறுகள். இனிச் செய்யக்கிடந்த தவறும் ஒன்று உண்டு. அது, ராம ராவண யுத்தத்தில் நான் சத்தியந் தவறாமைப் பொருட்டு இராவணன் பக்கம் நின்று இராமனுடன் போர் புரிதல்; அன்றேல் சத்தியந் தவறுதல்: இவ்விரண்டுள் ஒன்று.

'உயிர்கள் செய்யும் வினைக்குத் தக்க பலனைத், தக்க காலத்தில், தக்க இடத்தில் தக்கார் வாயிலாக வினைச்சட்டத்தின்படி ‡ அடையச்செய்யும்

---

* ஊழிற் பெருவலி யாஉள மற்றொன்று
சூழினும் தான்முந் துறும். — குறள்

† செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க
செய்யாமை யானும் கெடும். — குறள்

‡ வினைச்சட்டம் (Law of Karma), கருமபல நியதி, தருமசக்கரம், தேவாக்கினை, கடவுளாணை, 'இருவினைப்பயன் சென்றடைதற் கேதுவாகிய நியதி' (குறள் உரை) ஆகிய ஊழ், விதி என்பவை ஒருபொருள் குறித்தவை.

நீதி ரூபமாகத்* தன்னை வெளிப்படுத்தும் பரம்பொருள், என்னை என் வினைப்பயனை அடைவிக்க, ஊர்க் காவற்காரன் வேடமாறிக் கள்ளனைக் கள்ளவழியாகப் பிடித்தல்போல, என்னை இராமனாகி மறைந்துநின்று கொன்று நீதிசெலுத்தியதென்று அப் பரம்பொருள் அளித்த ஞானக்கண் கொண்டு கண்டறிந்தேன்.

'யான் நேரல்லாததைச் செய்துவிட்டு நேரல்லாத தண்டனை யடைந்தது நியாயமன்றென்றும், தருமத்துக்கு விரோதமாக நடந்து விட்டுத் தரும விரோதமாகக் கொல்லப்பட்டது தவறென்றும் கருதியது மடமையே. உலக ஒழுங்குக்கு மாறாக நடப்பவர்களுக்கு உலக ஒழுங்குக்கு மாறான தண்டனை உரியதே. மிருகம்போல நடந்த யான் மிருகம்போலக் கொல்லப்பட்டதற்கு, மிருகம்போலக் குறைகூறுமையே முறையானதாம்.

'யான் என் வலிமை காரணமாக மெலியாரை வருத்திய பாபபலனைக் கொலையுண்டனுபவித்தல் பிராயச்சித்தமாகப் பாபவிமோசனம் பெறவும், என் வலிமை மிகுதியால் மேலுமேலும் பிறரை வருத்தி மிக்க பாபம் ஈட்டுவேனா யிருந்தேனைத் தடுத்தாட்கொள்ளவும், எம்பெருமான் செய்த செயல், தேகச் சேமநிமித்தம் தேகத்தில் ஒரு பாகத்தைச் சேதிக்கும் சத்திரிகர்† செயல்போல, என ஆன்மாவை இரட்சித்தற்கு என் தேகத்தை அழித்ததாயுள்ள அருட்செயலே. ஒவ்வொரு விதிக்கும் விலக்குண்டு.‡ ஒரு வீரனை மற்றொரு வீரன் மறைந்தெய்வது அதருமமென்னும் விதிக்கு விலக்கு, இராமன் என் திறத்தில் இயற்றிய செயலாம். ஒருவன் தற்கொலை செய்தற்குச் சாதகமாகக் கருதி வைத்திருந்த நச்சுநீர்ப் பாத்திரத்தில் வேறொருவன் களவாக அந்நீரைக் கொட்டிவிட்டு நன்னீரைப் பெய்து வைத்தல் களவாகாததுபோலவும், ஒருவன் அநியாயமாகச் சாவாமல் தடுப்பதற்குச் சாற்றிய பொய் பொய்யாகாதது போலவும், இராமன் மறைந்து நின்றது வஞ்சகமாகாது; கொன்றது கொலையாகாது; இரண்டு செயல்களும் இரட்சகச் செயல்களே.'

இவ்வாறு, ஞானக்கண்கொண்டு கண்டு வாலி கருதியதாகக் கொண்டால், இராமன் மன்னர் முறைக்கு மாறாக மறைந்தெய்த செயல் இகழத்தக்க குற்றச்செய லாகாமல் புகழத்தக்க குணச்செயலாம்.

தனக்கு உதவிசெய்யும் சத்தி சற்றுமில்லாத சிசுவினைக் கொலைபுரிதல் மாபாதகத்துள் மாபாதகமென்பது தெளிவு. அந்தச் சிசுக்கொலையும்

* இப்படலம் கஉ௫-ல் 'உண்டெனும் தருமமே உருவமா உடையநிற்—கண்டனன்' என வாலி கூறுதல் காண்க.

† சத்திரம் - ரணவைத்தியம். சத்திரிகர் - ரணவைத்தியர்.

‡ 'Every rule has its exception.'

அதனைப் பத்துமாதம் வயிற்றுள்வைத்து வளர்த்த மாதாவாலேயே செய்யப் படுமானால், அதனை என்னென்பது! அப்படிப்பட்ட — நினையவே நெஞ்சு திடுக் கிட்டு நடுக்குற்றிடச்செய்யும் — கோரமான பாதகச் செயலைச் செய்தாள் பாரத கதாவீரர் குலமுதல்வனான சந்தனு மகாராசனுக்குத் தருமபத்தினி யானவள். அவள் செய்த சிசுவதை இராமன் செய்த வாலிவதை சம்பந்த மான காரண காரியத் தொடர்ச்சி முறையை விளக்குவதா யிருத்தலினால், அவ் வதை எவ்விதம் நிகழ்ந்ததென்ற வரலாற்றின் சுருக்கம்* இங்கே தரப் படுகின்றது:—

சந்தனு மகாராசன் ஒரு நாள் வேட்டையாடியபோது, தாகம் அதிகப் பட, அதனைத் தணித்தற்குக் கங்கைக்கரையை அடைந்தான். அங்கே, பேரழகுடைய மாதரசி ஒருத்தியைக் கண்டு, தாகம் தவிர்ந்து மோகம் மிகுந்து, அவளை அடைந்து, 'நீ கன்னிகை யென்னில், என்னிலும் தன்னிய னில்லை' என, அவள், 'ஆம், நான் கன்னிகையே; ஆயின், கண்டவர் நடு நடுங்க நான் யாதியாது தீதுசெய்யினும் நீ பொறுப்பையேல், உன் மனைவி யாக இருப்பேன்; எப்பொழுது பொறுப்பதை மறுப்பையோ, அப்பொழுது பிரிவேன். இது என் பிரதிக்கினை' என, அதற்கு இசையாவிடில் உயிர் போய்விடுமென்று இசைந்து, அவன் அவளைக் கலியாணஞ் செய்து கொண்டான்.

அவள், தலைப்பிள்ளை பெற்றவுடன், அதனைத் தண்ணீருள் முழுகு வித்துச் சாவச்செய்தாள். அதன்பின் உற்பவித்த ஆறு குழவிகளையும் அதே கதி அடையச்செய்தாள். சந்தனு, எட்டாம் குழந்தை சனனமான வுடனே, அதனைத் தாய் கைப்பற்றுமுன், தான் கைப்பற்றி, 'இந்த மகனை எனக்கு ஈந்து என் குலத்தை நிலைக்கச் செய்தருள்வாயாக' என்று பிரார்த் திக்கப், 'பிரதிக்கினைப் பிரகாரம் பிரிவேன்' என, 'நீ ஆர்? என் எழு குழந்தைகளையும் இறந்திடச்செய்தாய்?' என, முன்னைய நிகழ்ச்சிகளை மொழிகின்றாள்:—

'முன் ஒருசமயத்தில், பிரமசபைக்கு வந்திருந்தவர்களுள், பெருங் காற்று வீசக் கலைகுலைந்த கங்கையின் அங்கத்தைக் கண்ணுறுதபடி எல்லா ரும் கண்மூடிக்கொள்ள, ஒருவன் காமுற்று நோக்கினான். பிரமன், கோபித்து, "வருணதேவ, மண்மீது வேந்தனாகப் பிறந்து வேண்டுமளவு காமநுகர்ந்து மீண்டு வருக" எனச் சபித்து, அவன் மனைவியான கங் கையைக் "குற்றமற்ற நீ, மனிதப் பிறப்பெடுக்காமல், மனித வனிதை வடிவ மெடுத்து, அவன் காதல் தீர்தல்காறும் அவன் மனைவியாக வாழ்ந்து வரு வாயாக" என்றான்.

* விரிவை வில்லிபாரதம், குருகுலச் சருக்கம், ௩௩-௭௩-ல் பார்க்க.

'அவள் மண்ணுலகை நோக்கி வரும் வழியில், அவளை அஷ்டவசுக்கள் சந்தித்து வந்தித்து, "எங்கள் தலைவனது குழந்தைக்குப் பாலுக்காக, அவனும் அவன் கருத்துக் கிணங்கி மற்றெழுவரும் வசிட்ட முனியின் காமதேனுவைக் களவுசெய்ய, அம் முனிவன் முனிவுகூர்ந்து, ' "நீங்கள் எண்மரும் மனிதராகப் பிறந்திடுக. தலைவன், களவுக்கும் தலைவனாயிருந்ததனால், மண்ணில் நெடுங்காலம் வாழ்ந்து மீண்டு வருக. ஏனை எழுவரும் பிறந்தவுடன் இறந்து திரும்புக" ' என்று சபிக்க, அந்தச் சாபவசத்தினராய், மண் நோக்கிச் செல்கின்றோம்" என்றனர். அவள், தன் வரலாறு கூறி, "நீங்கள் எல்லீரும் என் வயிற்றில் உதித்திடுங்கள். தலைவன் தவிர, மற்றெழுவரும் மண்மீதுறுமுன் விண்மீதுறச் செய்வேன்" என்று கூறிப், பூமியை அடைந்து மானுட மடந்தை யானாள். அவளை நீ கங்கைக் கரையிற் சந்தித்தாய். அதன் பின் நிகழ்ந்தவை அனைத்தும் அறிவை.'

கங்கை தன் குழந்தைகளைக் கொன்ற ஒரு செயலே, சந்தனு, இவ்வுலக நிகழ்ச்சிகளை யறிந்தமைகொண்டு நோக்கியபோது இரக்கமற்ற தீச்செயலாகவும், மேலுலக நிகழ்ச்சிகளை யறிந்தமைகொண்டு நோக்கியபோது கருணை காரணமான நற்செயலாகவும் இருந்ததுபோல, இராமன் வாலியை மறைந்து நின்று கொன்ற ஒரு செயலே, வாலி இகலோக அறிவுகொண்டு நோக்கியபோது அதரும கிருத்தியமாகவும் பரலோக அறிவுகொண்டு நோக்கியபோது சுதரும கிருத்தியமாகவும் இருந்தது காண்க.

தன் குழந்தை உயிரைக் காக்கும் தலைமைக் கடமையுடைய தாயான கங்கை, தன் குடிகளின் உயிர்ப் பாதுகாப்பை முதற் கடனாகக் கொண்ட இராசனான இராமனுக்கும், இளமை காரணமாகத் தன்னைக் காக்கச் சத்தியற்ற குழந்தை, இராமன் மறைந்து நின்றமையால் தன்னைப் பாதுகாக்க முடியாதிருந்த வாலிக்கும், குழந்தை வதை வாலி வதைக்கும், உவமை. இனி, முற்பிறப்பறியுமுன் சந்தனுவுக்குக் கோரமான பாவமாயிருந்த கங்கை செயல், ஞானக்கண் பெறுமுன் வாலிக்கு வஞ்சகமும் வன்கண்மையுமாயிருந்த இராமன் செயலுக்கும், முன்பிறப்பு நிகழ்ச்சிகள் தெரிவிக்கப்பெற்ற பின் கங்கைசெயல் நல்ல புண்ணியச் செயலென்று சந்தனு தெரிந்துகொண்டமை, ஞானக்கண் பெற்றபின் இராமன் செயல் பரிசுத்தமும் பரமகாருணியமுமான செயலென்று வாலி கண்டுகொண்டமைக்கும் உவமை. (சஅ)

வாலி மன்னிப்பு வேண்டல்

49. தாயென வுயிர்க்கு நல்கித் தருமமுந் தகவுஞ் சால்பும்
நீயென நின்ற நம்பி நெடிதுநீ நோக்கு நோன்மை
நாயென நின்ற வெம்மா னவைபற வுணர லாமே
தீயன பொறுத்தி யென்றுன் சிறியன சிந்தி யாதான்

கொண்டுகூட்டு : *சிறியன சிந்தியாதான் (ஆன வாலி), 'தாய் என, உயிர்க்கு நல்கித், தருமமும் தகவும் சால்பும் நீ என நின்ற நம்பி! நீ நெடிது நோக்கும் நோன்மை* (இத்தகையது என்று) நாய் என நின்ற எம்மால் †, நவை அற உணரலாமே! (யான் செய்த) தீயன பொறுத்தி' என்றான்.*

பொருள் : *(இராமனருளால் தத்துவஞானமென்னும் மெய் யுணர்வு பெற்றதனால், பரலோக சம்பந்தமான மகத்தான எண் ணங்களுடையவனாய், இகலோக சம்பந்தமான) அற்ப விஷய மானவைகளைப் பொருளாகக் கருதாதவனான வாலி, 'குழந்தைக் குத் தாய் அன்பு செய்தல் போல, உயிர்களுக்கு நீ அருள் செய்து, நீதியும் நடுவுநிலைமையும் எங்கும் நிறைவும் (ஆனவை வேறு நீ வேறென்றில்லாமல் அவை அனைத்தும்) நீயே யென்று சொல் லும்படி சருவ சாட்சியாய் நின்ற புருடோத்தமனே! பேரறி வுடைய நீ (நெடுங்காலத்துக்குமுன் செய்த வினைகள் நெடுங்காலத் துக்குப்பின் பலன் தருவதை முன்னும் பின்னுமாக) நெடுங்காலம் உள்பட நோக்கி (ஐயந் திரிபின்றி) அறியும் வல்லமை இப்படிப் பட்டதென நாய்போலக் கடைப்பட்டு நின்ற என்போலியரால் (அறியலாகாதது; அறிந்தாலும் ஐயந்திரிபாகிய) குற்றமில்லாமல் அறியமுடியாது. (அவ் வல்லமையை நீ கடாட்சித் தருளிய தத் துவஞானத்தால் யான் அடைந்து எல்லாந் தெரிந்து கொண் டேன். அதற்குமுன் அறியாமையால் யான் செய்த) குற்றங் களைப் (பகுத்தறிவில்லாத மிருகமான குரங்கு செய்த குற்றங் களாகக் கருதிப்) பொறுத்தருள்வாயாக' என்று கூறினான்.*

'நல்கல்,' 'அருளல்' போலச், செயப்படுபொருள் குன்றாத வினை யாய்க் கொடுத்தற் பொருளை யுணர்த்தலன்றிச், செயப்படுபொருள் குன்றிய வினையாய் அருள்செய்தல் என்னும் பொருளை யுணர்த்தலும் உடையது. இங்கே நல்கலின் பொருள் அருள்செய்த லென்பது. தருமத்துக்குள்ள புண் ணியம் நீதி யென்ற இரு பொருள்களுள் நீதி, இங்கே பொருத்தமுடைய தாம். நீதிக்கு இன்றியமையாத நடுவு நிலைமை யென்னும் பொருளுடைய 'தகவு' அடுத்துக் கூறப்பட்டிருத்தல் காண்க. சால்பு - நிறைவு - எங்கும் நிறைந்திருத்தல் - சருவ வியாபகத்துவம். இறைவன் சருவ வியாபியா யிருந்து எங்கெங்கும் எவ்வெக்காலத்தும் நிகழும் உயிர்களின் செயல்களையும்

---

* *'நெடிதுநீ நோக்கும் நோன்மை' என்ற பாடம், சவரிராயர், கிருஷ்ணமாச் சாரியர் பதிப்பிற்கண்டது.*

† *'எம்மால்' என்ற பாடம் வை. பதிப்பின் அடிக்குறிப்பில் உள்ளது.*

அறியும் சருவ சாட்சியாய்ச், சாதாரண நீதிபதிகள் போலத் தனக்கு அந்நியமான சாட்சிகளின் உதவி வேண்டாமல், உண்மை அறிந்து, உயிர்கள் செய்த வினைக்குத் தக்க பலனை அடையச்செய்து நீதிசெலுத்துகிறு னென்பதைக் குறிப்பிக்கும் 'சால்பு' என்பதும் மேலே கூறியவாறு தருமத்துக்கு இங்கே நீதியென்ற பொருள் பொருத்தமான தென்பதை வலியுறுத்தல் காண்க. 'தருமமும் தகவும் சால்பும்' என்பதற்குத் 'தருமமும் நடுவு நிலைமையும் நற்குண நிறைவும்' என்பது முந்திய உரை. நம்பி - ஆடவரிற் சிறந்தோன். நெடிது - நெடுங்காலம்.—**குறள்** கூசஙு. நோன்மை - வலிமை - வல்லமை. நவை - குற்றம். '**நெறியினில் நோக்கும் நேர்மை**' என்ற பாடத்துக்குக் (காரண காரியத் தொடர்ச்சி) முறைப்படி (இன்ன பயன் இன்ன வினையால் விளைந்ததென்று) காணும் நுட்பம் என்று பொருள் கூறலாம்.

இவ்வுலக நீதிபதியான இறைவன் (-அரசன்) இவ்வுலகிற் பிறந்தார்க்கு, அவர்கள் வாக்கினுலும் காயத்தினுலும் செய்யும் நன்மை தீமைகளுக்கு முறையே சம்மானமும் தண்டனையும் அளித்தல்போல, சருவலோக நியாயாதிபதியான இறைவன் (- கடவுள்) எவ்வுலகிற் பிறந்தாரும் வாக்குக் காயங்களாற் செய்யும் நன்மை தீமைகளுக்கேயன்றி மனத்தாற் செய்யும் நன்மை தீமைகளுக்கும் முறையே நற்பயன் தீப்பயன்களை அருள்பவன் என்பது போதர, 'தருமம் (-நீதி) நீ என நின்ற நம்பி' என்ருனென்க.

ஊனக் கண்ணில்லார்க்கு அக்கினி காணப்படவில்லையானுலும் அதன் இயற்கைக் குணமான சூடு தெரிதல்போல, ஞானக்கண்ணில்லார்க்கு இறைவன் காணப்படாவிட்டாலும் அவன் இயற்கைக் குணமாய் அவன் ஆணையெனத்தக்க காரணகாரியத் தொடர்பு நியதி* தெரியலாவதாம். உயிர்கள் தாந்தாம் செய்யும் வினைகளுக்குரிய பலன்களை அடையும்படி இறைவன் செய்யும் நீதியாகிய கர்மபல நியதி யென்ற வினைச்சட்டம்† மேற்கூறிய காரியகாரணத் தொடர்பு நியதியு ளடங்கியது. இறைவன் குணமான நீதியை இறைவனென உபசரித்துக் கூறியதாகத், 'தருமம் நீயென நின்ற நம்பி' என்றதைக் கொள்ளலாம்.

வினைகளுள், கீரைவிதை போல விரைவிற் பலன் றருபவையும், பனைவிதை போல நெடுங்காலஞ்சென்று பயனளிப்பவையும் உள என்பர். அவ்விருவகை வினைகளுள் பிந்திய வினைகளின் விளைவுகளை அறிதல் பேரறிவாளர்க்கே இயலும் என்பது குறிக்க, 'நெடிது நீ நோக்கும் நோன்மை' என்ருனென்க.

பாட பேதம்: நம்ப : நெறியினி னேக்கு நேர்மை; எம்பா லுணரலாமோ. (சக)

---

13 * Law of Causation. † Law of Karma.

தத்துவஞானம் பெற்ற வாலி இராமனைத் துதித்தல்

50. ஏவுகூர் வாளியா லெய்துநா யடியனேன்
ஆவிபோம் வேலைவா யறிவுதந் தருளினாய்
மூவர்நீ முதல்வனீ முற்றுநீ மற்றுநீ
பாவநீ தருமநீ பகையுநீ யுறவுநீ

கொண்டுகூட்டு: *'ஏவு கூர் வாளியால் (என்னை) எய்து, நாய் (போலும்) அடியனேன் ஆவி போம் வேலைவாய், அறிவு தந்து அருளினாய்! மூவர் நீ! முதல்வன் நீ! முற்றும் நீ! மற்றும் நீ! தருமம் நீ! பாவம் நீ! உறவும் நீ! பகையும் நீ!*

பொருள்: ***'அம்பினால் என்னை எய்து, அடியேன் ஆவி நீங்குந் தருணத்தில், எனக்குத் தத்துவ ஞானத்தைத் தந்தருளினாய்! (அதனால் என் வினைக்குத் தக்க பலனடையச் செய்தா யென்பதை அறிந்ததே யல்லாமல், பிரம விட்டுணு ருத்திரர் என்னும்) மூவரானவனும் நீயே என்பதையும், அம் மூவருள் முதல்வனானவனும் நீயே என்பதையும், அறியப்பட்ட பொருள்கள் அனைத்தும் நீயே என்பதையும், அறியப்படாத மற்றைப் பொருள்களும் நீயே என்பதையும், தருமமும் நீயே, அதருமமும் நீயே என்பதையும், சினேகமும் நீயே, பகையும் நீயே என்பதையும் பிரத்தியக்ஷமாகத் தெரியலானேன்.***

ஏவு கூர் வாளி - ஏவப்படும் கூரிய அம்பு. 'நாயடியனேன்' - 'நாய் போற் கடைப்பட்ட அடியேன்'; 'தன்னையுடையான் "எறிந்த வேல் மெய்யதாக வால் குழைக்கும் நாய்" போல், நீ எறிந்த வாளி மெய்யதாக அகங் குழையும் அடியேன்': இங்கு நாய், தாழ்மை நன்றியறிதல் இரண்டையும் குறிப்பதுமாம். 'அடியேன்' அன்சாரியை பெற்று 'அடியனேன்' என ஆகியது. வேலைவாய்; வாய் - ஏழனுருபு. அறிவு - பேரறிவு - தத்துவஞானம் - மெய்யுணர்வு. உறவு - சினேகம்.

'பாவம் நீ தருமம் நீ' என்றும், 'பகையும் நீ உறவும் நீ' என்றும் ஒரு பொருளையே ஒன்றோடொன்று முரண்பட்ட இரண்டிரண் டெதிரிடைப் பொருள்களாகக் கூறியது, பரம்பொருளன்றிப் பாவமுமில்லை தருமமு மில்லை, பகையுமில்லை உறவுமில்லை யென்பது குறித்தது. இதன் உட்கோள் யாதெனின், அது வருமாறு:—

நஞ்சும் அமுதமும் தோன்றுதற் கிடமாயிருந்த பாற்கடல்போலப் பாவமும் புண்ணியமும் தோன்றுதற் கிடமாக உள்ளவன் இறைவன். முறை

தவறி முயன்றபோது விடத்தையும், முறையாக முயன்றபோது அமிழ்தத்தையும் தேவர்களுக்குத் திருப்பாற் கடல் கொடுத்தாற்போலச், சீவர்களுக்கு, இறைவன், அவர்கள் பாவஞ் செய்தபோது பாவபலனையும் புண்ணியஞ் செய்தபோது புண்ணிய பலனையும் தருதலால், (பின்னர், 'உண்டெனும் தருமமே உருவமா யுடையநிற் - கண்டனன்' என வாலி கூறுமாறு) அவனைத் தருமசொரூபி என்னும் நீதி வடிவினன் என்பர். 'இது தீச்செயல், இதற்குத் தண்டனை இது; இது நற்செயல், இதற்குச் சம்மானம் இது' என்று விதித்துத் தீச்செயல் செய்தார்க்குப் பகையாய் நற்செயல் செய்தார்க்கு நட்பாயிருக்கும் நீதியின் அமிசங்களாய்த் தீச்செயல் நற்செயல்களும் பகை நட்புக்களும் இருத்தல் போல, இறைவன் அமிசங்களாய்ப் பாவ புண்ணியங்களும் பகை நட்புக்களும் உள்ளன. (ருo)

வாலி தான் பெற்ற நன்மைகளை உரைத்தல்

['இராமமூர்த்தி! நீ எனக்கருளிய ஞானதிருட்டியினால், நீ யாவனென்றும் உன் தன்மை இது வென்றும் தெரிந்துகொண்டேன். அதனால் அரியவற்றுள் அரியதான முத்தியை எளியவற்றுள் எளியதாக எய்தினேன். காணப்படும் நீதி, காணப்படாத எப்பொருளின் இயற்கைக் குணமென்று உலகத்தார் அனுமானமாக அறிகிறார்களோ, அப்பொருளேயான உன்னை அந்த ஞானதிருட்டியால் யான் பிரத்தியட்சமாகக் காணலானேன். இந்தக் காட்சிக்கு ஏற்றமான காட்சி ஏதும் இல்லை. உன்னால் அனுக்கிரகிக்கப்பெற்றார் அடைவதும் முத்தியே; நிக்கிரகிக்கப்பட்டார் அடைவதும் முத்தியே. நிக்கிரக வாயிலாக எனக்கு முத்தி சித்திக்கச் சித்தம்வைத்தருளினாய்.

'என்னைக் கொல்ல, உன்னைக் கொணர்ந்த என் தம்பி, அநித்தியமான வெற்றரசைத் தான் அடைந்து, நித்தியமான வீட்டரசை யான் அடைய விட்டான். அவன் செய்த உதவியினும் சிறந்த உதவி யில்லை.]

வாலி இராமனிடம் வரம் வேண்டல்

51. ஓவிய வுருவ நாயே னுளதோன்று பேறவ துன்பால்
பூவிய னறவ மாந்திப் புந்திவே றுற்ற போது
தீவினை யியற்று மேனு மெம்பிமேற் சீறி யென்மேல்
ஏவிய பகழி யென்னுங் கூற்றினை யேவ லென்றான்

கொண்டுகூட்டு : 'ஓவிய உருவ! நாயேன் உன்பால் பெறுவது ஒன்று உளது. எம்பி, பூ இயல் நறவம் மாந்தி புந்தி வேறு உற்றபோது, தீவினை இயற்றுமேனும், அவன்மேல் சீறி, என்மேல் ஏவிய பகழி என்னும் கூற்றினை ஏவல்' என்றான்.

பொருள் : (வாலி இராமனை நோக்கி) 'நாய்போலும் அடியேன் உன்பால் பெறும் வரம் ஒன்று உண்டு. அது யாதெனில், என் தம்பி, (இயல்பாக நற்குணமுடையவன். ஆயினும், அவன்) கள்ளைக் குடித்துப் புத்தி (சுபாவம்) மாறி மயங்கியபோது குற்றஞ் செய்வானானால், அவன்மேற் கோபித்து, என்மேலேவிய காலபாணத்தை ஏவாதிருப்பாயாக என்பது.' என்றான்.

ஓவியம் - சித்திரம். உருவம் - வடிவம். ஓவிய உருவ - சித்திர(த்தில் விளங்கும் சிறந்த வடிவம்போல அழகிய) வடிவமுடையானே! இயல் - பொருந்திய. நறவம் - மது - கள். மாந்தல் - குடித்தல். புந்தி - புத்தி. வேறுறல் - மாறுபடல். இயற்றும் - இயற்றுவான் - செய்வான். எம்பி - என் தம்பி. பகழி - அம்பு. காலன்போலத் தப்பாது கொல்லும் பாணத்தை, உரையில் காலபாணமென்றது, க. ரா. சா. பாலகாண்டம் 'எண்ணிலா' என்ற 37-ம் பாட்டில் வரும் 'காலவேல்' போல்வது.

'உளது ஒன்று பெறுவது உன்பால்' என்பதை 'உன்பால் பெறுவது ஒன்று உளது' என முழுதும் வரிசையாகப் பின்முன்னாக மாற்றுக. வசனநடைக்கு முற்றும் மாறாய், வார்த்தைகள் அனைத்தும் முறையாகப் பின்முன்னாக அமையப் பாடியுள்ள 'உளதொன்று பெறுவ துன்பால்' என்ற வாக்கியத்தின் சொற்கிடக்கை முறை வியந்து நோக்குதற் குரியது. சிறந்த செய்யுள் நடை, அதன் எளிமையும் தெளிவும் காரணமாக, செய்யுள் நடை யென்ற நினைவே எழாதவாறு நிகழ்தற்குச் செய்யு ளங்கமாயுள்ள இவ் வாக்கியம் ஏற்றதோர் உதாரணமாயிருத்தல் காண்க.

சீறி என்பது, 'எம்பிமேற் சீறி', 'என்மேற் சீறி' என இயைத்தற் குரித்தாக நிற்றல் கவனிக்கத்தக்கது. இப்படி நிற்பது, அலங்காரத்தில் நடுநிலைத் தீபகம் என்றும், பொருள்கோளில் தாப்பிசை என்றும், சூத்திரநிலையில் சிங்கநோக்கு என்றும் கூறப்படும்.

வாலி, தன்னைக் கொல்வித்த தம்பியை மன்னித்ததேயன்றி, வாளி துளைக்கும் மரண வேதனையினால் வருந்தும்போதும், மறதியுறாது, தம்பி நன்மையை நாடி வரம்வேண்டினானெனக், கன்னெஞ்சு படைத்தாரும் கனிந்துருகிக் கண்ணீர் சொரியும்படி, வாலியின் பேரன்பும் பெருந்தகைமையும் விளங்கக் கூறியிருக்கும் வித்தகக் கவிநயம் மிகவும் பாராட்டத்தக்கது.

(௫க)

இராவணனை வாலாற் பற்றிவந்து, இராமனிடம் ஏற்பியாமைக்கு இரங்கல்

['யான், உனக்கு வேறு பேருதவி யாதொன்றிலும் செய்யும் பெரும் பேறு பெற்றிலேனெனினும், வஞ்சக இராவணனை வாலினுற் சுற்றிப் பற்றிக்கொணர்ந்து பாதகாணிக்கையாக உன் திருமுன்னர் வைத்துக் குரங்கு செய்யக்கூடிய சிறுதொண்டு செய்யும் சிறு பேறும் பெற்றேனில்லை; செய்யாது கழிந்த செயலைப் பற்றிப் பேசலாற் பிரயோசனமில்லை. ஆதலின் இது நிற்க.]

அனும சுக்கிரீவர் ஆற்றல் சாற்றல்

['இனி எந்தக் காரியமேனும் செய்யவேண்டிய தேற்பட்டால், அதனைச் செய்யத்தக்க அறிவும் ஆற்றலும் உடையன் அனுமன். சுக்கிரீவனும் அனுமனும் போன்ற துணைவர் வேறு யாருமிலர். இவர்களால் உனது தேவியைத் தேடி அடைந்து சிறப்புடன் வாழ்வாயாக!' என்று கூறினான்.]

சுக்கிரீவனுக்கு நன்மதி கூறி, அவனும் சுற்றமும் இராமனுக்கு அடைக்கலம் எனல்

[பின்பு தம்பியை அருகில் அழைத்துத் தழுவி அணைத்து, 'உனக்கு உறுதியான தொன்றை உரைக்கின்றேன், உற்றுக்கேள்' என்றபோது, அண்ணனது அன்புமிகுதியை அறிந்து, அகம் மிக நெகிழ, ஆற்றொணுத் துக்கம் மிக்கு, அழுது வருந்தும் தம்பியை 'வருந்தாதே!' என்று வருத்தம் மாற்றி, 'வேதவேதாந்தங்கள், இதுவே முடிவான மெய்ப்பொருளென்று, துணிந்துகூறும் பரம்பொருளே, கோதண்ட ராமனுகத் தருமநெறியை நிலைபெறச் செய்ய, அவதரித்திருக்கிற தென்பதை அணுவளவும் ஐயமின்றி அறிவாயாக. என்னைப்போல நித்தமும் நேராகத் தீமையும், மறைவாக வஞ்சகமும் செய்தாரும், இவன் அம்பால் இறப்பரேல் ஈடும் எடுப்பு மில்லாத வீடு பெறுவரென்றால், உன்னைப்போலத் திருவடித் தொண்டு செய்வார் பெறும் பேற்றைப் பேசவேண்டுமோ? நீ தேடிப்போய் அடையவேண்டிய இறைவன் தான் தேடிவந்து உன்னை அடையப்பெற்றாய்! ஊழை உதவிடில், யாதே அரியது! நீ முன் செய்த தவப்பயனுக, ஈசனே ராசனுன இவனுக்கு அடியனுகி இருமைப்பயனையும் ஒருமிக்க அடைந்தாய். இவன்

காலாலிட்ட கட்டளைகளைத் தலையாற் செய்து, அபாயம் உற்றால் ஆருயிர்கொடுத்து உதவுவாயாக. நீ இராசனெனினும் இவனுக்கு அடிமை யென்பதை என்றும் மறவாயாக!' என்று நன்மதி கூறிய பின், இராமனை நோக்கி, 'இவனும் இவன் சுற்றமும் உனக்கு அடைக்கலம்' என்று கும்பிட்டுக் கூறினான்.]

அங்கதன் வாலியைக் காணல்

[பின்பு, தம்பியை நோக்கி, 'உன் செல்வச் சிறுவனை யிட்டுவா!' என, அவன் கொணர, அங்கதன் வந்தான்.]

சுடருடை மதிய மென்னத் தோன்றினன் றோன்றி யாண்டும்
இடருடை யுள்ளத் தோரை யெண்ணினு முணர்ந்தி லாதான்
மடலுடை நறுமென் சேக்கை மலையன்றி யுதிர வாரிக்
கடலிடைக் கிடந்த காதற் றாதையைக் கண்ணிற் கண்டான்

கொண்டுகூட்டு: யாண்டும் இடர் உடை உள்ளத்தோரை எண்ணினும் உணர்ந்திலாதான் (ஆன அங்கதன்) சுடர் உடை மதியம் என்னத் தோன்றினன்; தோன்றி மடல் உடை நறுமென் (மலர்ச்) சேக்கை மலையன்றி, உதிர வாரிக் கடல் இடைக் கிடந்த காதல் தாதையைக் கண்ணில் கண்டான்.

பொருள்: துன்பமுடைய மனத்தினரை(க் கண்டறியாதவனாய்த், துன்புடையார் இப்படி யிருப்பரெனச் சொல்லக் கேட்ட போது, அவர்கள் நிலைமையை மனத்தினாற் பாவித்தறிய முயன்று, எண்ணி) எண்ணிப் பார்த்தாலும் தெரியமாட்டாத பாலப் பருவமுடையவன் ஆன வெண்ணிறமுடைய அங்கதன் ஒளியுடைய வெண்மதி வந்தாற்போல வந்தான். (அவன், சற்று முன்பு, சுக்கிரீவனோடு போர்புரியப் புறப்படுமுன் படுத்திருக்கப் பார்த்த) மலர்மெத்தை மலைமேலன்றி, இரத்தவெள்ளக் கடலுக்குள்ளே கிடந்த பிதாவைக் கண்டான். (அவன் பரிதாபநிலை பாவித்தற்பாலதன்றிப் பகரற்பாலதன்றென்றபடி).

சுடர் உடை மதியம் - ஒளி உடைய சந்திரன். யாண்டும் - எப்பொழுதும் - எக்காலத்தும். இடர் - துன்பம். உடை - உடைய. எண்ணினும் - எண்ணினாலும் - நினைத்தாலும். உணர்கிலாதான் - உணரமாட்டாதவன். மடல் - பூவிதழ். நறுமை - நன்மணம். சேக்கை - படுக்கை. உதிரம் - இரத்தம். வாரி - வெள்ளம் - பெருக்கு. காதல் - அன்பு. காதல் தாதை - தான் அன்பு வைத்திருக்கும் தந்தை; தன்பால் அன்பு வைத்திருக்கும் தந்தை.

'இடருடை உள்ளத் தோரை எண்ணினும் உணர்ந்திலாதான்' என்பதற்குத் 'துன்பமுள்ள மனத்தையுடையவரை மனத்திஞல் அறிந்துமிலாதவன்' என்பது முந்திய உரை.

தன்னேடு தொடர்பில்லாத பிறர் துன்பத்தை எண்ணிப்பார்க்க முயன்றாலும் அறியாத பாலப்பருவ மகலாத பச்சைப்பிள்ளை தன் பிதாவே மரண வேதனையுறும் நிலையிலே யிருக்கப் பார்த்தானென, நயம்பட, நடந்ததை நடந்தவாறு கூறும் தன்மைநவிற்சியாக, மிக்க இரக்கம் பிறக்க உரைத்த கவித்துவம் மிகவும் பாராட்டத் தக்கது.

தன்மைநவிற்சி, புனைந்துரை என்ற ஒன்றற்கொன் றெதிரிடையான இருவகை அலங்காரங்களுள் முன்னதைக் கொள்ளுவதும் பின்னதைத் தள்ளுவதும் தற்கால விற்பனர் பற்பலர் செயலாயிருப்பது நியாய மன்றென்பது நினைவுக்கு வந்ததஞல், நயம்படக் கூறும் தன்மைநவிற்சி யெனப்பட்டது. நயம்படக் கூருத தன்மைநவிற்சி அலங்காரமாகாது. நாற்காலிக்கு நாலு கால், நாய்க்கு ஒரு வால் என்பவை போன்றவை சுவையற்ற வெறுமையான தன்மைநவிற்சியாமன்றிச் சுவைபெற்ற அலங்காரத் தன்மைநவிற்சி ஆகாதென்பது கூருமலே விளங்கும். உண்மைக் கவிகளாயுள்ளார் தன்மை நவிற்சி யலங்காரமாக உரைப்பதை உணர்வோர், 'இதிற் கூறப்பட்ட தன்மைநவிற்சியைத் தெரிந்திருக்கவேண்டிய நாம் இதுகாறும் தெரியாது போனேமே, இதனை அறிய எவ்வளவு இன்பமாயிருக்கிறது!' என எண்ணி, மனமுருகி மகிழுறுவர். அத்தகைய தன்மைநவிற்சி யலங்காரம் 'இடருடை உள்ளத்தோரை எண்ணினும் உணர்ந்திலாதான்' என்றதன்கண்ணே இனிதமைந்திருக்கின்றது. பாலப்பருவத்தில் துன்பம் அறியாமல் வளர்க்கப்பட்ட புத்தபகவான் போலத் துன்பம் அறியாத சிறு பிள்ளைகள், துன்புற்ருர் இப்படியிருப்பாரெனச் சொல்லக் கேட்டபோது, அதனைத் தெரிந்து கொள்ளமாட்டாமல் திகைக்குந் தன்மையை அதி உசிதமான அமையத்தில் அங்கதன்மேலேற்றிக் கூறிய அருமையான கவிசாதுரியம் ஆச்சரியமும் ஆனந்தமும் ஒருங்கு பயப்பதாயுள்ளது.

பாட பேதம்: மடருடை: கடரிடை. (ருஉ)

வாலி மீது அங்கதன் வீழ்தல்

[சந்திரன் தரையில் வீழ்ந்து கிடக்க, அதன்மேல் நட்சத்திரம் வீழ்ந்ததுபோல, வாலிமீது அங்கதன் வீழ்ந்தான்.]

'இயமன் உன்னை அஞ்சாம லணுகினனே!' என்று அங்கதன் புலம்பல்

எந்தையே யெந்தையே யிவ்வெழுதிரை வளாகத் தியார்க்கும்
சிந்தையாற் செய்கை யாலோர் தீவினை செய்தி லாதாய்
நொந்தனை யதுதா னிற்க நின்முக நோக்கிக் கூற்றம்
வந்ததே யன்றோ வஞ்சா தாரதன் வலிமை தீர்ப்பார்

கொண்டுகூட்டு: *'எந்தையே! எந்தையே! இவ் எழுதிரை வளாகத்தில் யார்க்கும் சிந்தையால் செய்கையால் ஓர் தீவினை செய்திலாதாய்! (அத்தகைய நீ) நொந்தனை! அதுதான் நிற்க, கூற்றம் நின் முகம் அஞ்சாது நோக்கி வந்ததே! அதன் வலிமை தீர்ப்பார் ஆர்?*

பொருள்: *'என் ஐயாவே! என் ஐயாவே! இந்தப் பூமியிலே யாருக்கும் எண்ணத்தினாலும் (சொல்லினாலும்) செயலினாலும் ஒரு தீங்கும் செய்யாதவனே! (அப்படித் தீங்குசெய்யாத நீ, தீங்கு செய்யப்பட்டாய்! என்ன ஆச்சரியமான அநியாயம்! இதுகாறும் எதிரிகள் செய்த தீங்குகளால் — அவை உன்னை ஊறுபடுத்த மாட்டாமையால் — வருந்தினாயில்லை. அப்படிப்பட்ட நீ இப்போது ஊறுபட்டு) வருந்தினாய்! (என்ன பரிதாபமான ஆச்சரியம்!) வருந்தற்பாலனல்லாத நீ வருந்தின திருக்கட்டும். (நீ வருந்தினால் என்னை? வலியற்றுச் சாகக்கிடக்கும் புலியையும் ஆடு காண அஞ்சுமன்றோ! அதுபோல, இயமன், உன்னை நொந்த நிலையிலும் காண அஞ்சுவானே! அவன், உன்னைக் காண்பது கிடக்க, உன் பேர் கேட்டாலும் அஞ்சினவன்தானே! அந்த) இயமன் உன் முகத்தை அஞ்சாமல் துணிந்து நோக்கினதன்றிக், கிட்டவும் வந்துவிட்டானே! (ஆ! முன் காலத்தில் உன் போல அவன் அஞ்சும் ஆற்றலுடையராய் வாழ்ந்த இரணியன், சூரபன்மன் முதலிய அநேகர் அந்தியகாலத்தில் அவனுக் கிரையாயின ரன்றோ!) அவன் வலிமையை ஒழிக்கவல்லார் யார்? ஒருவருமில்லை.*

எந்தை - என் தந்தை. திரை - கடல். வளாகம் - இடம். எழு திரை வளாகம் - ஏழு கடல் சூழ்ந்த இடமாகிய பூமி. அது - நொந்தது. 'சிந்தையாற் செயலால்' என்றதனால் 'சொல்லால்' என்பது உபலக்கணமாக உரையில் வருவித்துக்கொள்ளப்பட்டது.

வாலி சுக்கிரீவனை நாட்டைவிட்டுத் துரத்தி அவன் சொத்துக்களையும் மனைவியையுங் கவர்ந்த தீய செயல்களை அங்கதன் அறிந்திருப்பா னன்றோ! அறிந்திருந்தும், ' யார்க்கும் — சிந்தையாற் செய்கையா லோர் தீவினை செய்திலாதாய்' என்ற தெதனு லென்றால், வாலியின் சார்பினர் மத்தியில் வாழ்ந்த அங்கதன், அவர்கள், தம்முள்ளே சுக்கிரீவன் துரத்துண்டு அவன் மனைவி கவரப்பட்டமைபற்றிப் பேசுங்கால், அச்செயல்கள், பகைவர் சொத்துக்களையும் அவர் மனைவியரையும் பறித்துக்கொள்ளல் தருமமாதலால், நியாயமானவை யெனக் கேட்டிருந்ததனு லென்க. (ருங)

வாலியின் வால்வலி கூறல்

54\. தறையடித் ததுபோற் றீராத் தகையவித் திசைக டாங்கும்
கறையடிக் கழிவு செய்த கண்டக னெஞ்ச முன்றன்
நிறையடிக் கோல வாலி னிலைமையை யுன்னுந் தோறும்
பறையடிக் கின்ற வந்தப் பயமறப் பறந்த தன்றே

கொண்டுகூட்டு: '(ஆணி) தறை யடித்தது போல், தீராத் தகைய(வாக) இத் திசைகளைத் தாங்கும் கறை அடிக்கு அழிவைச் செய்த கண்டகன் நெஞ்சம், உன் நிறை அடிக் கோலம் வாலின் நிலைமையை உன்னுந்தோறும் பறையடிக்கின்ற அந்தப் பயம் அற(வும்) பறந்ததே!

பொருள்: ' ஆணி தறையடிக்கப்பட்டது இடம்விட்டுப் பெயராதது போல (எட்டுத் திசைகளிலும் பூமியைத் தாங்கிக் கொண்டு நிற்கும் இடத்தினின்று) நீங்காத தன்மையுடையன வாக, இந்தப் பூமியின் எட்டுத் திசைகளையும் தாங்குகின்ற யானை களுக்குத் தோல்வியை உண்டாக்கிய இராவணனது நெஞ்சு, (அவனைச் சுற்றிக் கட்டித் துன்புறுத்திய) உன் வாலை நினைக்குந் தோறும் படபடவென்று பறையடிக்கும் பயம் முழுதும் இருந்த இடந் தெரியாமல் பறந்துபோய்விட்டதே!

' இந்த ஏடு எழுதினது, அந்த ஏடு எழுதாதது' என்பதில், ' எழுதினது'ம் ' எழுதாதது'ம் போலத், ' தறையடித்தது,' படுவிகுதி தொக்கு வந்தது. தீர்தல் - நீங்குதல் - நிலைபெயர்தல். தகை - தன்மை. கறை - உரல். கறை அடி - உரல்போலும் கால். கறையடி, அன்மொழித்தொகை யாய் உரல்போலும் காலையுடைய யானையை உணர்த்தியது. கண்டகம் - முள். கண்டகன், முள்போலத் தேவர்களுக்கு உபத்திரவஞ் செய்த

இராவணனைக் குறித்தது. நிறை அடி கோலம் வால் - (பலம்) நிறைந்த அடியை யுடைய அழகிய வால். நிலைமை - தன்மை. நெஞ்சு பறை யடித்தல் - நெஞ்சு பயத்தினால் துடித்தல். அற - முற்ற - முழுதும்.

இராவணன் திக்குவிசயம் செய்தகாலத்தில், திசையானைகள் அவன் மார்பிற் பாய்ந்து கொம்பு முறிந்து பங்கமுற்றதை யுட்கொண்டு 'கறை யடிக் கழிவு செய்த' என்றான்.

தன்னை யெதிர்த்துத் தாக்கிய எட்டுத் திசை யானைகள் கொம்பு முறிந்தனவேயன்றித் தான் ஊறுபடாத மகாபலசாலியும் திக்குவிசயஞ் செய்து திரிலோகங்களையும் செயித்துத் தன்னடிப்படுத்தியவனுமான இராவணன், வாலியினது பகைவரைத் தாக்கும் உறுப்புக்களுட் சிறந்த வாலை நினைத்தபோது அஞ்சி நெஞ்சு துடிதுடிப்பானால் வாலியினது கரசரணாதி மற்றைப் பெரிய உறுப்புக்களின் வலிமையின் பெருமையை என்னென்பது! என்பது குறிப்பு.

கயிலாயபதி காலினா லடக்கிய இராவணேசுரனை வாலி வாலினா லடக்கினா னென, வாலி வாலின் வலிமை இந்தக் கவியில், இனிதெடுத்துக் கூறப்பட்டது. இதைத் தொடுத்து, அடுத்த கவியில், அவன் கால் வலிமையும் கை வலிமையும் கூறப்படுகின்றன.

பாட பேதம்: கறையடிக் கிழிவு: நெஞ்ச மூன்ற: பறையடிக் கின்றது. (ருச)

வாலியின் கால்வலி கைவலி கூறல்

55. குலவரை நேமிக் குன்ற மென்றுவா னுயர்ந்த கோட்டின்
தலைகளு நின்போற் றாளிற் றழும்பினித் தவிர்ந்த வன்றே
மலையுட னரவு மற்று மதியமும் பலவுந் தாங்கி
அலைகடல் கடைய வேண்டி னாரினிக் கடைவ ரையா

கொண்டுகூட்டு: 'ஐயா! குலவரை, நேமிக் குன்றம் என்று, வான் உயர்ந்த கோட்டின் தலைகள், நின் பொன் தாளின் (ஆம்) தழும்பை, இனித் தவிர்ந்த அன்றே! மலையுடன் அரவு மதியம் மற்றும் பலவும் தாங்கி, இனி அலைகடல் கடைய (அமரர்) வேண்டின், ஆர் கடைவர்?

பொருள்: 'ஐயா! நீ இறந்ததனால் பூமியின் மத்தியப் பிரதேசங்களிலுள்ள மலைகளிலே உயர்ந்தனவாயுள்ள அட்ட குல பருவதங்கள், பூமியின் சுற்றுப்பிரதேசத்தில் உள்ள சக்கரவாளகிரி என்று பேர் சொல்லப்பெற்று, வானம்போ லுயர்ந்த மலைகளின்

தலைகள் (நீ, தினந்தோறும் சிவபூசை செய்ய, நாற்றிசைச் சமுத் திரங்களுக்கும், ஒரு மலையுச்சியினின்று மற்றொரு மலையுச்சிக்குத் தாவிக், குதித்துச் செல்லும்போது,) உன் அழகிய கால் (பட் டுண்டாம்) தழும்புகளை, இனி நீங்கினவையாமன்றோ! மத்தாக மந்தர மலையும், கடைகயிறாக வாசுகிப் பாம்பும், அடை தூணாகச் சந்திரனும், வேறு உபகரணங்கள் பலவுங் கொண்டு, (அமுதம் கடைந்தெடுத்தற்கு வலிமைபடைத்தவன் நீ ஒருவனே யிருந்தாய்! நீ இறந்ததனால்), இனிமேல் அலைகடலைக் கடைந்து அமுதத்தை அடைய அமரர் திரும்ப விரும்பினால், யார் கடைவார்?

நேமிக்குன்று - சக்கரவாளகிரி. என்று - என்று சொல்லப்பட்டு. கோடு - மலை. தலை - உச்சி. தலைகளும் என்பதில் உம்மை உயர்வுசிறப்பு. வான் உயர் - 'வானம்போலுயர்ந்த' (வானுயரென்ற குறளுரை). மற்றும் பலவும் என இயைக்க. மற்றும் பலவும் என்றவை, 'ஸ்ரீ கூர்மமாகிய அடைகல், ஓஷதிகள் முதலியவை.' சிவபூசை செய்வோர், பூசை செய்யக் குறித்த இடத்தினுள்ளேதானே, சிவனைத் திசைமுடிவுகளில் வீற்றிருப்ப தாகப் பாவனையால் தாபனஞ்செய்து பூசனை புரிவர். வாலியோ, அப்படி யன்றித் தனது சிவபூசை முடித்தற்குத் தினந்தோறும் திசைமுடிவுகளுக்கே சென்று திரும்புவான். அப்படிச் சென்று திரும்பும்போதெல்லாம், வேக மாகத் தாவிக் குதித்துச் செல்லும் அவன் கால்பட்டுக் கருங்கல் மலைகள் வடுப்பட்டன வென, அவன் காலின் கடுமையும் கடினமும் ஒருங்குவிளக்க,

'குலவரை நேமிக் குன்றம் என்றுவா னுயர்ந்த கோட்டின்
தலைகளும் நின்பொற் றாளின் தழும்பினைத் தவிர்ந்த வன்றே'

என்றான்.

தேவரும் அசுரரும், சாதற் கஞ்சிச் சாவா மருந்தென்னும் தேவா மிருதத்தைப் பெற விரும்பித், திருப்பாற்கடலிலே ஆதிசேஷ சாயியாக அறிதுயிலமர்ந்த திருமறுமார்பனை அடைந்து, வணங்கி,

'ஒண் தளிர்ச்சரணஞ்சரணமென்றடைந்தேம். உலப்பினைக்கடக்குமாறெமக்குத் தண்துழாய் அலங்கற் கருணையங் கடலே, சாற்' றென நாரணன் எழுந்து*

மத்து மந்தரம் வாசுகி கடைகயி, றடைதூண்
மெத்து சந்திரன், சுராசுரர் வேறுவே றுள்ள
கொத்தி ரண்டுபால் வலிப்பவர், ஒடதி கொடுத்துக்
கத்து வாரிதி மறுகுற, அமுதெழக் கடைமின்!' †

என்று பணித்தருள, அவர்கள் அவ்வாறு செய்யத் தொடங்க, அவன்,

* காஞ்சிப்புராணம் மணிகண்டேச்சரப் படலம். † அகலிகைப் படலம் - ௨௩.

'இருதிறத் தவருள் வான்சுவை அமிழ்தம் எறுழிறுற் கடைந்தெடுத் தவரே,
பருகிடத் தருமால்; ஏனையோர் எய்தற் பாலதன்' றென்பது கேட்டுப்,
பொருதிறல் அசுரர், மகிழ்ந்தெழுந் தார்த்துப் பொறியரா இருபுடை பற்றித்
தருவலி மிகையால் ஈர்த்தனர்: அசலம், தன்பெயர் நாட்டிய தன்றே.*

இயக்கல்ஆற் றாமை இளைத்ததா னவரை, எதிருறுங் கடவுளர் நோக்கி,
வியத்தக எழுந்து, 'நீர் இனி விடுமின்! விடுமின்!' என் றெய்தி, வா சுகியை
வயத்துடன் பற்றி ஈர்த்தனர். அவரும், வலியிழந் தெய்த்தனர், நின்றார்.
செயத்தகும் திறமே தினியென யாரும் சிந்தையிற் கவலைகூர் பொழுது *

தினந்தோறும் திசைகளனைத்தினுக்கும் சென்று சிவபூசை செய்துவரும் வாலி அவர்கள் நின்ற திக்குநோக்கி வர, அவர்கள், அவனை எதிர்கொண்டு சென்று, வரவேற்று, முகமன்மொழிந்து, அதுவரை நிகழ்ந்ததை உள்ளவா றுரைத்துக், 'கருதரும் தெய்வம் இங் குன்னைத் தந்ததால், எமக்கு நீ துணைசெய்யத்தகும்'* எனப்,

'பெருவலி படைத்த சுராசுரர் குழுமிப் பெறலருந் திறத்தினில் எளியேன்,
ஒருவனே, வல்லேன்! யாமெலாம் ஒருங்குற்றுததியைக்கடைதுமேல், தெய்வம்
தருவது காண்டும்' எனநகைத் தியம்பித், 'தானவர் கடவுள ரெல்லாம்
வரு'கென விளித்து, வாலி,மா சுணத்தின் வாற்புறம் பற்றிநின் றீர்த்தான்.*

பருங்கொலைப் படத்தை அசுரரும் சுரரும் பற்றினர் தனித்தனி ஈர்த்தும்
ஒருங்குநின் றீர்த்தும் ஆற்றலா துடைந்து தன்புடை ஒதுங்குதல் காணாஉக்
கருங்கழல் வாலி, 'விடுமின்நீர்' என்றுக் கட்செவி வாலமும் பணமும்
இருங்கையிற் பற்றி, முறுகுற வாங்கி ஈர்த்தனன், கடைந்தனன் புணரி *

என்றவாறு, அசுரர்கள் சுரர்களாகிய இருபெருங் குழுவினரும் ஒருங்கு முயன்றும் ஒருபாதியும் செய்யமுடியாத அமுத மதனமாகிய அரும் பெருங் காரியத்தைத் தாமொருவனே தனியனாய்ச் செய்து முடித்த வாலி இறந்தா னாதலால், 'கடல்கடைய வல்லார் எவரும் இலரே!' யென் றிரங்குவான், 'அலைகடல் கடைய வேண்டின், ஆர் இனிக் கடைவர்! ஐயா!' என்றான்.

முன்போல, அமுதங் கடைந்தெடுத்தற்குப், பாற்கடலும், மந்தரம் வாசுகியாதிய உபகரணங்களும், யாதுங் குறைவின்றி, எல்லாமிருந்தும், வாலி ஒருவனில்லாத ஒரே ஒரு குறையினால், அந்த அமுத மதனம் நிரந்தர மாக அசாத்தியமாய்விட்ட தென்பது மிகவும் தெளிவாக விளங்க, 'அலைகடல் கடைய வேண்டின், ஆர் இனிக் கடைவர்! ஐயா!' என்று மட்டுங் கூறாமல்,

'மலையுடன் அரவும் மற்றும் மதியமும் பலவும் தாங்கி
அலைகடல் கடைய வேண்டின், ஆர்இனிக் கடைவர் ஐயா!'

என்றா னென்க.

---

* காஞ்சிப்புராணம் மணிகண்டேச்சரப் படலம்.

வாலி ஒருவர் உதவியுமின்றித் தானொருவனே தனியனாய்க் கடல் கடைந்து அமுதமெடுத்த அரிய பெரிய கிரியை, அவன் வழிபடு கடவுளான மகாதேவன் சருவசங்கார காலத்தில் தன்னந்தனியனாய்ச் சகல புவனங்களை யும் தகனம்புரிதல் போலு மெனலாம்.

பாட பேதம்: *தழும்பினிற் றவிர்ந்த: மலைகளும்: மலைகொளும்.* (ருரு)

வாலியின் சிவபத்தி முதலிய கூறல்

56. பஞ்சின்மேல் லடியாள் பாகன் பாதுக மலதி யாதும்
அஞ்சலித் தறியாச் செங்கை யாணையா யமரர் யாரும்
எஞ்சல ரிருந்தா ருன்னா லின்னமு தீந்த நீயோ
துஞ்சினை வள்ளி யோர்க ணின்னின்யார் சொல்லற் பாலார்

கொண்டுகூட்டு: *'பஞ்சின் மெல் அடியாள் பாகன் பாதுகம் அலது யாதும் அஞ்சலித்து அறியாச் செங்கை ஆணையாய்! உன்னால் அமரர் யாரும் எஞ்சலர் இருந்தார். (அவர்களுக்கு) இன் அமுது ஈந்த நீயோ துஞ்சினை! நின்னின் வள்ளியோர்கள் சொல்லற்பாலார் யார் (உளர்)!'*

பொருள்: *'உமாபதியின் பாதுகையைக் கும்பிடுவதே யன்றி வேறு எப்பொருளையும் கும்பிட்டறியாத சிறப்புடைய செங்கை யில் ஆஞ்ஞாசக்கரமுடையானே! உன்னால் (கொடுக்கப்பட்ட அமுதத்தை உண்டதனால்) தேவர்கள் எல்லாரும் செத்துவிடாமற் சிரஞ்சீவியராய்ச் சீவித்திருக்கின்றார்கள். அவர்களைச் சாகாமற் காத்த இனிய அமுதத்தை அவர்களுக்கு ஈந்த நீயோ, இறந்தாய்! (இத்தகைய) உன்னைப்போல உபகாரிகளாகச் சொல்லத்தக்கார் யாருளர்!' (எவருமிலரென்றபடி).*

பஞ்சின் மெல் அடியாள் பாகன் - பஞ்சுபோல மென்மையான பாதங் களையுடையவளான பார்வதி (தேவிக்கு இருப்பிடமான இடப்) பாகத்தை யுடைய பரமசிவன். பாதுகம், பாதுகை, பாதகுறடு என்பவை ஒருபொருட் பெயர்கள். ஆணை, ஆகுபெயராய் ஆஞ்ஞாசக்கரத்தை உணர்த்தியது; ஆளும் அதிகாரமுமாம் — த. அ. எஞ்சல் - இறத்தல் — த. அ. துஞ்சல் - இறத்தல். வள்ளியோர் - கொடையாளர் - வள்ளல்கள். மேலே எடுத்தாண்ட 'மத்து மந்தரம்' என்ற பாட்டில் 'வலிப்பவர்' என்பதன்பின் 'ஆக' தொக்கது போல, 'வள்ளியோர்' என்பதன்பின்னும் தொக்கது. சொல் - புகழ். சொல் லல், கூறுதலன்றிப் புகழ்தலுமாம்.

வாலியினது இராச்சியாதிகார கவுரவம் விளங்கச், 'செங்கையாய்' என்று கூறினமையோ டமையாமல், 'செங்கை யாணையாய்' என்று கெம்பீரமாகக் கூறினான். 'இக்காலத்து மட்டுமன்றி முன் எக்காலத்தும் அஞ்சலியாத செங்கை' என்பான் 'அஞ்சலித்து அறியாச் செங்கை' என்றான். வாலி, தன் வழிபடு கடவுளான மகாதேவனுக்கு எவ்வளவு மிக்க பணிவுடையனென்பது விளங்க, அந்தப் பரமனையன்று, அவன் அங்கம் அனைத்தையும் சுமந்து, கீழாய்த் தாழ்வாயிருக்கும் பாதத்தையுமன்று, அப் பாதத்துக்குங் கீழாய்த் தாழ்வினுந் தாழ்வான பாதுகையைப் பணிவதே யல்லாமல் (தேவர் அரசர் முதலிய வேறு உயர்ந்த பொருள்) எதனையும் பணியான் என்பானாய்ப் 'பாதுக மலதி யாதும் அஞ்சலித்தறியா' என்றான்.

'ஆணையாய்' என்பதுபற்றி மேலே கூறியதன்றி, வாலி, மறு மன்னரை வணங்காத மாட்சிமையோடு, அவரைத் தனது ஆணைக்கு அடங்கி வாழச் செய்த பராக்கிரம மாட்சிமையும் உடையானென்பது விளங்க, 'ஆணையாய்' என்றானென்பதும் பொருந்தும்.

வாலி, பத்தியும் பராக்கிரமமும் செய்தலில்,முறையே, அத்தியந்தமான தாழ்வுணர்ச்சியும் உயர்வுணர்ச்சியு முடையானென, இரண்டு எதிரிடைப் பொருள்கள் ஒன்றை யொன்று மேம்படுத்துமாறு இரண்டையும் இணைத்துக் கூறிய நயம் அளப்பருங் களிப்பை அளிப்பதாயுள்ளது.

தேவரை, வானவர் முதலிய பெயராற் கூறாது, சாவாதவர் என்று பொருள்படும் அமரர் என்று, இந்தச் சந்தர்ப்பத்துக் கியைந்த பெயராற் கூறியிருப்பது குறிக்கத்தக்கது.

இந்தச் சூரியப் பிரபஞ்சம்* என்னும் அண்டத்தை யுள்ளிட்ட புலப்படும் பொருள்களான அகிலகோடி அண்டங்களுக்கும் மூலமாய்ப், புலப்படாப் பொருளான பரம்பொரு ளொன்றே, என்றும் அழியாப் பொருளாயிருக்கத், தேவரை 'அமரர்' என்றதென்னெனில், உயிரோடிருந்த வாலியை அவன் சிறிதுபொழுது கழியுமுன் செத்துவிடுவா னென்பதுபற்றித் 'துஞ்சினை' என்றதுபோல, மனிதர்போலவே மாள்வா ரெனினும், நெடிது வாழ்வா ரென்பதுபற்றி 'அமரர்' என, உண்மையாகவன்றி, உபசாரமாகக் கூறியதென்க.

வாலி கொடுத்த அமுதத்தால் சாவாதவரான தேவர், ஒருவரன்று இருவர் மூவர் முதலிய சிறுதொகையினரன்று, மிக்க பெருந்தொகையினராய் முப்பத்து முக்கோடிய ராவர். அத்தனைபேருள், ஒருவரும் சாகவில்லை:

* Solar Universe.

எல்லாரும் சிரஞ்சீவியரா யிருக்கின்றா ரென்பதுபற்றி, 'அமரர் எஞ்சலர்' என்னாது 'அமரர் யாரும் எஞ்சலர்' என்றான்.

அமுதம் கொண்டவர் எண்ணிறந்தவருள் எவரும் இறவாராய் இன்புற்று வாழாநிற்க, அமுதங் கொடுத்த ஒருத்தன் துன்புற் றிறந்தான், இது அதிபரிதாபமான தென்பான், 'இன்னமு தீந்த உன்னால் அமரர் யாரும் எஞ்சலர் இருந்தார். நீயோ துஞ்சினை!' என்றான்.

எக் கொடையாளரும், தாம் கொடுக்கும் சாதாரணமான பொருளையும், தமக்கென ஒருபகுதியும் வைத்துக்கொள்ளாது முழுதுங் கொடார். வாலியோ, மிகவும் அபூர்வமும் அருமையுமானதாய்த் தன்னைக்கொண்டாரைச் சாவாது புரக்கும் தேவாமிருதத்தைத், தனக்கென ஒரு சிறிதும் வைத்துக்கொள்ளாமல், முழுதும் கொடுத்தவனும் இறந்தவனுதலால், அவன் 'தனக்கெனவாழாப் பிறர்க்குரியாளன்' ஆக வாழ்ந்து தன் உயரிய உதார சீலத்தை உலகறியச் செய்தா னென்பான், 'அமரர் யாரும் — எஞ்சலர் இருந்தார் உன்னால்; இன்னமு தீந்த நீயோ — துஞ்சினை!' என்றா னெனலுமாம்.

இவ்வாறு, கொள்வோர் சிரஞ்சீவித்துவமும், கொடுப்போர் மரணமும் அடையும்படியாகக் கொடுக்குங் கொடையாளர் எக்காலத்தும் எத் தேசத்தும் இருந்ததில்லை யென்பது இனிது விளங்க, 'வள்ளியோர்கள் நின்னின் யார் சொல்லற் பாலார்!' என்றான்.

அதிகமான் என்னும் வள்ளல், தனக்கு அரிது கிடைத்த அமிர்தத் தன்மையுடைய கருநெல்லிக் கனியைத் தான் உண்ணாது ஔவைக்குக் கொடுத்தானென்ற வரலாறு ஒன்று உளதாக, 'வள்ளியோர்கள் நின்னின் யார் சொல்லற் பாலார்!' என்றது பொருந்துமோ வென்னில், பொருந்தும்; அது இராமாயண காலத்துக்குப் பிற்பட்டதாதலா லென்க. விவகாரத்துக்காக, அது முற்பட்டதாக வைத்துக்கொண்டாலும், அதிகமான் கொடை, வாலி கொடைக்குப் பிற்பட்டதேயாம்: எதனாலெனில், கூறுதும்:—

அதிகமான் அடைந்த கருநெல்லிக்கனி, ஒருவருக்கே சாவைத் தடுக்கப் போதியதாய், அவன் தானுண்டால், ஔவைக்குக் கொடுக்க முடியாததாயிருந்தது. அப்படியன்றி, வாலி பெற்ற அமுதம், மிகப் பெருந் தொகையினரான விண்ணவ ரனைவரும் விரும்புமளவு புசித்தபின் மிகவு மிகுதியாக மிஞ்சும் பேரளவினதாய்ப், பின்னர் இந்திரன் ஆளுகையிலுள்ளதா யிருந்தது. ஆயினும், வாலி, அப்படி மிஞ்சுவதாயிருந்த அமுதத்தில் ஒரு சிறிதும் தனக்கென வைத்துக்கொள்ளாமல் முழுதுங் கொடுத்துவிட்டதனால், அவன் கொடை அதிகமான் கொடையினும் அதிகமான தென்பது தெளிவு.

வாலி இறக்குந் தருணத்தி லிருத்தல்கண்டு, அவன் மகன் வருந்திப் புலம்புதலாய், 'எந்தையே' என்பது முதலாகப் 'பஞ்சின்மெல் லடியாள்' என்பது இறுதியாகவுள்ள இந்த நனியினிய நலமந்தமில்லாத நான்கு பாட்டுக்களும், சுக்கிலபக்கத்தின் ஈற்று நாற்றிதிச் சந்திரன்கள் போல, எல்லாம் இனியனவாய்ச், சோபானக் கிரமமாக ஒன்றுக்கொன் றுயர்ந்த இன்பம் பயப்பனவாய்ப், படிக்குந்தோறும் படிக்குந்தோறும் புதுப்புதுப் பொருள்கள் புலப்படுப்பனவாய், எத்தனை முறை படித்தாலும் இன்சுவை வளர்தலோடு தெவிட்டாமை யுடையனவாய்ச், சிறந்த இன்கவிகளிற் சிறந்தவற்றிற் சிறந்தவற்றைச் சேர்ந்தனவாயிருத்தல், பலமுறை படித்துப்பார்த் தறிதற்பாலது.

பாட பேதம்: அடியாள் பங்கன்: பதயுகம்: அலதியாவும். (ருசு)

அங்கதனை வாலி தேற்றுதல்

[இவ்வாறாகவும், இன்னும் பலவாறாகவும், வாலியின் சிறந்த குணங்களை அங்கதன் எடுத்துக்கூறி யிரங்கி வருந்த, வாலி, அவனை 'வருந்த வேண்டியதில்லை' யென்று தேறுதல் கூறி, மார்போடணைத்து, 'உயிர்களுக்குப் பிறப்பும் இறப்பும் தொன்றுதொட்டுள்ளவை. பிறப்புண்டாயின் இறப்புண்டாம். யான் என்றேனும் எப்படியேனும் இறக்கவேண்டியவன்தானே. எனது நல்வினைப்பயனாக இன்று எனக்கு இந்த நன் முடிவு கிடைத்தது. சருவசாட்சியான இறைவனே, என் தவத்துக்குத் தானே நேராகப் பலனளிப்பானாய், இராமனாக வந்து என் உடற்பாரத்தை யொழித்து முத்தியளித்தருளினான்' என்று, பின்னுங் கூறுகின்றான்.]

அங்கதனுக்கு வாலி அறிவுறுத்தல்

57\. பாலமை தவிர்நீ யென்சொற் பற்றுதி யாயிற் றன்னின்
மேலொரு பொருளு மில்லா மெய்ப்பொருள் வில்லுந் தாங்கி
கால்தரை தோய நின்று கண்ணுக்கு மெளிய னானான்
மால்தரும் பிறவி நோய்க்கு மருந்தென வணங்கு மைந்த

கொண்டுகூட்டு: 'மைந்த! பாலமை தவிர். நீ என் சொல் பற்றுதியாயின், (இதைக் கேள்). தன்னின் மேல் ஒரு பொருளும் இல்லா மெய்ப்பொருள் வில்லைத் தாங்கிக், கால் தரை தோய நின்று, கண்ணுக்கும் எளியன் ஆனான். மால் தரும் பிறவி நோய்க்கு மருந்து என (இவனை) வணங்கு' (என்றான்).

பொருள் : 'மகனே, சிறு பிள்ளைத்தனத்தை விட்டுவிடு. என் சொல்லை உறுதியாகப் பின்பற்றுவாயானால், இதைக் கேள்). தனக்கு மேலாக ஒரு பொருளுமில்லாத ஓரே உண்மைப் பொருளான பரம்பொருள் வில்லை ஏந்திப் பாதங்கள் பூமியிலே படிய நின்று கண்ணுக்கும் புலப்படும்படி எளியனானான். (இந்தக் காட்சியைக் காணுதற்கு நாம் செய்த புண்ணியம் இருந்தவாறு என்னே!) மயக்கத்தை உண்டாக்குகின்ற பிறவி நோய்க்கு மருந்தென்று இந்த ராமமூர்த்தியை வணங்குவாயாக' என்றான் வாலி.

பாலமை - பாலர்தன்மை - பால்யகுணம்: பிள்ளைமை யென வழங்குதலும் உண்டு. தவிர் - நீங்கு: இந்தப் பொருளில் தவிர் ஏவல். 'பாலமை தவிர் நீ' என்பதற்கு 'இளமைப்பருவத்தின் தன்மையைக் கடந்த நீ' என்றும் பொருள்: இந்தப் பொருளில் 'தவிர் நீ' வினைத்தொகை. பற்றுதி - பற்றுவாய். மெய்ப்பொருள் - பரம்பொருள்: கடவுளை உணர்த்தும் மெய்ப்பொருள், சொல்லால் அஃறிணையாய்ப், பொருளால் உயர்திணையாய் 'ஆனான்' என்னும் உயர்திணை முடிவு கொண்டது. மால் - மயக்கம்; வேட்கை - அவா - ஆசை. மால் தரும் பிறவி - அவாவினால் உண்டாகும் பிறப்புக்களெனினுமாம்.

> அவாவென்ப வெல்லா வுயிர்க்கு மெஞ்ஞான்றும்
> தவாப் பிறப்பீனும் வித்து

என்றார் வள்ளுவரும். 'கால்தரை' 'மால்தரும்' என்பவை தொடை நோக்கிக் 'காறரை' 'மாறரும்' எனச் சந்திசேர்க்கப்படவில்லை யென்பது காண்க.

'வில்லும் தாங்கி' என்பதில் உள்ள உம்மை, அருபப் பொருள் உருபப் பொருளானமையோடு வில்லையும் ஏந்திய தென்பதை உணர்த்தியது. 'கண்ணுக்கும்' என்பதில் உள்ள உம்மை, கருதுதற்கரிய பொருள் காணுதற்கும் எளியதான தென்பதை உணர்த்தியது; ஞானக் கண்ணுக்கே யன்றி ஊனக் கண்ணுக்கு மெளியனானான் என்றலுமாம்.

அங்கதனுக்குச் சனகபிதாவான வாலி, இந்தச் சந்தர்ப்பத்தில் ஞான பிதாவாய்த், தான் அடைந்த ஞானச்செல்வத்தை அளிப்பானாய், 'யான் சொல்லப்போவது முக்கியமானது. அதனை அவதானித்துக் கேட்டற்கு விளையாட்டில் நோக்காய்க் கவலையில்லாமலிருக்கும் சிறுபிள்ளைத்தனத்தை விட்டுவிடவேண்டும்' என்பான், 'பாலமை தவிர் நீ' என்றான். 'கடவுளாகிய

பொருளுக்கு மேலான பொருளில்லை; மற் றெல்லாப் பொருள்களும் தோற்றப் பொருள்களன்றி உண்மைப் பொருள்களல்ல; கடவுட் பொரு ளொன்றே உண்மைப் பொருள்' என்பான், 'தன்னின் மேலொரு பொருளுமில்லா மெய்ப்பொருள்' என்ருன். 'தன் அருள் சாராதார் எத் துணைப் பேரறிவாள ரெனினும், அவர்க ளறிவுக் கெட்டாத அருமையுடைய பரம்பொருள், சாதாரண மனிதர் கண்ணுக்கும் புலனும்படி எளிமையுடைய தாய்க் கையில் வில்லேந்திக் கால் பூமி தோய மனித வடிவமானது ஆச்சரி யம்!' என்பான் 'வில்லும் தாங்கிக் கால்தரை தோயநின்று கண்ணுக்கும் எளிய னுனன்!' என்ருன். 'வில்தாங்கி' எனவே, வில்லேந்தும் கை பெறப்பட்டுக், கை பெறப்படவே, கரசரணதி அவயவங்களுடைய வடிவம் பெறப்படுமாயினும், அவ்வடிவம் 'கால்நிலம் தோயாக் கடவுள்' வடிவமாக வேனும், கால் நிலம் தோயும் மனித வடிவமாகவேனு மிருக்கலா மென்ற ஐயம் நீங்கவும், ஒருவருங் காணுத அருபப்பொருள் உருபப்பொருளாக மாறுங் கால், சிலரே காணும் தேவ ரூபமாகும் சௌலப்பியத்தைக் கடந்து, அதனி னும் அதிக சௌலப்பியமாய் எல்லாரும் காணும் மனிதருபமாயினதென் பது விளங்கவும் 'கால் தரை தோய நின்று' என்ருன். அப்படி நின்ற இராமமூர்த்தியை, 'வேறெவ்வாற்ருனும் தீர்க்க முடியாத பிறவிநோயைத் தீர்க்கும் மருந்தென்று மனத்துட்கொண்டு வணங்குவாயாக' என்பான் 'மால்தரும் பிறவி நோய்க்கு மருந்தென வணங்கு மைந்த' என்ருன்.

பாட பேதம்: பற்றுதி யென்னி னைய: கட்புலக் குற்ற தம்மா. (ருஎ)

வாலி முத்தியடைதல்

[இராமனை வணங்கும்படி அங்கதனுக்குக் கூறிய வாலி, இராமனை நோக்கி, 'இவன் இராக்கதராகிய பஞ்சுக்கு அக்கினி யானவன்; உத்தம குணமும் ஒழுக்கமும் உடையவன். உன் அடைக்கலம்' என, அங்கதன் வணங்க, தன் உடைவாளை நீட்டி, 'நீ இதைக் கைக்கொள்வாயாக' என்று இராமன் கொடுக்கக் கண்டு, 'இனி இத் தேகத்தைக் காத்திருக்க வேண்டியதில்லை' யென்றெண்ணி, உருவிப்போக விடாது தடுத்துப் பிடித்திருந்த பாணத்தையும் தேகத்தையும் கைவிட்டுச், சீவன்முத்தி நிலை நீங்கி விதேகமுத்தனுனன்.]

—∞—

8. தாரை புலம்புறு படலம்

[இறந்த வாலியைக் கண்டு
அவன் மனைவி தாரை புலம்புதலைக் கூறுவது]

இறந்த வாலிமீது அவன் மனைவி தாரை அழுது விழுதல்

[*இராமன், சுக்கிரீவன் கையைப் பற்றி, அங்கதனைக் கூட்டிக் கொண்டு, வாலி யிறந்த இடத்தினின்றகன்றுபோனான். வாலியின் மரணத்தைக் கேட்டு, அவன் மனைவி தாரை வந்து அவன்மேல் அலறி விழுந்து புரண்டெழுந்து புலம்பலுற்றாள்.*]

தாரை புலம்பல்

'இன்ப மலைமேல் வாழ்ந்தவள் துன்பக்கடலுள் வீழ்ந்தேன்!' எனல்

58. வரைசேர் தோளிடை நாளும் வைகுவேன்
கரைசே ராவிடர் வேலை கண்டிலேன்
உரைசே ராருயி ரேயெ னுள்ளமே
அரைசே யானிது காண வஞ்சினேன்

கொண்டுகூட்டு: *'உரைசேர் ஆருயிரே! என் உள்ளமே! அரைசே! நாளும் வரைசேர் தோளிடை (இனிது) வைகுவேன்; (இதுவரை) கரை சேரா இடர் வேலை கண்டிலேன் (ஆன) யான் இது காண அஞ்சினேன்.*

பொருள்: *'என் உயிருக்கு உயிரானவனே! என் உள்ளத்துக்கு உள்ளமானவனே! அடிமையான எனக்கு ஆண்டவனானவனே! (யான் உன்னை மணந்த அந்நாள்தொட்டு இந்நாள்மட்டும்) எப்பொழுதும் உனது மலைபோன்ற தோள் மேலே இனிதே தங்கியிருந்தேன்; இதுவரை கரையில்லாத துன்பக்கடலைக் காணாதேனான யான், (அந்தக் கடலுள் ஆழச்செய்யும்) இந்தக் காட்சியைக் காணப் பயப்படுகின்றேன்!*

வரை - மலை. நாளும் - எந்நாளும் - எப்பொழுதும். வைகுதல் - தங்குதல். இடர் - துன்பம். வேலை - கடல். உரை - புகழ். ஆருயிர் - அருமையான உயிர். உள்ளம் - மனம். அரசு - அரசன்: எதுகை நோக்கி 'அரைசு' எனப் போலியாக நின்றது. இதுபோலக் கையடைப் படலத்தில் 'உரைசெய்யும்' என்ற கூ·ம் பாட்டில் 'அரைசு' என வந்தது

காண்க. எதுகையில் நிற்றல்பற்றிச் 'சேர்' ஒத்த என்றும், 'சேரா' இல்லாத என்றும் பொருள்படுகின்றன. 'இது' (-'இந்தக் காட்சி' - உன்னை இந் நிலைமையிற் காணுதல்), தாரை கரையற்ற துன்பக்கடலுள் அழுந்துதற்குக் காரணமான வாலி மரணத்தைக் குறிப்பா லுணர்த்தியது.

தாரை 'வாலியினது தோள்மலைமேல் வாழ்ந்தே' னென்றதனால், அவன், அவளை அம் மலைமேல் ஆடும் மயில்போலப் பாராட்டிவந்தா னென்பது போதரும்.

வாலி இறக்குமுன், தாரை சிலசமயங்களில் அடைந்த துன்பங்கள் முடிவுடையனவாய் (எனவே, மறக்கக்கூடியனவாய்)க் கரையேறக்கூடிய கடல்போன் றிருந்தன வென்பதும், அவன் இறந்த துன்பம் முடிவில்லாத தாய் (எனவே, என்றும் மறக்கமுடியாததாய்)க், கரையில்லாத கடல் (ஒன்று உளதாயின், அது) போன் றிருந்ததென்பதும் புலப்பட, 'இதன்முன் கரைசேர் இடர்வேலை கண்டேனன்றிக் "கரைசேரா இடர்வேலை கண்டிலேன்"' என்றாள்.

துன்பத்தைக் கரையேற முடியாத கடலென்பதனினும் (இல்பொரு ளுவமையாகக்) கரையில்லாத கடலென்பது, துன்பத்தின் கடுமையைச் சிறப்பாகக் கூறுவதாயிருக்கும் நயம் கூர்ந்து நோக்குதற் குரியது.

வாலி தோளாகிய இன்ப மலைமீது மகிழ்ந்து வாழ்ந்த தாரையாகிய மயில், அவன் இறத்தலாகிய துன்பக்கடலுள் வீழ்ந்தது, அதி பரிதாபமான தென்னும் கருத்துக்கிடமாய் முதலிரண்டடிகள் அமைந்திருக்கும் நயம் கண்டுகளிக்கத்தக்கது.

'நீ இறந்தது' என்ற எண்ணத்தை வாயினாற் கூறமாட்டாளாய், 'இது' என்றாள். இவ்வாறு குறிப்பாகக் கூறியது, தசரதன் கைகேயியை நோக்கி, 'இராமன் காட்டுக்குப் போவதாகிய வரத்தை மற' என்று கூறக் கருதி, 'இராமன் காட்டுக்குப்போவது' என்பதை வாய்விட்டுரைக்க மனமொருப்படானாய் 'மற்றைய தொன்றும் மற'* என்று கூறியதை நினைவுக்கு வரச்செய்கின்றது.

பாட பேதம்: காண்கிலேன் : காண்கலேன். (ருஅ)

'சீவன் போனபின் தேகம் சீவித்திருக்குமோ?' எனல்

59. துயரா லேதோலை யாத வென்னையும்
பயிரா யோபகை யாத பண்பினோய்
செயிர்தீ ராய்விதி யான தெய்வமே
உயிர்போ னாலுட லாரு மய்வரோ

* க. ரா. சா. அயோத்தியா காண்டம் 31-ம் பாட்டு.

கொண்டுகூட்டு : 'பகையாத பண்பினோய்! (நீ இறந்த) துயராலே தொலையாத என்னையும் பயிராயோ! விதியான தெய்வமே! (நீ) செயிர் தீராய்! உயிர் போனால், உடலாரும் உய்வரோ? (உரையாய்.)

பொருள் : '(எக்காலத்தும் யான் செய்த குற்றங்களைப் பொறுப்பதன்றி, அக்குற்றங்களுக்காக, என்னை வெறுத்து) விரோதியாத மேன்மைக் குணமுடையானே! நீ இறந்த துன்பத்தினாலே இறந்து தொலைந்தொழிந்துபோகாத(தனால் உன் வெறுப்புக் குரியளாய்க் கடைப்பட்ட) என்னையும் அருவராதிருப்பாயோ! விதியே! (இந்த நல்லோனை அகால மரணமுறச்செய்த குற்றமுடைய நீ, ஒருகாலும் அந்தக்) குற்றம் நீங்கமாட்டாய்! (இது நிற்க. என் உயிர் — ஆன இவன் — இறந்த பின், யான் இறவாதிருக்கின்றேன். இது ஆச்சரியம்!) உயிர்போனால், உடம்பு வாழ்ந்திருக்குமோ? (உரைப்பாயாக, அனைத்துக்கும் காரணமாயுள்ள விதியே, நீ அறியாததொன்றுமில்லை யாதலால்.)

துயர் - துன்பம். பயிர்த்தல் - அருவருத்தல். பயிர்தல் - அழைத்தல். உம்மை, இழிவுசிறப்பு. பயிராய் - அருவராய்; அழையாய். செயிர் - குற்றம்; கோபம்; துன்பம். தீர்தல் - நீங்கல். தீர்த்தல் - நீக்கல். செயிர் தீராய் - குற்றம் நீங்கமாட்டாய் (எதிர்மறை வினைமுற்று); கோபம் நீங்குவாயாக (உடன்பாட்டுத் தன்வினை ஏவல்); துன்பத்தை நீக்குவாயாக (உடன் பாட்டுப் பிறவினை ஏவல்). உய்தல் - ஜீவித்திருத்தல்.

தன் கணவன் இறந்தபின் பயனற்றதாகிய உடலை வெறுத்து இழித்துக் கூறுவாள், 'உடலார்' எனப் பரிகாச மரியாதைப் பன்மையாக உயர்த்துக் கூறினாள்.

'பயிராயோ' என்பதற்கு 'அருவராயோ' என்ற பொருள் மேலே கூறப்பட்டது. அதற்கு, 'அழையாயோ' என்ற பொருள்கொண்டு, 'நீ இறந்த துன்பத்தினால் செத்துத் தொலையாத குற்றமுடையேனாயினும், இதன்முன் மன்னித்ததுபோல், இப்போதும் மன்னித்து, இறந்த நீ யிருக்குமிடத்துக்கு என்னை வரும்படி அழையாயோ' என்பாள், 'துயராலே தொலையாத என்னையும் பயிராயோ' என்று ளென்னலுமாம்.

'செயிர்தீராய்' என்பதை விதியை நோக்கிக் கூறியதாகக் கொண்டு அதற்குக் 'குற்றம் நீங்கமாட்டாய்' என்று பொருள் கூறப்பட்டது. அதை வாலியை நோக்கிக் கூறியதாகக்கொண்டு, 'நீ இறந்த துயராலே தொலையாமைபற்றி என்மீது நீ கொண்ட கோபம் நீங்குவாயாக' என்று ளென்றும், 'என்னை அழையாது வாளா இருக்கின்ற நீ, என்னை எப்போதும்

போலத் "தாரையே!" என அழைத்து என் துன்பத்தை நீக்குவாயாக' என்று ளென்றும், பொருள் கூறலும் பொருத்தமாயிருத்தல் காண்க. தனக்கு விதியும் தெய்வமும் தன் கணவனே யென்பதுபற்றி, அவனை 'விதியான தெய்வமே' என விளித்தா ளென்றலும் ஒன்று.

பாட பேதம்: அயரா யேபகை யோடு மன்பினோய்: செயிர்தீரா விதி. (ருக)

'உன்னைக் கொன்ற நமன் நன்றி கெட்டவன்' எனல்

60. நறிதா நல்லமிழ் துண்ண நல்கலின்
பிறியா வின்னுயிர் பெற்ற பெற்றிதான்
அறியா ரோநம ரை தன்றெனில்
சிறியா ரோவுப காரஞ் சிந்தியார்

கொண்டுகூட்டு: '(நீ) நறிது ஆம் நல் அமிழ்து உண்ண நல்கலின், பிறியா இன் உயிர் பெற்ற பெற்றியை நமனார் அறியாரோ? அது அன்று எனில், (நீ செய்த) உபகாரம் சிந்தியார் (ஆன) சிறியாரோ?

பொருள்: 'நீ அமிழ்தத்தை உண்ணும்படி அளித்ததனால் தம் உடம்பினின்று பிரியாத உயிரைப் பெற்ற தன்மையை நமனார் அறியாதவர்போலும்! அறியாதவ ரன்றெனில், நீ செய்த உபகாரத்தை நினைத்துப் பாராதவர் (ஆவர். அவர் அப்படி நன்றி மறக்கும்) அற்பரா? (ஆம்; அற்பரே: அதனால்தான் உன் உயிரைக் கவர்ந்தார்.)

நறிது - நறுமையுடையது. நறுமை - நன்மணம். நல்கல் - கொடுத்தல். பிறியாத என்பது ஈறுகுறைந்த பெயரெச்சமாய்ப் பிறியா என நின்றது. பிறிதல், பிரிதல் இரண்டும் நீங்குத லென்னும் பொருளுடையன. பிரிதலென வருதல் பெருவழக்கு. பெற்றி - தன்மை. சிறியர் - அற்பர். 'நமனார் என்றவிடத்துப் பலர்பால் செறல் (- கோபம்) பற்றிவந்தது.'

'அமுது உண்ண நல்கலின் பிறியா உயிர்பெற்ற பெற்றி(யை) நமனார் அறியாரோ! அன்றெனில், உபகாரம் சிந்தியார்(ஆன) சிறியாரோ!' என இயைக்க. (கூ0)

வாலியின் சிவபூசையை வியந்துரைத்தல்

['இருந்த இடத்திலேதானே யிருந்து ஒருகாலமே பூசை புரியும் வினைய பூசகர்போலாது, நீ எண்டிசை யிறுதிகளினுஞ் சென்று,

ஒருகாலமன்றித், திரிகாலமுந் தினந் தவருது சிவபூசை செய்வாயே! இதன்முன் இவ்வளவு நேரம் பூசைக்குப் புறப்படாது தாழ்த்திருக்கமாட்டுவாயோ!]

'ஒரு வார்த்தையும் உரைக்கின்றி யில்லையே!' எனல்

['என்றும் மென்மையான மலரணைமேல் வைகும் நீ, இன்று வன்மையான தரைமேற் கிடப்பது கண்டு சகிக்கமாட்டாமல் நான் வருந்துவது கண்டும், நீ "வருந்தாதே!" யென்று ஒரு வார்த்தைகூட உரைக்கின்றி யில்லையே! நான் செய்த குற்றந் தான் யாதோ?]

'நீ என்னை உன்னுயி ரேன்றது பொய்தானே!' எனல்

61. நையா நின்றன ஞனிருந் திங்ஙன்
மெய்வா ஞேர்திரு நாடு மேவிஞய்
ஐயா நீயென தாவி யென்றதும்
பொய்யோ பொய்யுரை யாத புண்ணியா

கொண்டுகூட்டு: 'பொய் உரையாத புண்ணியா! ஐயா! நான் இங்ஙன் இருந்து நையா நின்றனன். நீ மெய் (யாக) வாஞேர் திருநாடு மேவிஞய். "நீ எனது ஆவி" என்றதும் பொய்யோ?

பொருள்: 'பொய் புகலாத புண்ணியனே! நான் மண்ணிவிருந்து துன்பமுறுவேன் (ஆக, நீ, இன்பமுறுவாஞக) விண்ணடைந்தாய். நீ, என்னை நோக்கி "நீ என்னுயிர்" என்றது பொய்யோ? (பொய்யன்றெனில், உன்னுயி ரென்ற நான் துன்புற, நீ இன்புறுவாயோ?)

நைதல் - வருந்துதல். இங்ஙன் - இங்கே - இந்தப் பூமியிலே; இவ்வாறு என்றும் பொருள்கொள்ளலாம். மெய்யாக என்பது மெய் என்று சுருக்கிக் கூறப்பட்டது. ஐயன் - தலைவன்: ஐயா - (எனக்குத்) தலைவனே - (என்) நாயகனே.

'மனத்தில் வசிக்கின்ருய் என்று எனக்குப் பிரியமான எதைச் சொன்ஞயோ அதை மிகவும் பொய் என்று எண்ணுகிறேன். இந்த வார்த்தை உபசாரமானதாக இருக்கிறது. நீ நாசமடைந்து விட்டாயே! எப்படி ரதியானவள் நாசமடையாதவளாய் இருக்கின்ருள்!' என்ற கருத்துள்ள காளிதாசரது குமாரசம்பவத்தில் ரதி புலம்பலோடு இப்பாட்டு ஒப்பிட்டுப் பார்த்து ரசித்தற்குரியது. (சுக)

'நாம் ஒருவர் நெஞ்சுள் ஒருவர் இருக்கவில்லை' எனல்

62. செருவார் தோளநின் சிந்தை யுளேனெனின்
மருவார் வெஞ்சர மென்னையும் வௌவுமால்
ஒருவே னுள்ளுளை யாகி னுய்தியால்
இருவே முள்ளிரு வேமி ருந்திலேம்

கொண்டுகூட்டு: 'செருவார் தோள! நின் சிந்தையுள் (நான்) உளேன் எனின், (உன்னை வௌவிய) வெம் சரம் என்னையும் வௌவும். (நீ) ஒருவேன் (ஆகிய என்) உள்ளத்துள் உளையாகில் (நான் உயிரோடிருப்பதால் நீயும்) உய்தி. (இவை நேராமையால்) இருவேம் உள்ளத்து இருவேமும் இருந்திலேம்.

பொருள்: '(நாம் இருவரும், ஒருவரையொருவர் கண்ட அன்றே, உன் நெஞ்சுள் நானும் என் நெஞ்சுள் நீயும் மாறிப் புகுந்து வாழ்வே மாயினேம். இந்த நிகழ்ச்சியின்படி) உன் நெஞ்சுள் நான் உள்ளேனென்றால், உன்னை உருவிய கொடிய அம்பு என்னையும் உருவி உயிர் கவர்ந்திருக்கும். (அப்படி நான் உருவப் படவில்லை.) நீ என் நெஞ்சுள் உள்ளாயானால் (நான் உருவப்படா திருப்பதனால், அந்த அம்பால் நீ உருவப்படாமல் தப்பிப்) பிழைத்திருப்பாய். (நான் உருவப்பட் டிறக்கவுமில்லை. நீ தப் பிப் பிழைக்கவுமில்லை. ஆதலால், நாம், காதற் பரவசத்தினால், ஒருவருள்ளே ஒருவர் இருப்பதாக, மனோராச்சியஞ் செய்தோமே யன்றி, உண்மையில்) இருவ ருள்ளத்தும் இருவரும் (மாறிப் புகுந்து) இருந்தேமில்லை.

செரு - போர். ஆர்தல் - தங்குதல்; பொருந்துதல்; நிறைதல். மருவார் – பகைவர்: இராமனைக் குறித்தது. முன், தாரை தன் கணவன் வாலியின் உயிர் கவர்ந்த நமனை வெறுப்பால் இகழ்ச்சிப் பன்மையாக 'நமனார்' என்றதுபோல, இப்போது வாலியைக் கொன்ற பகைவனை 'மருவார்' என்றாள். சரம் - அம்பு. வௌவுதல் - கவர்தல். உருவி உயிர் கவர்த லென்பது, சுருங்கச் சொல்லும் நயம் தோன்ற, வௌவ லெனப்பட்டது. ஒருவேன் - ஒருத்தி (யாகிய என்னுடைய). உள் - மனம். உளை - உள்ளாய்: முன்னிலைக் குறிப்புவினைமுற்று. உய்தல் - (அம்புக்குத் தப்பிப்) பிழைத்திருத்தல். 'உள்' (- மனம்) என்பது ஏழாம்வேற்றுமைத் தொகையாய் மனத்தினுள்ளே என்று பொருள்பட நின்றது. இருவேம் - இருவராகிய நாம். இருவேம் உள் - நம்மிருவருடைய நெஞ்சினுள்ளும். இருவேம் - நாமிருவரும்.

இப்பாட்டு மிதிலைக் காட்சிப் படலத்தில் இராமனும் சீதையும் 'இருவரும் மாறிப்புக் கிதய மெய்தினர்'* என்றதை நினைவுறுத்துகின்றது. (கூஉ)

'வானவர் உன்னை வரவேற்றிருப்பார்' எனல்

['நீ விண்ணுலகம் நண்ணியபோது எண்ணிறந்த விண்ணவரெல்லாரும் எதிர்கொண்டு வந்து, பூமாரி பொழிந்து, மகிழ்வோடு வரவேற்று, "நீ தந்த அமிழ்த முண்டு சாவினின்று தப்பினேம்" என்று நன்றிகூறி உபசரித்திருப்பாரே!]

'அமுதம் அளித்த நீ, செல்வத்தை மறுப்பையோ?' எனல்

['இராம னென்பவன், உன் செல்வத்தைப் பெறத்தானே, உன்னை மறைந்து நின்று வாளியேவிக் கொன்றான்! அவன், உன் எதிரேவந்து, "ஈவாய்" என்று ஒரு வார்த்தை கூறி அச்செல்வம் அனைத்தையும் பெற்றிருக்கலாமே. அமிழ்தத்தையே அளித்த நீ, செல்வத்தை அளிக்க மறுப்பையோ?]

'இங்கே யிறந்துகிடப்பவன் வேறொரு வாலியோ!' எனல்

63. நீறு மேருவு நீநெ ருக்கினால்
மாறோர் வாளியுன் மார்பை யீர்வதோ
தேறேன் யானிது தேவர் மாயமோ
வேறோர் வாலிகொ லாம்வி ளிந்துளான்

கொண்டுகூட்டு: 'நீ (மார்பால்) நெருக்கினால் மேருவும் நீறும்! (அதற்கு) மாறாக உன் மார்பை ஓர் வாளி ஈர்வதோ? யான் (இதைத்) தேறேன். இது தேவர் மாயமோ? (அல்லது) விளிந்துளான் வேறு ஓர் வாலிகொல்?'

பொருள்: 'நீ (உன் நெஞ்சொடு சேர்த்து இறுக்கி) நெருக்குவாயானால், மகாமேருபருவதமும் தூளாய்விடுமே! அப்படிப்பட்ட வன்மையுடைய உன் நெஞ்சை அதற்கு எதிரிடையாக ஓர் அம்பு பிளத்த லாவதோ? (நீ அம்புருவி யிறந்துகிடத்தல் உண்மையோ, தோற்றமோ என்று யான் இதைத்) தெளியமாட்டேன். (ஒருவாறு தோற்றமே யென ஊகிக்கின்றேன்.) இத் தோற்றத்துக்குக் காரணம் (மனிதர் மாயவித்தை யாகாதாதலால்,)

---

* க. ரா. சா. பாலகாண்டம் 99-ம் பாட்டு.

தேவர் மாயமோ? அஃதன்றெனில் இறந்துகிடப்பவன் (உண்மையில் வாலியாயில்லாது தோற்றத்தில் வாலிபோலுள்ள) வேறொருவாலியோ?'

மாறு - எதிரிடை(யாக). ஈர்தல் - பிளத்தல். தேறுதல் - தெளிதல். வாலியின் வன்மையின் திறத்தில் தாரைக்குள்ள உறுதியான நம்பிக்கையிஞல், அவள் அவன் இறந்துகிடத்தலைக் கண்ணாற் கண்டும் கருத்தாற் காணமாட்டாளாய்க் கண்ணறிவோடு கருத்தறிவு மாறுபடுதற்குக் காரணம், கண்ணால் அவன் இறந்ததாகக் காணும் காட்சியும் உண்மையே, கருத்தால் அவன் உயிரோடிருப்பதாகக் காணும் காட்சியும் உண்மையே; ஒன்றற்கொன்று மாறான இரண்டு காட்சியும் உண்மையாக உணரப்படுதற்குக் காரணம், உண்மை வாலி இறவாமல் எங்கேயோ இருக்கவும், அவனை உருவத்தில் ஒத்த வேறொருவன் இறந்துகிடத்தலா யிருக்கலாமோ? என்று இயல்பாகக் கருதுவதைச் சுருக்கமாகவும் துலக்கமாகவும் சொல்லும் 'வேறோர் வாலிகொலாம் விளிந்துளான்?' என்ற, வியப்பும் நயப்பும் ஒருமிக்க விளைவிக்கும் வாக்கியம் ஒருதரமே கேட்டவர் உள்ளத்தும் நிலையாய் நின்று நிலவி, நினைக்குந்தொறும், நினைக்குந்தொறும், நிரம்ப இன்பம் பயக்கும் நீர்மையதாயிருத்தல் காண்க.

தேறுதல் - நம்புதல். — த. அ. 'தேறேன்' என்பதற்கு 'நம்பேன்' எனப் பொருள்கொண்டு அதற்கியைய இந்தப் பாட்டுக்குப் பொருள் கூறுதலுமாம்.

இறந்த வாலியைக் கண்டு அவன் மனைவி தாரை வருந்திப் புலம்பியதைப்பற்றிய 'வரைசேர்' என்பது முதலாக 'நீரும்' என்ப தீறாக உள்ள இன்கவித் தொகுதி, கம்பராமாயணத்திற் பல இடங்களிற் றொடர்பாகக் காணப்படும் சிறந்த செய்யுட் டொகுதிகளுள் ஒன்றென்பது தெளிவாம். (சுஙு)

அனுமான் வாலிக்கு ஈமக்கடன் இயற்றுவித்தல்

[தாரை இவ்வாறு புலம்பித் துக்கமேலீட்டால் உணர்வழுக்க, அனுமான், அவளை அவளது தாதியரால் அவளிருப்பிடஞ் சேர்ப்பித்து, இறந்த வாலிக்கு இயற்றக்கடவனவான ஈமக்கடன்களை இயற்றுவித்து, அந்த விவரத்தை இராமனிடம் தெரிவித்தான்.

இராமன் சீதை பிரிவாற்றாமையால் வருந்தாநிற்க, மாலைப் பொழுதும் இராக்காலமும் கழிந்தன.

சூரியன் தனது தோன்றலான சுக்கிரீவன் பொற்கிரீடம் பூணும் விழாவைக் காணும் அவாவால் உற்றவன்போல உதயம் ஆனான்.]

9. அரசியற் படலம்

[சுக்கிரீவன் முடிசூடி அரசாண்டதைக் கூறுவது]

சுக்கிரீவனுக்கு இராமன் அரசநீதி போதித்தல்

[சூரியோதயமானபோது, இராமன் கட்டளைப்படி, இலக்குமணன் சுக்கிரீவனுக்கு முடிசூட்டினான். அரசனான சுக்கிரீவன், வந்து அடிபடிய, இராமன், அவனுக்கு ஆசிகூறி, அரசநீதி போதிப்பானானான்: 'சுக்கிரீவ! நீ கிட்கிந்தைக்குச் சென்று, அங்கதனை இளவரசனாகக்கொண்டு அரசுபுரிவாயாக. யாரும், உன்னை நெருங்காமலும் நீங்காமலும், இருக்கவேண்டிய தூரத்தே யிருக்கச்செய்து, எல்லாரும் உன்னைத் தெய்வமென்று கருதும்படி உத்தம சீலமுடையனாய் ஒழுகுவாயாக. புகை தோன்றுமிடத்தே நெருப்புண்டென ஊகித்துணர்தல்போல, முகக்குறியால், அகப்பகையை அனுமானித்தறிந்து, நீ அறிந்ததைப் பகைஞர் அறியாவண்ணம் (உண்மை யன்பருக்குப்போல) அவருக்கும் அலர்ந்த முகமும் குளிர்ந்த மொழியும் உடையை யாகுக. தீமையான செயல்களைச் சிந்தித்தலுஞ் செய்யாமல், வாய்மையே பேசிக், கொடுக்கத் தக்கார்க்குக் கொடுத்தற்கேற்ற பொருள்களைக் கொடுத்து, அயலார் பொருளுக்கு அணுவளவும் ஆசைப்படாயாக.]

'எளியரென் றிகழ்ந்து எவரையும் இமிசியாதிருக்க' எனல்

64. சிறியரென் றிகழ்ந்து நோவு செய்வன செய்யன் மற்றிந்
நெறியிகந் தியானோர் தீமை யிழைத்தலா லுணர்ச்சி நீண்டு
குறியதா மேனி யாய கூனியாற் குவவுத் தோளாய்
வெறியன வெய்தி நொய்தின் வெந்துயர்க் கடலின் வீழ்ந்தேன்

கொண்டுகூட்டு: 'குவவுத் தோளாய்! (யாரையும்) சிறியர் என்று இகழ்ந்து நோவு செய்வன (வான செயல்) செய்யல். இந் நெறி யான் இகந்து ஓர் தீமை இழைத்தலால், உணர்ச்சி நீண்டு மேனி குறியதா(க) ஆ(கி)ய கூனியால், நொய்தின் வெறியன எய்தி, வெம் துயர்க் கடலில் வீழ்ந்தேன்.

பொருள் : 'யாரையும் அற்பரெனக் கருதி அலட்சியஞ் செய்து அவருக்குத் துன்பஞ் செய்வனவான காரியங்களைச் செய்யாதே. இந்த அகிம்சை நெறியை நான் கடந்து (என் பாலப் பருவத்தில் விளையாட்டாகத் தன் கூனல் முதுகில் வில்லுண்டை எய்து) துன்பஞ் செய்ததனால், (என்மீது கறுவுகொண்டு சலஞ் சாதிக்கத்தக்க சமயத்தை நெடுங்காலம் எதிர்பார்த்திருந்த) கூனி செய்த சூழ்ச்சியினால் (எல்லாப் போகங்களையும் இனிது துய்க்கும் இராச்சியச் செல்வத்தை யிழந்து) வெறுமையை யடைந்து (உண்ணச் சோறும், உடுக்கத் துணியும், ஒதுங்கக் குடிசையுங் கிடையாத காட்டிலே காலந்தள்ளும்படியான) கொடுந் துன்பக் கடலிலே விழுந்தேன்.

நோவு செய்வன - துன்பஞ்செய்வனவான செயல்கள். இகழ்தல் - அவமதித்தல். செய்யல் - செய்யாதே: எதிர்மறை ஒருமை ஏவல்: செய்யாதொழிக என்றும் பொருள் கூறலாம்: இப்பொருளில், எதிர்மறை வியங்கோள். இகத்தல் - கடத்தல். இழைத்தல் - செய்தல். 'உணர்ச்சி நீண்டு மேனி குறியதா(க) ஆ(கி)ய கூனி' என இயைக்க. குவவு - திரட்சி. வெறியன - வெறுமை (- இன்மை)யானவை - (கிரகம் இல்லாமை, வாகனம் இல்லாமை முதலிய) இல்லாமைகள். இல்லாமை, உடைமையின் எதிர்மறை. எல்லா உடைமைகளையும் இழந்து எல்லா இல்லாமைகளையும் எய்தினமை கூறினான்.

தோற்றத்தாற் சிறியரெல்லாம் உண்மையிற் சிறியரல்லர், 'உருவுகண் டெள்ளாமை வேண்டும்' என்ற கருத்துக்களை யுட்கொண்டு, 'சிறியரென் றிகழ்ந்து நோவு செய்வன செய்யல்' என்றான். 'உணர்ச்சி நீண்டு குறியதா மேனி ஆய கூனி' என்ற நனியினிய கூற்று, தன்மைநவிற்சியணிக்குச் சிறந்ததோ ருதாரணமாயும் சமத்காரமாயு மிருப்பது சாலவும் பாராட்டத்தக்கது. வலிய பேரரசர் பெரிய சேனையோடு அரிய போர் செய்தாலும் அகற்றலாகாத அரசபதவியை எளிய பெண்ணொருத்தி வெகு இலகுவாக விலக்கினா ளென்பது கருதி 'நொய்தின்' என்றான்.

இப்பாட்டினோடு பின்வரும் பாட்டுக்கள் ஒருவாறு கருத்தொத்திருத்தல் காண்க:

'அஞ்சனக் கோலி னாற்றா* நாகமோ† ரருவிக் குன்றிற்
குஞ்சரம் புலம்பி வீழக் கூர்நுதி யெயிற்றிற் கொல்லும்
பஞ்சியின் மெல்லி தேனும் பகைசிறி தென்ன வேண்டா
அஞ்சித்தற் காத்தல் வேண்டு மரும்பொரு ளாக' வென்றான்

- சிந்தாமணி.

---

* கோலின் ஆற்றா - கோலால் (அடித்தற்குப்) பற்றாத (மிகச்சிறிய).
† நாகம் - யானை.

சிறிய பகையெனினும் ஓம்புதல் தேற்றார்
பெரிதும் பிழைபா டுடையார்—நிறைகயத்
தாழ்நீர் மடுவில் தவளை குதிப்பினும்
யானை நிழல்காண் பரிது - நீதிநெறி விளக்கம். (கூச)

சுக்கிரீவனை இராமன் கார்காலம் கழிந்தபின் வரச்சொல்லல்

[*'உன்னை உன் குடிகள் "இவன் நம் அரசனல்லன், நம்மைப் பெற்று வளர்த்த தாய்" என் றெண்ணும்படி அவர்களை இனிது பேணிக் காப்பாயாக. அப்படி அன்போடு காக்குமிடத்தும் அவருள் எவரும் வரம்பு கடவாதிருக்கும்பொருட்டு எவர் தவறியற்றினும் அவரைத் தக்கவாறு தண்டிப்பாயாக' என்று கூறி, 'மாரிக்காலம் கழிந்தவுடன் உன் பெருஞ் சேனையோடு என்னிடம் வருவாயாக' என்றான்.*]

சுக்கிரீவன் இராமனிடம் விடைபெறல்

[*சுக்கிரீவன், 'கிட்கிந்தை நகரம், குரங்குகள் உறையுமிட மென்ற குறையுடையதன்றி யாதொரு குறையும் இல்லாதது. அது, போகப்பொருள்கள் யாவற்றினையு முடையதாய்ப் போக பூமி யென்னும் தேவலோகத்தினும் சிறந்து விளங்குவது. அங்கே சிறிய அடியேங்கள் திருவடித் தொண்டுசெய்யச் சிறிதுகாலம் இனிது வீற்றிருத்தல் வேண்டும். உங்களை அடைந்து உங்களுக் குரியேமாகப்பெற்ற தமியேங்கள் உங்களைப் பிரிந்துபோய் வாழும் வாழ்வு பெருவாழ்வானாலும் வெறுவாழ்வே யாகும். தேவியைத் தேடத்தக்க காலம் வருங்காறும் எங்களிருப்பிடம் சிறப்புறும்படி அங்கே எழுந்தருளி யிருந்தருளல்வேண்டும்' என்றான்.*]

[*இராமன், குறுஞ்சிரிப்புக்கொண்டு, 'வேந்தர் இருக்கை விரதிகளுக் காகாது. யாங்கள் வந்தால் எங்களைப் போற்றலிலேயே உங்கள் பொழுதெல்லாம் போய்விடும். நீங்கள் இராச காரியங்களைச் செய்தற்கு யாங்கள் இடையூறாயிருப்பேம். யான் உங்களுட னுறைந்தால், "தேவி சிறையிருந்து வருந்தாநிற்க, இராமன் இட்டர்களோடு இன்புற்று வாழ்ந்தா" னென்ற தீயபழி மூவுலகும் முடிவாங் காலத்தும் முடியாமல் நெடிதாகி நிலைத்துவிடும். நீ இப்போது அரசாட்சியை முறையாகச் செய்வாயாக. நாலுமாத மானபோது சேனையோடு நீ என்பால் வருதலே, யான் உன்பால்*

வேண்டுவது' என்றான். சுக்கிரீவன், ஆண்டார் குறிப்பறிந் தொழுகல் அடியார் கடனென் றெண்ணி, மறுமொழி கூறாமல் வணங்கிச் சென்றான்.

இராமன், அங்கதனை நோக்கி, 'உன் சிறிய தந்தையின்பின் செல். அவனை உன் பிதாவெனக் கருதி அவன் கருத்துக்கிசைந் தொழுகுவாயாக' என, அவனும் அடிபடிந்து சென்றான்.]

இராமன் அநுமானைச் சுக்கிரீவனுக்குத் துணைபுரிய அனுப்பல்

[பின்பு இராமன் அநுமானை நோக்கிச், 'சுக்கிரீவன் அரசாட்சியை நன்கு நடத்துதற்கு வேண்டும் உதவியை உன் சிறந்த அறிவுகொண்டு செய்வாயாக' என, அவன், மெய்யன்பு மிகுதியாற் பிரியமாட்டாதவனாய், 'அடியேன் இங்கிருந்து தொண்டு செய்ய அநுமதி அளித்தருள்க' என, 'அறிவு ஆண்மை முதலியன நிறைந்த ஒருவன் ஆண்ட அரசை மற்றொருவன் வலிதிற் பெற்றானால், அவன் ஆளுகைக்குண்டாம் ஆபத்துகள் அனந்தமாம். அறிவும் ஆற்றலு மொருங்குடைய உன்போல்வாரே அவ் ஆபத்துகள் நேராமல் காக்கவும், நேர்ந்தால் நீக்கவும் வல்லாராவர். ஆதலால், நீ, இப்போது, என் நண்பன் அரசைக் காக்கத், துணையாவாய். அப்பால், என் தேவியை மீட்க உதவுவாய். கிட்கிந்தைக்குச் செல்க' எனத், 'திருவுள்ளப்படியே செய்வேன்' என்று பேரன்பொடு தொழுது, பிரியாவிடை* பெற்றுச் சென்றான். இராமன், அம்மலையினின் றகன்று, ருசியமுக கிரியை அடைந்து அங்கே வாழ்வானானான்.]

சுக்கிரீவன் அரசுபுரிதல்

[கிட்கிந்தைக்குச் சென்ற சுக்கிரீவன், தாரையை வணங்கி ஆசிபெற்று, மந்திரி முதலியோர் இட்ட கட்டளை யியற்ற, அங்கதன் இளவரசு புரியத், தன் ஆணை 'சுக்கிரீவாக்கினை' எனப் பிரசித்தி பெற்று எங்குஞ் செல்ல, இனிதாக அரசாண்டிருந்தான்.]

* உடம்பு பிரிய உள்ளம் பிரியாத விடை.

10. கார்காலப் படலம்

[சீதை பிரிந்தபின் வந்த கார்காலத்தை
இராமன் எவ்வாறு கழித்தானென்பதைக் கூறுவது] *

கார்காலத் துவக்கமும் கார்மேகக் காட்சியும்

[சீதையைத் தேடுதற்குத் தென்திசை சென்ற அனுமானுக்கு முந்திச்சென்ற தூதன்போலச், சூரியன் தெற்குநோக்கிச் செல்லும் தட்சிணாயனம் ஆரம்பமானபோது, கார்காலம் துவங்கியது. †]

65. பையணைப் பஃறலைப் பாந்த ளேந்திய
மொய்ந்நிலத் தகளியின் முழங்கு நீர்நெயின்
வெய்யவன் விளக்கமா மேருப் பொற்றிரி
மையடுத் தொத்தது மறைத்த வானமே

கொண்டுகூட்டு: வெய்யவன், பை அணை பல்தலை பாந்தள் ஏந்திய மொய் நிலம் (ஆகிய) தகளியின் முழங்கு நீர் (ஆகிய) நெய்யின் (இட்ட) மேருப் பொன்திரி(யின் ஏற்றிய) விளக்காக, மறைத்த வானம், (அதன் புகையால்) மை அடுத்து ஒத்தது.

பொருள்: சூரியன், பூமியாகிய அகலில் வார்த்த சமுத்திர சலமாகிய நெய்யில் இட்ட, மேருகிரி யென்னும் பொன்மலையாகிய

---

* ஆறு பருவங்களும், வெயிற்காலம் மழைக்காலம் பனிக்காலம் என்று பகுக்கும்போது மூன்றாய் அடங்குதலால், வர்ஷருதுவும் (ஆவணி புரட்டாதி யாகிய கார்ப் பருவமும்), சரத்ருதுவும் (ஐப்பசி கார்த்திகையாகிய கூதிர்ப் பருவமும்) ஆகிய நான்கு மாதங்களையுமே கார்காலமென்று கொண்டு படலத்துக்குப் பெயரமைத்தனரென்றல் தகுதி; 'மழைக்காலத்திற்கு வேண்டுபவற்றிற்காக மற்றை யெட்டு மாதங்களில் முயலவேண்டும்' என்னும் பொருளுள்ள வடமொழி மேற்கோள் இங்குக் கருதத்தக்கது. புத்தசந்நியாசிகள் கார்கால முழுதும் ஓரிடத்தில் தங்கியிருந்து, எஞ்சிய எட்டு மாதங்களிலும் ஜனங்களுக்குத் தர்மோபதேசம் செய்யும்பொருட்டுத் தேசசஞ்சாரம் செய்துவந்தன ரென்பது புத்த சரித்திரங்களிற் கூறப்படுகின்றது. பொருள்தேடப் பிரிந்து அயல்நாடு சென்ற காதலன் வரவை முயற்சிக்கியையாத கார்காலத் துவக்கத்தில் காதலி எதிர்பார்த்திருப்பது, 'கார் முந்தத் தேர் முந்தல்' என்ற துறையில் வருணிக்கப்படுவது. இவ்வாறாகக் கார் காலம் முயற்சிக்கேற்ற காலமல்ல வென்பது தெளிவாம். ஆதலால், சீதையைத் தேடும் முயற்சிசெய்தற்குக் கார்காலம் கழிந்தவுடன் சுக்கிரீவன் சேனையோடு வரவேண்டுமென்று இராமன் பணித்தது இங்கே நினைவுகூரத்தக்கது.

† அனுமானுக்குக் கல்விகற்பித்த ஆசாரியனான சூரியன், அவனுக்குச் சீதையைத் தேட வழிகற்பிப்பான்போலத் தென்திசைநோக்கிச் செல்வானானான் எனலாம்.

திரியில்ஏற்றிய தீபமாக, மேகத்தைத் தன் அகத்தேயுடைய ஆகாயம், அந்த மேருவாகிய பொன்திரி எரியும் புகையால் கறுப் படைந்தாற் போன்றது. (நீல நிறமுடைய ஆகாயம் கார்மேகத் தால் கரியநிறமான தென்றபடி.)

பை - படம். அணை - படுக்கை. பாந்தள் - பாம்பு. பை அணை பல் தலை பாந்தள் - (திருமால் படுக்கும்) பாயாகிய, படமுடைய பலதலைகளை யுடைய பாம்பு (ஆகிய ஆதிசேடன்). மொய் நிலம் தகளி - வலிமையுடைய பூமியாகிய அகல். அகல், தகளி, தகழி, இடிஞ்சில் என்பவை ஒருபொருட் சொற்கள். நீர் - கடல். நெய்யின் என்பது நெயின் எனத் தொக்கது. வெய்யவன் - சூரியன். விளக்கம் - விளக்கு - தீபம். மை - கருமை - கறுப்பு. மை அடுத்தல் - கறுப்புநிறம் பொருந்தல். மையடுத்தால் ஒத்தது அல்லது மை அடுத்தது ஒத்தது, என்பது மையடுத் தொத்தெனத் தொக்கது. மழை - மேகம். மழைத்த வானம்—மேகத்தையுடைய ஆகாயம். மழைத்த வானம் என்பதற்கு 'மழையையுட்கொண்ட மேகம்' என்பது முந்திய உரை.

மாதர் கண்ணுக்கிடும் மை கூட்டுதற்கு, அடுப்புக்கூட்டி மண்கலசத்தை மேலேவைத்து, எண்ணெயும் திரியுமிட்ட அகல் அல்லது கைவிளக்கைக் கீழே வைத்து, ஏற்றும் தீபம் எரியும்போதுண்டாம் புகையிலுள்ள கரித் தூளின் திரள் பற்றிக் கலசத் தூர் கறுப்புறல் 'மையடுத்து' என்பதனாற் குறிக்கப்பட்டதாகக் கொள்க.

இவ் வான வருணனை

வையந் தகளியா வார்கடலே நெய்யாக
வெய்ய கதிரோன் விளக்காக

என்ற ஆழ்வார் பாசுரத்தை அடியொற்றியது.

அகல் பூமிக்கும், நெய் கடலுக்கும், திரி மேருவுக்கும், தீபச்சுடர் சூரியனுக்கும், (கலசத் தூர் வானத்துக்கும், அந்தத் தூரிற் பற்றிப் படர்ந்த) புகையிலுள்ள கரித்தூட்பரப்பு வானத்திற் பரந்த மேகப்பரப்புக்கு முவமை.

அங்கை யளவான அகல், சிறங்கை யளவான நெய், அங்கை மோதிர வளைய அளவான திரி, அங்கை விர லளவான தீபச்சுடர், மீண்டும் அங்கை அளவான கலசத் தூர், அவ் அளவேயான கரித்தூட் பரப்பு ஆகிய செயற்கை யாகத் தொடர்புபடுத்தப்பட்ட சின்னஞ்சிறிய பொருள்களை, முறையே அகண்ட பூமண்டலம், பெரிய சமுத்திரம், மகாமேரு, சூரியன், வானம், மேகமாகிய இயற்கையாகத் தொடர்புடைய பென்னம் பெரிய பொருள் களுக்கு உவமையாக எடுத்தாண்ட கவித்திறம் கண்டு களிக்கத்தக்கது.

பாட பேதம்: மையெடுத் தொத்தது: மையக லாதது. (கூ௫)

வானம் இருண்டமை

66. நஞ்சினி னளிர்நெடுங் கடலி னங்கையர்
அஞ்சன நயனத்தி னவிழ்ந்த கூந்தலின்
வஞ்சனை யரக்கர்தம் வடிவிற் செய்கையின்
நெஞ்சினி னிருண்டது நீல வானமே

கொண்டுகூட்டு: *நீலவானம், நஞ்சின், நளிர்நெடுங் கடலின், நங்கையர் அஞ்சன நயனத்தின், அவிழ்ந்த கூந்தலின், வஞ்சனை அரக்கர் வடிவின், செய்கையின், நெஞ்சின், இருண்டது.*

பொருள்: *நீல நிறமுடைய ஆகாயமானது, விஷம் போலவும், கடல் போலவும், மாதர்களது மை(தீட்டிய) விழி போலவும், அவர்களது அவிழ்ந்த தலைமயிர் போலவும், இராக்கதருடைய தேகம் போலவும், அவர்கள் செய்கை போலவும், அவர்கள் சித்தம் போலவும், இருண்டது.*

நஞ்சினின் நெஞ்சினின் என்பவைகளில் முதல் இன் சாரியை; இப்பாட்டில் வரும் மற்றெல்லா இன்னும் ஒப்புப்பொருள் உள்ள ஐந்தன் உருபு. நளிர் - குளிர்.

இயல்பாக நீலநிறமுள்ள வானம், கார்மேகம் பரவியதனால், கரிய நிறமான தென்பார், நீல வானம் இருண்டதென்றார். மாதர் கண்ணும் கூந்தலும் கரு நிறத்தால் மேகத்துக்கு உவமை. கருமையை மிகுவித்துக் காட்ட அஞ்சனநயன மென்றும், மேகம் பரந்ததை விளக்க அவிழ்ந்த கூந்தலென்றும் அடைகொடுத்தார்.

*பஞ்சின் மெல்லடிப் பாவைய ருள்ளமும்
வஞ்ச மாக்கடம் வல்வினை யும்மான்
அஞ்செ ழுத்து முணரா வறிவிலோர்
நெஞ்சு மென்ன விருண்டது நீண்டவான்**

என்ற பாட்டு இங்கு நினைவுக்கு வருகிறது.

'தீவினையைக் கருநிறமுடையதென்றல் கவிமரபு; ஆதலால், அரக்கர் தம் செய்கை, இருட்சிக்கு உவமையாயிற்று. அவர்களுடைய மனம் அஞ்ஞானமாகிய இருளினாலும் தீய சிந்தனைகளாலும் கறுத்திருத்தலால் அதனையும் உவமானமாக்கினார்; "அகங்குன்றி மூக்கிற் கரியார்" என்ற திருக்குறளும், "மங்கை பங்கன் சிற்றம்பலம் ஆதரியார், கூழின் மலிமனம்

* சேக்கிழார் தடுத்தாட்கொண்ட புராணத்தில், 159-ம் பாட்டு.

17

போன்றிரு ளாகின்ற கோகிலமே'' என்ற திருக்கோவையாரும் நோக்கத் தக்கன.'—வை. மு. கோ. (கூகூ)

மின்னலும், இடியும், வாடையும், மழையும்

[விண்ணில் மேகங்கள் மின்னுதல், போர்க்களத்தில் வெட்டுண்ட யானைகளின் புண்கள் திறத்தல் போன்றது.

அம் மின்னல்கள் பல பக்கங்களிலிருந்தும் மின்னுதல், திசைகள் சிரித்தல் நிகர்த்தது.

கார்காலமாகிய கொல்லன் வானமாகிய உலையில் மேகமாகிய கரியைப் பெய்து வாடையாகிய துருத்திக் காற்றால் பெருக்கிய தீச்சுவாலைபோல, மின்னல்கள் வீசின. (உலையிலிருந்து சுவாலைகள் குப்புக்குப்பென வெளிப்படல் போல, வானத்திலிருந்து மின்னல்கள் அடுத்தடுத்து வெளிப்பட்டன என்றபடி.)

படைவீரர் வாள் வீச்சுப்போல மின்னல்கள் வீசுதலாலும் படை முரசு முழங்குதல்போல, இடி இடித்தலாலும் சர ராசி எய்தல்போல மழைமாரி பெய்தலாலும் ஆகாயம் போர்க்களம் ஒத்தது.

'இராமன், சுக்கிரீவாதி வானரருடன் சேர்ந்துவிட்டான். இனி, இராவணாதி யிராக்கதர் இறவாதொழியார்' என்ற உவகை மேலீட்டால் வானவர் தூசு வீசுதல்* போல, வானமானது, மின்னி, அவர்கள் ஆரவாரித்தல்போல இடித்து, அவர்கள் மலர் மாரி சொரிதல்போல மழைமாரி பெய்தது.]

மழை பெய்ததன் பயன்

[கார்காலம் வர, அதனோடு, பொருள்தேடப் பிரிந்த காதலர் வந்ததனால், பிரிவுக் காலத்து வாடிப் பொலிவற்றிருந்த மாதர் தழைத்து (- பூரித்து)ப் பொலிவுறுதல்போல, மழையில்லாமல் வாடியிருந்த மரக்கொம்புகள் தளிர்த்துச் செழிப்புற்றன.

பூமி எங்கும் பசும்புல் முளைத்தது, வேனிற்காலமாகிய கொடுங்கோலரசனொழியக் கார்காலமாகிய செங்கோலரசன் வந்ததனால் பூமிதேவி மயிர்க்கூச்செறிந்ததுபோல விளங்கியது.]

* தூசு - வஸ்திரம். வெள்ளை வீசல், வேட்டி வீசல் எனல் உலக வழக்கு.

கார்காலத்தால் இராமன் விரகவேதனை மிகுதல்

67. தேரைக் கொண்டபே ரல்குலா டிருமுகங் காணான்
ஆரைக் கண்டுயி ராற்றுவா னல்லுணர் வழிந்தான்
மாரற் கெண்ணில்பல் லாயிர மலர்க்கணை வகுத்த
காரைக் கண்டனன் வெந்துயர்க் கொருகரை காணான்

கொண்டுகூட்டு : *தேரைக் கொண்ட பேர் அல்குலாள் திருமுகம் காணான் (ஆன இராமன்), மாரற்கு எண் இல் பல் ஆயிரம் மலர்க்கணை வகுத்த காரைக் கண்டனன், வெம் துயர்க்கு ஒரு கரை காணான், நல் உணர்வு அழிந்தான். (சீதையன்றி) ஆரைக் கண்டு உயிர் ஆற்றுவான் ?*

பொருள் : *சீதையின் முகத்தைக் காணாதவனான இராமன், மன்மதனுக்குப் பல ஆயிரக்கணக்கான புஷ்ப பாணங்களை உண்டாக்கி உதவிய கார்காலத்தைக் கண்டு, கொடிய விரக வேதனைக்கு ஒரு கரையுங் காணாதவனாய் அறிவழிந்தவனானான். (சீதையைக் கண்டு துன்பம் நீங்கினாலன்றிச் சீவனையிழந்துவிடுவானாயிருந்த அவன், அவளையன்றி வேறு) யாரைக் கண்டு உயிர்தரித்திருப்பான் ?*

ஆற்றுதல் - தாங்குதல் - தரித்தல் - சுமத்தல். மாரன் - மன்மதன். ஆயிரம், அளவின்மை குறித்தது. மேகம், மழை பெய்து பூஞ்செடிகள் கொடிகள் மரங்களை நிரம்பப் பூக்கும்படி செய்தது, காமுகரை எய்து துன்புறுத்தற்குப் பூக்களாகிய அம்புகளை மன்மதனுக்குக் கொடுத்ததாக உருவகிக்கப் பட்டது. நான்கு திசைகளிலுமுள்ள நான்கு கரைகளுள் யாதாயினும் ஒன்றையுங் கண்டிலனென்பார், கரைகாணானெனக் கூறாது 'ஒருகரை காணா' னென்றார். செய்யுளாதலால், ஒருகரையுங் காணானென்பது 'ஒரு கரை காணா'னென உம்மை தொக்கது.

'"*காரைக் கண்டனன்; கரை காணான்*" *என்றவிடத்து ஒருவகைச் சொற்சமத்காரம் காண்க. கண்டனன் காணான் என மாறுபடச் சொற்கள் வந்தது தொடை முரண்*.'—வை. மு. கோ. (கூஎ)

[*காமத்தை எழுப்பி வளர்க்குங் கார்காலத்தில் முற்றத் துறந்த முனிவரும் மனவுறுதி தளருதல் சகசமாதலால், அந்தக் காலத்தில், எல்லா நலங்களும் இனிதமைந்த சீதாதேவியுடன் கூடியாடிக் குலாவி இன்புற்று வாழ்ந்திருந்த இராமன் விரக வேதனை மிகுதியாக வருந்தியது வியப்போ ? அவ் வருத்தத்தால் மனங்கலங்கிச் சித்தப்பிரமையுற்றான்.*]

விரகவேதனையால் இராமன் மேக் முதலியவை நோக்கிப் புலம்பல்

[இராமன், மேகத்தை நோக்கி, 'மேகமே! சீதையைக் கவர்ந்து ஒளித்துவைத்திருக்கும் தீயோனது ஊருந் தெரியேனாய், பெருந் தீங்கு செய்த அவனுக்குச் சிறு தீங்குஞ் செய்ய மாட்டாமையால் செத்தொழியாது உயிர் சுமந்து உழன்று திரியும் யான், அந்தப் பாவியாற் கலங்கியிருப்பது காணுதென, அதிகமாகக் கலங்கச் செய்கின்றாயே! சீதையின் மேனி போலும் மின்னலை அடிக்கடி தோன்றி மறையச் செய்தலால், அவளைக் காட்டிக் காட்டி மறைக்கின்றாய் போல்கின்றாய். "இவனுக்குச் சீதையைக் கொடுத்தல் செய்யவில்லையாயினும், காட்டவாவது செய்வோ" மென்று என்பால் இரக்கங் கொண்டாயோ? (சிறுவர்க்குத் தின்பண்டங் காட்டிக், கொடுக்காது மறைப்பார் போல, என்னை ஏமாற்றி விளையாடுகின்றாயோ?). இராக்கதரது கரிய பெரிய வடிவம் போலக் கறுத்துப் பெருத்த உருவமுடையாய். அவர்கள் அந்தரத்தில் சஞ்சரித்துக் கோரப் பல்லாலும் வெடிக்கும் குரலாலும் ஆரையும் அச்சமுறச் செய்தல் போல, நீயும் வானில் உலாவி மின்னலாலும் இடிக்குங் குரலாலும் எல்லாரையும் பயமடையச் செய்கின்றாய். அவரே போல, உயிர்கொண்டாலன்றி யொழியாய் போலும்!' என்றும்; மயிலை நோக்கி, 'மயிலே! உன் சாயலால் சீதையை நினைப்பூட்டுகின்றாய். அவளைக் கொண்டுவந்து கொடுத்து மகிழச் செய்யாது வருந்தச் செய்கின்றாய். நீ கொடியாய்!' என்றும்; பூங்கொடியை நோக்கிச், 'சீதையின் இடையழகை நினைவுறுத்தி வருத்துங் கொடியே! என்னைத் தாக்கித் துன்புறுத்தும் மழை வாடை வீசலுக்கு இசைவாக ஆடி நீயும் வருத்துகின்றாயே!' என்றும்; மானை நோக்கிச், 'சீதை யிருக்குமிடத்தைச் சொல்' லென்றும்; தன் உயிரை நோக்கி, 'உயிரே! பிராணனாகிய உனக்கும் பிராணநாயகியாகிய சீதைக்கும் உள்ள சம்பந்தத்தைத் தெரியாயோ? தெரிந்திருந்தால் அவளோடு பிரிந்திருப்பாய், பிரிந்திருந்தால் யான் இத் துன்பத்தை அறிந்திரே' னென்றும் புலம்பினான்.]

இராமன் மழை வாடைக்கு வருந்திப் புலம்பல்

68. ஓடைவா ணுதலி ஞளை யொளிக்கலா முபாய முன்னி
நாடிமா ரீச ஞரோ ராடக நவ்வி யாஞர்
வாடையாய்க் கூற்றி ஞரு முருவினை மாற்றி வந்தார்
கேடுசூழ் வார்க்கு வேண்டு முருக்கொளக் கிடைத்த வன்றே

கொண்டுகூட்டு: 'ஓடைவாள் நுதலினளை ஒளிக்கல் ஆகும் உபாயம் உன்னி, நாடி, மாரீசஞர் ஓர் ஆடக நவ்வி ஆஞர்; கூற்றிஞர் வாடை ஆய்(த் தம்) உருவை மாற்றி வந்தார். கேடு சூழ்வார்க்கு வேண்டும் உருக் கொள்ளக் கிடைத்த!'

பொருள்: 'முன் என்னைத் துன்புறுத்தச் சீதையை இராவணன் கவர்ந்து ஒளித்தற்கேற்ற உபாயத்தை ஆலோசித்துத் தேடியறிந்து மாரீசஞர் பொன் மான் ஆஞர்; (இப்போது என்னைத் துன்புறுத்த) எமஞர் மழைவாடையாகத் தம் வடிவத்தை மாற்றி வந்தார்: தீங்குசெய்யக் கருதுவார்க்கு (அவர்கள் கருத்தை நிறைவேற்றுதற்குத் தக்கனவாக அவர்கள்) வேண்டும் வடிவங்கள் அவர்கள் இட்டப்படி கொள்ளக் கிடைக்கின்றன! (இந்தக் கொடுமையை என் என்பேன்!)' என்ருன் இராமன்.

ஓடை - நெற்றிப்பட்டம். ஆடகம் - பொன். நவ்வி - மான்.

'மாரீசஞர், கூற்றிஞர் என்ற பன்மைகள், கோபம் பற்றியன; இகழ்ச்சிக் குறிப்புமாம்.' (கூ.அ)

இராமனை இலக்குமணன் தேற்றுதல்

[சித்தப்பிரமையுற்றிருந்த இராமன், மன்மதனைக் கண்டதாக எண்ணி, 'ஏ மன்மதா! என் நெஞ்சு புண்ணுக, நிரம்ப அம்புக ளெய்தாய். இவ்வளவு போதும், இனி என் எதிரே நில்லாதே, போ. என்னைக் காக்க இலக்குமண ணிருக்கின்ருன். நீ என்னைத் துன்புறுத்துதலை அவன் கண்டால், தடுக்கமுடியாத அவன் கோபத்தால் அதமாய்விடுவாய்!' என்று கூறிப் புலம்பினன்.

இலக்குமணன், இராமனை அணுகி நோக்கிச், 'சீதையைத் தேடுதற்கு இடையூருக உள்ள கார்காலம் நீண்டதாயிருக்கிற

தென்றோ, இராக்கதர் வெலற்கரிய ரென்றோ, வானரசேனை வர வில்லை யென்றோ, மற் றெது கருதியோ, மனந்தளர்கின்றாய்? வேதநெறி பேதமெய்தினாலும், மண்ணும் விண்ணும், மதியும் கதிரும், மற் றெவையும் மாறினாலும், ஒரு சிறிது நிலைகுலைதலும் உன்பால் நிகழமாட்டாதே! கார்காலம் கழிந்துவிட்டது. அரக் கரை அழிக்கும் அறிவும் ஆற்றலுமுடைய அனுமானாதி வானரர் சேனை வந்துவிட்டது. சீதை திரும்பிவிட்டாள். துன்பம் தொலை வாயாக!' என்று தேற்றிச் சித்தப்பிரமை தீரச்செய்தான்.

இராமன் தன்னுணர்வு வந்தபின்னும் தளர்தல் கண்டு, இலக்குமணன், 'நீ செயமடைதல் திண்ணம். இவ்வாறு தளர்தல் உன் வீரத்துக்கு ஏற்றதன்று. உடனே செயமடைய வொண்ணா மற் கார்காலம், சிறிது பாகம், கழியாதிருக்கின்ற தென்பதொன் றுண்டு. அது பிறர்க்குத் தடையாமன்றி, உனக்குத் தடையாக மாட்டாது. காலங்கடந்த உனக்குக் காலத் தடை யேது? நீ இப்போதே செயிக்க உன்னினால் அதற்கு எத்தடையும் இல்லாததாய்விடும். உனக்கு நீயே நிருமித்துக்கொள்ளுந் தடை யன்றி வேறு தடை யாதுமில்லை. ஆதலால் வருந்துதலொழிவா யாக!' என்றான்.]

69. திரைசெயத் திண்கட லமிழ்தஞ் செங்கணான்
உரைசெயத் தரினுமத் தொழிலு வந்திலன்
வரைமுதற் கலப்பைகண் மாடு நாட்டித்தன்
குரைமலர்த் தடக்கையாற் கடைந்து கொண்டனன்

கொண்டுகூட்டு: 'செங்கண்ணான், உரைசெய்ய, திரைசெய் அத் திண்கடல் அமிழ்தம் தரினும் அத் தொழில் உவந்திலனாய், வரை முதல் கலப்பைகள் மாடு நாட்டித், தன் குரைமலர்த் தடக்கையால் கடைந்து கொண்டனன்.'

பொருள்: 'திருமால் 'அமிழ்தம் கொடு!' என்று கட்டளை யிட்ட மாத்திரத்திலே, பாற்கடல் அமிழ்தத்தைக் கொடுக்கக் கடவதாயிருந்தும், (கட்டளையிடுவதான இலகுவான) அந்தச் செய லால் உடனே அமிழ்தம் பெறுதலை விரும்பாதாய், அதனைக் கடைந்தெடுத்தற்குக் கருவிகளான மந்தர மலை முதலிய உபகர ணப் பொருள்களை (அவைகளிருந்த தூரமான இடங்களிலிருந்து

கொண்டுவந்து ஒன்றுசேர்த்து அந்த)க் கடலிலே நாட்டித் தன் கைகளினால் சிரமப்பட்டுக் கடைதல்செய்தே அமிழ்தத்தை எடுத்துக் கொண்டான். (கேவலம் நினைத்தலாலேயே நினைத்த காரியத்தை நீ நிறைவேற்ற வல்லையாயினும், அவ்வாறு செய்யாமல், தக்க காலத்தில் தக்க துணைவரைக்கொண்டு செய்தற்குரியவற்றைப் பலமுறை சிந்தித்துத் தெளிந்து செய்து செயமடைவாயாக!' என்று இலக்குமணன் சொன்னான்.)

திரைசெய் - அலைகளை உண்டாக்குகின்ற - அலைவீசுகின்ற. 'அகரச் சுட்டு பிரசித்திபற்றியது'. திண் - வலிமையுடைய. செங்க(ண்)ணன், இங்கே திருமாலைக் குறித்தது. உரைசெய - சொல்ல. கலப்பைகள் - உபகரணப் பொருள்கள். மாடு – இடம்: இங்கே கடலினிடத்து எனப் பொருள் கொள்ள நின்றது. குரை மலர்த் தடக் கை - (ஆபரணங்கள்) ஒலிக்கின்ற (தாமரைப்) பூப்போன்ற விசாலமான கைகள். (சுக)

கார்கால முடிவில் வெண்மேகக் காட்சி

[இப்போது காலை, இப்போது நடுப்பகல், இப்போது மாலையென நேரந் தெரியாதவாறு, எப்போதும் சூரியனை மூடியிருந்த நீர் நிறைந்த கார்மேகம், நீர் முழுவதையும் பொழிந்து, மேற்கொண்டு பெய்ய நீரின்றி வெண்மேக மானபோது, உள்ள பொருள்களொன்றும் விடாமல் உதவிப் பொருளற்ற போது ஏற்பார்க்கு ஈய இயலாமையால் வெள்கி வெளிறும் வள்ளலை ஒத்தது.]

மேகம் நீங்கச் சந்திரன் விளங்கல்

70. கடந்திறந் தெழுகளி றனைய கார்முகில்
இடந்துறந் தேகலிற் பொலிந்த திந்துவும்
நடந்திற னவில்வுறு நங்கை மார்முகம்
படந்திறந் துருவலிற் பொலியும் பான்மைபோல்

கொண்டுகூட்டு: *கடம் திறந்து எழு களிறு அனைய கார்முகில் (விண்) இடம் துறந்து ஏகலின், இந்து, படம் திறந்து உருவலின் நடம் திறன் நவில்வுறும் நங்கைமார் முகம் பொலியும் பான்மைபோல், பொலிந்தது.*

பொருள்: (கரிய) யானைபோன்ற கார்மேகம் தான் தங்கி மூடியிருந்த வானத்தின் இடத்தை வெளியாம்படி நீங்கித் திறந்து சென்று விட்டதனால் அம் மேகத்தால் மறைக்கப்பட்டிருந்த சந்திரன், மறைந்திருந்த திரைச் சீலை திறக்கும்படி உருவப்பட்டதனால் மறைக்கப்பட்டிருந்த, நாட்டியமாதர் முகம் விளங்குதல் போல விளங்கலுற்றது.

கடம் - யானைக் கதுப்பு - யானையின் கன்னம். கடம் திறந்து எழு களிறு அனைய - கன்னம் (அதன்கணுள்ள மதநீர் வெளிப்படும் துளை) திறக்கப்பட்டு (மதம் பொழிந்துகொண்டு) புறப்படுகின்ற (கரிய) யானை போன்ற. கார் முகில் - கருமை (நிறமுடைய) மேகம்; கார்காலத்து மேக மெனலுமாம். யானை, மேகத்துக்கும், மதநீர் பொழிதல் மழைநீர் பொழிதலுக்கும் உவமை. கருநிறமும், கதியும், முழக்கமும் யானைக்கும் மேகத்துக்கும் பொதுக் குணங்கள். இந்து - சந்திரன். நடம் திறன் நவில் - நடனத்தைச் சாமர்த்தியமாகச் செய்கின்ற. படம் - திரைச்சீலை. பான்மை - குணம் - தன்மை. படம் திறக்க என்பதில் திறக்க, திறந்து எனத் திரிந்து நின்றது: 'சொல் திரியினும் பொருள் திரியா வினைக்குறை'.

இப்பாட்டிலுள்ள ஒப்புமை நயம் ஊன்றிநோக்கி உவக்கத்தக்கது.

பாட பேதம்: இடந்திறந்து: ஒருவலின். (எ௦)

கார்காலக் கழிவு

[(இருள் நீங்க இராக்காலம் நீங்குதல்போல,) கார்மேகம் ஒழியக், கார்காலம் கழிந்தது. அப்போது, எல்லாரும் ஒன்றாகச் சேர்ந்து பாடம் படிக்கும் பள்ளிப்பிள்ளைகள்போல, எல்லாம் ஒருமித்துக் கத்திக்கொண்டிருந்த தவளைகள் வாயடங்கின. சிறை விரித் தாடிக் களித்த மயில்கள், சிறைகளை ஒடுக்கிச், சிறையில் ஒடுங்கியிருந்த சீதைபோலச் சோர்ந்திருந்தன. மழைக்கொதுங்கிப் பதுங்கியிருந்த பறவைகள் சீதையைத் தேடுங்காலம் வந்ததென்று எங்குந் தேடிச் செல்வன போலப் பல திசைகளிலும் பறந்து சென்றன.]

11. கிட்கிந்தைப் படலம்

[கிட்கிந்தை நகரில் நிகழ்ந்த செய்திகளைக் கூறுவது]

இராமன் சுக்கிரீவனிடம் இலக்குமணனை அனுப்புதல்

[இராமன், இலக்குமணனை நோக்கிச், 'சுக்கிரீவன், சொன்ன தவணை கழிந்தும் வந்தானில்லை. அவன் பகையை யொழித்துச் செல்வத்தை அளித்த நமது உதவியை மறந்து தருமநெறி தவறி ஞன். அவன், நம் அன்பை நினையானாயினும், அவனை அவன் அரச வாழ்வோடும் அழிக்கவல்ல நமது ஆற்றலையும் நினைந்தா னில்லை. செய்ந்நன்றி கொன்று, சினேகத்தைச் சிதைத்து, மெய்யை விட்டுப் பொய்யைப் பற்றிய புல்லனைக் கொல்லுதல் குற்றமாகாது. நீ போய் அவன் மனநிலை அறிந்து வா. பொல் லாரை மாய்த்து நல்லாரைக் காத்தற்கு நான் எடுத்த கோதண்ட மும் அம்பும் உண்டு; கூற்றுவனும் உண்டென்று கூறு. சொன்ன சொற்படி வாராஞைல், அவன் நாடழியும், நகரழியும், உற்று ரழிவர், அவனும் அழிவன் என்னும் உண்மையை உறுதியாக உரை. அவன் சாற்றும் விடை ஏற்றதா யில்லையானல், அதற் காக அவனை அழித்துவிடாமல், அவன் சொன்னதை என்னிடம் வந்து சொல்லு' என்ருன்.]

இலக்குமணன் கிட்கிந்தகிரியை அடைதல்

[இலக்குமணன், வில்லும் அம்பருத்தூணியும் பூண்டு, இரா மனை வணங்கிப், பிரியாவிடை பெற்றுச் சென்ருன். அவன் வழியிலுள்ள மரங்களடர்ந்த வனங்களூடு வேகமாகச் சென்றது, இராம னம்பு மராமரங்களை உருவிச் சென்றதை ஒத்தது. அவன் ருசியமுக மலையினின்று கிட்கிந்தை மலையை அடைந்தது, சூரி யன் உதயகிரியினின்று அத்தமனகிரியை அடைந்து போன் றது; அன்றி, ஒரு சிங்கம் ஒரு மலையினின்று மற்றொரு மலையை உற்றதும் ஒத்தது.]

இலக்குமணனைக் கண்ட வானரர் செய்கை

[இலக்குமணனைக் கண்ட வானரர், இயமனைக் கண்டவர் போல அஞ்சி, அங்கதனிடம் ஓடி, 'இலக்குமணன் வெகு வேகமாய்

மிகு கோபமாய் வருகிறான்!' என்றனர்: அவன், அவனைத் தூரத்தில் நின்று நோக்கி, அகக்கருத்தை முகக்குறிப்பால் அறிந்து, சுக்கிரீவனை அடைந்தான். அப்போது, அவன், மென்மலர் மெத்தைமீது பள்ளிகொண்டு, மாதர் பாதம் வருட, மந்தமாருதம் வந்துலாவ, இனிதாகத் துயில்வாறு யிருந்தான். அங்கதன், அவன் தூக்கத்தை நீக்கற்குச் 'சேவிக்கின்றேன்' என்று செப்பித் தெண்டனிட்டு, 'ஐய! இலக்குமணன், கோபாவேசனாய் வந்திருக்கிறான்; உன் சித்தம் யாது?' என்றான். இவ்வாறு கூறியதைப், பெருஞ்செல்வக் கள்ளும் பெண்ணின்பக் கள்ளும் ஒருங்கு சேர்ந்து உறுத்திய மயக்க வயத்தனாயிருந்த அவன், ஒரு சிறிதும் உணராமை கண்டு, அங்கதன், அங்கிருந்து ஆவது யாவதுமில்லை யென்று அகன்று, அனுமனை அடைந்து, அவனையும் அவனைச் சூழ்ந்திருந்த வானர வீரரையும் கூட்டிக்கொண்டு சென்று, தன் தாய் தாரையை அடுத்து, இலக்குமணன் வரவைத் தெரிவித்து, 'இப்போது யாது செய்வது?' என வினவ, அவள், 'நீங்கள் தீயசெயல்களைச் செய்வீர்கள், செய்துவிட்டு அதனால் நேரும் தீங்கு நீங்கும் வழி தேடுவீர்கள். உதவி கொன்ற உங்களுக்கு உய்தி உண்டோ? நீங்கள் செய்த தீவினைப் பயனை நீங்கள் அடையுங் காலம் நெருங்கியது. இலக்குமணனை எதிர்ப்பீரேல், இறப்பீர்!' என்று கண்டித்துக் கூறிக்கொண்டிருக்கும் சமயத்தில், குரங்குக் கூட்டங்கள், இலக்குமணனைத் தடுத்தற்கு நகர வாசற் கதவைத் தாளிட்டு, அது தள்ளொண்ணாதபடி மலைகளையும் மரங்களையும் அடர்த்தியாக அடுக்கிச் சார்த்தி உறுதியாகப் பத்திரப்படுத்தின. அன்றி, அவ்வளவு தடைகளையும் அப்புறப்படுத்துவானானால், அடித்துத்தடுத்தற்கு ஆயத்தமாய், மரங்களைச் சேகரித்து வைத்துக்கொண்டு மதிற்பக்கத்திலே கூட்டமாய்க் கூடியிருந்தன.]

இலக்குமணன் நகருட் புகுதல்

[கதவின் நிலைமையைக் கண்ட இலக்குமணன், 'நம்மைத் தடுக்கும் உபாயமோ இது!' என்று நகைத்து, அதனை அலட்சியமாக அடியினால் தள்ள, அது, அதன்மேற் சார்த்தியிருந்த மலைகளோடும் மரங்களோடும் பல சுக்கல்களாய்ப் பல யோசனை தூரம் பறந்தோடினது. அது கண்ட குரங்குக் கூட்டம், அச்சம் பிடர் பிடித்துத் தள்ளக், காடுகளூடு ஓடி ஒளித்தது. வானரம் நீங்கின

மாநகரம், நட்சத்திரம் இல்லாத வானம் போலப் பொலிவிழந்தது. இலக்குமணன் நகரினுள்ளே புகுந்தான்.]

தாரை அவனை வழிமறித்து நின்று, வரவேற்றல்

[தன் இனத்தாரைக் கண்டித்துக்கொண்டிருந்த தாரையை அங்கதன், 'அம்மா! இலக்குமணன் அரண்மனையை அடுக்க வந்து விட்டானே! என் செய்வோம்?' என வினவியபோது, அனுமான், 'தாயே, நீயே சென்று வாயிலினின்று வழிமறித்தால், விலகி ஏகுவான். இதுவே இப்போது செய்யத்தக்க தந்திரம்' என்றான். எனவே, அவள், 'நீங்க ளெல்லீரும் நீங்குமின்கள். யான் சென்று இலக்குமணன் மனவருத்தத்தை மாற்றுவேன்' என்று, சூழ்ந்து நின்ற தோழியரோடு அந்தப்புரத்தை அகன்று, அரண்மனை வாசலை யடைந்து, அதனுள்ளே புகுவானை இலக்குமணனை வழிமறித்து நின்றாள்.

காற் சிலம்பொலி போர்ப்பறை முழக்காகக் கடிதடம்* தேராக, அதன் மேலுள்ள இடையும் இடையிலணிந்த சேலையும், கொடியும் கொடிச்சீலையுமாகத், தனம் யானையாக, புருவமும் கண்ணும், வில்லும் அம்புமாக, மாதர்கூட்டமாகிய சேனை எதிர்ந்த போது, இலக்குமணன், கொண்டிருந்த கோபம் விண்டொழிந்து போக, முகம் அவன் முயற்சியின்றித் தானே மாறித் திரும்ப, அந்தச் சேனையை எதிர்த்தல் கிடக்க,பார்க்கவேயும் பயந்தவனைத், தலையைச் சாய்த்து, வில்லைத் தரையிலூன்றி, மாமிமார் மத்தியில் வந்த மருமகன் போல நின்றான். அவனை நோக்கித் தாரை கூறுகின்றாள்.]

அந்தமில் கால நோற்ற வாற்றலுண் டாயி னன்றி
இந்திரன் முதலி னோரா லெய்தலா மியல்பிற் றன்றே
மைந்தநின் பாதங் கொண்டெம் மனைவரப் பெற்று வாழ்ந்தேம்
உய்ந்தனம் வினையுந் தீர்ந்தே முறுதிவே றிதனி னுண்டோ

கொண்டுகூட்டு: 'மைந்த! (நீ மனை வரப்பெறல்) அந்தமில் காலம் நோற்ற ஆற்றல் உண்டாயின் அன்றி, இந்திரன் முதலினோரால் எய்தல் ஆம் இயல்பிற்று அன்று. நின் பாதம் கொண்டு எம் மனை வரப்பெற்று வாழ்ந்தேம். வினை தீர்ந்தேம். உய்ந்தனம். இதனின் உறுதி வேறு உண்டோ!'

* அல்குல், நிதம்பம், கடிதடம் (கடி - அரை; தடம் - இடம்), அரை: ஒரு பொருட் பன் மொழிகள்.

பொருள்: 'வீரனே! (இந்திரன் முதலானோர் மனைக்கு நீ வருதலான அரிய பேறு, முன்பு) முடிவிலாத நெடிய காலம் வருந்தி நோற்ற தபோ பலம் உடையராக இருந்தாலன்றி, (அந்த) இந்திரன் முதலானோராலும் பெறக்கூடியதன்று. அப்படியிருக்க, நீ திருவடிகளால் நடந்து எங்கள் கிருகத்துக்கு எழுந்தருளப்பெற்று மிகவும் உயர்ந்த இகலோக வாழ்வடைந்தேம். யாங்கள் செய்திருந்த தீவினைப்பயன் தீரப்பெற்று ஈடேறிப் பரலோக வாழ்வுக்குப் பாத்திரரானேம். இம்மை மறுமை நலங்க ளிரண்டும் ஒருங்கெய்திய இதனைக் காட்டிலும் சிறப்பானதாக யாங்கள் அடையக்கூடிய நன்மை வேறுண்டோ!' என்று இலக்குமணனை நோக்கித் தாரை கூறினாள்.

அந்தம் - முடிவு. நோற்றல் - தவம் செய்தல். ஆற்றல் - பலம். எய்தல் - அடைதல். இயல்பு - தன்மை. இயல்பிற்று - தன்மை யுடையது. ஏ, தேற்றப்பொருளில் வந்த இடைச்சொல். மைந்து - வீரம். மைந்தன் - வீரன். உய்தல் - ஈடேறல். இங்கே, 'உயர்ந்த மோட்சகதி அடைவே' மென்னும் பொருளுடைய 'உய்வேம்' என்பது துணிவுபற்றி 'உய்ந்தேம்' என இறந்தகாலத்தாற் கூறப்பட்டது. உறுதி - நன்மை. 'இயல்பிற்றன்றே' என்பதைக்கொண்டு முடியும் வாக்கியத்துக்கு 'மனைவரப் பெறல்' என்ற எழுவாய் அடுத்த வாக்கியத்தில் 'மனைவரப்பெற்று' என்பதிலிருந்து பெறற்பாலதா யிருத்தல் கவனிக்கத்தக்கது. 'இயல்பிற்றன்றால்' என்னும் பாடத்தில் ஆல் என்பது ஆதலால் என்னும் பொருளுடையது.

'யாங்கள் மாதவமுடைமையின், எங்கள் இல்லம் உன் திருவடி தீண்டப் பெற்றது' என்பது கருத்து.

'இந்திரன் உன் வரவை எய்தப்பெறுவானாயின், அது, அவன் 'இந்திர பதவியுடைமையினால் மட்டுமன்று, அப்பதவியோடு அவன் முன் அளவற்ற காலம் வருந்திப் புரிந்த தபோபல முடைமையினாலு' மென்பாள்,

'அந்தமில் காலம் நோற்ற ஆற்றல் உண்டாயி னன்றி
இந்திரன் முதலி னோரால் எய்தலாம் இயல்பிற் றன்றே'

என்றாள்.

'மாசனம் சூழ வாகனமேறி வரற்பாலனான நீ, தன்னந்தனியனாய்த் தாள் வருந்தத் தரையில் நடந்து வந்தா' யென்பாள், 'பாதங் கொண்டுவர' என்றாள்.

'சக்கரவர்த்தி குமாரனான நீ வரப்பெற்றமையால், எங்கள் வாழ்வு மேன்மை அடைந்த' தென்பாள், 'வாழ்ந்தேம்' என்றாள்.

'நீ மகாவிட்டுணுவின் அமிசாவதாரனாய்க் கடவுட்டன்மையுடையவனாதலால், உன்வரவு, யாங்கள் நரகத்தை யடையாமல் எங்கள் தீவினையனைத்தையும் தீர்த்ததல்லாமல், எங்களைப் பரமபதமடையும் பாக்கியமுடையராகச் செய்த' தென்பாள், ' உய்ந்தனம் வினையும் தீர்ந்தேம் உறுதிவே றிதனினுண்டோ!' என்றாள்.

இலக்குமணனது கடவுட்டன்மை போல, அவனுடைய இராசத்தன்மையும், அவன் வரவு இந்திரனுக்குப் பெறலரிதாயிருந்ததற் கேதுவாம்; எவ்வாறெனில், இலக்குமணன், சம்பராசுரன் கவர்ந்துகொண்ட தேவலோக ராச்சியத்தை இந்திரனுக்கு மீட்டுக்கொடுத்த தசரத சக்கரவர்த்தி குமாரனாதலா லென்க.

பாட பேதம் : இயல்பிற் றன்றால். (௭௧)

தாரையைக் கண்ட இலக்குமணன்
தன் தாயரை நினைந்து வருந்தல்

[தாரை, இலக்குமணனை நோக்கி, 'வானரசேனை, நீ வேகமாக வந்தது கண்டு, அதன் காரணம் அறியாது, கலங்கி அஞ்சா நின்றது. இன்னும், இராமனை இணைபிரியாத நீ இன்று தனியாய் இங்கே எய்திய காரியம் யாதோ? ' எனக், கேட்டது யாரென்று தெரியக் கருதித் தலையை நிமிர்த்துப் பார்த்து, அமங்கலியான தாரையைக் கண்டு, அவள்போல அமங்கலியரான தன் அன்னையரை நினைந்து வருந்தினான். பூண்கள் பூணாமல், பூமாலை சூடாமல், சந்தனம் பூசாமல், வெள்ளைப் புடவையால் மார்போடு மங்கலியம் கழித்த கழுத்தையும் சேர்த்துப் போர்த்துக், கண்டவர் இரங்கும் கைம்மைக் கோலத்தோடு நின்ற தாரையை நோக்கிய இலக்குமணன், அவளது அதிபரிதாப நிலையும் தனது தாயர் நினைவும் சேர்ந்து துன்புறுத்தக், கண்கள் நீர் துளிக்க நின்றான். தன் தாயர் தாரையின் தன்மையரா யிருப்பரென்ற நினைவு தோன்ற, வேறொன்றுந் தோன்றாது நின்று சிறிது நேரம் சென்ற பின்பு, தன்னை வினவிநேட்குத் தான் உத்தரமாக ஓர் உரையும் உரையாதிருத்தல் உசிதமன்றென்ற உணர்வு உதிக்கத், தான் வந்த காரணத்தைச் சாற்றுவானானான்.]

இலக்குமணன், தான் வந்த காரணம் இயம்பல்

[' "சுக்கிரீவன், தானும் தன் சேனையுமாகச் சீதாதேவியைத் தேடிக் கொணர்ந்து சேர்ப்பதாக வாக்களித்ததை மறந்துவிட்டான். அவன் நிலைமையை அறிந்து வா!" என்று எங்கோன் இட்ட கட்டளைப்படி வந்தேன். சுக்கிரீவன் செய்தது யாதென்று சொல்வாயாக' என்றான்.]

இலக்குமணனைத் தாரை சமாதானப் படுத்தல்

['சினங் கொள்ளாதே! சிறியோர் தீமை செய்தால், தாயே போலும் தயையுடைய நீயே பொறாயானால், யாரே பொறுப்பார்! சுக்கிரீவன், சொன்ன சொல்லை மறந்தானல்லன். சேனைகள் திரட்டிவரத் திசைகளனைத்தினும் செல்லும்படி திரள்திரளாகத் தூதரைச் செல்லவிட்டுப் பல பக்கங்களிலிருந்தும் படைகள் வருதலை எதிர்பார்த்திருக்கின்றான். இதுவே, தாமத காரணம். படைகள் வரும் காலமும் வந்துவிட்டது. சரணடைந்தார்க்குத் தாயினும் தயையிருந்த நீங்கள் சற்றுத் தாமதமாவதைச் சகித்தல் வேண்டும்.

'நீங்கள் அளித்த செல்வம், அதனை அடைந்தாரை மனக் களிப்பு மிகப்பெருக்கி மதோன்மத்தராக்கி, உங்கள் கட்டளை கடக்கச் செய்தால், அதற்கு முதற் காரணம் நீங்களாயிருத்தல், நீங்கள் பொறுத்தல் வேண்டுமென்பதை வலியுறுத்துகின்றது. உபகாரிகளான உங்களை உபேட்சித்து உங்கள் உத்தரவை உல்லங்கனஞ் செய்வாரானால், அவர்கள் இழிசனராதலன்றி, இம்மையில் ஏழைகளாய் மறுமையில் நரகத்தில் அழுந்துவரன்றோ! தேவி பொருட்டு நேரும் போரில், பகைவரைக் கொல்வாராகவும் கொல்ல முடியாவிட்டால் கொல்லுண்பாராகவும் ஆகாமற்போனால், அவர்கள் சிநேகமும் சிநேகமாமோ! வாளி ஒன்றால் வாலியை மாய்த்த உங்களுக்குத் துணையும் வேண்டுமோ? எந்தத் துணையும் உங்கள் வில்லினும் மிக்க துணையாமோ? சீதையைக் கவர்ந்தவனைச் செயித்தற்கன்றிச் சீதையைத் தேடிக் கண்டு பிடிக்கத் தக்காரைத் தேடுகின்றீர்கள். அந்தத் தேடும் தொழிலைச் சொல்லாமலே செய்தற்குக் கடன்பூண்டவர் உம்மால் பகை ஒழிந்து பாக்கியமடைந்த சுக்கிரீவாதியர்' என்றாள்.]

அனுமான் இலக்குமணனை அடிபணிந்து கூறல்

[இவ்வாறு தாரை கூறியதை இலக்குமணன் இனிதாகக் கேட்டு இன்னருள் சுரந்து நின்றான். அதனைக் கண்டு, கோபம் நீங்கினானென்று கொண்டு, அனுமான், அருகில் வந்து, அடி பணிந்து நின்றான். இலக்குமணன், அவனை நோக்கிக், 'கார் காலம் கழிந்தவுடன் சேனையுடன் திரும்பவும் வரவேண்டுமென்று செப்பியதை நீயும் மறந்தாயன்றோ?' என, அனுமான் கூறுகின்றான்.]

சிதைவகல் காதற் றாயைத் தந்தையைக் குருவைத் தெய்வப்
பதவியந் தணரை யாவைப் பாலரைப் பாவை மாரை
வதைபுரி குநர்க்கு முண்டா மாற்றலா மாற்றன் மாயா
உதவிகொன் றார்க்கொன் றேனு மொழிக்கலா முபாய முண்டோ

கொண்டுகூட்டு: 'சிதைவு அகல் காதல் தாயை, தந்தையை, குருவை, தெய்வப் பதவி அந்தணரை, ஆவை, பாலரை, பாவைமாரை வதைபுரிகுநர்க்கும் (பாவத்தை) மாற்றல் ஆகும் ஆற்றல் உண்டு. மாயா(த) உதவி கொன்றார்க்கு(ப் பாவத்தை) ஒழிக்கல் ஆகும் உபாயம் ஒன்றேனும் உண்டோ? (இல்லை).'

பொருள்: 'தாயையும், தந்தையையும், ஆசாரியனையும், அந்தணரையும், பசுக்களையும், சிசுக்களையும், பெண்களையும் கொலைசெய்தவர்களுக்கும் அவர்கள் கொடிய பாவத்தை மாற்றக் கூடிய பல பரிகாரச் செயல்களுண்டு. செய்ந்நன்றிக் கொலை செய்தவர்களுக்கு அவர்கள் பாவத்தை ஒழிக்கக்கூடிய உபாயம் ஒன்றுமில்லை.'

சிதைதல் - கெடுதல். காதல் - அன்பு. பதவி - நிலை. தெய்வம் பதவி அந்தணர் - தேவர் பதவிபோன்ற பதவியுடைய பிராமணர்: அவர்களுக்குப் பூசுரர், பூதேவர் என்ற பெயர்களிருத்தல் காண்க. ஆ - பசு. பாலர் - குழந்தைகள். பாவை - பெண். வதை - கொலை.

தந்தை முதலியோர் அன்பு, யாதாயினு மொரு காலத்தில், ஏதேனு மொரு காரணத்தால், கெடுதல் கூடும்; தாயன்பு, எக்காலத்தும், எக்காரணத் தாலும், கெடுதலில்லை யென்பது கருதிச் 'சிதைவகல் காதற்றாய்' என்றான்.

இவ்வாறாகச், 'சிதைவகல்' என்ற அடை, எதுகையி லிருத்தலால், எதுகை நிரப்பும் பயன்மட்டுமுள்ள சாதாரண அடையா யில்லாமல், சிறந்த கருத்துடை அடையா*யிருத்தல் கவனிக்கத்தக்கது.

'மாற்றலாம்' என்பது, நிற்கும் இடத்தின் ஆற்றலால், பாவத்தை மாற்றலா மெனப் பொருள்படுகின்றது. இங்கே 'பாவத்தை' என்பது போல 'உள்ளொற்றி' என்ற ௯௨௭-ம் குறளில் 'உண்டு' அவாய்நிலையாய் வந்தது காண்க. அவ்வாறே, 'ஆற்றல்', கழுவாய் ஆற்றல் (- பிராயச்சித்தஞ் செய்தல்) எனப் பொருள்படுவதாகக் கொள்ளும்படி 'கழுவாய்' அவாய் நிலையாக வந்ததெனலாம். இப்பாட்டோடு கருத்தொற்றுமையுடைய,

ஆன்முலை அறுத்த அறனி லோர்க்கும்
மாண்இழை மகளிர் கருச்சிதைத் தோர்க்கும்
பார்ப்பார்த் தப்பிய கொடுமை யோர்க்கும்
வழுவாய் மருங்கிற் கழுவாயும் உளவென
நிலம்புடை பெயர்வ தாயினும் ஒருவன்
செய்தி கொன்றோர்க் குய்தி யில்லென
அறம்பாடிற்றே

என்ற புறநானூற்றுப் பாட்டைக் கருத்துள்வைத்து இந்தப் பாட்டைக் கம்பர் பாடியிருக்கலாம். அப்படி யிருந்தால், அது, ஆற்றல் கழுவாய் ஆற்றலெனப் பொருள்படுவதாகக் கொண்டதற்குத் துணைசெய்வதாம். ஆற்றல், வல்லமை யெனலுமாம். ஆற்றலுக்குப் பிரதியாக அடுத்த அடியில் வரும் உபாயம் ஆற்றலுக்குப் பொருளெனலும் பொருந்தும். அப் பொருள் கொண்டால், உதவி கொன்ற பாவமொழிக்கும் உபாயம் ஒன்றுமில்லை யென்பதுபற்றி, ஆற்றலைப் பன்மையாகக் கொண்டு, ஆற்றலுக்குப் (பல) உபாயங்கள் என்று பொருள்கொள்ளல் தகுதியாம். உபாயம், இங்கே வழி யென்னும் பொருளுடையதாய்ப், பாவத்தைத் தீர்க்கும் வழியாகிய பிராயச் சித்தத்தை யுணர்த்தல் தெளிவு. பிராயச்சித்தம், கழுவாய், பாவ சாந்தி, பாவ பரிகாரம் என்பவை ஒருபொருள் குறித்தவை. மாயா உதவி - அழியாத உபகாரம்.

'மாற்றலாம்' என்பதுபோல, 'ஒழிக்கலாம்' என்பதும் நிற்கும் இடத்தாற்றலால் பாவத்தை யொழிக்கலா மெனப் பொருள்படல் கவனித்தற் குரியது.

'உதவிகொன்றார்' என்பதன் பொருள், செய்ந்நன்றிக் கொலைப்பாவஞ் செய்தாராதலால், 'மாயா (- அழியாத) உதவி கொன்றார்' என்பதில் உள்ள 'மாயா' என்பதை 'உதவி'க்கு அடையாக்காது பாவத்துக்கு அடையாக் கினால், அது, உதவிகொன்ற பாவம் 'ஒழிக்கலாம் உபாயம் உண்டோ' எனப்பட்டதற்குக் காரணம் கூறியவாறாம்.

* கருத்துடை அடை - குறித்த கருத்துக்குரிய விசேடணம்.

எல்லாப் பாவங்களுள்ளும் கொடியது, கொலைப்பாவம். அப்படிப் பட்ட கொலைப்பாவங்க ளெல்லாவற்றுள்ளும் கொடியது, செய்ந்நன்றிக் கொலைப்பாவம். மற்றெல்லாக் கொலைப்பாவங்களும் தீர, அவை யொவ்வொன்றுக்கும், பல பரிகாரங்களுண்டு. செய்ந்நன்றிக் கொலைப்பாவத்தைத் தீர்க்கும் பரிகாரம் ஒன்றுமே யில்லையென்பது கருத்து.

இந்தப் பாட்டில் கம்பர்,

எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு

என்ற குறளின் பொருளை விரித்துரைத்திருத்தல், அவர்,

நல்லா றெனினும் கொளல்தீது மேலுலகம்
இல்லெனினும் ஈதலே நன்று

என்ற குறட் கருத்தை, இதனினும் சுருங்கக் கூறவியலா தென்னுமாறு,

கொள்ளுதல் தீது கொடுப்பது நன்றால்

என்று, க. ரா. சா. பாலகாண்டம் 68-ம் செய்யுளில், குறுக்கியுரைத்த கவித் திறத்தை நினைப்புறுத்துகின்றது. (எஉ)

அனுமான் இலக்குமணனை அரண்மனைக்குள் அழைத்தல்

['உங்களுக்கும் சுக்கிரீவனுக்கும் இட்டம் ஏற்படுதற்கு ஏதுவாயிருந்தது என்செய லன்றோ? என்னாலேற்பட்ட இட்டம் கெட்டதானால், என் அறிவு கெட்டதாமன்றோ? நாங்கள் உங்கள் அன்புக்குப் பாத்திரராய், என்றும் தொண்டுசெய்யத் தவறோம். எங்கள் தவமும் நீங்களே, தருமமும் நீங்களே, பெற்றோர் முதலிய யாவரும் நீங்களே, தேவரும் நீங்களே யென்பது என் உள்ளத்துள் ஊன்றியுள்ள உண்மைக் கொள்கை. எங்கள் பத்தி காரணமாகவன்றி, உங்கள் சத்தி காரணமாகவும் உங்கள் கட்டளைகளைச் செய்தே தீரக்கடவேமாயுள்ளேம். நீங்கள் எங்கள்மேற் கோபங்கொண்டீர்களானால், நாங்கள் தப்பிப் பிழைக்கும் சார்பு உங்கள் இரக்கமன்றி எதுவுமில்லை.

'சுக்கிரீவன், இராமன் கட்டளையை இலட்சியஞ்செய்யா திருக்கவில்லை. படைதிரட்டுவாரைப் பல பக்கங்களுக்கும் அனுப்பிப் படை வரவு பார்த்திருக்கிறான். அவன் யாதோருதவியும் செய்யாதிருக்கவேயும், அவனுக்குப் பிறரெவராலும் செய்யமுடியாத பேருதவி செய்த உங்களுக்கு உண்மையற்றவனானால், அவன்

பிறந்ததனாலாய பயனைப் பெறாதவனாவதன்றி, இறந்தபின் எரி வாய்நரகம் எய்துவானுமாவனென்பது நிச்சயம்.

'நீ முற்றத்தில் நிற்றல் முறையன்று. இதனை எதிரிகள் அறிகுவராயினால், உங்களுக்கும் எங்களுக்கும் உள்ள உறவு ஒழிந்த தென இகழ்தற் கிடமாம். அரண்மனைக்குள்ளே வந்து நீங்கள் அளித்த செல்வச் சிறப்பை உன் தமையன் சுக்கிரீவனோடு சுற்றிப் பார்ப்பாயாக!' என்றான்.]

இலக்குமணன் கோபந் தீர்ந்து கூறுதல்

[அனுமான் கூறியதைக் கேட்ட இலக்குமணன், 'நீங்கள் உதவிய செல்வத்தால் சுக்கிரீவன் பரவசனாய் உங்கள் ஆணை கடந் தால், அதன் ஆதிகாரணம் நீங்கள்தானே!' என்று தாரை கூறி யதைக்கொண்டும், அவளும் அனுமானும் சொன்ன மனப்பூர்வ மான மதிப்பையும் வணக்கத்தையும் வெளிப்படுத்திய விநய மொழிகளையும் நன்றியறி வசனங்களையுங் கொண்டும், சுக்கிரீவன் இராமன் ஆணையை அலட்சியஞ்செய்தானல்லன்; வாலி கொடுமை யால், நெடுங்காலம் மனையைவிட்டு, மனைவியைவிட்டு, வறுமை யுற்று, வனமே கதியாய் வருந்தியிருந்தவன், திடீரென இராச்சி யப் பெருஞ்செல்வ மெய்தி, இராசபோகத்தி லழுந்தி, மதிமயங்கி, வசமிழந்ததனால் வாக்குத்தத்தத்தை மறந்தானென ஊகித் துணர்ந்து, கோபத்தைவிட்டு, அனுமானை நோக்கிக் கூறுகின்றான்.

'இராவணன் சீதையைக் கவர்ந்தது காரணமாக எழுந்த கோபத் தீயும் மானத் தீயும் ஒன்றுசேர்ந்து உயிரைத் தாக்க, உயிரோடு உணர்வு மொடுங்கிய இராமன் தன்மை கண்டு, யான் சகியேனாகித் தருமநெறி சற்றுந் தவறாதவன் அடையும் பயன் இதுவோ வென்று தருமத்தை வெறுத்துப் பகையெனத் தள்ள வும், கொடுமையை விரும்பி உறவெனக் கொள்ளவும், பழி பாராது பாவிகட்குரிய பாதகத் தொழிலைப் பற்றவும் நெஞ்சுள் நினைத் தேன். ஆயினும் என் கோபத்தை யானாகவே தணித்துக்கொண்டு, இராமனைக் கோபமாற்றித் தேற்றிக்கொண்டிருந்தேன். அதனால், நாள்கள் பல கழிந்தன. அன்றி, எங்கள் கோபம் மாறாதிருந் தால், நெடுநாட்கு முன்னமே உலகம் ஊழிக்கால நிலைமை உற் றிருக்கும். இராமன், சுக்கிரீவனை அன்புகூர்ந்து தம்பியாகக்

கொண்டு, சீதையைத் தேடுங் காரியத்தை அவனாற் செய்வித்து, அதனால் அவனுக்குச் சிறப்பளிக்கக் கருதியே இதுகாறும் தாழ்த்திருந்தான். அன்றேல், காக ரூபமாகச் சீதையைத் தொந்தரித்த இந்திரகுமாரன், எல்லா உலகங்களிலும் ஓடிச்சென்று தேடிக், காக்கவல்லா ரெவருமில்லாமை கண்டு, மீண்டு வந்து "நீயே தஞ்ச" மென இராமனைச் சரணமடைந்து மன்னிக்கப்படும் வரையும், கொல்லல் குறித்துத் தப்பவிடாது தொடர்ந்து துரத்திய இராம பாணம் இராவணனைத் தேடிக் கொன்று சீதையை மீட்பதை யாவர் விலக்குவர்? நீங்கள் குறித்த கால எல்லையில் சேனை கொணரத் தாமதஞ் செய்ததனால், அதருமத்துக்கு அனுகூலமும் தருமத்துக்குப் பிரதிகூலமும் செய்தீர்கள்' என்று கூறி இலக்கு மணன் பின்னும் கூறுகின்றான்.]

73. தாழ்வித்தீ ரல்லீர் பன்னாட் டருக்கிய வரக்கர் தம்மை
வாழ்வித்தீ ரிமையோர்க் கின்னல் வருவித்தீர் மரபிற் றீராக்
கேள்வித்தீ யாளர் துன்பங் கிளர்வித்தீர் பாவந் தன்னை
மூள்வித்தீர் முனியா தானை முனிவித்தீர் முடிதி ரென்றான்

கொண்டுகூட்டு: '(நீங்கள்) தாழ்வித்தீர் (என்றேன். உண்மையில் அப்படி) அல்லீர்; (வேறு என் செய்தீர் எனின்) பல் நாள் தருக்கிய அரக்கரை வாழ்வித்தீர்; (அதனால்) இமையோர்க்கு இன்னல் வருவித்தீர்; மரபில் தீராக் கேள்வித் தீ ஆளர்க்குத் துன்பம் கிளர்வித்தீர்; பாவந்தன்னை மூள்வித்தீர்; முனியாதானை முனிவித்தீர்; (ஆதலின்) முடிதிர்!' என்றான்.

பொருள்: '(நீங்கள் தாமதஞ் செய்தீர்களென்றேன். உண்மையில்,) தாமதஞ்செய்திரல்லீர்: (மற் றென்செய்தீ ரெனில், குறித்த தவணையில் சேனை கொண்டுவரப்பட்டிருந்தால், உடனே அரக்க ரிருப்பிடந்தேடிக் கண்டுபிடிக்கப்பட்டு அவர்கள் கொல்லப் பட்டிருப்பார்கள். அரக்கர் கொல்லப்பட்டொழியவே, தேவர் துன்பம் தீர்ந்திருக்கும், பிராமணர் துன்பம் நீடித்திராது; சாந்த மூர்த்தியான இராமன் கோபங்கொண்டிருக்கமாட்டான். இத் தனைக்கும் விரோதமாக, நீங்கள் எத்தனை பலநாள் சேனை கொண்டு வராது தாமதஞ் செய்தீர்களோ, அத்தனை) பலநாள் அந்த அரக் கரைச் சாதலினின்று தப்பிவாழச் செய்தீர்கள்; அவரை வாழவிட் டதனால் அவரால் அத்தனை பலநாள் தேவர்க்குத் துன்பம் வளரச் செய்தீர்கள்; அத்தனை பலநாள் முனிவர் துன்பமும் அதிகப்படச்

செய்தீர்கள்; அத்தனை பலநாள் பாவம் ஆகிய தீமை மூளச்செய்தீர்கள்; இயல்பாகக் கோபியாத குணமுடைய இராமனை அத்தனை பலநாள் கோபிக்கச் செய்தீர்கள்; இந்தப் பல கேடுகளுக்கும் காரணராகிய நீங்கள் அழிந்துவிடுவீர்கள்!' என்றான் இலக்குமணன்.

'தாழ்வித்தீரல்லீர்' என்பதற்கு 'நீங்கள் காலதாமதஞ் செய்தவர்கள் மாத்திர மல்லீர்' என்பது முந்திய உரை. தாழ்தல், தாழ்த்தல், தாழ்த்துதல், தாழ்வித்தல், நீட்டித்தல், பாணித்தல், விளம்பனஞ்செய்தல், மந்தித்தல், ஆலசியஞ்செய்தல், தாமதித்தல் என்பவை ஒருபொருள் குறித்தவை. பல்நாள் - பல நாள்கள். தருக்குதல் - அகங்கரித்தல்; வருத்தல். — த. அ. தருக்கிய அரக்கர் - (தேவர் முதலிய நல்லோரைத்) துன்புறுத்திக்கொண்டிருந்த இராக்கதர். 'பன்னாள்' என்பதை 'வாழ்வித்தீர்,' 'வருவித்தீர்' முதலியவற்றோடு இயைத்தலல்லாமல், 'தருக்கிய' என்பதனோடும் இயைக்கலாம். இமையோர் - தேவர். இன்னல் - துன்பம். வருதல் - வளர்தல்—த.அ. 'மரபில் தீராக் கேள்வி தீ ஆளர்' - 'வரன்முறையினின்று நீங்காத நூற்கேள்விகளையும் ஓமாக்கினிகளையுமுடைய முனிவர்.' கிளர்தல் - மேன்மேல் வளர்தல்; மிகுதல்.—த. அ. தீ மூளல், தீ மூட்டல் என்ற வழக்குப் பற்றிப், 'பாவம் தன்னை மூள்வித்தல்' பாவத்தீயை மூளச் செய்த லெனப் பொருள் எழுதப்பட்டது காண்க. முனிதல் - கோபித்தல். முடிதல் - கெடுதல்; சாதல்.

தாழ்வித்தல் என்பதற்குத் தாமதித்தலன்றித் தாழ்வுறச்செய்தலும் பொருளாம்: இப் பொருள் கொண்டால், இக் கவிப்பொருள், — 'அரக்கரைத் தாழ்வுறச்செய்யவேண்டிய நீங்கள் வாழ்வுறச்செய்தீர்கள்; தேவர் முனிவர் துன்பங்களைக் குறைத்திருக்கவேண்டிய நீங்கள், அதிகப்படுத்தினீர்கள்; இவ்வாறாகப் பாவத்தைத் தணிக்காது வளர்த்ததனால், இராமன் மனத்தைக் குளிரச்செய்யாமல் வெதும்பச் செய்தீர்கள்; ஆதலால் அழிவீர்கள்' என்பதாம்.

இப்பாட்டுடன், உயுத்தகாண்டத்தில் இராவணன் சீதையை நோக்கிக் கூறுவதாயுள்ள பின்வரும் பாட்டு ஒப்புநோக்கத்தக்கது:

'தோற்பித்தீர் மதிக்கு மேனி சுடுவித்தீர் தென்றல் தூற்ற
வேற்பித்தீர் வயிரத் தோளை மெலிவித்தீர் வேனில் வேளை
ஆர்ப்பித்தீ ரென்னை யின்ன லறிவித்தீர் அமர ரச்சம்
தீர்ப்பித்தீ ரின்ன மென்னென் செய்வித்துத் தீர்திரம்மா!' *

(எ௩)

* மாயா சனகப் படலம்—கக.

அனுமான் இலக்குமணனை அழைத்துச் செல்லல்

[இவ்வாறு இலக்குமணன் கூற, அனுமான், 'ஐய! கடந்ததைக் கருதலிற் காரியமில்லை. யாங்கள் செய்யத்தவறியதை இனிமேற் சித்தத்தில் வைத்தல்செய்யாது விடுக. யாங்கள் செய்வதாக ஏற்றுக்கொண்டதைச் செய்யாதுபோவோமானால், நீங்கள் எங்களைக் கொல்லவேண்டியதில்லை. யாங்களே எங்களை மாய்த்துக்கொள்வேம். இது சத்தியம். இதற்குச் சாட்சி தருமதேவதையே. உள்ளேபோய் உன் தமையனைச் சேர்வாயாக' என்றான். எனவே, இலக்குமணன் 'அன்றும் நீ சொன்னபடி செய்தோம். இன்றும் உன் சொற்படி செய்வோம்' என்று கூறி அரண்மனைக்குள்ளே போக ஆயத்தமானான். அதை அறிந்து, வாசலில் நின்ற தாரை வழிவிலகித் தோழியரோடு அந்தப்புரத்துக்குப்போனாள்.

அப்போது மற்ற அமைச்சரோடு அங்கதன் வந்து இலக்குமணனை அடிபணிய, 'என் வரவை உன் தந்தைக்குத் தெரிவி' எனச், சென்று, சுக்கிரீவன் பாதம் வருடித் தூக்கம் நீக்கி, 'ஐய! இலக்குமணன் அளவற்ற கோபத்தோடு அரண்மனை வாயிலை அடைந்தான்!' என, 'நாம், குற்ற மொன்றும் செய்ததில்லையே; கோப காரணம் யாது?' என, நடந்த காரியங்களைக் கூற, 'ஏன் முன்னமே என்னிடம் சொன்னாயில்லை?' என, 'இலக்குமணன் நமது நகர்நோக்கி வருதலை முன்னதாக உன்னிடம் வந்து தெரிவித்தேன். சிந்தை தெளிவின்றி யிருந்தா யாதலால் தெரிந்தாயில்லை' எனச், சுக்கிரீவன் செப்புகின்றான்.]

சுக்கிரீவன் மது வுண்ணும் மடமை பற்றி வருந்தல்

['எனக்குப் பேரன்போடு பேருதவிசெய்த இராமபிரான் திறத்தில் என் அன்பும் தொண்டும் இருந்தவாறென்னே! யான் அவனால் பெற்ற பேற்றினும் பெரும்பேறு பெற்றார் உண்டோ! என்னைக்கொண்டு அவன் நீக்கிக்கொள்ள நினைத்திருந்த துன்ப மனைத்தையும் மதுவுண்டு மறந்த மடையனேன் இலக்குமணனை எவ்வாறு காண்பேன்! காண நாணுகின்றேன்.]

ஏயின விதுவ லான்மற் றேழைமைப் பால தென்னே
தாயிவண் மனைவி யென்னுந் தெளிவின்றேற் றரும மென்னும்
தீவினை வேறு மொன்றீ தன்றியுந் தெரிக்க லாமோ;
மாயையின் மயங்கு கின்று மயக்கின்மேன் மயக்கும் வைத்தாம்

கொண்டுகூட்டு : '(என்னிடம்) ஏயின இது (- மது உண் மடமை) அல்லால் மற்று ஏழைமைப்பாலது என்னே! (மது மயக்கில், இவள்) தாய், இவள் மனைவி என்னும் தெளிவு (இன்று. அது) இன்றேல் தருமம் என் ஆகும்! ஈது அன்றி, தீவினை வேறு மொன்று தெரிக்கல் ஆகுமோ! (நாம்) மாயையில் மயங்குகின்றோம்! (எம்போலியர் மாயை) மயக்கின்மேல் (மது) மயக்கமும் வைத்தாம்!

பொருள் : '(ஒழித்தற்கரிய பகையை ஒழித்துப் பெறுதற்கரிய பெருவாழ் வளித்த பெருமான் துன்புறுதலை யான் மறக்கும்படி என்னிடம்) பொருந்திய மதுவுண் மடமையே மடமை. இதுவல்லாமல் இதனைப்போலக் கேடுவிளைக்கும் வேறு மடமை யாது உளது! (விலக்கியவற்றைச் செய்யாது விட்டு விதித்தவற்றைச் செய்வதன்றோ தருமமாவது! காமசம்பந்தமாக விலக்கியவற்றுள் தாயிடத்துக் காமம்நுகர்தலும், விதித்தவற்றுள் மனைவியிடத்துக் காமம்நுகர்தலும் தலைமையானவை. கள்ளுண்ட மயக்கத்தில் காமம் நுகர்வானுக்கு) இவள் தாய் இவள் மனைவி யென்னும் (தெளிவில்லையாம். அவ்வாறு) தெளிவில்லையானால் அவன் தருமம் என்ன பயனுடையது! (கள்ளுண்ணும் தீவினையை நோக்க, ஏனைய தீவினை யாவையும் தீவினையாகா. கள்ளுண் தீவினையை ஒத்தது கள்ளுண் தீவினையே.) இஃதன்றி வேறேயும் ஒன்று இதுபோன்ற தீவினையாக இருப்பதைக் காட்ட முடியுமோ! (அந்தோ! பகுத்தறிவுடையரான நாமனைவரும், உண்மைப் பொருளான பரம்பொருளைத் தெரியாதபடி மறைக்கும் திரைபோலுள்ள தோற்றப் பொருளான பிரபஞ்ச) மாயையிலே அகப்பட்டு மயங்குகின்றோம்! (என்போன்ற பேதைகள், அந்த மாயை மயக்கத்தை நீக்க முயலாமையோ டொழியாமல், இயற்கையாயுள்ள அந்த மயக்கம் போதாதென்று செயற்கையாயுள்ள கள்மயக்கத்தையுங் கொண்டு, உள்ள) மயக்கத்துக்கு மேல் உபரி மயக்கமுங் கொண்டோமானோம்!

ஏயின, ஏய் (- பொருந்து) என்னும் பகுதியடியாகப் பிறந்த பெயரெச்சம்: ஏய்ந்த என வருதல் பெரும்பான்மை, ஏயின என அருகி வரும்: 'ஏயின வகையினாலே' — சிந்தா. 1453. ஏழைமை - பேதைமை - மடமை - அறியாமை. பால் - குணம். — பிங்கல. - தன்மை. ஏழைமைப் பாலது - அறியாமைத்தன்மை யுடையது - அறியாமை. தெரித்தல் - தெரியச்செய்தல் - காட்டல். முதலடியில் உள்ள 'என்' யாதுளது என்ற பொருளும், இரண்டாம் அடி 'என்' என்ன பயனுடையது என்ற பொருளும் தருதல் காண்க.

'இவள்,' முன் பின் வரும் தாய் மனைவி இரண்டுக்கும் இடையில் பொதுவாய் நின்று, பொருள்விளக்கம் குன்றாமல் சுருங்கச்சொல்லல் என்னும் வனப்புக்கு உதாரணமாயுள்ளது.

'மாணிக்கவாசகர் திருவாசகமே வாசகசிரோமணியாய் வாசகம் (எனத் தக்க சிறப்புடையது), வேறு (அதுபோல வாசகம் எனத்தக்க சிறப்புடையது) யாதுளது? ஒன்றுமில்லை' யென்ற பொருள்பட, 'வாசக மதுவே வாசகம்' எனச் சிவப்பிரகாசரும், 'நீர் எனத்தக்கது காவிரியே; வேந்தனெனத்தக்கவன் சோழனே; மண்ணெனத்தக்கது சோழ மண்டலமே; வேறில்லை' யென்ற பொருள்படத், 'தண்ணீருங் காவிரியே தார்வேந்தன் சோழனே — மண்ணாவதுஞ்சோழ மண்டலமே' எனத் தாமும் கூறியவாறு, கம்பர், இங்கு 'மதுவுண் மடமையே மடமை' யென்றானென்றார்.

கள்ளுண்ணும் தீவினை, தன்னோடொழியாமல், மற்றைத் தீவினைகள் பலவற்றுக்குக் காரணமா மென்பதைக் காட்டும் கர்ணபரம்பரைக் கதை யொன்றுண்டு. அது யாதெனில்:

வைதிகனான வழிப்பிரயாணி யொருவன், மரமடர்ந்த வனாந்தரத்தின் மத்தியில் வழிச்சென்றுகொண்டிருந்தான். அப்போது, அங்கே, அவனெதிராக, ஒக்கலில் பிள்ளையை இடுக்கிக்கொண்டிருந்த இடக் கையில் கள்ளுக் கலசமும் வலக் கையில் அரிவாளுமாக வந்த ஒருத்தி, வழிமறித்து, 'இந்த அரிவாளால் இந்தப் பிள்ளையைக் கொல்லல், என்னைச் சேர்தல், இந்தக் கள்ளைக் குடித்தல் ஆகிய மூன்றில் உனக் கிட்டமான தொன்றைச் செய்க: ஒன்றுஞ் செய்யா யெனில், உன்னை உயிரோடு விடேன்; வெட்டிவிடுவேன்!' என்றாள். 'இந்தச் சண்டாளி சொற்படி செய்யாவிட்டால், பிராயுதனான என்னை எளிதிற் கொன்றுவிடுவாள். உயிர்தப்ப இவள் சொற்படி எதைச் செய்யலாம்? சிசுஹத்தி மஹா பாதகம்! பரஸ்திரீ கமனம் நினைக்கவு மொண்ணாதது! இவ்விரண்டினும் மிகவும் குறைந்த தீவினை, கள்ளுண்டல். இதைச் செய்வோம். ஆபத்துக்குப் பாபமில்லை' என்றெண்ணிக் கள்ளைக் குடித்தான். குடித்தவன், முன் குடியாதவனாதலால், உடனே குடிவெறி தலைக்கொண்டு,

காமாவேசமுற்று அவளைச் சேர்வானானன். அப்போது அழுத குழந்தை இடையூறாயிருக்கிறதென்று, பானகத் துரும்பை நீக்குதல்போல், பக்கத்திற் கிடந்த அரிவாளால் வெட்டிக் கொன்றுவிட்டா னென்பது.

கம்பர், காவிய காம்பீரியமும் நாடக நயமும் ஒருங்கு பொருந்தக் கதை நடத்திச் செல்வதனோடு, தத்துவஞானம், நீதியுணர்வு, இராச தந்திரம் உலக அறிவு முதலிய நல்லறிவுகளைக் கவிச்சுவையோடு கலந் தூட்டுதலைக் கம்பராமாயணத்தில் எத்தனையோ இடங்களிற் காணலாம். விதிகளையும் விலக்குக்களையும் முறையே மேற்கொள்ளவும் விலக்கவும் ஆணையிட்டுக் கூறும் நீதி நூல்களினும், நீதிகளையுள்ளடக்கி விளங்கும் இதிகாசங்கள் எளி தில் வாசகர் மனம் புகுவதுடன் நெடுங்காலம் தங்கியிருக்கும் இயல்புடையன. இதனாலேயே வேதம் முதலிய நூல்களைத் தந்தைக்கும், படிக்குந்தோறும் இன்பமளித்து, அறத்தாற்றில் ஒழுகத் துணையாயிருக்கும் இராமாயணம் போன்ற இதிகாசங்களைத் தாரத்திற்கும் ஒப்பாகக் கூறுவர். கம்பர் தமது காவியத்திற் கூறும் நீதிகள் தெவிட்டாதனவாயும் தக்க கதா சந்தர்ப்பங்களை யொட்டி அவ்வச் சந்தர்ப்பத்தால் வலியுறுத்தற்குரியனவாயுமிருக்கும். அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் இது ஒன்று. இங்கே, கள்ளுண் தீமையை வற்புறுத்துவாராய், அதற்குப் பூர்வாங்கமாகச் செய்ந்நன்றி மறத்தற் றீமை யைச் 'சிதைவகல் காதற்றாயை' என்ற செய்யுளில் நெறிதவறாத அனுமான் கூற்றாக வற்புறுத்திக் கூறி, அப்படிப்பட்ட செய்ந்நன்றி மறத்தலைச் செய் வித்த கள்ளுண் தீமையை நெறிதவறிக் கள்ளுண்டு செய்ந்நன்றி மறந்த சுக்கிரீவன் கூற்றாக, இந்த 'ஏயின' என்று தொடங்கும் செய்யுளில் வற் புறுத்திக்கூறிய பொருத்தம் கவனிக்கத்தக்கது.

இந்தக் கவி, ஒவ்வோ ரடியும் அததில் முடிவுடையதாய், எந்த அடியை எங்குக் கூட்டினும் பொருந்துவதா யிருத்தலால், அடிமறிமாற்றுப் பொருள் கோளுக் குதாரணமாம். இக் கவியின் ஒவ்வோரடியும் அறிவும் ஆனந்தமும் ஒருங்கு பயப்பதாயுள்ளது. இறுதி அடி, தத்துவ ஞானத்தையும் நீதியை யும் கழிவிரக்கம் கனியச் சமத்காரமாகக் கூறிக் கம்பராமாயணத்திற் காணப்படும் அருமையினு மருமையும் இனிமையினு மினிமையுமான அமுதகவிப் பகுதிகளுள் ஒன்றாயிருத்தல் சொல்லாமலே தெரியும்.

பாட பேதம்: ஏயினி நறவலால்: தீவினை யைந்தி னென்று மன்றி யுந் திருக்கு நீங்கா: மயங்கு கின்றார்: மயக்கு வைப்பார். (எச)

['அபாயம் அணுகலுற்று, அஞ்சும் நெஞ்சினராய் அடைந்த வரை அபயமளித்து ஆதரிப்பவரும் ஐம்பொறிகளை அடக்கிச் சுகதுக்கங்களை ஒருநிகராகக் கருதி விருப்பு வெறுப்பற்றவர்களும்

நற்கதியடைதல் திண்ணமாதல்போலக், கள்ளுண்டார் தீக்கதியடைதலும் திண்ணமே.]

75. வஞ்சமுங் களவும் பொய்யு மயக்கமு மரபில் கோட்புந்
தஞ்சமேன் றுரை நீக்குந் தன்மையுங் களியுந் தாக்கும்
கஞ்சமேல் லணங்குந் தீருங் கள்ளினு லருந்தி ளுரை
நஞ்சமுங் கோல்வ தல்லா னரகினை நல்கா தன்றே

கொண்டுகூட்டு : *'வஞ்சமும், களவும், பொய்யும், மயக்கமும், மரபில் கொட்பும், தஞ்சம் என்றுரை நீக்கும் தன்மையும், களியும் கள் அருந்தினுரைத் தாக்கும். (அவரைக்) கஞ்சம் மெல் அணங்கு தீரும். நஞ்சம் கொல்வது அல்லால் நரகினை நல்காது' என்றுன்.*

பொருள் : *'வஞ்சனை புரிதலும், களவு செய்தலும், பொய் கூறலும், அறிவு மயங்குதலும், முறைதவறிய கொள்கைகளைக் கொள்ளலும், சரணடைந்தாரைக் காவாமல் தள்ளுதலும் கள்ளுண்பாரைச் சேர்ந்து வருத்துவனவாம். அவர்களை இலக்குமி விட்டகல்வாள் (அவர்கள் செல்வம் நீங்கு மென்றபடி). நஞ்சம், (தன்னை உண்டாரைக் கள்ளைப்போலக்) கொல்லுவதல்லாமல், (அக் கள்ளைப் போலத் தன்னை யுண்பார்க்கு) நரகத்தைத் தராது' என்றுன் சுக்கிரீவன்.*

'கொல்லும் நஞ்சினும் கொடியது கள்' என்பது கருத்து.

மரபு - முறைமை. கொட்பு - கொள்கை. களிப்பு - செருக்கு. தாக்குதல் மோ(தி வருத்)துதல். தீர்தல் - நீங்குதல். அருந்தல் - உண்ணல். கள்ளினல் அருந்தினுரை - கள்ளை அருந்தியவரை: வேற்றுமை மயக்கம்.

சிறந்த பொருள் பொதிந்த இப்பாட்டின் இறுதியடி மிகவும் பாராட்டத் தக்கது. (எரு)

[*இவ்வாறு கூறிய சுக்கிரீவன், பின்னுங் கூறுவானுய்க், 'கள்ளினல் வருவது கேடேயென்று கேட்டிருந்தும் அதனை விலக்காது கெட்டேன். கள்ளை வாயால் மடுத்தல் கிடக்க, கையால் தீண்டுதல் மட்டுமோ, கண்ணுல் காணலும் கருத்தாற் கருதலுமே தீய செயலாம். இனிக் கொடிய கள்ளை விரும்புவேனுனல், அக் கள்ளாலன்றி இராமபிரான் திருவடிகளாற் சிதைக்கப்படுவேனுக!' என்றுன்.*]

இலக்குமணனைச் சுக்கிரீவன் வரவேற்றல்

[பின்பு, இலக்குமணனை எதிர்கொண்டு வரவேற்குமாறு அங்கதனை ஏவித் தானும் தன் தேவிமாரும், உறவினர் சூழ அரண்மனையின் ஆசாரவாசலில் நின்றான்.

அங்கதன், இலக்குமணனை யடைந்து, திரும்பவும் தெண்டனிட்டுச், 'சுக்கிரீவமகாராசன் உன்னை வரவேற்கச் சித்தமாயிருக்கிறான்' என்றான். இலக்குமணன் சுக்கிரீவனிடம் சென்றபோது, அவன், இருமருங்கும் வெண்சாமரங்கள் துளங்க, மேலே வெண்கொற்றக்குடை விளங்க, எதிர்கொண்டு சென்று இலக்குமணனை வரவேற்றான். இலக்குமணன், சுக்கிரீவனைக் கண்டபோது, தன் மனத்தினுள்ளே சுவாலித்தெழுந்த கோபத் தீயைச் சாந்த நீராலவித்துக்கொண்டு அரண்மனையுள்ளே சென்றான். அங்கே, சிங்காதனத்தின்மீது வீற்றிருக்கும்படி சுக்கிரீவன் வேண்டிக்கொண்டபோது, இலக்குமணன், 'இராமபிரான், நாட்டைத் துறந்து, காட்டை யடைந்து தரையாதனத்தி லிருக்க, நான் அரியாதனத்தில்* அமர்தல் ஆகுமோ?' என்று தரையிலிருந்தான்.

அதுகேட்டு வருந்திய சுக்கிரீவன், 'ஐய! போசன சமயமாகியது. நீராடி அமுதுசெய்க' எனத், 'துன்பமும் பழியும் நிறைந்த எங்களுக்கு இனிமையானது எதுவுமில்லை. "கருத்துவேறுற்ற பின் அமிழ்தும் கைக்குமால்." அரக்கன் சீதையைக் கவர்ந்து மூட்டிய பழித்தீயால் தகிக்கப்பட்டுள்ளோம். அவனைக் காட்டினையானால், அத்தீயை யவித்து எங்களைக் கங்கைநீராட்டினை யாவாய்; தேவாமிர்தம் ஊட்டினையு மாவாய். பச்சிலையோ கிழங்கோ, காயோ கனியோ, ஏதாயினும் எம்பிரான் உண்டு மிஞ்சிய மிச்சிலை உண்பேனன்றி வேறெதனையும் நாயின் எச்சிலெனக் கருதுவேன். நான் திரும்பிப்போய்க் கீரை முதலியவற்றைத் தேடிக் கொணர்ந்து எம்பிரானை உண்பிக்கவேண்டியிருத்தலால், இங்கே தாமதித்தல் சிறிதும் தகாது' என்றான்.]

இலக்குமண சுக்கிரீவர் இராமனை அடைதல்

[எனவே, சுக்கிரீவன், இராமனது நிலைமைக் கிரங்கி, வானர சேனையைத் திரட்டி வருமாறு அனுமானுக்குக் கட்டளையிட்டுவிட்டு,

* சிங்காதனத்தில்.

இராமனிடம் செல்வானானான். இலக்குமணன் வாகனம் ஏறாதாக, அவனுடன் சுக்கிரீவன், தானும் பாதசாரியாய்த் தன் சிவிகை பின்வரச் சேனை சூழச் சென்று, இராமனிருந்த இடத்தைச் சமீபித்த போது சேனையைப் பின்னே நிறுத்திச் சென்று, இராமனைக் கண்டு வணங்கினான். அவன், கோபம் மாறி அன்பு மீதூர, வணங்கினவனை வாரியெடுத்து மார்புறத் தழுவிப் பக்கத்தில் இருக்கச் செய்து, 'உன் அரசும் ஆணையும் நன்கு நடக்கின்றனவே? உன் குடிகள் குறைவின்றி இனிது வாழ்கின்றனரா?' என்று க்ஷேம விசாரணை செய்தான். சுக்கிரீவன், 'உன் கிருபையால் எக்குறையுமின்றி எல்லாம் நன்றாயிருக்கின்றன' என்று விடையளித்து, 'நீ பேரருள் புரிந்து பெரிது செய்த அரிய உதவியால் அரசச் செல்வமனைத்தும் அடைந்த அடியேன், உன் கட்டளையை நிறைவேற்றாமல் என் குரங்குத்தனத்தைத் திரும்பக் காட்டிவிட்டேன். சீதாதேவியைத் திசையனைத்துஞ் சென்று தேடிக் காணும் சேவையைச் செய்தேனில்லை. அவள் பிரிவால் நீ வருந்தியிருக்கவும், நான் மனைவியரோடு வாழ்ந்து மகிழ்ந்திருந்து பெரும்பிழை புரிந்தேன்' என்றான்.

இராமன், 'நீ உன்னை நோதல் வேண்டா. இதுவரையும் எந்த முயற்சியும் செய்தற் கிடங்கொடாத கார்காலம் கழியாதிருந்தது. உன் இரங்கல் வார்த்தைகள், இனிச் செய்யற்பாலதைத் தீவிரமாகச் சிரத்தையோடு செய்வாயென்பதைத் தெளிவாகத் தெரிவிக்கின்றன. இனி, நீ குற்றஞ் செய்ததாகக் கூறுதலொழிதி. அநுமான் எங்கேயிருக்கிறான்?' என, 'எண்ணிறந்த தூதர்கள், எல்லாத் திசைகளிலும் உள்ள சேனைகளைத் திரட்டிக்கொண்டுவரச் சென்றிருக்கிறார்கள். சேனைகள் வந்துசேரும் நாள் இன்றுதான். அவைகளோடு அநுமான் நாளை இங்கே வருவான். எல்லாச் சேனைகளும் வந்தவுடனே, நாம் செய்யவேண்டியதைச் சிந்தித்து முடிவு செய்யலாம்' என்று சுக்கிரீவன் சொன்னான்.

இராமன், 'இப்போது பகற்பொழுது கழிந்தது. நீ ஊருக்குப் போய் நாளைத்தினம் சேனையுடன் திரும்பிவா' என, அவன் வணங்கிச் சென்றான். அவன் சென்றபின், இலக்குமணன், அவனிடம் தான் போனபோது நிகழ்ந்தவற்றை இராமனிடம் தெரிவித்தான்.

12. தானைகாண் படலம்

[இராம லக்குமணர்
வானர சேனையைப் பார்வையிட்டதைக் கூறுவது]

வானர சேனாதிபதிகள் சேனைகளுடன் வருதல்

[மலைகள் எங்கும் உரோமம் முளைத்தனபோன்ற வடிவமும், தனித்தனியாகவே அரக்கரனைவரையும் அழிக்கத்தக்க ஆற்றலும், வீரமும் வெற்றியும் உருவெடுத்தாற்போன்ற தோற்றமும் உடைய நீலன், ஜாம்பவான், அனுமான், குமுதன், பதுமுகன் முதலிய வானரசேனாபதிகள், தங்கள் தங்கள் சேனைகளுடன் வந்தார்கள். அந்தச் சேனைகள், வேண்டுமென்றால் பெரிய மேருவை வேரோடு பிடுங்கவும் தெள்ளிய கடலைக் கலக்கிச் சேறாக்கவும் வல்லவை; கோபங்கொண்டால் சூரியனையும் வலிகெடத் தொலைக்கும் வலிமையுடையவை; அகங்காரமடைந்தால், தம்மைத் தாங்கும் பூமியையும் தனித்தனியே குத்தியழிக்கும் சக்தி படைத்தவை. அந்தச் சேனை தோய்ந்தால் * சமுத்திரமும் வற்றிவிடும்; சாய்ந்தால் மேருவும் சாய்ந்துவிடும்; காய்ந்தால் † கனற்கடவுளும் கதிர்க்கடவுளும் கரியாய்விடுவர்; உண்ணுமானால், உலக முழுதும் ஒரு கவளத்துக்குப் பற்றாது; குடிக்குமானால், எழுகடலும் ஒரு கை அள்ளிக்குடிக்கப் போதா; ஒடிக்குமானால் மேருவையும் ஒடித்துவிடும்; இடிக்குமானால் வானமுகட்டையும் இடித்துவிடும்; பிடிக்குமானால் காற்றையும் கூற்றையும் பிடித்துவிடும்.

இப்படிப்பட்ட வலிய பெரிய சேனைத் திரள்களோடு வந்த சேனைத் தலைவர்கள், சுக்கிரீவனை வணங்கினார்கள். அவன் இராமனிடம் சென்று 'உன் சேனைகள் வந்திருக்கின்றன. கண்டருள்க' என, அவன், சீதையை வரப்பெற்றாற்போலச் சிந்தை களிகூர்ந்து இலக்குமணனுடன் சென்று அந்தச் சேனைப்பரப்பைச் செவ்வையாகப் பார்க்கத்தக்க ஓர் உயரிய மலைச்சிகரமேலேறினான். சுக்கிரீவன் திரும்பிச் சேனையினிடஞ் சென்று அதனை வடதிசைநின்று தென்திசை நோக்கிச் செல்லுமாறு பணித்துவிட்டுச் சேனைத் தலைவரையழைத்துக்கொண்டு இராமனை அடைந்தான். அவர்கள்

---

* குளித்தால். † கோபித்தால்.

அவனை வணங்க, அவர்கள் ஒவ்வொருவர் வரலாற்றையும் தெரிவித்துச் 'சேனையைக் காண்பாயாக' என, அவன் காணலுற்றான்.

அப்போது சேனை சென்றதனா லுண்டாகிய புழுதி, பூமியையும் வானத்தையும் போர்த்து எங்கும் இருளடையச் செய்தது. இராம லக்குமண ரிருவரும் தங்கள் பார்வை எட்டுமட்டும் கூர்ந்து பார்த்தும் சேனையின் ஒரு பகுதியையே கண்டார்க ளென்றால், அதன் மிகுதியைச் செப்பலாமோ!]

வானர சேனையின் பெருமையும் வலிமையும்

[மூவுலகத்தும் உள்ள வீரருள் முதல்வனான இராமன், அந்தச் சேனையைக் கண்ணினாலும் கருத்தினாலும் கல்வியறிவினாலும் அளவிட்டுக் காண்பானாய், இலக்குமணனை நோக்கிக் கூறுகின்றான்:]

76. அடல்கொண் டோங்கிய சேனைக்கு நாமுநம் மறிவால்
உடல்கண் டோமினி முடிவுள காணுமா றுளதோ
மடல்கொண் டோங்கிய வலங்கலாய் மண்ணிடை மாக்கள்
கடல்கண் டோமென்பர் யாவரே முடிவுறக் கண்டார்

கொண்டுகூட்டு: 'மடல்கொண்டு ஓங்கிய அலங்கலாய்! நாமும் நம் அறிவால் அடல்கொண்டு ஓங்கிய சேனைக்கு உடல் கண்டோம். (இதன் கால் தலையாக) உள்ள முடிவு இனிக் காணும் ஆறு உளதோ? மண்ணிடைக் கடல் (கண்ட) மாக்கள் "(அதனைக்) கண்டோம்" என்பர்; யாவரே (அதனை) முடிவுறக் கண்டார்?'

பொருள்: '(மற்றவர்கள் போல) நாமிருவரும் (நம் கண்களை எட்டுமட்டும் செலுத்திப் பார்த்து) இந்தச் சேனைக்கு உடல் (ஆகிய நடுப்பகுதியில் ஒரு பகுதியைத்தான்) கண்டோம். (இதன் கால் தலையாக) உள்ள முடிவுகளைக் காணும் வகை உண்டோ? (கடலைக் கண்ட) மனிதர்கள் "கடலைக் கண்டோம்" என்பார். (ஆனால் அவருள்) எவர்தாம் (கடலை) முற்றும் கண்டவர்?'

'"கடலைக் கண்டோ" மென்பா ரெல்லாரும் அதன் ஒரு சிறு பகுதியையே கண்டவர்கள். அவ்வாறே நாம் இந்தச் சேனையைக் கண்டோ மென்பது இதன் ஒரு சிறு பாகத்தைக் கண்டோ மென்பதேயாம்' என்பது கருத்து.

அடல் - வலிமை. உளமுடிவு - (இந்தச் சேனைக்குக் கால் தலையாக) உள்ள முடி வெல்லை. மடல் - இதழ். அலங்கல் - மாலை. மாக்கள் - மனிதர். 'முடிவு உள' என்பதை 'உளமுடிவு' என மாற்றிப் பொருள்கொள்ளப் பட்டது. மாற்றாமல், முடிவாகவுள்ளவை(களாகிய பகுதி)களை யென்றும் உரை செய்யலாம்.

இப்பாட்டின் ஈற்றடி நனியினிய கவிப்பகுதிகளுள் ஒன்று. இதில் எடுத்தாளப்பட்டுள்ள உவமானம், ஊன்றிநோக்க, அதன் உவமேயத்தோடு எத்தனையோ பலவகைகளில் ஒற்றுமையுடையதா யிருத்தல் பாராட்டற் பாலது. (எகூ)

[இவ்வாறு கூறிய இராமன் பின்னும் கூறுவானாய், 'எங்கும் நிறைந்த இறைவன் திருமேனியையும், வரையறுக்கமுடியாது பரவியிருக்கும் பத்துத் திக்குக்களையும், அளவற்ற அண்டங்களனைத்தினும் நிரம்பிய ஐம்பெரும் பூதங்களையும், அறிவுடையார் பலர்பாற் காணப்படும் அறிவு விகற்பங்களையும், பேச்சுக்குமேற் பேச்சாக வாக்குவல்லார் பேசும்பேச்சுப் பெருக்கத்தையும், உலகந் தோன்றிய நாள்முதல் முடிவின்றித் தோன்றிக்கொண்டிருக்கும் சமயபேத வகைகளையும் போல, இந்தச் சேனையும் முடிவுகாண முடியாததா யிருக்கிறது!' என்றான்.]

இலக்குமணன், 'சீதையைத் தேடச் சேனையைச் செலுத்துக்' என்ல்

[அப்போது, இலக்குமணன், 'இந்தக் குரங்குப் பெருஞ் சேனையின் பகுதிகள் இத்தனையென அளவிடுதற்கு உறையிட வுதவும்படி பிரமதேவன் மற்றைய உயிர்களைப் படைத்தான் போலும்! இந்தச் சேனையை முழுதும் பார்த்த பின்பு நாம் செய்யவேண்டியதைச் செய்வோமென்றால், இதனைப் பார்த்தலி லேயே பலநாள் கழிந்துவிடும். ஆதலால் இதனைப் பார்த்தலை நிறுத்தி நாம் செய்தற்குரியதைச் சிந்திப்போமாக. எந்த உலகத்தில் எந்தக் காரியந்தான் இந்தச் சேனை செய்துமுடித்தற் கரிதாயுள்ளதென்று சொல்லத்தக்க திருக்கின்றது? யாதொன்றுமில்லை. இந்தச் சேனைக்குச் சீதாதேவியைத் தேடிக் காண்பது, அநாயாசமாய்ச் செய்துவிடும் அற்ப வேலையேயாம். இந்தப் படையினால், பாவம் தோற்றுவிடும். இனித் தாமதியாமல் சீதையைத் தேடத் தக்காரைத் திசைகளெங்கும் செல்லும்படி செய்தல்வேண்டும்' என, இராமன் சுக்கிரீவனை நோக்கிச் சொல்வானானன்.]

13. நாடவிட்ட படலம்

[சுக்கிரீவன் சீதையைத் தேடும்படி வானர வீரரைப் பல திசைகளிலும் விடுத்ததைக் கூறுவது]

சுக்கிரீவன், சீதையைத் தேடச் சேனைத் தலைவரை அனுப்புதல்

[*சுக்கிரீவன், அநுமானை நோக்கி, 'உன் தந்தை வாயு பகவான் போல, நீயும் உலகெங்கும் புகுந்து உலாவவல்லையல்லையோ! நீ, சீதாதேவி எங்கிருந்தாலும் சிறிதுந் தாமதஞ்செய்யாமல் தேடிக்காணல் வேண்டும். அவளைக் கவர்ந்துகொண்டு போன இராவணன் தென்றிசை நோக்கிச் சென்றுளதலால், அவனது இராசதானியாகிய இலங்கைமாநகர் அத் திசையி லிருக்குமென்றெண்ணுகின்றேன். அங்கதன் சாம்பவான் முதலியோர் கூட வர, இரண்டு வெள்ளஞ் சேனையுடன் தென்திசை நோக்கிச் செல்வாயாக!' என்று கற்பித்து, மற்றைப் படைத் தலைவரை மற்றைத் திசைகளில் இரண்டிரண்டு வெள்ளஞ் சேனையோடு தேடிவரும்படி பணித்தான்.*]

சுக்கிரீவன், தெற்கே செல்வோரிடம் வழி தெரிவித்தல்

[*அவன், தெற்கே செல்வாரை நோக்கி, 'ஆயிரங் கொடு முடியுடைமையால் ஆயிரந் திருமுடியுடைய ஆதிநாராயணனே வென்று கண்டவர் தெண்டனிடும்படி விளங்கும் விந்த மலையை மேவுவீர்கள். அப்பால், பெருவளமுடைய நருமதை நதியையும், ஏமகூடமா மலையையும், பெண்ணையென்னும் புண்ணிய நதியையும், தண்டக வனத்தையும் முண்டகத் துறையையும், பாண்டு கிரியையும் கோதாவிரியையும், சுவண நதியையும் சூரியகாந்த சந்திர காந்த மலைகளையும் சேர்வீர்கள். பின்பு, வேறு ஆறுகளையும் பாலைவனம் சுனைகளையும் கடந்துபோய்க், காலாற் சென்று அடைதற்கரியதாயினும் கண்ணாற் கண்டு களிக்கக்கூடிய அருந்ததி மலையையும் மரகத கிரியையும் கண்டு தெண்டனிடுங்கள்.*

பிறகு, வடமொழி தென்மொழி நிலங்களுக்கு வரம்பாய், இரண்டுக்கும் மத்தியாய், வேதாகம புராணேதிகாசங்கள் விதந்து கூறும் விசேடமுடையதாய், அறப்பய னளிப்பதாய் விளங்கும்

வேங்கட மலையைக் காண்குவீர்கள். பெருஞ்செல்வ வாழ்வையும் பிச்சைபுகுந் தாழ்வையும் ஒருநிகராகக் கருதிடுவோராய்ப், பயன் கருதிச் செய்வது நல்வினையாயினும் பிறப்புக்குக் காரணமென் றுணர்ந்து தாம் செய்யும் வினைகளைப் பலன் விரும்பாது செய்வோராய், இறைவனை வணங்கும் வினையையும் முத்திவேண்டிச் செய் யாது பத்திதூண்டிச் செய்வோராய் விளங்கும் மெஞ்ஞானிகள் அந்த மலையிலே யிருக்கின்றார்கள். அவர்கள் இங்கிருந்தேயும் இறைஞ்சிடற்பாலார். அந்த மலையை நெருங்கினீர்களானால் முத்தி யடைந்திடுவீர்கள். அது சீதாதேவியைத் தேடும் இராம காரியத் துக்கு இடையூறாய்விடு மாதலால், அம் மலையை அணுகாமல் விலகிப்போய்த் தொண்டைநாட்டை அடையுங்கள். அப்பால், இன்ப வளமுடைய சான்றோர் மனம்போல நீர்வளமுடைய சோழநாட்டையும், அதன் மேல்பால் சேரநாட்டையும், தென்பால் பாண்டியநாட்டையும் தாண்டி, மகேந்திர மலையைக் கடந்தீர்க ளானால் கடலைக் காண்பீர்கள். இவ்வாறு தென்திசை முழு தும் தேடி ஒரு திங்கள் செல்லுமுன் திரும்புவீர்களாக!' என்று செல்லும் வழி விவரமும் திரும்பும் அவதி முடிவும் செப்பினான்.]

சீதையின் அங்க லக்கணத்தை இராமன் அனுமானுக்கு அறிவித்தல்

[அப்போது, இராமன், அனுமானை ஓர் ஏகாந்தமான இடத் துக்கு அழைத்துப்போய்ச் சீதையை அறிதற்குரிய அடையாளங் களைக் கூறுவானானான். 'அவளைக் கால் நகந்தொட்டுத் தலைமயிர் மட்டும் (நக சிகை வருணனையாக) வருணிக்கப்புகுந்தோர், "கிளி, மாதர் வாயாகவுள்ள முருக்கம்பூவைப் பார்த்து, '"நீ எனக்குப் பயப்படாமல், சீதையின் காலில் உள்ள நகத்துக்கு என் தலையில் உள் ளமூக்கு ஒப்பாகாதென்று பழித்தாயே!* உன்னை ஒழித்து விடுகிறேன்"' என்று சீறித் தாக்குதல்போலத், தன் பழிக்கப் பட்ட மூக்கைக்கொண்டே பழித்த முருக்கம்பூவைக் கொத்திக் கிழிக்கு மென்றால், அந்தக் கிளிமூக்கைச் சீதை நகத்துக்கு

* முருக்கம்பூ கிளியைப் பழித்தல், பாம்பு பரமசிவனுக்கு ஆபரணமாய்க் கருடனுக்கு அஞ்சாமல் 'கருடா சுகமா?' என்று பரிகசித்தது போன்றது.

உவமையாக எடுத்துக் கூறலாமோ!" * என்றும், "பூக்களுட் சிறந்த தாமரை சீதையின் காலுக்கே உவமான மாகாதென்றால், முகம், கண், வாய், கை, உந்தி யென்னும் உறுப்புக்களுக்கு உவமான மாமோ!" † என்றும் கூறி, அவளுடைய அவயவ மெதற்கும் ஏற்ற உவமான மில்லாமையை உணர்ந்து, மேற் கொண்டு வருணனை செய்யமாட்டாது போயினர். மற்றைய மாதர் அவயவங்களுக்கு உவமானமாகும் சிறப்புடைய பொருள் களுக்குச் சீதையின் அவயவங்கள் உவமானமாகும் சிறப் புடையவை ‡ யென்றால், அப்படிப்பட்ட அவயவங்களை வரு ணிக்குமாறு எவ்வாறு! உயர்வொப்பற்ற அழகு நிறைந்த அவ ளுக்கு அவளே உவமையாதல்போல, அவளுடைய சம்பூரண சௌந்தரியம் பொருந்திய அவயவங்களுக்கு அவைகளே உவமை யாம். அவளுடைய கண்கள் காதுகள் போன்ற இணைப்பட்ட உறுப்புக்கள், ஒன்றுக்கொன் றுவமையாம் §. கூந்தல் முகம் போன்ற தனிப்பட்ட உறுப்புக்கள், தமக்குத் தாமே உவமையாம். இத்தகைய இலக்கணமுடையவள், மூன்றுலகத்திலும், வேறெவளு மில்லை. மதிக்கு மறுவுண்டு; பூவிற்கும் புறவித மூண்டு; மற்றைய அழகுடைப் பொருள்களைத்துக்கும் குறை ஒன்றோ பலவோ உண்டு. சீதைக்கு மாத்திரம் எக்குறையும் இல்லை: எல்லா நலங்களும் இனிது நிரம்பியிருக்கின்றன. இவ் வாற்றால் நீ சீதையைப் பார்த்தமாத்திரத்தில் சீதை யென்று தெரிந்துகொள்வாய்.]

அனுமான் இராமதூதனெனச் சீதை துணிவதற்கு அறிகுறியான செய்திகளைக் கூறல்

['நீ சீதையைத் தெரிந்துகொண்டபின், அவளை அணுகி, நீ என் தூதனென அவள் ஐயமின்றி அறிந்துகொள்ளும்படி, நான் மிதிலா நகர் வீதிவழியே விசுவாமித்திர முனிவனுடன் சென்ற போது கன்னியாமாடத்தில் அவளைக் கண்டதையும், கன்னியா சுல்கமாக $ நான் சிவன் வில்லை முறித்ததை அவள் கேள்வியுற்ற

* இப்படலம் 'வெள்ளிய முறுவல்' என்ற சஎ-ம் பாட்டையும் † 'ஏலக் கொண்டு' என்ற சகூ-ம் பாட்டையும் பார்க்க.

‡ இப்படலம் 'முன்கையே' என்னும் சரு-ம் பாட்டையும் § 'கேளொக் கின்' என்னும் ருரு-ம் பாட்டையும் இப்பாட்டுக்களுக்கு ஸ்ரீ வை. மு. கோபால கிருஷ்ணமாசாரியார் முதலியோர் எழுதியிருக்கும் உரைகளையும் பார்க்க.

$ 'ஒருவன் ஒரு கன்னிகையை மணந்துகொள்வதற்கு நிபந்தனையாக ஏற் படுத்தும் வில்வளைக்கை எருதழுவுகை போன்ற செயல்'.

போது, "மூறித்தவன் முனிவனுடன் வந்தவனல்லனாயின், உயிரை விடுவேன்" என்று உரைத்த கற்புறுதியையும், அவள் என்னுடன் "காட்டுக்கு வருவே" னென்றபோது, "வருவாயானால் இதுவரையும் எனக்கு இன்பத்துக்கு ஏதுவாயிருந்த நீ துன்பத்துக்கு ஏதுவாவாய்" என்று நான் சொன்னதற்கு, அவள், "காடு செல்லும் உனக்கு நான் ஒருத்தியொழிய எல்லாம் இனியனவோ?" என்று கூறிக் கண்ணீர் சொரிந்து, உடம்பைப் பிரியும் உயிர்போலத் தத்தளித்துத் துன்பம் தாங்கமாட்டாது சோர்ந்ததையும், நாங்கள் அயோத்தி நகரினின்று காட்டுக்குப் புறப்பட்டபோது, மதில் வாயில் கடக்குமுன் அவள் "எங்கே காடு?" என்றதையும் கூறு' என்று கூறித் தன் கணையாழியைக் 'கொடு' என்று கொடுத்துச், 'சுகமாகப் போய்வருக. நீ செல்லுங் காரியம் இடையூறின்றி இனிது முடிக!' என்று வாழ்த்தி வழியனுப்பினான்.]

அனுமான் முதலியோர் சீதையைத் தேடத் தெற்கே செல்லுதல்

[அனுமானும் அங்கதனாதியோரும் இராம லக்குமண சுக்கிரீவரை வணங்கி வழியனுப்பிக்கொண்டு சீதையைத் தேடுதற்குத் தென்திசை நோக்கிச் செல்வாராயினார்.]

14. பிலம் நீங்கு படலம்

[அனுமானாதியோர் வழிச்செல்கையில் ஒரு பாலைவனத்திலிருந்த பிலத்துட் புகுந்து வெளிவந்ததைக் கூறுவது] *

தலைவர்கள் சீதையைத் தேடச் சேனைகளைச் செலுத்தல்

[அனுமான் முதலிய வானர வீரர்கள் சுக்கிரீவன் சொன்ன தானங்களிலே விந்தமலை முதலாக ஏமகூட மலை யிறுதியாக உள்ள இடங்களில் சீதையைத் தேடிக்கொண்டு சேனைகளுடன் சென்றார்கள். ஏமகூட மலையை நீங்கியபோது, சேனைகளைப் பல கூறுகளாகப் பகுத்துப் பல இடங்களிலும் சீதையைத் தேடி முடிவில் மகேந்திர மலைக்கு வந்து தங்களைச் சந்திக்கும்படி அனுப்பிவிட்டு, அத் தலைவர்கள், வழிச்சென்றார்கள்.]

* பிலம் - குகை போல நிலத்தின்கீழ் உள்ள அறை.

அவர்கள் பாலைவனப் பெருவழியில் ஒரு பிலத்துட் புகுதல்

[வழி நடக்கையில் அவர்கள் நீரென்னும் பேருமில்லாமல் காய்ந்ததாயும் சூரியனும் அஞ்சும் சூடுள்ளதாயும் இருந்த ஒரு பாலைவனத்தைச் சேர்ந்தார்கள். அதன் கொடிய சூட்டினால், தரையில் தாளூன்றமாட்டாது தாவிக் குதித்துச் சுட்ட சட்டியி லிருந் தெழுகின்ற நெற்பொரிகள் போலத் துள்ளித் துடித்து, ஒதுங்க நிழல் காணாது தவித்து, 'இனி உயிர் நிலையா'தென் றேங் குஞ் சமயத்தில், ஒரு பிலத்தைக் கண்டு, 'இதனுள் நுழைந்து இச் சூட்டுக்குத் தப்பிப் பிழைப்போ' மென்று அதனுள்ளே புகுந்தார்கள். புகுந்தவர்கள், அதன் உள்ளிடத்தை அடைந்த போது, அங்குள்ள பேரிருள் மூடிக்கொள்ள. வந்தவழியும் போம்வழியும் தெரியமாட்டாது மயங்கித் தியங்கினார்கள். அங்க தன் முதலியோர், 'இனி இப்பிலத்தினின்று வெளியேறுமா றில்லை, இங்கேயே இறந்துவிடுவோ'மென்றேங்கி, 'அநுமானே! நீ எங்களைக் காக்கவல்லையோ?' என, அவன், 'அஞ்சாதீர்கள், நான் உங்களைப் பிழைக்கச் செய்வேன். என் வாலைப்பற்றி, விடாது தொடர்ந்து வாருங்கள்' என்று, வழியைக் கையால் தடவிக் கண்டுகொண்டும், காலால் நடந்துகொண்டும், கடந்து சென்றான்.]

அங்கே அவர்கள் ஒரு நகரத்தைக் காணல்

[அவர்கள் இவ்வாறு நெடுந்தூரம் சென்றபோது, படிப்படி யாக இருள் நீங்க, முடிவில், சூரியமண்டலம் பூமிக்குள்ளே ஒரு மறைவிடம் தேடி உறைவதுபோன்ற தேசோமயமான நகர மொன்று காணப்பட்டது. அது, சோலைகளும் தடாகங்களும் மலியப்பெற்றுப், பொன்னாலும் மணியாலும் புனைந்தியற்றப்பட்ட மாடவரிசைகளை யுடையதாய்ச், சூரியப் பிரகாசம் வேண்டாது சுயம்பிரகாச முள்ளதாய், இந்திர நகரும் இணையிலாததாய்ச், குலோத்துங்க (?*) சோழனைப் பாடிப் பரிசுபெற்ற புலவர் மனை கள்போல, எங்கும் பொற்குவியல்களும், விலைமிக்க ஆடையாபர ணங்களும், அமிழ்தமனைய அன்னம் முதலிய அறுசுவையுண்டி களும், இனிய கனிவகைகளும், கலவைச் சந்தனமும், பூமாலை களும் நிறையப்பெற்றதா யிருந்தது.]

* ஸ்ரீ வை. மு. கோபாலகிருஷ்ணமாசாரியார் உரையைப் பார்க்க.

அந்நகருள் அவர்கள் மனித ரில்லாமை கண்டு மயங்கல்

[அவர்கள் அந் நகரத்துள்ளே புகுந்து, 'இந்நகர் இராவணனது இலங்கையா யிருக்கு' மென்றெண்ணிச் சீதையைக் காணலாமென்று மகிழ்ந்து தேடினார்கள். அங்கே, எங்கேயும் சித்திரங்களிலும் சிலைகளிலுமுள்ள செயற்கை மனுடரன்றி இயற்கை மனுடரெவரையுங் கண்டிலர். மனிதர் நுகர்பொருள் யாவும் மலிந்திருந்தும் மனிதரில்லாத மாயம் என்னோவென்று திகைத்து, 'இந்நகர் பாதாளத்திருத்தல்பற்றி நரகமென்ன லாகாது; விண்ணில் இராததாயினும் முழுதும் பொன்மயமாய்ச் சகல போக்கியப் பொருள்களும் நிறைந்திருத்தலால் சுவர்க்க மென்னலாம்; என்றால், இறந்தவரன்றோ சுவர்க்கமடைவர்? இதனை அடைந்திருக்கின்ற யாம் இறக்கவில்லையே! அன்றியும், சுவர்க்கவாசிகள் இமையாதவர்கள், நாமோ இமைக்கின்றோம்: ஆகவே, இந்நகர், நரகமாயிராதது போலச் சுவர்க்கமாயு மில்லை; இதன் உண்மைத் தன்மை இன்னதென்று தெரியவில்லை' என்று தம்முள்ளே கூறித் திகைத்துக்கொண்டிருந்தார்கள்.

அப்போது, சாம்பவான், 'இது வேறொன்றுமில்லை; சீதையைக் கவர்ந்தொளித்த கள்வன், அவளைத் தேடும் நாம் உள்ளே புகுந்து வெளியே வரவொட்டாதபடி, வஞ்சகமாகச் செய்துவைத்த மாயப் பொறியே. யாம் இதனுள் அகப்பட்டுக்கொண்டோம். இனி யிங்கே இறந்தொழிவதே நமது தலைவிதி' என்றான். அனுமான், அவனைத் தேற்றுவானாய், 'இந்தப் பிலம் வெளியேறக் கூடாததா யிருந்தால், நாம் முன்னாளில் சமுத்திரத்தைத் தோண்டிய சகரரினும் அதிகமாக ஊக்கங்கொண்டு இப்பிலத்தைச் சூழ்ந்திருக்கும் பூமியைத் தோண்டிக்கொண்டு வெளியேறுவோம். இராக்கதர் எதிர்ந்தாரேல், அவர்களை அழித்துவிடுவோம்!' என்றான். அது கேட்டு, எல்லாரும் சஞ்சலந் தவிர்ந்து தைரியமடைந்தார்கள்.]

அவர்கள் சுயம்பிரபையைக் காணல்

[பின்பு, அவர்கள் அந்நகரத்தில் சீதையைத் தேடித் திரியும்போது, அதன் நடுவிலே, மாதவமே வடிவுகொண்டாற்போன்று பேரழகு படைத்த பெண்ணொருத்தி, தலைமயிர் சடைமுடியாகித்

தரைமீது தாழ்ந்து படிந்துகிடக்கக், கண்கள் பாதி மூடி அரைக் கண் பார்வையாக மூக்கு முனையை நோக்கியவண்ணமாக விருக்கச், சரீரம் சாயாது சலியாது தம்பம்போல நேராக நிமிர்ந்து நிற்கப், புறங்கைகள் தொடைகளில் பொருந்தியுற, அகங்கைகள் அலர்ந்த தாமரைபோல் மேல்நோக்கி விளங்கத், தவநிட்டையி லிருந்தவளைக் கண்டு தண்டம்பண்ணினார்கள்.]

சுயம்பிரபை வரலாறு

[அனுமானை மற்றவர்கள், 'இவள் சீதையோ? அல்லளோ? தெரிந்து சொல்லு' என வினவ, அவன், 'இவள் சீதையல்லள்: சங்குமணிவடத்துக்கும் முத்துமாலைக்கும் உள்ள வித்தியாசம் இவளுக்கும் அவளுக்கும் உண்டு' என்றான். அப்போது, அந்தத் தவமாது நிட்டை கலைந்து, அவர்களைக் கண்டு, தன் தவத்துக்குத் தடையாக அவர்கள் வந்தது தகாத செயலென்று கோபங்கொண்டு, 'இங்கே ஏன் வந்தீர்கள்?' என்றாள். அவர்கள், 'இராமபிரான் மனைவி சீதையை இராவணன் கவர்ந்து ஒளித்துவைத்திருக்கிறான். நாங்கள் அவளைத் தேடித் திரியும் இராம தூதர்கள்' என்றார்கள். எனவே, அவள், அடங்கா மகிழ்ச்சிகொண்டு, ஆனந்தக் கண்ணீர் சொரிந்து, எழுந்து, இன்பக்கூத்தாடி, 'என் தவப்பேறானவர்களே! உங்கள் வரவு நல்வரவாகுக!' என்று கூறி, 'எம்பெருமான் எங்கெழுந்தருளியிருக்கின்றான்?' என, அனுமான் இராமன் வரலாறு முழுவதையும் கூற, அவள், 'என் தவம் இன்று பலித்தது. யான் சாப விடுதலை பெற்றேன்!' என்று மகிழ்ந்து கூறி, அவர்களை நீராடச்செய்து, அமுதுசெய்வித்து, சந்தனம் பூமாலை தரிப்பித்து, இன்சொற் கூறி உபசரித்தாள். அப்போது, அனுமான், 'இந் நகர்க்கு இறைவன் யாவன்? உன் பேர் யாது?' என்று வினவ, அவள், 'இந்நகர் அசுரத் தச்சனான மயனுக்குப் பிரமனால் அளிக்கப் பட்டது. என் பெயர் சுயம்பிரபை. மயன், தேவமாதருள் ஏமை யென்பவளைக் காதலித்தான். அவள் என் உயிர்த்தோழி. அவளும் அவனைக் காதலித்ததனால், அவன் வேண்டுகோளின்படி, இங்கே, அவன் பின்னே அவளைக் கூட்டிக்கொண்டுவந்து சேர்த்தேன். அவர்கள் அன்றிற்பறவைகள் போல இணைபிரியாது இன்புற்று வாழ்ந்தார்கள். என் தோழிமீதுள்ள அன்புமிகுதியால் அவளைப் பிரியமாட்டாமல் யானும் இங்கே வாழ்ந்திருந்தேன்.

'சிலகாலஞ் சென்றபின், ஏமையைத் தேடி யிங்கே வந்த இந்திரன், மயனைக் கோபித்து, "உன்னைக் கொல்லாது விடுகிறேன். உயிர்பிழைத்துப்போ!" என்று போகவிட்டு, ஏமையையுஞ் சினந்து, "நீ செய்தது தவறு. நடந்தது முழுவதையும் ஒளியாமற்சொல்!" என, அவள் சொல்ல, என்னை நோக்கி, "என் நகரினின்று இவளைக் கடத்திய நீ, இந்நகரைக் காவல்செய்திருக்கக் கடவை" எனக் கோபமாகச் சாபமிட்டான். நான் வணங்கிச், "சாபவிமோசனம் செய்தருள்க" என்று இரந்தபோது, "இராம தூதர் இங்கே வந்த போது உன் சாபம் நிவிர்த்தியாம்" என்று சொல்லிவிட்டு, ஏமையுடன் தேவலோகம் சென்றான். இங்கே உண்ணவும் உடுக்கவும், பூணவும் பூசவும் உரிய பொருள்கள் நிறையவிருந்தும் யான் எதனையும் தீண்டலுஞ் செய்யேனாய், உங்களைக் காணவேண்டி நெடுங்காலம் தவங்கிடந்தேன்; உங்களைக் காணப் பெற்றதனால், என் சாபம் தீரப்பெற்றேன். இனி, இப்பிலத்தினின்று வெளியேறும் விதமறியேன்' என்று கூறினாள். அனுமான் அவளை வணங்கி, 'அன்னையே! உன்னைப் பொன்னுலகிற் சேர்ப்பேன்' என்றான்.]

பேருருவங்கொண்டு அனுமான் பிலத்தைப் பிளத்தல்

[அப்போது, மற்றைய வானர வீரர், 'எங்களை இந்தப் பிலத்தில் இறந்தொழியாமற் காத்த பெரியோனே! இதனினின்று வெளியேறவேண்டியதைப் புரிவாயாக' என, அவன் 'நடுங்காதீர்கள்!' என்று சொல்லிக்கொண்டு, கண்டோர் நடுங்கும் பேருருவங் கொண்டு, தலை பிலத்தின் உச்சிப் பாகத்தையும், கைகள் மற்றைப் பாகங்களையும் பிளந்து திறக்கச் செய்வனவாக, வானம் வரையும் வளர்ந்து நின்றான். திருமால் திரிவிக்கிரமாவதார மெடுத்தபோது அவன் திருவடிக்குள் அடங்கிய பூமியும் வானமும் அனுமானது வடிவத்துக்குள்ளும் அடங்கியதனால், இதன் முன் திருமாலின் (அவதாரமான இராமனது) திருவடித்தானமானதனால் திருவடியெனப் பேர்பெற்ற அவன், இப்போது திரிவிக்கிரமனை திருமாலின் திருவடிக்கு உவமையானதனால் திருவடி யென்னும் பெயரைத் திரும்பவும் பெறுதற் குரியவனானான்.]

சுயம்பிரபை சுவர்க்கம் செல்ல, வானர வீரர் வழிச்செல்லல்

[பின்பு, அனுமான் அங்ககாத்தை வேரோடு பிடுங்கி மேற்றிசைக் கடலில் எறிந்துவிட்டுச் சுயம்பிரபையுடனும் அங்கதனாதியோருடனும் வெளியேறினான். சுயம்பிரபை சுவர்க்கம் நோக்கிச் சென்றாள். வானர வீரர் எஞ்சியிருந்த பகற்பொழுது முழுதும் வழிநடந்து ஒரு பொய்கைக் கரையை அடைய, ஆதித்தன் அத்தமனமானான்.]

15. ஆறுசெல் படலம்

[வானரத் தலைவர்கள் சுக்கிரீவன் சொல்லிய வழியே சீதையைத் தேடிச்சென்றதைக் கூறுவது]

பொய்கைக் கரையில் அங்கதன் அசுரனைக் கொல்லுதல்

[பொய்கைக் கரையை அடைந்த அனுமானாதியோர், பொய்கையின் குளிர்ந்த நீரைக் குடித்துத் தாகம் தணிந்தபின், கரையிலும் அருகிலும் வளர்ந்த மரஞ் செடி கொடிகளின் காய் கனிகளைத் தின்று, அங்கே தொங்கிய தேன் கூடுகளின் தேனைப் பருகிப் பசி ஆறியபின், வழி நடந்த வருத்தத்தால் அயர்ந்து தூங்கலானார்கள். அப்போது, கடலோ, மலையோ என்னும்படி கறுத்துப் பருத்த காத்திரமும், செம்பட்ட மயிரும், தீப்போலச் சிவந்த கண்ணும், குறைமதி போன்ற கோரப் பல்லும், கூற்றுவன் போலும் கொலைத் தொழிலும் உடையவனும், எல்லாக் கொடுமைகளுக்கும் இருப்பிடமானவனும், அந்தப் பொய்கைக் கரையை ஆள்பவனுமான அசுரன் அங்கே வந்தான். அவன், உறங்குபவர்களைக் கண்டு, 'இவர்கள் என்னிடத்துக்கு எப்படி வரலாம்?' என்று கோபங்கொண்டு, பக்கத்தில் படுத்துக் கிடந்த அங்கதன் மார்பிலே அறைந்தான். அவன் எழுந்து எதிர் அறை அறைய, அசுரன் அலறிவிழுந்து மரணமடைந்தான். இறந்தவன் அலறிய ஓசையாலும் விழுந்த அதிர்ச்சியாலும் ஏனைய வானரரெல்லாரும் விழித்தெழுந்தார்கள். அனுமான் 'இவன் ஆர்?' என அங்கதனை வினவ, அவன் 'அறியேன்' எனலும், (திரிவிக்கிரமனான திருமாலின் பாதம் பரவிய பார் முழுதும் வலம் வந்த காலத்தில் பல

இடங்களிலுமுள்ள பல விஷயங்களையும் தெரிந்தவனுன) சாம்பவான், 'இவன் இப் பொய்கைக் கரையை அரசாண்ட துமிரன் என்னும் அசுரன்' என்றுன்.]

வானர வீரர்கள் கோதாவிரியை அடைதல்

[அப்போது சூரியன் உதயமாக, அவர்கள், சீதையைத் தேடிக்கொண்டு வழி நடந்து, பெண்ணை நதியைக் கடந்து, தண்டகவனம், முண்டகத்துறை, பாண்டுமலை ஆகியவைகளைத் தாண்டிக், கோதாவிரியை அடைந்தார்கள்.]

கோதாவிரி வருணனை

[அந்த ஆறு, இராவணனுல் கவரப்பட்டு ஆகாய வழியே கொண்டுபோகப்பட்ட சீதையின் கூந்தலினின்று நழுவி விழுந்து மண்மேற் கிடந்த மலர்மாலை போல விளங்கியது. அன்றியும், அது, நில அளவையாளர் பூமி மீது போட்டு அளக்கும் அளவு நூல் போலவும் தோன்றியது. பின்னும், அது, பொன்னையும் மணியையும் இருகரைகளிலும் வீசியெறிந்துகொண்டு செல்லுதலால், இராவணன் மார்பிலிருந்து சடாயு பறித்தெறிந்த இரத்தினமாலையையும் போன்று ஒளிர்ந்தது.]

77. எழுகின்ற திரையிற் ருகி யிழிகின்ற மணிநீர் யாறு
தொழுகின்ற சனகன் வேள்வி தொடங்கிய சுருதி சொல்லா
உழுகின்ற பொழுதி னீன்ற வொருமகட் கிரங்கி ஞாலம்
அழுகின்ற கலுழி வாரி யாமெனப் பொலிந்த தன்றே

கொண்டுகூட்டு: (யாரும்) தொழுகின்ற சனகன் வேள்வி தொடங்கிய சுருதி சொல்லா உழுகின்ற பொழுது ஈன்ற ஒரு மகட்கு இரங்கி, ஞாலம் அழுகின்ற கலுழி வாரி ஆம் என, எழுகின்ற திரையிற்று ஆகி இழிகின்ற மணிநீர் யாறு பொலிந்தது.

பொருள்: சனகன் வேள்வி தொடங்குதற்கு (வேள்விச் சாலை அமைக்கும் இடத்தைத் தூய்மை செய்யும் பொருட்டு) வேத மந்திரத்தைச் சொல்லி உழுதபொழுது (பூமிதேவி, தான்) பெற்ற (பிள்ளையாக உழுபடைச்சாலில் தோன்றும்படி வெளிப்படுத்திய தன் ஒரே மகளான சீதை (இலங்கையிற் சிறைப்பட்டிருத்தலு)க்காக வருந்தி, அந்தப் பூமிதேவி அழுத கண்ணீர்

வெள்ளம் போலுமென்று சொல்லுமாறு அந்தக் கோதாவிரி யாறு விளங்கியது.

திரையிற்று - அலைகளையுடையது. இழிகின்ற - இறங்குகின்ற - பள்ளம் நோக்கிச் செல்கின்ற. மணி - அழகு; முத்து; இரத்தினம். மணி நீர் - அழகிய நீர்; (உருகிய) முத்துப்போன்ற (தெளிவான) நீர்; (அலைகளால் வீசப்படுகின்ற) இரத்தினங்களையுடைய நீர். தொழுகின்ற - (அரசனும் தத்துவ ஞானியுமாதலால் எல்லாராலும்) தொழப்படுகின்ற: செயப்பாட்டுப் பொருளில் வந்த செய்வினை: எழுதுகின்ற ஓலை என்பது போல் வது. தொடங்கிய - தொடங்கும்படி: 'செய்யிய' என்னும் வாய்பாட்டு எதிர்கால வினையெச்சம். சுருதி - வேதம்: வேத மந்திரத்தைக் குறித்தது. சொல்லா - சொல்லி: 'செய்யா' என்னும் வாய்பாட்டு இறந்தகால வினையெச்சம். ஞாலம் - பூமி: பூமிதேவியை யுணர்த்தியது. கலுழி - கண்ணீர். வாரி - வெள்ளம். ஆம் - போலும். பொலிதல் - விளங்குதல். அன்று, ஏ, ஈற்றசைகள்.

பாட பேதம்: சுருதிச் சொல்லால்: உருகி ஞாலம்: கலுழி மாரி. (எஎ)

திருவேங்கட மலை வருணனை

[அவர்கள் அந்தக் கோதாவிரி யாற்றைத் தாண்டிச்சென்று சுவண நதியையும் குலிந்த தேசத்தையும் அருந்ததி மலை மரகத மலைகளையும் கடந்து, திருவேங்கட மலையைச் சேர்ந்து, அங்கே யுள்ள புண்ணிய தீர்த்தங்களில் மண்ணவர்களை யன்றி விண்ணவர்களும் வந்து நீராடலையும் தவஞ்செய்தலையும் கண்டு அங்குள்ள பெரியோரை வணங்கினார்கள். ('வேங்கட வெற்பை மேவுவீரேல், வீடுபெற்றுவிடுவீர்கள். அதனால் சீதையைத் தேடுதல் தடைப் பட்டுவிடும். ஆதலால், அம் மலையைவிட்டு விலகிச் செல்லுங்கள்' என்று சுக்கிரீவன் சொல்லியிருக்கவும், அவன் ஆக்கினையை அவர் கள் மீறிய காரணம், அவர்கள் அம் மலையின் மகத்துவத்தை அவன் மிகைப்படுத்தி அதிசயோக்தியாகக் கூறினானென்றறிந் தமையோ, அம் மலையில் வாழும் மகான்களை வணங்குதல் சீதை யைக் காணும் நற்பயனை நல்குமென்று நம்பினமையோ, அவள் ஒருகால் அங்கிருந்தால் அங்கே அவளைத் தேடாது செல்லுதல் காரியக்கேடாமென்று கருதினமையோ, அங்குள்ள பெரியோர் போலத் தாம் சீவன்முக்தராக இருந்துகொண்டு, 'சீதையைத்

தேடிக் கண்டு சிராமனுக்குத் தெரிவித்த பின்பு விதேகமுத்த ராய் * விடுவோ' மென்று ஆலோசித்து அறுதி செய்து கொண்டமையோ, வேறு யாதோ அறியேம்.)]

தொண்டைநாட்டு வருணனை

[திருவேங்கட மலையினும் சீதை யில்லாமையால், அவர்கள், அதனை அகன்றுசென்று தொண்டை நாட்டை அடைந்தார்கள். அந்த நாடு, குறிஞ்சி முல்லை மருதம் நெய்தலென்னும் நால்வகை நிலங்களும் நன்கமையப் பெற்றதாய், எல்லா வளங்களும் இனிது நிரம்பியதா யிருந்தது. அங்கே, மரக்கொம்புகளிலுள்ள மலர்களில் வண்டுகள் மொய்த்தல்போல, இளங் குரங்குகளின் கைகளிலுள்ள பலாச்சுளைகளில் ஈக்கள் மொய்த்துக் கொண்டிருந்தன.]

78. தேரை வான்றலைத் தெங்கிளம் பாளையை
நாரை யென்று நடுங்குவ கெண்டைமீன்
தாரை வன்றலைத் தண்ணிள வாம்பலைச்
சேரை யென்று புலம்புவ தேரையே

கொண்டுகூட்டு: தேர் ஐ வான் தலைத் தெங்கு இளம் பாளையைக் கெண்டைமீன், நாரை என்று நடுங்குவ. தாரை வன்தலைத் தண் இள ஆம்பலைத் தேரை, சேரை என்று புலம்புவ.

பொருள்: தென்னை மரத்தின் இளம் பாளையை நாரை யென்று கெண்டை மீன்கள் நடுங்குவனவாம். கூர்மையும் வன்மையுமுடைய தலையாகிய அரும்பினையுடைய அல்லியின் தண்டினைச் சாரைப்பாம்பென்று பயந்து தவளைகள் கத்துவனவாம்.

தேர் ஐ வான் தலை தெங்கு - தேரினது அழகிய உயர்ந்த தலை (அலங்காரத்தை) யுடைய தென்னை மரம். தாரை - கூர்மை. தண் - குளிர்ச்சி. ஆம்பல் – அல்லி. சேரை - சாரைப் பாம்பு. தேரை - தவளை.

தென்னம் பாளை - தென்னம் பூக்களைப் பொதிந்து மூடிய உறை. அது முதிர்ந்தால் பூக்கள் வெளியாகத் தெரியும்படி விரிந்த பாளையாய் நாரையை ஒவ்வாதாதலால் 'தெங்கம்பாளை' யென்னாது 'தெங்கிளம் பாளை' என்றார். பூவை நோக்க, அரும்பு கூர்மையும் வன்மையுமுடையதாதலால், அதனைத் 'தாரைவன்தலை' என்றார்.

---

* முத்தியடைந்தோருள்ளே தேகம் நீங்காதவர் 'சீவன்முத்தர்' எனவும் நீங்கினவர் 'விதேகமுத்தர்' எனவும் பெறுவர்.

சற்றுத் தூரத்தே நின்றேனும் சந்தியாகாலத்தேனும் நோக்குவோர்க்கு அரும்போடுகூடிய அல்லித்தண்டு கிடப்பது பாம்புபோலத் தோன்றுவது இங்கே கருதத்தக்கது.

பாட பேதம்: *தேரை வென்றயர்: இளங் கெண்டை நடுங்குவ: ஆரை வன்றலை யாம்ப லரும்பினே.* (எஅ)

சோழநாட்டு வருணனை

[*அவர்கள் அப்படிப்பட்ட தொண்டைநாட்டை நீங்கிச் சோழ நாட்டை அடைந்தார்கள். அங்கே, எங்கும் நெல்லும் கரும்பும், கமுகுந் தென்னையும், மாவும் பலாவும் வளம்பட வளர்ந்திருத்தலைக் கண்டு மகிழ்ந்துகொண்டு, செல்லும் வழியெல்லாம் தெங்கம்பழங் களில் இடறியும் தேனில் இழுக்கியும் சென்றார்கள்.*]

79. குழுவு மீன்வளர் குட்ட மெனக்கோளா
எழுவு பாட லிமிழ்கருப் பேந்திரத்
தொழுகு சாற்றகன் கூனெயி னூழ்முறை
முழுகி நீர்க்கருங் காக்கை முளைக்குமே

கொண்டுகூட்டு: *கரு நீர்க்காக்கை, குழுவும் மீன்வளர் குட்டம் எனக் கொளா, எழுவு பாடல் இமிழ் கரும்பு எந்திரத்து ஒழுகு சாறு அகன் கூனையின் ஊழ் முறை முழுகி முளைக்கும்.*

பொருள்: *நீர்க்காக்கைகள், மீன்கள் வளர்கின்ற குட்ட மென்று கருப்பஞ்சாறு நிறைந்த கூனையுள் முழுகி வெளிக்கிளம்பும்.*

குழுவுதல் - கூட்டமாகக் கூடுதல். கொளா - கொண்டு. 'செய்யா' என்னும் வாய்பாட்டு இறந்தகால வினையெச்சம். எழுவுதல் - எழுப்புதல்: பிறவினை. இமிழ்த்தல் - ஒலித்தல். கருப்பேந்திரம் - கரும்பு எந்திரம் - கரும்பாலை. எழுவுபாடல் இமிழ்கரும்பு எந்திரம் - (கருதி கூட்டுதற்கு) எழுப்புகின்ற பாட்டிசை (போல ஆடும்போது) ஒலிக்கின்ற கரும்பாலை. சாறு அகன் கூனை - சாற்றையுடைய (வாய்) அகன்ற மிடா. ஊழ், முறை, கிரமம், வரிசை யென்பவை ஒருபொருட் பன்மொழிகள்.

நீர்க்குள் முழுகி வெளிக்கிளம்புதலை 'முளைத்தல்' என வழங்குதல் இல்லை. அவ்வாறாகவும், 'வெளிக்கிளம்பும்' என்று பொருள்பட 'முளைக் கும்' என்பதைப் புதுமையும் விநோதமும் ஒருங்கு பொருந்தப் பிரயோகித்து

மோனை யமைத்துக்கொண்ட கவித்திறம் கவனித்து நோக்கிப் பாராட்டத் தக்கது.

பாட பேதம் : *சாறகன்கூனை: முளைக்குமால்.* (எக)

அனுமானுதியோர் மகேந்திர மலையை அடைதல்

[*அவர்கள், சோழநாட்டை நீங்கி, மலைப்பிரதேசமான சேர நாட்டையும், முத்துக்கும் முத்தமிழுக்கும் உற்பத்திஸ்தானமான பாண்டிநாட்டையும் தாண்டி, மகேந்திர மலையை அடைந்தார்கள்.*]

16. சம்பாதிப் படலம்

[சடாயுவின் தமையனுன சம்பாதியின் சரித்திரத்தைக் கூறுவது]

வானர வீரர்கள் தென்கடலைக் காணுதல்

80. மழைத்தவிண் ணகமென முழங்கி வானுரை
இழைத்தவெண் டிரைக்கர மெடுத்தி லங்கையாள்
உழைத்தடங் கண்ணியென் றுரைத்திட் டூழின்வந்
தழைப்பதே கடுக்குமவ் வாழி நோக்கினுர்

கொண்டுகூட்டு : *மழைத்த விண் அகம் என முழங்கி, 'உழைத் தடங் கண்ணி (ஆன சீதை) இலங்கையாள்' என்று உரைத்திட்டு, வால்நுரை இழைத்த வெண் திரைக்கரம் எடுத்து, ஊழின் வந்து அழைப்பது கடுக்கும் அவ் ஆழி நோக்கினுர்.*

பொருள் : (*தூரத்தில் உள்ள வானர வீரர் கேட்கும்படி) ஆரவாரித்துச், 'சீதை இலங்கையிலிருக்கின்றுள்' ளென்று சொல்லி, (அவர்கள் காணும்படி) அலைகளாகிய கைகளை உயர எடுத்து(க் காட்டி வரும்படி சைக்கினைசெய்து, விருந்தினரை எதிர்கொண்டு சென்று வரவேற்கும்) முறைப்படி (அவர்கள் இருக்கும் கரை நோக்கி) வந்து அழைப்பதுபோன்ற அந்தக் கடலை அவர்கள் கண்டார்கள்.*

முழங்குதலால் சீதை இலங்கையில் இருக்கின்றாளென்று செப்புதலும், அலைக் கை எடுத்தலால் வரும்படி கைக்கினையும், (கரை நோக்கி) வருதலால் எதிர்கொண்டு செல்லுதலும் செய்து, (தங்களை) அழைப்பதுபோலும் கடலை (வானரவீரர்கள்) நோக்கினார்களென இயைத்துப் பொருள்கொள்ளப் பட்டது.

மழைத்த - மழையையுடைய. விண்ணகம் - விண் - மேகம்: நெஞ்சு, நெஞ்சம், நெஞ்சகமெனவும், கான், கானம், கானகமெனவும், வான், வானம், வானகமெனவும் வருதல்போல, விண், விண்ணம், விண்ணகமென வரும். 'மழைத்த விண்ணகமென முழங்கி - நீண்ட மேகத்தையுடைய ஆகாயத்தினிடம் போலச் சத்தித்து. இடத்து நிகழ் பொருளின் தொழிலை இடத்தின்மேலேற்றிக் கூறிய உபசார வழக்கு' என்பது முந்திய உரை. வால் - வெண்மை. இழைத்தல் - செய்தல், உண்டாக்குதல். அலையைக் கடலின் கையெனல் கவிமரபு. புதிதாக வந்தவரை வரவேற்கும் அடையாளமாகக் கும்பிடும் வழக்கம் உண்மைபற்றிக் 'கரம் (- கை) எடுத்து' என்பதற்குக் 'கும்பிட்டு' என்றும் பொருள் கூறலாம். கையெடுத்தல், கும்பிடல் என்ற பொருளில் 'ஆரார் தலைவணங்கார், ஆரார் தாம் கையெடார்' என்ற கம்பர் தனிப்பாடலில் வருதல் காண்க. உழை - மான். தடம் - விசாலம். உழைத் தடம் கண்ணி - (மருண்டு நோக்கும்) மான் (கண்) போன்ற விசாலமான கண்களையுடைய சீதை. ஊழ் - முறை. ஏ, அசை. கடுத்தல் - போலுதல்.

இந்தக் கவி அடியில்வரும் மிதிலைக் காட்சிப் படலத்து முதற்பாட்டை நினைப்பூட்டுகின்றது:

'மையறு மலரின் நீங்கி யான்செய்மா தவத்தின் வந்து
செய்யவள் இருந்தா' ளென்று செழுமணிக் கொடிகளென்னும்
கைகளை நீட்டி அந்தக் கடிநகர் கமலச் செங்கண்
ஐயனை, 'ஒல்லை வா' என் றழைப்பது போன்ற தம்மா! *

பாட பேதம்: வானுற: உரைத்திட் டோடிவந்து: கண்ணியென்னுழைய ளென்று வந்து. (௨௦)

பிரிந்த சேனைகள் வந்துசேர, தலைவர்கள் ஆலோசித்தல்

[ஏமகூட மலையில் தலைவர்களைப் பிரிந்து பல இடங்களிலும் சீதையைத் தேடச் சென்ற வானர சேனைகள் மகேந்திர மலைக்கு வந்து அவர்களிடம் சேர்ந்தன. எல்லாரும் சீதையைக் காணாமையால் வருந்திச், 'சுக்கிரீவ மகாராசன் நியமித்த ஒரு மாதத் தவணை கழிந்துவிட்டது. இராமபிரான் இறந்துவிடுவான்! என்செய்வோம்?

* க. ரா. கா. பாலகாண்டம் 78-ம் பாட்டு.

கிட்கிந்தைக்குத் திரும்பாமல் இங்கே யிருந்து தவஞ் செய்வோமா? சாவோமா? தவத்தினும் சாதலே நமது நிலைக்குத் தக்கது' என்று தமக்குள்ளே பேசிக்கொண்டார்கள். அப்போது அங்கதன், 'சீதையைக் காணமாட்டாமையால் நான் செத்த செய்தியை என் தந்தைக்கு* யாரேனும் தெரிவித்தல்கூடும். தெரிந்தவுடனே அவனோடு என் அன்னையரும்† சாவார்கள். இராமலக்குமணரும் இறந்துவிடுவார்கள். இவர்கள் இறந்தது தெரிந்தால், பரத சத்துருக்கரும் தாய்மாரும் மாளாது வாழ்வாரோ?' என்றான். சாம்பவான், 'நீ இறந்தால், உன் தந்தை சாவான். வானர ராச வமிசத்தில் உன்னையன்றிச் சந்ததியில்லை. ஆதலால் வானர ராச்சியம் ஆள்வாரில்லாது பாழாய்விடும். நீ இறத்தல் கூடாது. நாங்களெல்லோரும் இறந்துவிடுவோம். அந்தச் செய்தியை நீ போய் உன் தந்தைக்குச் சொல்லக்கடவை' என்றான். அப்போது, அனுமான், 'நாம் திரிலோகத்திலே ஒரு பாகத்தையே தேடினோம். அவ்வளவிலே அலுத்துச் சலித்துவிடலாமோ! தவணை கழிந்தாலென்னே! சானகியைக் கண்டோமானால், சுக்கிரீவ மகாராசன் மகிழாது வெகுள்வானோ? இப்போது இறத்தல் ஏற்ற செயலன்று. இன்னமும் சீதையைத் தேடுதலே சிறந்த செயல். தேடிக் காணவிட்டாலும் தற்கொலைபுரிதல் தகாத செயலே. அவள் பொருட்டுப் போர்புரிந்து இறந்த சடாயுவைப் போல நாமும் சமர்செய்து சாதலே தக்க செயலாம்' என்றான்.]

சம்பாதி வானரரிடம் வருதல்

[அந்த மலையில் வசித்துக்கொண்டிருந்த சடாயுவின் தமையன் சம்பாதி, 'சடாயு இறந்தான்' என்றது செவிப்பட்டவுடனே திடுக்கிட்டு, 'என் தம்பி யிறந்தவாறு என்னே?' என்று, இரங்கித் துடிக்கும் நெஞ்சினனாய்க், கண்ணீர் வடிக்கும் கண்ணினனாய், இறகிழந் திருந்தமையால், இந்திரனது வச்சிராயுதத்தாற் சிறகிழந்த மலைபோலத் தவழ்ந்துவந்து வானரரிருந்த இடத்தை அணுக, அவர்கள் அஞ்சி யோடினார்கள். அனுமான் கோபங் கொண்டு, 'வஞ்சக வேடம் பூண்ட அரக்கனே! என்முன் வந்த நீ எப்படித் தப்பிப் பிழைப்பாய்?' என்று சொல்லிக்கொண்டு எதிர்ந்தான். எதிர்ந்தவன், அவன் கண்ணீர் வடிப்பதைக் கண்டவுடனே

* சுக்கிரீவனுக்கு. † வாலி சுக்கிரீவரது மனைவிமார்.

கோபம் மாறி இரக்கங் கொண்டான். சம்பாதி, 'ஒருவராலும் எதிர்க்க முடியாத சடாயுவைக் கொன்றது யார்?' என, அனுமான், 'உன் வரலாற்றை உள்ளபடி உரைத்தால், உன் கேள்விக்கு உத்தரம் அளிப்பேன்' என, 'யான் சடாயுவின் தமையன்' என, 'உன் தம்பி இராவணனால் இறந்தான்' என்றான்.]

சடாயு இறந்ததற்காகச் சம்பாதி வருந்தல்

[சம்பாதி, 'இறகிழந்த யான் இறந்திடுதல் இயைந்தது. யான் இருக்க, நீ இறந்தது, இயற்கையன்றே! இஃது என்ன மாயம்! மண்ணுலகம் இருக்கின்றது! விண்ணுலகம் இருக்கின்றது! தருமமும் இருக்கின்றது! நீ இல்லையானாய்! இராவணன் திரிலோகங்களையும் செயித்தவனானாலும் உன்னை எதிர்க்கும் ஆற்றல் உடையவனோ! உன்னை எவ்வாறு துணிந்தெதிர்த்தான்! எங்ஙனம் கொல்லவும் வல்லனானான்!' என்று இரங்கி வருந்தினான். அனுமான், ஏற்ற தேறுதல் மொழிகள் கூறித் தேற்றத் தெறிய பின், அவன், 'என் தம்பி, இராவணனோடு போர்செய்த காரணம் யாது?' என, 'இராவணன், இராமபிரான் தேவி சீதாபிராட்டியைத் திருடிக்கொண்டு தேர்மீது செல்லும்போது உன் தம்பி கண்டு, "அடா, அவளை இங்கே வைத்துவிட்டு அப்பாற் செல்" என்று அதட்டிக் கூறி, அவனை எதிர்த்து மறித்து, அவன் தேரைச் சிதைத்து அவனையும் காயப்படுத்தியபோது, அவன் தேவதேவனிடம் பெற்ற தெய்வ வாளால் வெட்ட, உன் தம்பி உயிர் துறந்தான்' என்றான்.]

சம்பாதி இழந்த சிறகுகளைத் திரும்பப் பெறுதல்

[அதுகேட்ட சம்பாதி, துன்பக் கண்ணீர் சொரிவது மாறி, இன்பக் கண்ணீர் பொழிபவனாகி 'ஆ! இராமகாரியமாகவா என் தம்பி யிறந்தான்! அது நன்று! மிகவும் நன்று! அவன் இறந்தானென்பது பொய், இறவாத புகழ்படைத்து என்றும் இருக்கின்றானென்பது மெய்; தருமமூர்த்தியான தசரதராமன் பொருட்டு உயிரிழத்தல் இழவன்று, பெறுதற்கரிய பெரும் பேறே!' என்று மகிழ்ந்து கூறி, இறந்த தம்பிக்கு நீர்க்கடன் ஆற்றியபின், 'வானர வீரர்களே! நீங்கள் இங்கு வந்து என்னை வாழ்வித்தீர்கள். என்

துன்பத்தை மாள்வித்தீர்கள். இராம நாமத்தை எல்லீரும் சொல்லீரேல், யான் இழந்த இறகு திரும்ப வளரும்' என்றான். அவர்கள் 'இதனைத் தெரிவோம்' என்று ஒருமித்து 'ராம ராம!' என்று எல்லாரும் சொல்லாநிற்க, உறையற்றிருந்த வாள் உறைபெற்றொளிர்ந்தாற்போலச் சிறகற்றிருந்த அவன் சிறகுற்று விளங்கினான். அவர்கள், தாங்கள் கண்ட காட்சி கனவோ என மயங்கி நனவேயெனத் தெளிந்து, வியப்புவயத்தராகி, அவனை ராமநாம மகிமையை அறிவித்த பெரியோனென்று பத்தியுடன் பணிந்து, 'உன் முந்திய வரலாறு முழுவதும் மொழிதி' என, அவன் மொழிவதானான்.]

சம்பாதி, தன் வரலாற்றையும் சீதை இலங்கையி லிருத்தலையும் தெரிவித்தல்

['சம்பாதி சடாயு என்னும் நாங்கள் கழுகரசர்; சூரிய சாரதியான அருணனுக்குக் குமாரர்; நாங்கள் தேவலோகத்தைக் காண ஆசைகொண்டு விண்ணிலே மேல்நோக்கிப் பறந்து செருக்கோடு செல்லும்போது தீயையும் தீக்கும் செங்கதிரோனுடைய தேரைக் காணலுற்றோம். அக்கணமே அத்தேவன் சினந்து காய, என் முன் சென்ற என் தம்பி வெம்மை தாங்கமாட்டாமல், "அண்ணா, காப்பாய்!" என, யான் அவனுக்கு மேற்பறந்து மறைக்க, அவன் வெப்பினின்று தப்பிப் பிழைத்தான். யான் இறகு தீந்து தரையில் வீழ்ந்தேன், இறந்தொழிந்தேனில்லை. சூரியன், என் பரிதாப நிலை கண்டு, இரக்கங்கொண்டு, "இராமன் மனைவியை இராவணன் திருடிச்செல்ல, அவளைத் தேடி வானரர் வருவார்கள். அவர்கள் இராமன் பேரைக் கூறக்கேட்டு இறகு பெற்று எழுவாய். அகங்காரமுடையார் அழிதலுறுவார். தாழ்மையுடையார் வாழ்வு பெறுவார்" என்றான். என் தம்பி, என் கட்டளை கடக்கமாட்டாமல், வேண்டா வெறுப்போடு கழுகரசனானான். எங்கள் வரலாறு ஈது. உங்கள் வரலாறு கூறுங்கள்' என, வானரர் கூறக்கேட்டு, 'வருந்தாதீர்கள். இராவணன் சீதையைக் கவர்ந்துகொண்டு இலங்கைக்குச் சென்றதைக் கண்டேன். அவள் அங்கேயிருக்கின்றாள். இலங்கை நூறுயோசனைக் கப்பாலுள்ளது. இலங்கேசன் கொடுங்கோபி; அவன் கோபம் நெருப்புக்கும் நெருப்பு. அவன் காவல்புரியும் இலங்கை மதில், காலனாலும் காலகாலனாலும் கடக்கலாகாதது.

நீங்களெல்லீரும் அங்கே செல்லுதல் இயலாததென்பது தெளிவு. உங்களுள்ளே செல்ல வல்லவருள் ஒருவர் சென்று சீதாதேவியைக் கண்டு தேற்றித் திரும்புக. செல்ல வல்லவரெவரும் இல்லையெனில், யான் சொல்லியதை நம்பி இராமபிரானுக்குத் தெரிவியுங்கள். கழுகுக்கூட்டம் முழுவதும் காப்பாரில்லாமல் கலக்கமுற்றிருக்கும். அவைகளைக் காக்கச் செல்கின்றேன். விடை தருக' என்று விண்ணிற் பறந்து சென்றான்.]

17. மகேந்திரப் படலம்

[வானர வீரர் மகேந்திர மலையிலிருந்து கடல் கடத்தலைப்பற்றிப் பேசி முடிவுசெய்ததைக் கூறுவது]

வானரத் தலைவர் தம்முள் கடல் கடக்கவல்லார் யாரென ஆராய்தல்

[சம்பாதி கூறியதைக் கேட்ட வானர வீரர்கள், 'சீதாதேவியிருக்குமிடம் தெரியாமையால் சாகவிருந்த நாம், சாவாது தப்பிப் பிழைத்தோம். அவன் சொன்னதைச் சுக்கிரீவ மகாராசனிடம் சொல்வோமானால், நமது கடமையை ஒருவாறு செய்தோமாவோம். இலங்கைக்குச் சென்று சீதாதேவியை நேராகக் காண்போமானாலோ, அது மேற்கூறியவாறு செய்தலினும் சிறந்த செயலாம். அதற்குக் கடலைக் கடக்கவேண்டுமே. நம்முள் கடல் கடக்க வல்லார் யார்?' என்று தம்முள் வினவினார்கள். நீலன் முதலியோர், 'கடல் கடத்தல் எங்களால் அடியோடு முடியாது' என்று, தெளிவாக வெளியாகச் சொன்னார்கள். அங்கதன், 'சமுத்திரம் தாண்டும் சக்தியுடையேன். மீண்டுவரும் மிடுக்கில்லேன்' என்றான். பிரமதேவன் பெற்ற சாம்பவான்,'பிரமதேவனைப் பெற்ற திருமால் திரிவிக்கிரமனாகிப் பூமி முழுதையும் ஓரடியாக அளந்து வீற்று விளங்கிய காலத்தில், அப் பெருமானது பிரதாபத்தை நான் பறையறைந்து சாற்றிப் பிரசாரஞ்செய்துகொண்டு எட்டுத் திக்கிலும் சுற்றிவருகையில், மேருமலை மோதினதனால் ஊனமுற்ற

காலின னானேன். ஆதலால், கடலைத் தாண்டி, இலங்கை மதிலைக் கடந்து, சீதாதேவியைத் தெரிசித்துச், சீராமன் வந்து சிறைமீட்பா னென்று கூறித், தீய அரக்கர் அஞ்சும் தீரச்செயல்கள் செய்து திரும்பும் திறமையில்லேன். இவ்வளவும் செய்ய வல்லவன் அனுமானே' என்று அங்கதனிடம் கூறிவிட்டு, அனுமானை நோக்கிக் கூறுகின்றான்.]

சாம்பவான்
அனுமானைப் புகழ்ந்து இலங்கைக்கு ஏகும்படி வேண்டல்

81. மேலை விரிஞ்சன் வீயினும் வீயா மிகுநாளீர்
நூலை நயந்து நுண்ணி துணர்ந்தீர் நுவறக்கீர்
காலனு மஞ்சுங் காய்சின மொய்ம்பின் கடைநின்றீர்
ஆல நுகர்ந்தா னாமென வெம்போ ரடர்கிற்பீர்

கொண்டுகூட்டு: (சாம்பவான் அனுமானை நோக்கிக் கூறுவான்:) 'மேலை விரிஞ்சன் வீயினும், வீயாத மிகு நாளீர்; நூலை நயந்து (கற்று) நுண்ணிது உணர்ந்தீர்; நுவல் தக்கீர்; காலனும் அஞ்சும் காய்சினம், மொய்ம்பு, (இவற்றின்) கடை நின்றீர்; ஆலம் நுகர்ந்தான் ஆம் என வெம் போர் அடர்கிற்பீர்;

பொருள்: பிரமதேவ குமாரனை சாம்பவான் கூறுவான்: 'மலரோன் மாள்வானாயினும் மாள்வுறாத வரம்பெற்ற வாழ்நா ளுடையீர்; நூல்களை விரும்பிக் கற்று நுண்மையாக அறிந்திருக் கின்றீர்; அவைகளை நன்கு விளங்க எடுத்துரைக்கும் தகுதியுடை யீர்; காலனும் அஞ்சும் கடுங்கோபமும் காயபலமும் மிகுதியாக உடையீர்; ஆலகால விடமுண்ட அரனே போலக் கொடும்போர் புரியவல்லீர்;

'மேலை' என்பதில் ஐ சாரியை. மேலை விரிஞ்சன் - மேலான (- மேன்மையுடைய) பிரமன். வீதல் - சாதல். நயத்தல் - விரும்புதல். நுண்ணிது - நுட்பமாக. நுவலல் - சொல்லுதல். காய்தல் - கோபித்தல். மொய்ம்பு - வலிமை. மொய்ம்பின் கடை நின்றீர் - வலிமையின் முடிவில் நின்றீர் - இதனினும் மிக்கது இல்லை யென்னும்படியான வலிமையுடையீர் - அத்தியந்த பலமுடையீர். ஆலம் நுகர்ந்தான் - விடம் உண்டவன் - சிவன்.

பாட பேதம்: மிகை நாள். (அக)

82. வெப்புறு செந்தீ நீர்வளி யாலும் விளியாதீர்
செப்புறு தெய்வப் பல்படை யாலுஞ் சிதையாதீர்
ஒப்புறி னொப்பார் நும்மல தில்லீ ரொருகாலே
குப்புறி னண்டத் தப்புற மேயுங் குதிகொள்வீர்

கொண்டுகூட்டு : *'வெப்பு உறு செந்தீ, நீர், வளியாலும் விளியாதீர் ; செப்பு உறு தெய்வப் படை பலவற்றாலும் சிதையாதீர் ; ஒப்பு உறின் நும்மை அல்லது ஒப்பார் இல்லீர் ; குப்புறின் ஒருகாலே அண்டத்து அப் புறமேயும் குதிகொள்வீர்;*

பொருள் : *' நெருப்பாலும், நீராலும், காற்றாலும், மற்றைப் பூதங்களாலும் நிலைகெடாதீர் ; தெய்வப்படைகள் பலவற்றாலும் சிதையாதீர்; உம்மை எவரும் ஒப்புறார்: எவரேனும் ஒப்புற்றால், அந்த ஒப்புற்றார் உம்மையன்றி இல்லாதீர் (தமக்குத் தாமே சமமாவீர்); தாவுவீரானால், ஒரு முறை தாவுகையிலேயே அண் டத்துக் கப்பாலேயும் தாவிவிடுவீர் ;*

வளி - காற்று. விளிதல் - சாதல். குப்புறல் - பாய்தல். (அஉ)

83. நல்லவு மொன்றே தீயவு நாடி நவைதீரச்
சொல்லவும் வல்லீர் காரிய நீரே துணிகிற்பீர்
வெல்லவும் வல்லீர் மீளவும் வல்லீர் மிடலுண்டேல்
கொல்லவும் வல்லீர் தோள்வலி யொன்றுங் குறையாதீர்

கொண்டுகூட்டு : *'(ஒரு காரியத்தின்) நல்லவும் (அன்றித்) தீயவையும் நாடி நவை தீர (முடிவு) சொல்ல வல்லீர் ; காரியம் நீரே துணிகிற்பீர் ; (அரக்கரை) வெல்லவும் வல்லீர் ; (அவர் தடையைக் கடந்து) மீளவும் வல்லீர் ; மிடல் உண்டேல் கொல்லவும் வல்லீர்; (இவற்றால்) தோள்வலி யொன்றும் குறையாதீர் ;*

பொருள் : *'(எந்தக் காரியத்தை ஆராய்வீரானாலும் அந்தக் காரியத்தின்) அநுகூலமான அமிசங்களை மட்டு மல்லாமல் பிரதி கூலமான அமிசங்களையும் சேர்த்து ஆராய்ந்து குற்றமில்லாமல் (அந்தக் காரியத்தைப்பற்றி முடிவு) சொல்லவல்லீர் ; (குறித்த சில காரியங்கள் செய்யத் தக்கனவோ செய்யத் தகாதனவோ வென்று தீர்மானிக்கவேண்டியிருந்தால், அந்தக்) காரியங்களை, (வேறெவர் உதவியும் வேண்டாமலே, " இவை செய்யத் தக்கன,*

இவை செய்யத் தகாதன'' வென்று) நீர் தாமாகவே ஆராய்ந்து முடிவுசெய்யும் அறிவாற்றலுடையீர்; (உம்முடைய இட்டம்போல இராக்கதர் கூட்டத்தை) வெல்லலும் வல்லீர்; (அந்தக் கூட்டத்துட் சென்று அவர்கள் தடையைக்கடந்து) மீளுதலும் வல்லீர்; அந்தக் கூட்டத்தைக் கொல்லுதற்குப் போதிய வலிமை யிருந்தால் (அந்தக் கூட்டத்துட் சென்று வெறுமனே மீள்வதோடமையாமல்) கொல்லுதலும் வல்லீர்; (இவ் அரிய செயல்கள் யாவும் செய்த பின்னும்) தோள்வலி சிறிதும் குறைவுறுதீர்;

நவை - குற்றம். மிடல் - வலி.

'மிடலுண்டேல்' என்பதற்கு 'அவர் வெல்லப்பட்ட பின்னும் வலிமை (காட்டல்) உண்டானால் கொல்லவும் வல்லீர்' - '(அப்படி வலிமை இனி மேற் காட்ட முடியாதபடி) கொல்லவும் வல்லீர்' என்றும் பொருள் கூறலாம்.

பாட பேதம்: வலி யென்றுங் குறையாதீர். (அங)

84. மேரு கிரிக்கு மீதுற நிற்கும் பெருமெய்யீர்
மாரி துளிக்குந் தாரை யிடுக்கும் வரவல்லீர்
பாரை யெடுக்கு நோன்மை வலத்தீர் பழியற்றீர்
சூரிய னைச்சென் றொண்கை யகத்துந் தொடவல்லீர்

கொண்டுகூட்டு: 'மேருகிரிக்கும் மீது உற நிற்கும் பெரு மெய்யீர்; மாரி துளிக்கும் தாரை இடுக்கும் (நுழைந்து) வர வல்லீர்; பாரை (- பூமியை) எடுக்கும் நோன்மை வலத்தீர்; பழி அற்றீர்; சூரியனைச் சென்று ஒண் கை அகத்தும் தொட வல்லீர்;

பொருள்: 'மகாமேரு பருவதத்துக்கும் உயரமாக வளர்ந்து நிற்கும் பேருருவுடையீர்; (மேருவினும் பெருவடிவு கொள்ளல் போல அணுவினும் சிறுவடிவு கொண்டு) நுண்ணிய மழைத்தாரைகளின் இடுக்குகளினும் நுழைந்து வரும் வல்லமையுடையீர்; பூமியைப் பேர்த்தெடுக்கும் பெருவலியுள்ளீர்; (இத்தகைய பலத்தை எந்தத் தீய காரியத்திலும் செலுத்தாதீ ராதலால்) பழியென்பது அணுவளவும் இல்லாதீர்; (அளவற்ற தூரத்துள்ள) ஆதித்தனிடம் சென்று (பெருவெப்பமுடைய) அவனைக் கைகளினால் தொட்டிடவல்லீர்;

நோன்மை - வலி. வலம் - வலி. நோன்மை, வலம் என ஒரு பொருளுடைய இரண்டு மொழிகள் மிக்க வலியை உணர்த்திநின்றன.

பாட பேதம் : தோண்மை வலத்தீர். (அச)

85. அறிந்து திறத்தா றெண்ணி யறத்தா றழியாமை
மறிந்து ருளப்போர் வாலியை வெல்லு மதிவல்லீர்
பொறிந்தி மை யாக்கோன் வச்சிர பாணம் புகமூழ்க
எறிந்துழி யிற்றோர் புன்மயி ரேனு மிழவாதீர்

கொண்டுகூட்டு : 'திறத்து ஆறு அறிந்து, அறத்து ஆறு அழியாமை எண்ணி, போர் வாலியை மறிந்து உருள வெல்லும் மதிவல்லீர்; (கண்கள்) பொறிந்து இமையாக்கோன் வச்சிர பாணம் புக மூழ்க எறிந்துழி ஓர் புன்மயிரேனும் இற்று இழவாதீர்;

பொருள் : '(வேறெவ்வழியாலும் கொல்லமுடியாத வாலியை இராமன் அம்பாற் கொல்வித்தலாகிய) திறமான வழியைத் தெரிந்து (வாலியால் அழிந்துகொண்டிருந்த) அறநெறி (வாலி சாவால் அழிதலினின்று தப்பி) அழியாதிருத்தலைச் செய்ய எண்ணி வாலியை (இராமபாணத்தால் இறந்துவிழுந்து) புரண்டுருளும்படி வென்ற மதிவலியுடையீர்; அம்மதிவன்மையோடு இந்திரன் வச்சிராயுதத்தால் தாக்கியபோது ஒரு சிறு மயிர்தானும் அறுபட்டு இழவாத தேக வன்மையும் படைத்தீர்;

திறத்தாறு அறிந்து, அறத்தாறழியாமை எண்ணி, போர் வாலியை மறிந்துருள வெல்லும் எனக் கூட்டுக. மறிதல் - விழுதல். —சீவக. 2201. பொறிந்து என்பதன் முன் 'கண்கள்' என்பதை வருவித்துப் பொருள் கொள்க. (கண்கள்) பொறிந்து - கண்கள் தீப்பொறி சிதறி - கோபித்து. கும்பகர்ணப் படலத்தில் 'பொறிந்திடு கண்ணினன் புகையும் வாயினன்' என்பது கோபமுடையா னென்பதைக் குறித்தல் காண்க. இமையார் - தேவர். இமையாக்கோன் - இமையாத அரசன் - தேவராசன். வச்சிர பாணம் - வச்சிராயுதம். புக மூழ்க - (உடம்புள்) புகவும் அழுந்தவும் (கருதி). (அரு)

86. போர்மு னெதிர்ந்தான் மூவுல கேனும் பொருளாக
ஓர்வில் வலங்கொண் டோல்கலில் வீரத் துயர்தோளீர்
பாருல கெங்கும் பேரிருள் சீக்கும் பகலோன்முன்
தேர்மு னடந்தே யாரிய நூலுந் தெரிவுற்றீர்

கொண்டுகூட்டு : 'போர்முன் மூவுலகேனும் எதிர்ந்தால், (ஒரு) பொருளாக ஓர்வு இல்லாத வலம் கொண்டு, ஒல்கல் இல்லாத வீரத்து உயர் தோளீர்; பார் உலகு எங்கும் பேர் இருள் சீக்கும் பகலோன்முன் (அவன்) தேர்முன் நடந்து ஆரிய நூல் தெரிவுற்றீர் ;

பொருள் : 'போர்க்களத்தில் மூன்றுலகத்தோரும் எதிர்ப்பாரானால் (அவர்களை ஒரு) பொருளாகக் கருதாத (அலட்சியமாக வென்றுவிடக்கூடிய) வலிமைகொண்டு (போர்புரிதலில்) தளர்தலில்லாத வீரத்தால் மேம்பாடுற்ற தோளுடையீர் ; (ஓயாது வேகமாக உலகைச் சுற்றிவரும்) சூரியனுக்கு முன்னே அவன் தேரின் எதிரே (அவனை நோக்கிய வண்ணமாய்ப் பின்னுக்கு) நடந்து கொண்டு (அவன் கற்பிக்க) ஆரிய நூல்களைக் கற்றறிந்துகொண்டீர்;

ஓர்தல் - கருதுதல். வலம் - வலிமை. ஒல்கல் - தளர்தல். சீத்தல் - நீக்குதல். பகலோன் - சூரியன். நூலும், உம்மை இசைநிறை.

பாட பேதம் : பொருளாகா. (அசு)

87. நீதியி னின்றீர் வாய்மை யமைந்தீர் நினைவாலும்
மாதர் நலம்பே ணாது வளர்ந்தீர் மறையெல்லாம்
ஓதி யுணர்ந்தீ ரூழி கடந்தீ ருலகீனும்
ஆதி யயன்றா னேயென யாரு மறைகின்றீர்

கொண்டுகூட்டு : 'நீதியின் நின்றீர்; வாய்மை அமைந்தீர்; நினைவாலும் மாதர் நலம் பேணாது வளர்ந்தீர்; மறையெல்லாம் ஓதி உணர்ந்தீர்; ஊழி கடந்தீர்; "(இவர்) உலகு ஈனும் ஆதி அயனே !" என யாராலும் அறை(யப்படு)கின்றீர் ;

பொருள் : 'நீதிநெறியில் நிற்கின்றீர் ; உண்மையுடையீர் ; பெண்ணின்பத்தை (உடம்பால் நுகரவிரும்பாமை கிடக்க) உள்ளத்தால் நுகர்தலும் விரும்பாது வாழ்நாள் கழித்திருக்கின்றீர் ; வேத முழுதும் ஓதியுணர்ந்துள்ளீர்; உலக முடிவுகாலத்தும் முடியாதீர்; "இவர் உலகங்களை உண்டாக்கும் பிரதம சிருஷ்டிகர்த்தாவான பிரமதேவனே !" யென்று எல்லாராலும் புகழ்ந்து பேசப்படுகின்றீர் ;

வாய்மை - உண்மை. நலம் - இன்பம். பேணுதல் - விரும்புதல். அறைகின்றீர் - சொல்லப்படுகின்றீர் : செய்வினை செயப்பாட்டுவினைப் பொருள் தந்து நின்றது.

(அஎ)

88. அடங்கவும் வல்லீர் காலம தன்றே லமர்வந்தால்
மடங்கன் முனிந்தா லன்ன வலத்தீர் மதிநாடித்
தொடங்கிய தொன்றோ முற்று முடிக்குந் தொழில்வல்லீர்
இடங்கெட வல்லே யூறு கிடைத்தா லிடையாதீர்

கொண்டுகூட்டு : '*காலம் அன்றேல் அடங்க வல்லீர்; அமர் வந்தால் மடங்கல் முனிந்தால் அன்ன வலத்தீர்; மதியால் நாடித் தொடங்கியது ஒன்றையோ, முற்றும் முடிக்கும் தொழில் வல்லீர்; (அதைச் சாதித்தற்கு) இடம் (காலம்) கெட வல்லே (இடை) யூறு கிடைத்தால், இடையாதீர்;*

பொருள் : '*(அடங்காமைக் கேற்ற) காலமல்லாத காலத்தில்** அடங்கியிருக்கும் ஆண்மையுடையீர்; போர் நேர்ந்தால் சிங்கம் சினந்தாற் போலும் திறலுடையீர்; அறிவினால் ஆராய்ந்து பார்த்துச் செய்யத் தொடங்கிய காரியமல்லாமல் (அது சம்பந்தமாகச் செய்யவேண்டிய பிற காரியங்கள்) எல்லாவற்றையும் செய்து முடிக்கும் தொழிற் திறமையுடையீர்; குறித்த காரியத்தைச் சாதித்தற்கு ஏற்ற சமயம் வாய்த்தது பயன்படாமல் பழுது படும்படி தடுக்கமுடியாத விதமாக விரைவாக இடையூறு நேருமானால், (திரும்பவும் ஏற்ற சமயம் வருமென்னும் நம்பிக்கையுடையீராய்) மனந் தளராதீர்;*

'காலமது' என்பதில் 'அது' பகுதிப்பொருள் விகுதி. அமர் - யுத்தம். மடங்கல் - சிங்கம். முனிந்தா லன்ன - கோபித்தாற் போன்ற. வலம் - வலிமை. மதி(யால்) நாடி - அறிவினால் ஆராய்ந்து பார்த்து. இடம் - ஏற்ற சமயம். — த. அ. *வல்லே - விரைவாக. ஊறு - இடையூறு. கிடைத்தால் - நேர்ந்தால். இடைதல் - சோர்தல்; பின்வாங்குதல்.*

பாட பேதம் : *தொழிலல்லால் : இடங்கெட வெவ்வாய்.* (அ அ)

89. ஈண்டிய கொற்றத் திந்திர னென்பான் முதல்யாரும்
பூண்டு நடக்கு நன்னெறி யானும் பொறையானும்
பாண்டிதர் நீரே பார்த்தினி துய்க்கும் படிவல்லீர்
வேண்டிய போதே வேண்டுவ வெய்தும் வினைவல்லீர்

கொண்டுகூட்டு : '*ஈண்டிய கொற்றத்து இந்திரன் என்பான் முதல் யாரும் பூண்டு நடக்கும் நல் நெறியாலும் பொறையாலும், பண்டிதர் (எனத்தக்க) நீரே (நல் நெறி) பார்த்து (அதில் அனைவரையும்) இனிது*

* *அடங்கியிருக்கவேண்டிய காலத்தில்.*

உய்க்கும்படி(யான) வல்லமையுடையீர்; வேண்டிய போதே வேண்டுவ எய்தும் வினைவல்லீர்;

பொருள்: '(உம்மைப்போல ஒழுகுதலே உத்தம முறை யென்று) இந்திரன் முதலிய எல்லாரும் மேற்கொண் டொழுகும் பொதுவான நல்லொழுக்கமுடைமையாலும் சிறப்பான பொறுமை யுடைமையாலும் நல்லொழுக்கத்தின் கரைகண்ட பண்டிதர் எனத்தக்க நீரே நல்வழிக ளெல்லாவற்றையும் ஆராய்ந்தறிந்து அவ்வழிகளில் எல்லாரையும் இனிதாகச் செலுத்தும்படியான திறமையுடையீர்; விரும்பியவற்றை விரும்பியபோதே அடை யும் வினைத்திறமையுடையீர்;

ஈண்டுதல் - கூடுதல்; மிகுதல்; நிறைதல். கொற்றம் - வெற்றி. பொறை - பொறுமை. பாண்டிதர், பண்டிதர் என்பதன் விகாரம்: எதுகை நோக்கி முதல் நீண்டது. உய்த்தல் - செலுத்துதல்.

பாட பேதம்: வேண்டுரு வெய்தும். (அ௯)

90. ஏகுமி னேகி யெம்முயிர் நல்கி இசைகொள்ளீர்
ஓகை கொணர்ந்து மன்னையு மின்னல் குறைவில்லாச்
சாகரம் முற்றுந் தாவிடு நீரிக் கடறாவும்
வேக மமைந்தீ ரென்று விரிஞ்சன் மகன்விட்டான்

கொண்டுகூட்டு: '(இலங்கை) ஏகுமின்; ஏகி எம் உயிர் நல்கி இசை கொள்ளீர்; ஓகை கொணர்ந்து மன்(இராம)னை இன்னல் குறைவு இல்லாச் சாகரம் முற்றும் தாவிடும்(படிச் செய்வீர்.) நீர் இக் கடல் தாவும் வேகம் அமைந்தீர்!' என்று விரிஞ்சன் மகன் விட்டான்.

பொருள்: 'இலங்கைக்கு ஏகுவீராக; ஏகி(ச், "சீதாதேவியை யேன் பாராது திரும்பினீர்கள்?" என்று கோபித்துச் சுக்கிரீவ மகாராசன் எங்களைக் கொல்லுதலினின்று நாங்கள் தப்பிப் பிழைக்கும்படி) எங்களுயிரை யெங்களுக்குக் கொடுத்து, அதன் பலனாக நல்ல கீர்த்தியை நீர் கைக்கொள்வீராக; (சீதாதேவி கற்பரசியாய்ச் சேமமா யிருக்கின்றா ளென்ற) சந்தோஷ சமாசாரத் தைக் கொண்டுவந்து (நீர் இந்தக் கடலைக் கடந்ததுபோல) இராம பிரானைத் துன்பக் கடலைக் கடக்கச் செய்வீராக. (அவன் துன் பக் கடலைக் கடத்தற்கு ஏதுவாக) நீர் இந்தக் கடலைக் கடக்கும் கடுமை வாய்ந்திருக்கின்றீர்!'

இசை - கீர்த்தி. ஓகை - உவகை - சந்தோஷம்: சந்தோஷமான செய்தியைக் குறிப்பாக உணர்த்தியது. கொணர்தல் - கொண்டுவரல். மன் - அரசன். இன்னல் - துன்பம். குறைவில்லா இன்னற் சாகரம் எனக் கூட்டுக. தாவிடும் - தாவிடச்செய்யும்: தன்வினை பிறவினையாக வந்தது. கம்பராமாயணத்தில் தன்வினை பிறவினையாக வருதல் பல இடங்களிற் காணலாம். நட்புக்கோட் படலம் ௭௫-ம் பாட்டில் 'விலக்கும்' என்ற பொருளில் 'விலகும்' என்பது வருதல் காண்க. விட்டான் - சொன்னான்: 'நினை' என்ற வினைப்பகுதியிலிருந்து முறையே மெல்லோசை வல்லோசையுடைய 'நினைந்தான்' 'நினைத்தான்' என்ற வினைமுற்றுக்கள் பெறப்படுதல் போல, 'விள்' (- சொல்) என்ற வினைப்பகுதியிலிருந்து 'விண்டான்' 'விட்டான்' என்ற வினைமுற்றுக்கள் பெறப்படலாம்: 'விள்' என்ற பகுதியிலிருந்து 'விட்டான்' என்ற முற்றைப்பெறுதல், 'நள்' (- நட்புச்செய்), 'கள்' (- களை பிடுங்கு), 'பெள்' (- விரும்பு) என்ற பகுதிகளிலிருந்து 'நட்டான்', 'கட்டான்', 'பெட்டான்' என்ற முற்றுக்களைப் பெறுதல் போலும்.

'மன்னையும்' என்பது இராமனைக் குறித்ததாகக் கூறியதுபோலச் சுக்கிரீவனைக் குறிப்பதாகவும் கூறலாம். அது சிறவாது; திருவடி தொழுத படலத்தில் அனுமான் சீதையைக் கண்ட 'ஓகை'யை (- சந்தோஷ சமாசாரத்தை)ச் சுக்கிரீவனிடம் சொல்லாது இராமனிடம் சொல்லுதலால்.

'ஓகை கொணர்ந்து மன்னையும் இன்னற் குறைவில்லாச் சாகரமுற்றுந் தாவிடும்' என்ற வாக்கியத்தில் 'கொணர்ந்து மன்னை' என்பதைக் 'கொணர்ந்து உம் அன்னை' எனச் சந்திபிரித்துக்கொண்டால், அந்த வாக்கியத்துக்கு, ('இராம லக்குமணர் வந்து சிறைமீட்பார்கள் என்ற சந்தோஷ சமாசாரத்தைக் கொண்டுபோய் உமது தாயை (- சீதையை)க் குறைவற்ற துன்பக் கடலைக் கடந்து கரையேறச் செய்யும்' என்ற பொருள் போதரும்.

பாட பேதம்: *ஏகுமினீரே: கொணர்ந்தும் மன்னையும்: கொணர்ந்து மன்னனும்: தாவிட: வேசமும் வல்லீர்: என்று புகழ்ந்தான் விழித்தான்: விரிஞ்சன் மகன் சொன்னான்.* (௯௦)

அனுமான் இலங்கை செல்லத் தொடங்கல்

[*தன்னைப் புகழ்ந்து இலங்கைக் கேகும்படி சாம்பவான் சொல்லக் கேட்ட அனுமான், கவிழ்ந்த தலையினனாய்க், குவிந்த கையினனாய், 'மன வேகத்தினும் மிகு வேகத்துடன் ஏழு கடலையும் தாவி எல்லா உலகத்தோரையும் எளிதாக வெல்ல வல்லீராய்ச் சீதாதேவியை மீட்கும் திறமுடையீரான தேவரீரே அறிவற்ற*

அற்பனாகிய அடியேனைப் பொருட்படுத்தி, "இக்காரியத்தை நீ போய்ச் செய்!" என்று ஏவப் பெற்றேனென்றால், என்னினும் தன்னியர் யார் இருக்கின்றார்கள்! "தடுத்தவரை யெல்லாம் சங்காரஞ் செய்து சானகி அன்னையைத் தருக" என்றாலும், "இலங்கையை வேரோடு பேர்த் தெடுத்து வருக" என்றாலும், எதையும், உமது ஏவல் மகிமையால், யான் கடிது செய்துமுடிப்பதைக் காண்பீர். முன்பு இராமபிரான் எனக்குக் கட்டளையிட்டிருப்பதும், அந்தக் கட்டளைப்படியே செய்யும்படி கூறி இப்போது நீங்கள் என்மீது அன்பு வைத்திருப்பதும், எனக்கு இருபெருந் துணையாய் இரண்டு இறகுகளாக, யான் கருட பகவானைப்போலக் கடலைக் கடத்தலைக் காணுங்கள். யான் இலங்கைக் கேகி மீளும்வரையும் விடையளித்து நீங்கள் இங்கே இனிது தங்கியிருங்கள்!' என்று விநயமாகக் கூறி, வானர ரெல்லாரும் வாழ்த்த, வானவர் மலர்மாரி தூற்ற, மகேந்திரமலை யுச்சியை யடைந்தான்.

பூவுலகத்தை ஒரு திருவடிவைப்புள் அடங்க அளந்த திரிவிக்கிரமனான திருமால் வானுலகத்தை அளத்தற்கு உயர எடுத்த மறு திருவடிபோல, மாருதி*, வாரிதி† கடத்தற்கு வானம் அளாவ வளர்ந்து நின்றான். திருமாலான இராமபிரானது திருவடி தாங்கிச் செல்லும் வாகனமாய்த் திருவடித்தானமா யுற்றதனால், 'திருவடி' எனப்பெற்ற அனுமான், திருமாலின் திருவடித் தோற்றமாயுற்றதனாலும் 'திருவடி' என விளங்கினான்.]

கிட்கிந்தா காண்டம் முற்றுப்பெற்றது.

காண்டம் நாலுக்கு விருத்தம் 512.

* அனுமான். † கடல்,

பாட்டு முதற்குறிப்பகராதி

[எண் — பக்கவெண்]

அரும்பத அகராதி.

[எண்—பாட்டெண். பதப் பொருளைப் பாட்டுப் பொருட் கீழ்ப் பார்க்க.]

பிழை திருத்தம்: 148-ம் பக்கம், வரி 30-ல் 'வேற்பித்தீர்' என்பதை 'வேர்ப்பித்தீர்' என்று திருத்திக்கொள்க.